பி.எல்.சாமி ஐ.ஏ.எஸ்.,

# இலக்கியத்தில் அறிவியல்



சேகர் பதிப்பகம்

# இலக்கியத்தில் அறிவியல்

பி. எல். சாமி ஐ. ஏ. எஸ்.

BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | ILAKKIYATHIL ARIVIYAL- |
| Author | : | P.L. SAMY, I.A.S., |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | 11-5-81 |
| Copyright holder | : | P. L. SAMY, I.A.S., |
| Paper used | : | 10·9 kg. |
| Size of the book | : | 18.2 × 12.4 cm (Cr 8) |
| Type Points used | : | 10 pt. |
| No. of pges | : | 264 |
| No of Copies Printed | : | 1200 |
| Printer | : | Amudhan Achagam,<br>66, Periyar Street,<br>M.G.R. Nagar, Madras–78. |
| Binding | : | Card Bord |
| Publisher | : | SEKAR PATHIPPAGAM<br>Madras–600 078 |

---

| | | |
|---|---|---|
| Price | : | Rs 30. |

---

| | | |
|---|---|---|
| Subject | : | Science in Literature |
| Call Number | : | 031 ob A<br>N 81 |

# இலக்கியத்தில் அறிவியல்

அறிவியல் தமிழறிஞர்
பி. எல். சாமி ஐ.ஏ.எஸ்.

சேகர் பதிப்பகம்
66/1 பெரியார் தெரு
எம். ஜி. ஆர். நகர்
சென்னை-600 078

முதற் பதிப்பு
மே, 1981
இரண்டாம் பதிப்பு
மார்ச் 1990
உரிமை
ஆசிரியர்க்கு

விலை ரூ. 30.

அச்சிட்டோர்

அமுதன் அச்சகம்
66 பெரியார் தெரு
எம். ஜி. ஆர். நகர்
சென்னை-600 078.

# உருவாக்கியோர்

| | |
|---|---|
| ஆசிரியர் | பி.ஏல்.சாமி ஐ.ஏ.எஸ். |
| ஓவியர் | கவிஞர் அமுதோன் |
| பிளாக் செய்தவர் | எலிகண்ட் பிராசஸ் |
| அச்சு கோத்தோர் | பாஸ்கர், முருகன், மேனகா, ஜான்ஸி |
| நூல் அச்சிட்டோர் | சு. அருள், சு. புகழேந்தி அமுதன் அச்சகம் |
| முகப்பு வண்ணம் | ராஜேந்திரன் |
| அச்சிட்டோர் | ஓம் விநாயகா பிரிண்டிங் |
| பைண்டிங் | சு. உமாபதி |
| பிழை திருத்தம் | வெ. சுந்தரம், சு, செந்தாமரை |
| தயாரிப்புப் பணி | சு. புகழேந்தி |
| பதிப்பாளர் | வெள்ளையாம்பட்டு சுந்தரம் சேகர் பதிப்பகம் |

# ஆய்வோம்! அறிவோம்!

நாட்டுப் பாடல்களைத் தொகுத்து வெளியிடுவதுபோல் நாட்டு மக்களிடையே வழங்கும் செடி, கொடி, பூக்கள், காய் கனிகள், பூச்சிகள், பறவைகள், விலங்குகள் முதலிய உயிர்கள் பற்றிய செய்திகள், கதைகள், கற்பனைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றைச் சேர்த்து ஆராய்வது பலனைத் தரும்; தமிழ்நாட்டின் மிகப் பழைய வரலாற்றை அறியவும் துணை செய்யும்.

இத் துறையில் மேல்நாட்டு மொழியில் நல்ல ஆராய்ச்சி நடந்துள்ளது. இத்தகையதொரு ஆராய்ச்சி, பழங்காலத் தமிழின மக்கள் பிற இன மக்களோடு கொண்ட தொடர்பு, தமிழினத் தோற்றம் முதலிய சிக்கலான புதிர்களை விடுவிக்க ஓரளவு உதவும்.

# சுற்றுலா மையங்கள்

## காட்சியகங்கள், கல்வி நிலையங்களாகட்டும்!

பிச்சாவரம் காடுகளில் உள்ள கண்டல், தில்லை, தாழை, ஞாழல் முதலான மரங்களைப் பெயர்ப் பலகையுடன் காட்டலாம்.

பிச்சாவரம் கழிகளை, காடுகளைச் சங்க நூல்களில் கூறிய நெய்தல் திணைக்கு இயற்கைக் காட்சியகமாகக் காட்டலாம்.

மேலும், நெய்தல் திணையைப் பற்றிய செய்திக் குறிப்புகளைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் கையேடு அச்சிட்டுத் தந்தால் சிறப்பாக இருக்கும்.

கோடைக்கானலில் குறிஞ்சித் திணையைப்பற்றிய இயற்கைக் காட்சியகம் ஒன்று அமைக்கலாம்.

இவ்வாறு முல்லை, மருதம், பாலை ஆகிய பிற திணைகளுக்கும் குறிப்பிட்ட சிறந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து. மக்களும் ஆய்வாளரும் நேரில் கண்டு மகிழ்ந்து இன்புற வகைசெய்தல் வேண்டும்.

# முன்னுரை

'இலக்கியத்தில் அறிவியல்' என்ற தலைப்பில் வெளிவரும் எனது நூல் செந்தமிழ்ச் செல்வி, தினமணிச்சுடர், ஆராய்ச்சி முதலிய சில இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பாகும். கட்டுரைகள் பல ஆண்டுகளில் வந்தனவாகும்.

தமிழ் இலக்கியத்தில்உள்ள அறிவியல்பற்றியே பெரும்பாலான கட்டுரைகள் இருப்பினும் கல்வெட்டு, மொழியியல், வானவியல், இலக்கியம் பற்றியும் கட்டுரைகள் அமைந்துள்ளன.

கவைமகன் என்ற தலைப்பில் வந்த கட்டுரையைப் படித்துவிட்டுப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார், புதுவையிலிருந்து வில்லியனூருக்கு கைவண்டியில் வந்து, என்னை நேரில் பாராட்டினார். அத்துடன் தான் வெளிக் கொணர்ந்த 'குயில்' இதழிலும் வெளியிட்டார். எனது முந்தைய நூல்களைப் போலவே இந் நூலையும் தமிழ் கூறும் நல்லுலகம் வரவேற்குமென்று நம்புகின்றேன்.

பி. எல் சாமி

# பதிப்புரை

முத்தமிழ் அறிஞர் பலர் நாட்டில் உளர். இந்நூலாசிரியர் பி. எல், ஸ். அவர்கள் 'அறிவியல்சாமி எஏ.ஐ.ல் தமிழறிஞர்' ஆவார். இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று வகையான தமிழ்ப் பிரிவுகளுக்கு அடுத்து, நான்காவது தமிழாகக் கொள்ளத் தக்கது அறிவியல்.

பழந்தமிழ் இலக்கியங்களைக் கற்பார் அனைவரும் கவிதை நயம், கருத்துச் செறிவு, கற்பனைவளம், இலக்கணச் சிறப்பு, உவமை நயம், சொல்லாட்சி, நடைப் போக்கு, சந்தச் சுவை முதலியவற்றை மட்டுமே சுவைத்திடுவர்.

இலக்கியங்களில் தாவரங்கள். உயிரினங்கள், நிலவியல், வானியல் முதலியனபற்றிக் கூறப்பெறும் அறிவியற் செய்திகள் பல உள்ளன. அவற்றின் நுட்பங்களை ஆழ்ந்து பயில்வோர் எண்ணிக்கை மிகக் குறைவே.

அறிஞர் பி.எல்.சாமி அவர்கள் அறிவியல் சார்பாகவே சங்க இலக்கியங்களை ஆய்ந்து கற்றுச் சுவைத்து வருகிறார். அவ்வாறு அவர் கண்டு விளக்கியக் காட்டிய அறிவியல் சார்ந்த உண்மைகள், அறிஞர் பெருமக்களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளன. அவர் அவ்வழியில் அரும் பாடுபட்டு முயன்று பல நூல்களைத் தமிழ் மொழிக்கு வழங்கியிருக்கின்றார்.

அந்நூல்களின் சிறப்பினைப் பயனைக் கருதி அவரை **அறிவியல் தமிழ் அறிஞர்** என்று பாராட்டுகிறோம்.

புதுவையில் மாவட்ட ஆட்சித் தலைவராகத் திறமையுடன் விளங்குகின்றார் திரு.பி.எல் சாமி ஐ.ஏ.எஸ்.அவர்கள். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் புதுவைக் கிளையமைப்பு இப் பெருமகனார் தம் ஆய்வுத் தொண்டினைச் சிறப்பித்துப் போற்றும் வகையில், அவர்கட்குப் பராரட்டு விழா நடத்துகின்றனர். புதுவை பெருமக்களும் அரசினரும் மகிழ்வோடு சேர்ந்து 11-5-1981இல் எடுக்கின்ற சிறப்புவிழாவில் ஆசியர்க்கு எமது சேகர் பதிப்பகம் விஞ்சும் தமிழுணர்வோடு நெஞ்சார்ந்த வாழ்த்தையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது. பயன் வளர்க்கும் செயல் விளக்கமாக அவர் தம் ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து, அழகிய நூலாக வெளியிடுவதில் எமது நிலையம் பெருமையடைகின்றது.

**இலக்கியத்தில் அறிவியல்** என்ற தகுதியான தலைப்புடன் வெளியிடப் பெறுகின்றது இந்நூல்.

தாவர இயல், உயிரியல், பொதுவியல் எனும் முப்பிரிவிலும் ஒன்பது கட்டுரைகள் ஒளி தருகின்றன.

ஆம்; முத்தான கருத்துக்கள்! சத்தான உண்மைகள்! வெற்றுரைகள் இவரிடம் விளைவதே யில்லை! அத்தனை யும் பட்டை தீட்டப் பெற்ற வைரக் குவியல்கள்!

அறிவியல் தமிழறிஞர் அவர்கள், தம் கருத்துக்களை விளக்கும் முறையிலிருந்து அவர் படிக்கும் முறையை அறி யலாம்; அவர் ஆய்வுப் போக்கை உணரலாம்; அவர் எவ் வாறு உண்மைகளைத்தேடுகிறார் என்பதைக் காணலாம்; சான்றுகளை முறைப்படுத்தி ஒப்பிட்டுப் பார்க்கும் திற மையையும் தெரிந்து கொள்ளலாம். மொத்தத்தில் இவரு டைய சிந்தனைச் சுடர்களைப் பயில்வோர் பல்வேறு நெறிகளையும் ஒருங்கே அறியலாம். குறிப்பாகக் கல்வியின் பயன் உணரலாம்.

கற்போர்க்குக் கல்விப் பயனை வழங்குகின்றன இவர் தம் ஆய்வுரைகள். எனவே, பள்ளிகளில் பயிலும் மாண வரும் ஆசிரியரும் இவர் தம் நூல்களைப் பயின்றால், நாட் டில் புதியதோர் அறிவுச் சூழல் தோன்றும் என்பது திண்ணம். அதற்குத் துணையாக இவர்தம் ஆய்வு நூல் களை எல்லாம் பள்ளிகட்கும் வாங்கச் செய்து, அனைவரும் பயன்பெற வழி வகுக்க வேண்டியது அரசின் பொறுப் பாகும்.

புதுவைமாநிலம் தொடர்ந்து அறிஞர் பெருமக்களை தோற்றுவித்து வாழ்வித்துச் சிறப்பித்து வரும் புகழ் மிக்க வரலாற்றில், அறிவியல் தமிழறிஞர் பி.எல். சாமி ஐ.ஏ.எஸ். அவர்களையும் தாங்கி மகிழ்கின்றது! அறிஞர் களும் புதுவைப் பெருமக்களும் ஆட்சியினரும் அவர்தம் அறிவறிந்து, திறனறிந்து பாராட்டுகின்ற காட்சியும்

பெருமைக்குரியது. தமிழ்நாடும் விரிந்த தமிழ் உலகமும் இவர் பணியைத் தமிழின் மேன்மைக் குரியது என்று பாராட்ட வேண்டும்.

இவர்தம் ஆய்வுகள் புதிய வளர்ச்சிக்கு உதவும் வகையில் ஆற்றுப்படுத்திப்போற்றப்படல் வேண்டும். உண்மையான தமிழ் வளர்ச்சியைக் கருதி, பி.எல்.சாமி ஐ.ஏ.எஸ். அவர்களைப் பல்கலைக் கழகங்கள் அழைத்துப் பாராட்டி, ஆய்வுலகுக்கு ஊக்கம் தந்து ஆக்கம் புரிந்திட வேண்டும்.

சங்க நூல்களில் மீன்கள், சங்க நூல்களில் மணிகள் என்ற இரு தமிழ் நூல்களுடன் ஒரு சிறு ஆங்கில நூலையும் வெளியிட்ட எமது சேகர் பதிப்பகம், நான்காவது படைப்பாக, 'இலக்கியத்தில் அறிவியல்' எனும் இச் சிறந்த நூலினையும் பெருமையோடு வெளியிடுகின்றது. நூலாசிரியரின் அன்புக்கு எமது நெஞ்சார்ந்த நன்றியுரியது.

கட்டுரைகளைத் தொகுத்து அச்சிடும் பணியில் ஆர்வமுடன் எனக்குத் துணை புரிந்த இனிய நண்பர் பேராசிரியர் மா. ரா. இளங்கோவன் அவர்கட்கு நன்றி.

தரமான தமிழ் நூல்களை வெளியிடும் எங்கட்கு அறிவுலகம் துணை நின்று உதவும் என்று நம்புகின்றோம்.

**வெள்ளையாம்பட்டு சுந்தரம்**
சேகர் பதிப்பகம்

# பொருளடக்கம்

ஒன்று

## தாவரவியல்

| | | |
|---|---|---|
| 1 | குறிஞ்சித் திணை | 19 |
| 2 | செடி, மரம்-பெயர் | 37 |
| 3 | மாழ்கி | 45 |
| 4 | தில்லையும் குல்லையும் | 49 |
| 5 | தடவும் பிடவும் | 57 |
| 6 | இரம் என்ற மரம் | 63 |
| 7 | பெரு மரம் | 73 |
| 8 | எழில்மிகு பூக்கள் எட்டு | 81 |
| 9 | செடி நோய்கள் | 93 |

இரண்டு

## உயிரியல்


| | | |
|---|---|---|
| 1 | கவரிமா மான மாவா? | 99 |
| 2 | குடாவடி உளியம் | 107 |
| 3 | மகண் மா | 115 |
| 4 | கரிக் குருவி | 125 |
| 5 | கருந்தகைய குருகு | 135 |
| 6 | கடுந்தேறு என்னும் குளவி | 143 |
| 7 | வேலன்—ஒரு விலங்கு | 151 |
| 8 | முதலைகள் | 163 |
| 9 | கலையன் | 175 |


மூன்று

## பொதுவியல்


| | | |
|---|---|---|
| 1 | புகைக் கொடி | 185 |
| 2 | கலைமகன் | 191 |
| 3 | கள்ளரின் வளைதடி | 199 |
| 4 | நரி விருத்தம் | 207 |
| 5 | நீர் வழிபாடு | 213 |
| 6 | கல்வெட்டு வழக்குகள் | 225 |
| 7 | செப்பேட்டில் காரோடன் | 233 |
| 8 | காவியக் காதல் | 241 |
| 9 | மரியதாஸ் பிள்ளை | 253 |


○

# இலக்கியத்தில் அறிவியல்

ஒன்று

## தாவரவியல்

1

# குறிஞ்சித் திணை

## பழந்தமிழர் பண்பு

அகமும் புறமும் கலந்ததே மனித வாழ்க்கை என்று பழந்தமிழர் கருதினர். அக வாழ்க்கையைக் கூடத் தமிழன் என்றும் வெறுந் தன்னல வாழ்க்கையாகக் கருதவில்லை. தன்னலமாகக் கருதியிருப்பின் முதலில் 'தான்', 'தனது' எனும் உளக்கோட்டங்களை வேரறுப்பதே மனித வாழ்க்கையின் குறிக்கோள் என்று கருதியிருப்பான். அத்தகைய வாழ்க்கையில் புறத்திற்கிடமின்று. தமிழன் சிறந்ததாகக் கருதிய அகத்திற்கு மிடமின்று.

## இயற்கையை அணைத்து

பழந்தமிழர், வாழ்க்கை வாழ்வதற்கே என்று கருதினர். அதில் தனது உள்ளத்திற்கிடமுண்டு. தான் வாழும் நிலத்திற்கும் காலத்திற்குமிடமுண்டு. தன்னைச் சுற்றி வாழும் செடி கொடிகளுக்கும் உயிரினங்களுக்கும் அதில் இடமுண்டு. அதனால்தான் அகத்திணையில் முதல், கரு, உரிப்பொருள் என்று பாகுபடுத்திக் காட்டினான். தான் வாழும் நிலத்தையோ, நிகழும் பொழுதையோ, நிற்கும் செடியையோ, நில்லா விலங்கையோ எதையுமே தன்னுடைய அக வாழ்க்கைக்குப் புறமாகக் கருதவில்லை.

தன்னைச் சுற்றியுள்ள, சூழ்ந்துள்ள நிலப் பொருளையும் இயங்கு பொருளையும் உள்ளத்துடன் இணைத்த வாழ்வையே, பிணைத்த வாழ்க்கை முறையையே பழந்தமிழன் 'திணை' என்று கூறினான்.

அறிஞர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் அகமும் அகமற்றதும் கொள்ளும் தொடர்பே வாழ்க்கை' என்று ஓரிடத்தில் கூறுகிறார். ஆனால் தமிழர் அகமெனக் கூறியது வெறுந்தன்னலமன்று. தன்னிலத்தில் முளைத்துத் துணை நலமாக முகிழ்த்துப் பிறர் நலமாக மலர்வது, அன்புடை நெஞ்சந் தாங்கலந்து மக்களைப் பெற்றுச் சுற்றந் தழுவிப் பிறர் நலம் பேணிச் 'சிறந்தது பயிற்றலே' தமிழனது குறிக்கோள்.

அக வாழ்க்கையில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் பாகுபாடு மிக நுண்ணியதாகும். முதல் கருப்பொருட்கள் இயற்கையும் செயற்கையுமான சூழ்நிலையைக் (Environment) குறிக்கின்றது. அச் சூழ்நிலையில் ஊடாடும்போது, தொடர்புறும்போது மாறும் உள்ளப் பாங்கையே உரிப்பொருள் குறிக்கின்றது.

## முதல் திணை

திணைகளில் முதல் திணை குறிஞ்சி யென்பர். கூடுவதே அக வாழ்க்கையில் முதற் கட்டமாதலால் குறிஞ்சியே முதல் திணையாயிற்று. வரலாற்று அடிப்படையில் பார்க்குங்கால், மலைகளிலும் காடுகளிலும் தேனும் கிழங்கும் பழமும் தேடி உண்டு வாழ்ந்த வாழ்க்கையே மனிதனின் முதல் வாழ்க்கையாதலால், குறிஞ்சித் திணையே முதல் திணையாகக் கருதப் பட்டது. மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி யென்பர்.

## செடியின் பெயரால்

இவ்விடத்திற்கு இப் பெயர் எதனால் வந்ததெனின், மலையில் வாழும் குறிஞ்சி செடியின் பூவினால் வந்த தென்பர். பல செடிகள் வாழும் மலைக்கு ஒரு செடியின் பெயர் இடுவது ஏன் என்றால்,விடை தேடித்தான் பிடிக்க வேண்டும் அப்பொழுதுதான் நமக்கு அறிவியல் துணை செய்கின்றது. அறிவியல் துணை கொண்டு ஆராயுங்கால் பழந்தமிழரின் நுண்மாணுழை புலமும், இயற்கை ஈடுபாட்டாராய்ச்சியும் வெளி யாகின்றது.

கடல் மட்டத்திற்குமேல் ஆறாயிரம் அடிக்கு மேற் பட்டே இயற்கையில் காணக் கூடிய செடி குறிஞ்சிச் செடி யாகும் பிற செடிகளுக்கு அத்தகைய கட்டாய வரை யறை இச் செடிக்கிருப்பதுபோல் கிடையாது. ஆறாயிரம் அடிக்கு மேற்பட்ட நிலம் மலையும் மலைசார்ந்த பகுதி யாகத்தான் இருக்கும். இத் தன்மையின் அடிப்படைக் காரணத்தாலேயே மலையும் மலைசார்ந்த இடத்தையும் இச் செடியின் பெயரால் அழைத்தனர்.

இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அது இச் செடிப் பூவின் தனித் தன்மையாகும்.

இச் செடியின் பூ, ஒன்பது ஆண்டுக் கொரு முறை தோன்றிப் பன்னிரண்டு ஆண்டுகள் வரை தொடர்ந்து காணப்படுகின்றது. இயற்கையில் இத்தகைய வியப்பிற் குரிய பூவேறு ஒன்றின்மையால், மலையிலும் மலைசார்ந்த இடத்திலும் காணப்படும் இப் பூவின் பெயராலே இந்த இடத்தை அழைத்தனர்.

## பல மலைகளில்

செடி நூலில் இந்தச் செடி ஸ்ட்ரொபிலான்தாஸ் (Strobilanthes) என்ற இனத்தைச் சார்ந்தது. தமிழ்

நாட்டிலும் ஈழத்திலும் மத்திய இந்தியாவிலும் காணப் படுகின்றது. நீலகிரி மலையிலும், பழனி மலையிலும், கோடைக்கானல் மலையிலும் பல ஆண்டுகளாக இச்செடி பூக்கும் காலத்தைக் கண்டு எழுதி வைத்திருக்கின்றனர்.

இவை மலைச்சாரல்களில் பூக்குங்காலத்தில் பல்லா யிரக்கணக்கான பூககள் ஒரே கூட்டமாகத் தென்படும். ஒன்பதாவது ஆண்டிலிருந்து பன்னிரண்டாவது ஆண்டு வரை மலைச் சாரல்களில் கூட்டம் கூட்டமாக இச்செடிப் புதர்கள் பூத்துக் கிடக்கும். பன்னிரண்டாம் ஆண்டில் செடிகள் இறந்து விடுகின்றன. இப்படிக் கூட்டம் கூட்ட மாகப் பார்த்ததால் பழந்தமிழ்ப் புலவர் 'கருங்கோற் குறிஞ்சி யடுக்கம்' என்று கூறினர்.

## நிறைந்த தேன்

இப்பூவில் நிறையத் தேனுண்டு. தேன் மிகவுடைய தாக அறிஞர்கள் கூறும் பூக்களில் இதுவுமொன்று. பல்லாயிரக்கணக்கான பூக்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றுவதால் தேன் மலிந்து போய் விடுகின்றது. அதனால் தேனீக்கள் மலைச்சாரல்களில் பெரிய பெரிய தேன் கூடுகளை நிறையக் கட்டுகின்றன. இச் செடி பூக்கத் துவங்கியதும் தேன் கூடுகள் மலைச்சாரல்களில் மலிந்து விடுகின்றன. இதைக் கண்டே சங்கப் புலவ ரொருவர்,

> ''கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
> பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே''

என்று பாடினார். தமிழ் மக்கள் குறிஞ்சிப் பூவின் தேனை மிக இனியதெனக் கருதினர்.

> ''கருங்காற் குறிஞ்சி மதனில வான்பூ
> நாறு கொள் பிரசம் ஊறுநா டற்கு''

என்ற நற்றிணைப் பாடலில் குறிஞ்சித் தேனின் இனிமை கூறப்பட்டிருக்கின்றது. குறிஞ்சிப் பூவின் தேனை மிக உயரியதாகக் கருதியதற்கு இன்னொரு காரணமும் உண்டு. பொதுவாகத் தேன் கூடுகளில் பலவகைப் பூக்களின் தேன் காணப்படும். ஆனால் குறிஞ்சிப் பூக்களின் தேனால் இழைக்கப்படும் கூட்டில் பிற பூக்களின் தேன் கலப்பதில்லை. ஏனெனில் குறிஞ்சிச் செடி பூக்க ஆரம்பித்தால் தேனீக்கள் குறிஞ்சித் தேனையே கூடுகளில் சேர்க்கின்றன. இத்தகைய தேனை "தனிப் பூத்தேன்" (Unifloral honey) என்று அறிஞர் அழைக்கின்றனர்.

இப்பொழுது சவ்வாது மலையில் சென்னை அரசியலார் சந்தனப் பூந்தேன் சேர்க்க ஒரு தேன் ஆராய்ச்சிப் பண்ணையை நிறுவியிருக்கின்றனர். இந்தத் தனிப் பூத் தேன், மணத்திற்கும் இனிப்புக்கும் பெயர் பெற்றது.

## குறிஞ்சித்தேன்-நட்பு

பூக்குங் காலத்துக் குறிஞ்சித் தேன் நிறைந்து விடுகின்றது; இனிமை மிகுந்தது; நறுமணம் வாய்ந்தது; இது பல்லாண்டுக் கொருமுறை அரிதாகக் கிடைக்கின்றது. அது போன்றே நாடனுடைய நட்பும் திடீரென்று தோன்றுகின்றது; பெருகுகின்றது; இனிமை மிகுந்து நறுமணமெய்துகின்றது. அது மட்டுமா? குறிஞ்சிக்குப் பன்னிரண்டு ஆண்டுக்கொரு முறை மறுபிறப்பு இருப்பதுவும் சாரலில் தேனிழைப்பதுவும்போல், வரும் பிறவிகளிலெல்லாம் நாடனுடன் நட்பும் தொடர்கின்றது. இத்தகைய அரிய, பெரிய, இனிமையான, மணமான தேனைத் தருவதாலும் மலையும் மலை சார்ந்த இடத்தையும் குறிஞ்சி என்ற பெயரால் அழைத்தனரென்று தெரிகின்றது.

குறிஞ்சித் தேனின் அருமை பெருமைகளை நாகரிகத் தமிழர் மட்டுமன்றிப் பழங்குடி மக்களும் அறிந்திருக்கின்றனரென்று தெரிய வருகின்றது.

## ஆராய்ச்சியுரை

டாக்டர் வெரியர் எல்வின் (Dr. Verrier Elwin) என்ற அறிஞர் பழங்குடி மக்களைப் பற்றிப் பல ஆராய்ச்சிகளை வெளியிட்டிருக்கின்றார். சூடுநாகபுரியில் வாழும் பைகர்கள் (Baiga) என்ற இனத்தாரைப் பற்றியும் எழுதியுள்ளார். அவர் சொல்வதாவது :

> ''குறிஞ்சிப் பூக்கள் கூட்டம் கூட்டமாகப் பூக்கும். ஒன்பதாண்டுக் கொருமுறை பூக்கும். அப்பொழுது பைகர்கள் தேனீ விழாக் கொண்டாடுவர். விழா முடிவு நாளில் மலைத் தேனைச் சடங்குகளுடன், நடனத்துடன் உண்பர்.''

இச் செடியை இம்மக்கள் ''மோகடே'' ''ஆமேரா'' என்று அழைப்பதாக அவர் கூறுகிறார். பைகர்கள் இச் செடியில் ஆண் பெண் வேற்றுமைகூடப் பார்க்கின்றார்களாம். இச் செடியைப் பற்றிச் சில புராணக்கதைகள் கூட இவர்களிடையே வழங்குகின்றனவாம். தேனீ விழாக் காலத்தில் கூடை கூடையாக குறிஞ்சித் தேனடைகளைச் சேகரித்துக் கொண்டு வந்து ஆடவரும் பெண்டிரும் தீயைச் சுற்றி நடனமாடுவார்களாம். குறிஞ்சிச் செடிகளைத் தலையிலும் இடுப்பிலும் செருகி ஆடுவார்களாம்.

நடு இந்தியாவில் வாழும் பழங்குடி மக்கள், அதுவும் திராவிடப் பழங்குடி மக்கள் குறிஞ்சித் தேனைப் போற்றுவதைக் காணுங்கால் தொடர்பிருந்திருக்க வேண்டுமென்றே தோன்றுகின்றது

## வயது கணக்கிடல்

நீலகிரியில் தோடர்கள் தங்கள் குழந்தைகளின் வயதைக் குறிஞ்சிச் செடி பூப்பதைக் கொண்டே கணக்கிட்டனராம். ஒருவேளை மிகப் பழந்தமிழரும் பன்னீராட்டை அகவையினனை 'ஒரு குறிஞ்சி அகவை

யினன்', இருபத்து நான்காட்டை அகவையினனை 'இரு குறிஞ்சி அகவையினன்' என்று கூறினரோ என்று எண்ணவு மிடமுண்டு.

பழந்தமிழர் வேங்கை மரம் பூப்பதைக்கண்டு, ஆண்டுகளைக் கணக்கிட்டன ரென்பது தெரிந்த செய்தியாகும்.

குறிஞ்சிச் செடி எப்படிப் பழங்குடி மக்களையும் பழந்தமிழரையும் கவர்ந்ததோ அது போலவே நீலகிரியிலும் கோடைக் கானலிலும் வாழ்ந்த வெளி நாட்டாரின் கவனத்தையும் ஈர்த்திருக்கின்றது. இரண்டு நூற்றாண்டுகளாக இதைப் பற்றிய நாட்குறிப்பும் (Diaries) எழுதியுள்ளனர். இந்தச் செடியின் பூவைப் படம் வரைந்தும் பாடம் செய்தும் வைத்திருக்கின்றனர்.

குறிஞ்சிச் செடியில் பல இனங்கள் உள்ளன. அதில் ஒரு இனம் (Strobilanthes Wallichi) பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை மலருமாம். அது விளையும்போது பிற செடிகளை வளரவிடாது அழுத்திவிடுமாம். அதனால் மலைச்சாரலில் குறிஞ்சிச் செடியைத் தவிரப் பிற செடியைக் காண முடியாதாம்.

குறிஞ்சிச் செடி வளர்வதும் தனிப்பட்ட முறையாகும். ஆண்டுதோறும் இளவேனில் குருத்துத் தோன்றும். பல கணுக்கள் விட்டு வளரும். இக் குருத்து, ஆண்டிறுதியில் கீழ்க்கணுவைத் தவிர்த்து முழுவதும் அழிந்துவிடுமாம். இம் முறையில் ஒவ்வொரு ஆண்டும் கீழ்க் கணுவை விட்டுப் பிற கணுக்கள் (Internodes) அழிந்து போவதால் இச் செடியின் வயதைப் பழைய கணுக்களின் எண்ணிக்கையைக் கொண்டு சொல்லி விடலாம் ஒரு வேளை பழங்குடி மக்கள் இம்முறையாக எண்ணித்தான் வயதைக் கணக்கிட்டிருப்பாரோ என்று எண்ண இடமிருக்கின்றது.

குறிஞ்சிச் செடியில் 28 இனங்கள் ஈழத்தில் காணப்படுகின்றன. பர்மாவிலும், அசாமிலும் இவை காணப்படு

கின்றன. ஆனால் தமிழ் நாட்டில் மட்டும்தான் அவை சிறப்புடையதாகக் காணப்படுகின்றன எனச் செடி நூலறிஞர் கருதுகின்றார்கள். ஏனெனில் வேறெங்கும் அவை செழிப்பாகவும் பெரியதாகவும் தமிழ்நாட்டில் வளர்வது போல் இருப்பதில்லை.

அறிவியல் அறிஞர்கள் இச் செடியை 'மலைவாழ் புதர்ச் செடி' (Undergrowth of Montanic regions) யென வர்ணிக்கின்றனர்.

## நிறங்கள்

குறிஞ்சி இனங்களில் பூக்களின் நிறம் மாறுபடுகின்றது. மிக அழகிய பூக்களையுடைய இனங்கள் பல ஆண்டுக்கொரு முறையே பூக்கின்றன என்று அறிஞர் கூறுகின்றனர்.

குறிஞ்சிப் பூவின் நிறங்களில் நீல நிறத்தையே தமிழர் போற்றினர். நீலக் குறிஞ்சிப் பூவையே நறுங் குறிஞ்சியாகக் கருதினர்.

அசாமில் வாழும் ஒரு வகை நீல நிறக் குறிஞ்சிப் பூக்களை நீலச் சாயம் இறக்குவதற்காக அசாம் மக்கள் பயன்படுத்துகின்றனர்.

நீலகிரி என்ற பெயரே, நீலக் குறிஞ்சி வளர்வதால் வந்த பெயரோ என்று ஐயமுற வேண்டியிருக்கின்றது. ஏனெனில் ஒரு சில இனங்கள் நீலகிரியில் மட்டும் காணப்படுவதாகச் செடி நூலறிஞர் கூறுகின்றனர். நீலகிரியின் கிழக்குச் சாரலில் இரு இனங்கள் (Strobilanthes Amabilis' Strobilanthes Kunthianus) வாழ்வதாகத் தெரிகின்றது.

குறிஞ்சிப் பூவின் பல நிறங்களைத் தமிழர் நன்றாக அறிந்திருந்தனரென்று கூறுவது மிகையாகாது "கருங்கோற் குறிஞ்சிப் பூ" என்று பல விடங்களில் இப் பூ வர்ணிக்கப்படுகின்றது. குறிஞ்சி அரும்பாயிருக்கும்போது வெண்மையாகக் காணப்படும். நற்றிணையும் "கருங்கோற் குறிஞ்சி மதனில வான்பூ" என்று கூறுகின்றது.

## இசை வகைகள்

குறிஞ்சித் திணையில் குறிஞ்சிப்பண் தோன்றியது. குறிஞ்சிப் பண்ணில் தோன்றும் இராகங்களைக் குறிஞ்சி இனப் பூக்களின் நிறத்தால் பெயரிட்டழைத்திருக் கின்றனர்.

மேக ராகக் குறிஞ்சி என்பது ஓர் இராகம். இது மேக நிறம் போன்று (gray) உள்ள குறிஞ்சிப் பூவின் நிறத்தால் பெயர் பெற்றது.

வியாழக் குறிஞ்சி என்ற இராகம், சிவந்த குறிஞ்சிப் பூவால் பெயர் பெற்றது.

பிற்காலப் பாடலொன்று குறிஞ்சி பூவைக் குங்குமத் திற்கு ஒப்பிடுகின்றது. பொன் வண்ணக் குறிஞ்சி என்ற இராகம் மஞ்சள் நிறக் குறிஞ்சிப் பூவைக் குறித்திருக்க லாம். செடி நூலிலும் குறிஞ்சிப் பூக்கள் பல நிறங்க ளுடையனவென்று கூறப்பட்டிருக்கின்றது.

பண்களுடனும் இராகங்களுடனும் நிறங்களை இணைத்துக் கூறுவது ஒரு நுண்ணிய அனுபவ உணர்ச்சி யால் எழுந்ததாகும். நீலாம்பரி என்ற இராகத்தின் பெயரில் நீலம் பயில்கின்றது.

## மேனாட்டு இசையிலும்

இம் முறையில் இயற்கை நிறங்களை இசையுடன் இணைத்துப் பார்க்கும் கொள்கை (colour-music) மேலை நாட்டில் தோன்றியிருக்கின்றது.

மேல் நாட்டு இசையில் (Bach) பித்தோவன், மோசார்ட் (Mozart) போன்ற பெரிய அறிஞர்களின் இசைப் பாடல்களைச் சில நிறங்களுடன் இணைத்துக் கூறுகின்றனர். இத்தகைய நுண்ணிய உள்ளுணர்வு பழந்

தமிழரின் இசையிலும் இருந்திருக்கின்றதென அறியும் போது வியப்படையாமல் இருக்க முடியாது.

குறிஞ்சிச் செடி கோடைக்கானலில் 1910, 1922, 1934, 1946 1658, 1970 ஆகிய ஆண்டுகளில் பூத்ததாகத் தெரிகின்றது.

## மலைச் சாரல்

குறிஞ்சியின் கருப்பொருள் எவ்வளவு சிறப்புடையதோ அதுபோன்றே அதன் உரிப் பொருளும் சிறப்புடையது. காதலர் கூடுவது குறிஞ்சியின் உரிப்பொருள். மலைகளில் பெருங்காடுகள் இருப்பதால் காதலர் தனிமையில் காணவும் கூடவும் மலைச்சூழல் வாய்ப்பாக அமைந்திருக்கின்றது. முனிவரையும் மயங்க வைக்கும் சூழல் — மலையும் மலைசார்ந்த இடத்தில் உளது.

குறிஞ்சிப் பாட்டில் கபிலர், அழகிய செடி கொடிகள் அத்தனையும் காதலர் கூடுமிடத்தில் இருப்பதாகக் கூறியுள்ளார். இறையனார் அகப் பொருளிலும், பிற்கால இலக்கண இலக்கிய நூல்களிலும், செய்குன்று, இளமரக்கா முதலிய செயற்கைச் சூழல்களையும் உண்டு பண்ணியிருக்கின்றனர்.

தனிப்பெருந் தலைவனும், தலைவியும் கூடுமிடம் தன்னேரில்லா அழகும் பெருமையும் உடையதாகக் கபிலர் படைத்திருக்கின்றனர்.

> ''சந்தனமும் சண்பகமும், தேமாவும் தீம்பலாவும், ஆசினியும் அசோகும், நறவும் நந்தியும், மாதவியும் மல்லிகையும், மௌவலோடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாழலும் பைங்கொன்றையும் பிணியவிழ்ந்து, பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கொடு முகை சிறந்து, வண்டறைந்து தேனார்ந்து வரிக்குயில்கள் இசைபாட, தண் தென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழில்''

என்று இறையனாராகப் பொருள் வர்ணிக்கின்றது! இயற்கைச் செடிகள் மட்டுமா காணப்படுகின்றது. மாணிக்கச் சுனை, அதன் மருங்கே மாதவி மண்டபம் அருகே 'தகடுபடு, பசும்பொற் சிகரங்களின் முகடு, தொடுத்து' வீழும் அருவி, வரிக் குயில்கள் இசை பாடுகின்றன. இளமயில் ஆடுகின்றது இத்தனையும் காதலர் கூடுமிடத்தில் காணப்படுகின்றன. இது பிரெஞ்சு இலக்கியத்தில் பாதலேர் (Baudalaire) என்ற அறிஞர் காணும் தன்னேரில்லாத இடத்தைப் போன்றே உள்ளது.

இவ்விடத்து எல்லாம் அழகு, எல்லாம் ஒழுங்கு! அது மட்டுமா! எல்லாம் விழைவு (volupto)! மரஞ் செடிகள், குயில் மயில்கள் எல்லாம் பயந்துகொண்டு அங்கு போய் அணி செய்வதாகத் தோன்றுகின்றது.

ஷேக்ஸ்பியரியர் நாடகத்தில் இனிமையான காட்சிகளெல்லாம் 'ஆர்டன்' (Arden) காடுகளில்தான் நடைபெறுகின்றன. அழகும் அணியும் களி நடமாடுமிடம் மலையும் காடுமே. அச் சூழல் காதலர்களை வரவழைக்கின்றது.

முனிவரையும் கனிய வைக்கின்றது. விசுவாமித்திரர் கூடத் தவம் நழுவ, வழுவக் காரணம் வெறும் மேனகையல்ல; மலையும் காடும் கலந்த சூழலில் தோன்றிய மேனகையே, முனிவரைக் கனிய வைத்தாள்.

காதற் கதை எழுதுவதில் துறைபோகிய பிரெஞ்சு ஆசிரியர் மாப்பாசானின் (Maupassant) ஒரு கதையில், ஒரு முதியவரும் அவர் மனைவியும் அறங்கூறவையத்திற்கு கொண்டு வரப்படுகின்றனர். காட்டருகில் காதல் விளையாட்டுப் புரிந்ததாக அவர்கள்மேல் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. அவைத் தலைவர் அவர்களைமன்னித்துவிட்டு, ''குளிர் காலத்தில் காடுகள் முதியவரையும் வழுவச் செய்யும்'' என்று கூறுகிறார்.

---

* ''All is order. All is beauty - why not -Volupto''

அதுபோன்றே பழந்தமிழரும் காதற்குரிய காலம் கூதிர் என்றும், இடம் குறிஞ்சியென்றும் கருதினர். முதியவர் மட்டுமன்றி முனிவரையும் வழுவச்செய்யும் என்றும் கருதினர்.

உளநூலறிவுடன் (Psycology) மிகப் பொருத்தமாகத் தமிழர் காலத்தையும் இடத்தையும் கூறியுள்ளனர். ஷேக்ஸ்பியர்கூட "காதல் நினைவுகள் வளைந்த சோலைகளில் மிகுந்து தோன்றுகின்றன" என்று 12 ஆம் இரவு (Twelth Night) என்ற நாடகத்தில் கூறுகின்றார்.[1]

## நள்ளிரா நாடகம்

தமிழ்நூற்படி நள்ளிரவே காதலர் கூட்டத்திற்கேற்றது. ஏனெனில் நள்ளிரவில்தான் தடங்கல்கள் குறையும். நள்ளிரவில் தலைவன் வரும் காட்சியைப் பல சங்கப் பாடல்கள் படம் பிடித்தாற்போற் காட்டுகின்றன. நடு இரவில் காதலன் வருவான். அது பார்த்து வல்வாய் நாய்கள் குரைக்கும். கெடுமதி முகிலைவிட்டுத் திடுமென வெளிவரும்; தண்கதிர் பாய்ச்சும். கூகை குழறும், ஆந்தை அலறும். முட்டாள் சேவலொன்று விடிந்ததோ எனக் கூவும். இயற்கையின் இரவுத் திருவிளையாடல்களெல்லாம் காதலனுக்குத் தாங்க முடியாத தடங்கல்கள், இடைஞ்சல்கள், எதிர்பாராமல் 'பல முட்டுகள்'.

இரவு முழுவதும் கண் விழித்துத் திறந்த வெளியில் பரந்த உலகில் நடக்கும் நிகழ்ச்சிகளையெல்லாம் கூர்ந்து கவனித்த ஆங்கில அறிஞர் ஆர். எல். ஸ்டீவென்சன் [2]ஒரு நூலில், இரவில் நிகழும் செய்திகளையெல்லாம் வர்ணித்திருக்கின்றார். நள்ளிரவில் நாய்கள் குரைப்பதைக் கூறி, சேவல் கூவுவதைச் சொல்லியுள்ளார். ஆங்கில நாட்டில்

---

1 'Love thoughts lie rich when canopied with bowers'
2 Travels with a Donkey — R.L. Stevenson.

ஓர் ஊரில் இரவில் நடக்கும் செய்திகளை வர்ணித்துள்ள * ஒரு நாவலில் (Novel) தமிழ் நாட்டில் நடப்பதேபோல் நாய் குரைக்கின்றது. கோழி கூவுகின்றது. கூகை குழறு கின்றது. இரவில் இயற்கை, உலகம் முழுவதும் ஒன்றே போல் இருக்கும்போல் தோன்றுகின்றது

மோரிஸ் டெகரன் (Mourice Deguerin) என்ற பிரெஞ்சு ஆசிரியர் இயற்கையைப் பற்றி எழுதுவதில் வல்லுநர். அவர் பிரிட்டனில் ஓர் ஊரில், ஊர் உறங்கியும் நாய்கள் உறங்காது, நள்ளிரவில் குரைப்பதைக் குறிப்பாகக் கூறியுள்ளார். 122 ஆம் அகப் பாட்டு நாய் குரைப்பதையும், பிற நடங்கல்களையும் மிக அழகாகக் கூறும்.

''இரும்பிழி மகார் அரிவ் அழுங்கல் மூதூர்
விழவின் றாயினும் துஞ்சா தாகும்
மல்லல் ஆவணம் மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள்
பிணிகொள் அருஞ்சிறை அன்னை துஞ்சின்
துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்
இலங்குவேல் இளையர் துஞ்சின்
வையெயிற்று
வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழும்
அரவவாய் ஞமலி குரையாது மடியின்
பகலுரு வுறழ நிலவுக்கான்று விசும்பின்

---

The Silence of great Bardlow was that of tranquil, peaceful quality which in so characteristic of sleepy English village. An occasional bark of a distant dog and the mournful cry of a disconcerted owl were the only disturbance-with the possible exception of a far off cock who kept the absured mistake that down had come.

—(Miss Dynamite by Berkley Gray)

அகல்வாய் மண்டிலம் நின்றுவிரி யும்மே
திங்கள் கல்சேர்பு கனையிருள் மடியின்
இல்லெலி வல்சி வல்வாய்க் கூகை
கழுதுவழங் கியாமத் தழிதகக் குழறும்
வளைகண் சேவல் வாளாது மடியின்
மனைச்செறி கோழி மாண்குரல் இயம்பும்
எல்லாம் மடிந்த காலத் தொருநாள்
நில்லா நெஞ்சத் தவர்வா ரலரே
அதனால், அரிபெய் புட்டில் ஆர்ப்பப்
பரிசிறந்து
ஆதி போகிய பாய்பரி நன்மா
நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கல்முதிர் புறங்காட் டன்ன
பல்முட் டின்றால் தோழிநங் களவே.''

(அகம்-122)

காதலி ஒருத்தி, காதலனைக் காண முடியாமல் நேரும் இடையூறுகளையெல்லாம் அடுக்கிக் கூறுகின்றாள். அவள் நிலை மிகவும் இரங்கற்குரியது. காதலனைக் காணும் அவாவில் ஊரில் விழவும் இழவாகத் தோன்றுகின்றது. விழாவில்லையேல் அன்னை தூங்காள். அன்னையோ தூங்கின் காவலர் திரிவர் காவலர் தூங்கின் நாய் அப்பொழுதுதான் மகிழ்வாகக் குரைக்கும். நாய் வாயை மூடினால் 'பெண்ணிலா ஊரில் பிறந்த வெண்ணிலா' முகில் விட்டுப்பகல்போல் எரிக்கும். நிலவு மறைந்தாலோ. எலியை நினைத்துக் கூகை குழறும். கூகை மறந்தால் மனைக் கோழி விடிந்ததென்று கூவும். எல்லாம் தூங்கி ஏங்கி இருக்குங்கால் அந்நாளைப் பார்த்து அவனும் வாரான். சுடுகாட்டில் தட்டித் தட்டி விழச் செய்யும் முட்டுக் கற்கள் போலப் பல தடங்கல்களைக் கடக்க வேண்டியிருக்கின்றதே என்று ஏங்கும் தலைவி நமது இரக் கத்திற்குரியவளாகின்றாள்.

## நாய் குரைப்பு

இத் தடங்கல்களில் நாய் குரைப்பதை மட்டும் பல நாட்டுக் கவிகளும் அறிஞர்களும் கூறிப் போயிருக்கின்றனர். ஸ்டீவென்சன், மாரிஸ் டெகெரன், அலெக்சாண்டர் குப்ரின் (Alexander Kuprin) என்ற உருசிய நாவலாசிரியர் ஆகியோர் நாய் குரைக்கும் நிகழ்ச்சியைக் குறிப்பாகக் கூறியுள்ளனர்

'மைக்கால் மலை'களில் (Maikal Hills) வாழும் பழங்குடி மக்களின் காதற் பாட்டில் நாய் குரைப்பது கூறப்படுகின்றது.

**'' நள்ளிரவில் நாய்கள் குரைக்கின்றன**
**விண்மீன்கள் வானிடம் வந்துவிட்டன**
**இலை நீண்டவை பசுமூங்கில்கள்**
**அவையூடே என்கள்வன் வருகின்றான்**
**நள்ளிரவில் நாய்கள் குரைக்கின்றன.''**

இந்த எளிய பழங்குடி மக்கள் பாடலில் நாய் குரைப்பதே முதலும் முத்தாய்ப்புமாக வருவது எண்ணி மகிழச் செய்கிறது.

இவை போன்ற எளிய பாக்களாகத்தான் சங்கப் பாக்களும் பல நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றியிருக்க வேண்டும். ''யாருமில்லைத் தானே கள்வன்'' என்றே குறுந்தொகைக் காதலி, காதலனைக் 'கள்வன்' என்றழைக்கின்றாள்.

## நாய்கள் குரைக்கின்றன

அலெக்சாண்டர் குப்ரின் என்ற நாவலாசிரியர் எழுதிய ஒரு கதையில், ஒரு பல்கலைக்கழக மாணவன் தற்கொலை செய்து கொள்வதை வர்ணிக்கின்றார்.

துப்பாக்கியை மார்பில் வைத்துச் 'சாகலாமா, சாகக் கூடாதா' என்று எண்ணிக் கொண்டிருக்கும்போது, இடையிடையே அடிக்கடி நாய்கள் குரைப்பதைக் கேட்கின்றான். அது தவிர வேறெதுவும் அவன் சிந்தனையைத் தடை செய்வதில்லை 'நாய்கள் குரைக்கின்றன. என்று பல தடவை தனக்குள் கூறிக் கொள்கின்றான். கடைசியில் சுட்டுக் கொண்டு சாகின்றான். கவிகள், அறிஞர்கள், பழங்குடி மக்கள் முதலியோருக்கு மட்டுமன்றிச் சாகத் துணிந்தவனுக்கும் நாய் நள்ளிரவில் குரைப்பது ஒரு தனிக் கவர்ச்சியை உண்டு பண்ணியிருக்கின்றது.

## அகத்திணைச் சிறப்பு

நாய்கள் நள்ளிரவில் குரைப்பது எளிய நிகழ்ச்சி; இயற்கைச் செய்தி; உலக நிகழ்ச்சி; கவிஞர் பலரைக் கவர்ந்த நிகழ்ச்சி. இதையே சங்கப் பாடல்களும் பிற பிற்காலப் பாடல்களும் பரக்கக் கூறக் காண்கின்றோம். இதிலிருந்து பழந்தமிழருடைய இயற்கை ஈடுபாடும் நுண்ணிய உணர்வும் தெள்ளென விளங்குகிறது. நாய் குரைப்பது கூட அவர்களுக்கு அகத்திணையில் ஒரு பொருளாகத் தோன்றிற்று. தமிழரது அகத்திணை வாழ்க்கையில் எதுவும் விலக்கு அன்று.

## ஒப்பிட்டுக் காணல்

இயற்கையொடு (Nature) உள்ளுணர்வை (Psychology) இணைத்துப் பார்க்குமுறை அறிவியல் வளர்ந்த பின் தோன்றியதொன்று; மிகப் பிற்காலத்து. ஆனால் சங்க காலத் தமிழர் இயற்கை நிகழ்ச்சிகள், செய்திகள் (Natural Phenomenon) எல்லாவற்றையும் நுண்ணிய உள்ளுணர்வோடு இணைத்துப் பார்த்திருக்கின்றனர். நிறத்திற்கும் இசைக்கும் (Colour-music) ஒப்புமை காணும் அளவு நுண்ணிய மனவுணர்ச்சியுடையவராயிருந்தனர். நிறத்தையும் ஒழுக்கத்தையும் இணைத்துப் பார்க்கும் நுண்ணுணர்வும் அவர்கட்கு இருந்தது.

கற்பிற்குச் சின்னமாக மேல் நாட்டில் வெண்மையான 'லில்லி' (Lily) என்ற பூவை இலக்கியத்தில் கூறுகின்றனர்; ஓவியங்களில் வரைகின்றனர். சங்ககாலப் புலவர்கள் வெண் முல்லையை கற்புக்கு அறிகுறியாக அக்காலத்திலேயே கூறினர். பல்லாண்டுகளுக்கொருமுறை—பிறந்து இறந்து பிறந்து இறந்து வாழும் 'குறிஞ்சிப் பூவின் தேன் சாரலில் சேர்ந்து பெருந்தேனாவது போலப் பிறந்து இறந்து வாழும் எல்லாப் பிறப்பிலும் நாடனொடு நட்புக் கூட வேண்டும்' என்று கூறக்கூடிய நுண்ணிய உள்ளுணர்வு பழந்தமிழிலக்கியத்தில்தான் காண முடியும்.

காதலர் கூட்டத்திற்குக் குறிஞ்சி நிலம், கூதிர்க் காலம், நள்ளிரவு என்று பொருத்தம் கூறும் உள நூலறிவு சங்க இலக்கியத்தில்தான், அக் காலத்தில்தான் காண முடியும்.

அகத் திணையில் நாம் காண்பது சிறந்த ஒழுக்கம், உயரிய குறிக்கோள், நுண்ணிய உள்ளுணர்வு, ஆழ்ந்த ஆராய்ச்சி, பரந்த உலகியலறிவு, அஃகி அகன்ற இயற்கையறிவு.

உலகம் அடங்கலும் அகத்திணையில் அடக்கிப் பார்த்த பழந் தமிழரின் அறிவைப் போற்றாதிருக்க முடியாது.

2

# செடி, மரம் - பெயர்கள்

## சங்க நூல்களில்

சங்க நூல்களில் ஓரிரு பாடல்களில் மிக அரிதாகச் சில செடி, கொடி, மரங்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ள செய்திகள் மிகக் குறைவு. இவற்றைக் கொண்டு செடி நூற்படி இந்தச் செடிகள் எவையென உறுதியுடன் கூறுவது எளிதன்று. ஆயினும் செடி நூலறிவோடு ஆராயுங்கால் தெளிவு பெற முடிகின்றது. தமிழில் இப்பொழுது வழங்காத சங்க காலப் பெயர்கள், பிற திராவிட மொழிகளில் வழங்குவதைக் கொண்டும் ஆராய்ந்து அறிய முடிகின்றது.

## வளகு

வளகு என்றொரு செடியைப் பற்றிச் சங்க நூல்களில் கலித்தொகை ஒன்றில் மட்டும் ஒரு செய்திக் குறிப்பைக் காண்கிறோம்.

''புணர்நிலை வளகின் குளகமர்ந் துண்ட
புணர்மருப் பெழில்கொண்ட வரைபுரை செலவின்
வயங்கெழில் யானைப் பயமலை நாடனை''

—கலி 43

பிற்காலத்து நூலாகிய தணிகைப் புராணம் சங்க நூற் பாடல்களைப் பின்பற்றிச் சில அரிய இயற்கைச் செய்திகளைக் கூறியுள்ளது.

''இளகு காழகிற் சந்தனப் பொதும்பரெவ் விடனும்
வளகு மேய்ந்து சேவகங்கொளு மாமத
மொழுக்கும்''

—தணிகைப் புராணம், திருநாட்டு. 39

'வளகு' என்ற பெயர் தமிழில் இன்று பேச்சு வழக்கில் பயில்வதில்லை. ஆயினும் மலையாளத்திலும் கன்னடத்திலும் கலித் தொகையில் வழங்கும் பெயர் இன்றும் காணப்படுவதிலிருந்து, வளகு என்ற செடி எதுவென்று அறிய முடிகின்றது. வளகு என்பது மலையாளத்தில் 'வெளுகு' என்று வழங்குகிறது.

கன்னட மொழியில் பெளகு', 'பெலகடா' என்று இச் செடி அழைக்கப்படுகின்றது. சூளாமணியில் 'விதிவழகுடை விரியிலையிடை' (13) என்று வரும் வரியில் வழகு இலை செறிந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. 'வழகு உடை' என்பதற்கு வழுவழுப்புடைய என்று பொருள் கூறுவதைவிட வழகு என்ற மரமென்று கொள்வதே சிறந்தது. இது காடுகளில் காணப்படும் சிறுமரம் ஆகும். குன்றுகளில் நன்றாக, அடர்த்தியாகக் கிளை விட்டு வளரும். இதன் இலையை உணவாக விரும்பி யானை உண்டதாகக் கலித்தொகை கூறியுள்ளது. கலித் தொகையிற் கூறப்பட்ட இச் செய்தி மிகவும் முக்கியமானது.

யானைகளின் பழக்க வழக்கங்களை இயற்கைச் சூழ் நிலையில் ஆராய்ந்த எம். கிருஷ்ணன் என்ற அறிஞர், அதற்கு உணவாகும் மரஞ்செடிகளை நேரில் ஆராய்ந்து கண்டு எழுதியுள்ளார். தேக்குமரத்தின் இளந்தளிர்களை யும் வேறு பிற மரங்களின் இலைகளையும் விரும்பி உண் பதைப் பற்றி எழுதியுள்ளார். இந்த அறிஞர் கூறியுள்ள செடிகளில் மலையாளத்திலும் கன்னடத்திலும் வெளுகு. பெலகு என்றழைக்கப்படும் செடியும் (Kydia calycina) ஒன்றாகும்.

இன்று இயற்கை ஆராய்ச்சியாளர் (Naturalists) கண்டு பிடித்து எழுதிய இந்தச் செய்தியை அன்றே கலித்தொகை கூறியிருப்பது வியப்பைத் தரும். காட்டில் வாழும் மக்க ளும் பாமரமக்களும் யானை உண்ணும் செடிகளை நன்கு தெரிந்து வைத்திருக்கின்றனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. யானையின் உணவைக் கவளம் என்று அழைப் பது மரபு யானை விரும்பி உண்ணும் மரங்களையும் செடி களையும் கவளம் என்ற பெயராலேயே நாட்டு மக்கள் பேச்சு மொழியில் அழைப்பதைக் காணலாம். அவர்கள் கவளம் என்று அழைக்கும் அதே செடிகளையே யானைகள் விரும்பி உண்பதை அறிஞர் கிருஷ்ணன் கூறியுள்ளது மேலும் வியப்பைத் தரும்.

தமிழில் வலம்புரி (Halieteres Ixora) என்று இன்று அழைக்கப்படும் மரம், கவளம் என்று நாட்டு மக்கள் பேச் சில் அழைக்கப்படுகின்றது. கன்னடத்தில் இதையே கவணை, கவரிகை என்று அழைக்கின்றனர். இந்த மரத் தின் இலையை யானை விரும்பி உண்ணும் என்று இதே அறிஞர் கூறியுள்ளார். கன்னடத்தில் கவ்வல், கவளி (Cartya Arborea) என்று இன்று இம்மரத்தை அழைக்கின் றனர். கவளம், கவணை, கவரிகை என்ற சொற்கள் எல்லாம்,யானை தன் வாயகத்தில் இடும் இலை உணவைக் குறித்து வழங்குவதைக் காணலாம். களவு அகத்திடுதல்

என்று தொல்காப்பியம் கூறிய உரிச் சொல்லின் பொருள், இச்சொற்களிலும் காணப்படுவது தெரிகின்றது. இதுவும் யானையின் விருப்பமான உணவு என்று அறிஞர் கிருஷ்ணன் கூறியுள்ளார். இவ் அறிஞர் இயற்கையில் காடுகளல் விலங்குகளின் பழக்க வழக்கங்களை ஆராய்வதற்காக நடுவண் அரசின் நேரு பரிசு (Nehru Award) பெற்றவர்.

அவர் கூறியுள்ள பல இயற்கைச் செய்திகளைச் சங்க நூல்களில் காணும்போது நாம் வியப்படையாமல் இருக்க முடியாது. யானையின் உணவெனக் கண்டுபிடித்து இவர் சொல்லியுள்ள பல மரஞ் செடிகளைச் சங்க நூல்களும் கூறியுள்ளன என்பதைக் காணும்போது சங்கநூற் புலவர்களின் நுண்ணிய அறிவுத் திறத்தை மிகவும் போற்றலாம்.

## வெள்ளோத்திரம்

சங்கநூல்களில் ஐங்குறுநூற்றில் மட்டும் ஒரு பாட்டில் வெள்ளோத்திரம் என்ற மரப்பெயர் காணப்படுகின்றது.

''மால்வெள் ளோதிரத்து மையில் வாலிணர்
அருஞ்சுரஞ் செல்வோர் சென்னிக் கூட்டும்''

—ஐங்குறுநூறு 301

வெள்ளோத்திரம் என்ற மரத்தைச் சீவக சிந்தாமணியும் பிற்கால நூல்களும் வெள்ளிலோத்திரம் என்று அழைக்கின்றன.

''வாசநெய் வண்டு மூச
மாந்தளிர் விரல்கள் சேப்பப்
பூசிவெள் ளிலோத்தி ரத்தின்
பூம்பெருக் கரைத்த சாந்தின்
காசறு குவளைக் காமர்
அகவிதழ் பயில மட்டித்து
ஆசறத் திமிர்ந்து மாதர்
அணிநலந் திகழ்வித் தாரே''

—சிந்தாமணி 622

''வெள்ளி லோத்திரம் விளங்கும் வெண்மலர்க்
கள்செய் மாலையாற் கண்கொ ளாத்துகில்
அள்ளி யேந்திய வரத்த வல்குலார்
ஒள்ளெ ரிம்மணி யுருவப் பூணினார்''

—சிந்தாமணி 2685

வெள்ளோத்திரத்தின் பூவைத் தலையில் சூடுவதை ஐங்குறுநூறு கூறியுள்ளது இதன் மலர் வெண்மையானது; மணமுடையது என்று கூறியுள்ளதைக் காணலாம். சிந்தாமணி வெள்ளோத்திரத்தை வெள்ளிலோத்திரம் என்று அழைக்கின்றது; வெள்ளிலோத்திரத்துக்கு வெண் மலர்கள் உண்டென்றும் அதன் மலர்களை மாலையாகத் தொடுத்து அணிவர் என்றும் கூறியுள்ளது. மற்றும் உலர்ந்த வெள்ளிலோத்திரத்தின் பூவை அரைத்த சாந்தை மாதர் மேலே பூசி மகிழ்வர் என்றும் கூறியுள்ளது.

சூளாமணியும் வெள்ளிலோத்திரத்திரப் பொதும்பரில் நுழைந்த மாருதம் மணப்பெருக்கை அடைந்ததாகக் கூறும். வெள்ளிலோத்திரத்தின் பூ நறுமணமுடையது. குளிர்ச்சியானது. அதனால் இதன் உலர்ந்த பூவைச் சாந்தாக அரைத்து மாதர் உடலில் பூசினர் என்பது விளங்குகின்றது. 'லோத்ரா என்ற வடமொழிப் பெயரே தமிழில் 'லோத்திரம்' என்று பயின்று வந்ததாகத் தெரிகின்றது. இது வெள்ளைப் பூவையுடையதால் வெள்ளோத்திரம் என்று ஐங்குறுநூற்றில் அழைக்கப்பட்டுள்ளது.

இந்த மரம் தமிழ் நாட்டில் கொல்லிமலை முதலிய கிழக்குத் தொடர்ச்சி மலைகளிலும் மேற்குத் தொடர்ச்சி மலைகளிலும் காடுகளில் வளருகின்றது. இம்மரம் குறுமரம். சிறிய பூக்கள், வெண்மையானவை, கொத்துக் கொத்தாகப் பூக்கும், மணம் மிகுந்தது. சிந்தாமணியில் குறிப்பிட்டுள்ளது போலப் பின் பனிக் காலத்திலும் பூக்கும். இதைத் தற்காலம், கம்பிவெட்டி, என்றும் வெள்ளிலோத்தி என்றும் நாட்டு மக்கள் அழைக்கின்றனர்.

சங்க இலக்கியத்தில் செடி, கொடி, மரப் பெயர்களில் வடமொழிப் பெயர் காணப்படுவது மிக அரிதாகும். வெள்ளோத்திரம் என்ற பெயரே மிகப் பழைய சங்க நூல்களில் காணப்படும் ஒரே வடமொழி மரப்பெய

ராகும். குறிஞ்சிப்பாட்டிலும் சிந்து வாரம், பலாசம், பிண்டி ஆகிய வடமொழிப் பெயர்களைக் காணலாம். ஆனால் ஐங்குறுநூற்றுப் பாடல்கள் சங்கப் பாடல்களில் மிகப் பழமையானவையென்றும், குறிஞ்சிப்பாட்டு காலத்தால் பிந்தியது என்றும் கருதுவர். தவிர குறிஞ்சிப் பாட்டு ஆரிய அரசனுக்குத் தமிழ் அறிவிக்கப் பாடப் பட்டதால் தூய தமிழ்ப் பெயர்கள் இருக்கவும் ஒரு சில வடமொழிப் பெயர்களைப் பயன்படுத்தியதாகத் தெரி கின்றது. வெள்ளோத்திரம் என்ற பெயர் மருத்துவப் பழக்கம் காரணமாக வடமொழியிலிருந்து வந்திருக்க லாம். லோத்திரம் சிறந்த மருந்து தரும் மரமாகும். இதிலிருந்து பெண்களுக்குப் பயன் தரும் மருந்து இன்றும் செய்து விற்கப்படுகின்றது. நோய்களைத் தடுக்கும் என்ற பொருளில் லோத்திரம் என்ற சொல் வழங்கு கின்றது.

மலையாளத்தில் இந்த மரத்தைச் 'சிறுமரம்' என்று அழைக்கின்றனர். தமிழில் 'பெருமரம்' என்ற பெயரில் நீண்டு பெரிதாக வளரும் ஒரு தனிமரம் உள்ளது. இம் மரத்தின் பூ, கெட்ட நாற்றம் அடிப்பதாகும். அதற்கு எதிராக நறுமணப் பூவுடைய வெள்ளோத்திர மரத்தைச் சிறுமரம் என்றழைத்தனர் போலும். செடி நூலார் வெள்ளோத்திரத்தை Symploces Spicata என்றழைப்பர்.

வெள்ளோத்திரம் கருவிளமரத்தைக் குறிக்குமென்று சில தமிழ் அகராதிகள் கூறுவது தவறு. வெள்ளில் என்ற பெயர் கருவுளத்தைக் குறிக்கும்.

## இலஞ்சி

சங்க நூல்களில் ஐங்குறுநூற்றில் மட்டும் 'இலஞ்சி' என்ற மரப்பெயர் ஒரே ஒரு பாடலில் வருகின்றது.

''மள்ள ரன்ன தடங்கோட் டெருமை
மகளி ரன்ன துணையொடு வதியும்
நிழன்முதி ரிலஞ்சிப் பழனத் ததுவே''

—ஐங்குறுநூறு 94

இலஞ்சி என்ற சொல், ஐங்குறுநூற்றில் குளம் என்ற பொருளில், வேறுபாட்டில் வருகின்றது. 'நிழல் முதிர்ந்த' என்ற அடை மொழியுடன் வருவதால் இலஞ்சி என்ற சொற்குக் குளம் என்ற பொருள் கொள்வதைவிட மரம் என்று பொருள் கொள்வதே பொருத்தமானது.

இலஞ்சி என்ற மரம், மகிழ மரமென்று தமிழ் நூல்களில் கூறப்பட்டுள்ளது. இலஞ்சி என்ற சொல் மகிழ மரம் என்ற பொருளில் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது. இந்திரவிழ வூரெடுத்த காதையில், 'பழுதில் காட்சி நன்னிறம் பெற்று வலஞ்செயாக் கழியும் இலஞ்சி மன்றமும்' என்று வரும் வரியில் 'இலஞ்சி' என்ற சொல் மரத்தையே குறிக்கின்றது என்று கருத வேண்டும்.

அரும்பதவுரை ஆசிரியர், இலஞ்சி என்பதற்கு மடு என்று பொருள் கூறினார். அடியார்க்கு நல்லாரும் இலஞ்சியை மகிழமென்பாரை, மறுத்துக் கூறிப் பொய்கை என்று பொருள் கூறினார். வலஞ் செய்து கழியும் என்று சொல்லியிருப்பதால், அது பொய்கையாக இருக்க முடியாது. மகிழ மரமாகத்தான் இருக்குமென்று கருத வேண்டும். புறநானூறு (34)ம் மணிமேகலையும் 'இரத்தி மன்றம்' என்று இலந்தை மரம் இருந்த மன்றத்தைக் கூறியிருப்பதைக் காணலாம். ஆதலின், இலஞ்சி மன்றமும் இலஞ்சி மரமிருந்த மன்றமாகவே இருக்க வேண்டும்.

அரும்பதவுரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் கூறாத பொருளை வேறோர் உரையாசிரியர் கூறியுள்ளார். சிலப்பதிகாரத்திற்கு வேறோர் உரையும் உண்டு என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. மகிழ மரத்தை வலம் வந்தார் என்று சொல்வது பொருத்தமே என்று கூறுவதற்குச் சான்று உண்டு. தேவார காலத்தில் ஆலக்கோயில், ஞாழல் கோயில், கொகுடிக் கோயில் என்பவை இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இவை இலந்தை மன்றம் போன்று மரங்களைச் சுற்றி வலம் வரும் கோயில்களாகத் தோன்றி

யிருக்க வேண்டும். இன்றும் மலையாள நாட்டில் மகிழ மரத்தின் இலையைப் பழந்தெய்வ வழிபாட்டில் பயன் படுத்துகின்றனர். அதன் இலையை 'எறிஞ்ஞி செப்பு' என்று அழைக்கின்றனர். இலஞ்சி என்று ஐங்குறுநூறும் சிலப்பதிகாரமும் கூறும் மகிழ மரத்தையே மலையாளத் தில் 'எறிஞ்ஞி' என்று இன்றும் அழைப்பது கவனிக்கத் தக்கதாகும்

இறைஞ்சிப் பாலை, வல்லிய பாலை என்றழைக்கும் மரங்கள் மலையாள நாட்டில் பழந்தெய்வ வழிபாட்டிற் குரிய முக்கியமான மரங்களாகும். எறைஞ்சி என்று மலை யாளத்தில் வழங்கும் பெயர், இலஞ்சி என்ற பெயரின் மாற்றமாகும். கேரள நாட்டில் சில இடங்களில் எலஞ்சி, எலங்கி, ரெஞ்சி என்றும் இலஞ்சி மரத்தை அழைக்கின் றனர். கன்னடத்தில் இதனை எறஜீ (Eraji) என்றழைக் கின்றனர். சிலப்பதிகார ஆசிரியர் சேர நாட்டைச் சார்ந் தவராதலால் சேர நாட்டு (இலஞ்சி) வழக்குச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார் என்று கருத வேண்டும்.

மகிழம் என்ற பெயர் பரிபாடலில்தான் முதலில் வரு கின்றது. பிற்காலத்தில் மகிழ் மாலை, மகிழலகு என்று திவ்யப்பிரபந்தங்களில் இப்பெயர் வருகின்றது. மகிழின் பரலைத் திவாகர நிகண்டு கூறியுள்ளது. ஆனால், மணி மேகலையிலும் குறிஞ்சிப் பாட்டிலும் வகுளம் என்று மகிழ மரம் அழைக்கப்பட்டுள்ளது. மகிழம் என்ற பெயரே வகுளம் என்று மாறிப் பின்னர் வடமொழியில் புகுந்த தாகத் தெரிகின்றது. மகிழ மரத்தை இன்று மக்கள் மகுட மரம் என்றழைக்கின்றனர்.

# 3

# மாழ்கி

தொட்டாற் சுருங்கி என்னும் செடி வகையினை நாம் கேட்டிருக்கிறோம். அதிதி இரண்டு வகைகள் உண்டு. அவை 'மாழ்கி' என்றும் 'சுண்டில்' என்றும் முற்காலத்தில் வழங்கப்பட்டன.

'மாழ்கி' சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள வகையை இனிக் காண்போம்.

அகநாற்னூற்றில் 'மாழ்கி' பற்றிய குறிப்பு வருகின்றது.

''வாங்குசினை பொலிய வேறிப் புதல
பூங்கொடி யவரைப் பொய்யத ளன்ன
வுள்ளில் வயிற்ற வெள்ளை வெண்மறி
மாழ்கி யன்னதாழ் பெருஞ் செவிய
புன்றலைச் சிறாரோ டுகளி மன்றுழைக்
கலையிலை யாரி னங்குழை கறிக்குந்''

—அகம். 104

மாழ்கி என்ற சொல்லை வினைச் சொல்லாகக் கொண்டு, 'மயங்கி விழுந்தாற்போல' என்று உரை கூறியுள்ளனர். வெள்ளாட்டுக் குட்டியின் மடங்கிய காது மயங்கிய விழுந்தாற்போல இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அதை விடச் சிறப்பாகவும் பொருத்தமாகவும் மாழ்கி என்ற செடியன்ன காதையுடைய வெள்ளாட்டுக்குட்டி என்று கொள்ளலாம்.

மாழ்கி என்பது ஒரு செடி யென்பதை நீலகேசியிலிருந்து உணர்கிறோம்.

''யாதினு மாழ்குமம் மாழ்கியு மென்றுழி
நீதின்னும் தோலை நெருப்பொடு கூட்டத்தி
னோதினை தேறுற நீர்க்குரைத் தாயமற்றுஞ்
சோதனை யில்லாய் திரிவென்னை வண்ணம்

—நீலகேசி 365

நீலகேசிப் பாட்டிற்கு அரிய, சிறந்த உரை யெழுதியுள்ள சமயதிவாகரர்,

'மரமுயிருடைய, தீண்ட மாழ்கியும் சுண்டில் முதலியனவும் தீண்டினும் கற்கொண் டெறியினும் இன்னோரன்ன பிறவெச்செயலானும் மயங்குதலால்'

என்று உரை கூறியுள்ளதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். தீண்ட மாழ்கி என்பதும், சுண்டில் என்பதும், தீண்டினாலும் கல்லால் எறிந்தாலும் மயங்கும் என்பது கூறப்பட்டுடுள்ளது. 'தீண்டினும் கற்கொண்டெறியினும் மாழ்கி முதலாயின மாழ்குவதும், முன்னின்ற மலர்ச்சியொழிவதும், சிறிது பொழுது கழிந்தால் முன்பு போல்வதும் காண்கிறோமல்லமோ' என்று இங்கு விரிவுரை கூறப்பட்டுள்ளது.

மாழ்கி என்பது தெட்டாற் சுருங்கி என்ற செடி என்றும், சுண்டில் ஒருவகை கொடி என்றும்பிற்காலத்தில்

விளக்கம் கூறினர். சமயதிவாகரர் 'தீண்ட மாழ்கி' என்ற பெயரையும் 'சுண்டில்' என்ற பெயரையும் குறிப்பிட்டுள்ளனர்.

இச் செடியைத் தற்காலத்தில் தொட்டால் சுருங்கி என்று பல இடங்களில் வழங்குவர். சிலவிடங்களில் தீண்டநாழி என்றும் வழங்குகின்றனர். மலையாள மொழியில் தீண்டநாழி என்ற பெயர் இன்னும் வழங்கு கின்றது. தீண்டநாழி என்ற பெயர் 'தீண்டமாழ்கி' என்ற பெயரின் மாற்றமாகவே தோன்றுகின்றது. ஆகவே, மாழ்கி என்பது தொட்டாற் சுருங்கி என்று தெளிவாகின்றது.

வெள்ளை வெண்மறியின் செவி, மாழ்கியின் இலை போலத் தாழ்ந்து மடிந்திருக்கும் என்று அகநானூற்றுப் பாடல் கூறுவதாகக் கொள்வது பொருத்தமும் சிறப்பு மாகும். தொட்டாற் சுருங்கிச் செடியைத் தொட்ட வுடன் மேலே நோக்கியிருக்கும் வரிசையான இரு இலை கள் கீழே தாழ்வதைப் பார்த்திருக்கலாம். இரண்டு இலைகள் தாழ்ந்து மடங்கி யிருப்பதையே ஆட்டுமறியின் மடங்கிய காதிற்கு ஒப்பிடப்பட்டுள்ளது.

மற்றும் கோழியின் கழுத்திற்குக் கீழ்த் தொங்கும் இலை போன்ற சதைப் பாகத்தை ஆச்சாவின் கவைபட்ட இலைக்கு ஒப்பிட்டு அகநானூறு (287) கூறுவதைக் காணலாம்.

ஆதலின், ஆட்டின் காதுகளுக்கு மாழ்கியின் இலையை ஒப்பிட்டு அகநானூறு கூறியதாகக் கொள்வதே சிறப்பா கும். சிவப்புப் பிணந்தின்னிக் கழுகின் காதுபோன்று தொங்கும் சதைப்பகுதியைக் குறித்து 'காதிலைக்காரன்' என்று மலையாளத்தில் வழங்குவதையும் காணலாம். காதை இலையோடு ஒப்பிடும் ஒரு மரபு இதில் தெரி கின்றது.

சுண்டில் என்பது தொட்டாற் சுருங்கிச் செடிக்கு இடைக் காலத்தில் வழங்கிய பெயராகத் தெரிகின்றது. சோழ அரசனான இராசாதிராசன் (1046) கல்வெட்டில்,

'தெந்திய மரத்தின் மேலைக்காலுக்கு மேற்கு...
சுண்டி லெரிவதிக்க கிழக்கு'

என்ற வரி காணப்படுகின்றது சுண்டிலேறி என்ற பெயரில் சுண்டில் என்பது தொட்டாற் சுருங்கியைக் குறிக்கின்றது. இச் செடி ஏரி ஓரத்திலும் நன்கு வளரும்

சுண்டில் என்பது சுருங்குவது என்ற பொருள்படும். சுன்டைக்காய் என்ற பெயரில் சுருங்குவது என்ற பொருள் காணப்படுகின்றது.

சங்க காலத்தில் தொட்டாற் சுருங்கிச் செடியை மாழ்கி என்றழைத்தனர். இச்செடியே, அதன் இனமான செடியே சுண்டில் என்று இடைக்காலத்தில் அழைக்கப்பட்டது. இதைத் தொட்டாற் சிணுங்கி என்றும், தொட்டால் வாடி என்றும், தீண்டநாழி என்றும் நாட்டு மக்கள் வழங்குவர்.

தமிழ் நாட்டில் தொட்டாற் சுருங்கியில் இரண்டு இனங்கள் உள. ஒன்று குத்துச் செடியாகவும் மற்றொன்று நீண்ட செடியாகவும் வளரும்.

கொடியாக வளருவது பிரேசில் நாட்டில் இருந்து இந்தியாவிற்கு இறக்குமதியாகிப் பரவின செடி என்று அறிவியலார் கருதுகின்றனர்.

தொட்டாற் சுருங்கிச் செடிகளைச் செடி நூலில் Biophytum reinwarbil, Biophytum Sensistivum என்று கூறுவர். மாழ்கி என்பதும் இதுவே என்று கருதவேண்டும்.

○

4

# தில்லையும் குல்லையும்

சங்க நூல்களில் தில்லை என்றொரு மரமும், குல்லை என்றொரு குறிஞ்சி செடியும் கூறப்பட்டுள்ளன. அவை அறிவியற்படி எவை என்பதை ஆராயலாம்.

''குருளை நீர்நாய் கொழுமீன் மாந்தித்
தில்லையம் பொதும்பிற் பள்ளி கொள்ளும்
மெல்ல புலம்ப கண்டிகின் பொறையன்''

புறம். 252

''நன்றே பாணி கொண்கன நட்பே
தில்லை யன்ன புல்லென் சடையோ
டள்ளிலைத் தாளி கொய்யு மோனே''

—ஐங்குறுநூறு 131

''தில்லை பாலை கல்லிவர் முல்லை
குல்லை பிடவஞ் சிறுமா ரோடம்''

—குறிஞ்சிப்பாட்டு 77-78 வரிகள்

''.........................................முறி திரிந்த
கண்டலந் தண்டில்லை கலந்து கழிசூழ்ந்த
மண்டலந் தண்டாழை யிணைந்து''

—திணைமாலை நூற்றைம்பது 61

ஐங்குறுநூறு உரைக் குறிப்பில் உ.வே சாமிநாதய்யர் தில்லை ஒருவகை மரம் என்று எழுதியுள்ளார். தில்லை என்ற மரத்தை நன்கு அறிந்திருக்க வேண்டிய தமிழர் இன்னும் அறியாதிருப்பது வருந்தத்தக்கது.

தில்லை நடராசரும் தில்லைக் காளியும் சிறப்புமிக்க தெய்வங்களாவர். ஒரு காலத்தில் சிதம்பரம் தில்லைக் காடாக இருந்தது. ஆதலின் அது தில்லை எனப்பட்டது. இன்றும் சிதம்பரம் அருகேயுள்ள பிச்சாவரம் சதுப்பு நிலக் காடுகளில் (Mangrove forests) தில்லை மரங்கள் நிறைய உள்ளன.

தில்லைக் காட்டில் மிகப் பண்டைக் காலத்தில் காளியைத் தாய்த் தெய்வமாக வணங்கி வந்தனர். சிவபெருமான் காளியுடன் ஆடிய ஊர்த்துவத் தாண்டவத்தில், காளியைத் தோற்கடித்ததாக ஒரு மரபுவழிக் கதையும் வழங்குகின்றது. இதன் காரணமாகவே, 'தில்லைக் காளி எல்லை தாண்டாள்' என்ற வழக்கு தோன்றியிருக்கலாம். தில்லைக் காடு சிவபெருமான் நடனமாடின சிதம்பரமாக மாறவே, காளி தில்லை எல்லையில் சக்தி தெய்வமாக நிறுத்தப்பட்டாள். இன்றும் தில்லையின் எல்லையில் தில்லைக் காளி வீற்றிருப்பதைக் காணலாம்.

தில்லை மரம் கடற்கரை ஓரங்களிலும கழிகளின் ஓரங்களிலும் உப்பு மண் மிக்க சதுப்பு நிலங்களிலும் வளரும்.

புறநானூற்றில் (252) 'மெல்லம் புலம்பனின் நெய்தல் நிலத்தில் தில்லையம் பொதும்பு' கூறப்பட்டுள்ளது. அந்தத் தில்லைப் பொதும்பில் நீர்நாய் பள்ளி கொண்டதாகக் கூறினதும் அறிவியற் செய்தியேயாகும். நீர்நாய்கள் கடற்

கரைக் கழிமுகங்களில் வாழ்ந்தன. அங்கு இருந்த தில்லைப் பொதும்பரில் அந் நீர்நாய்கள் பள்ளிகொண்டன எனக் கூறியது பொருத்தமேயாகும்.

தில்லை மரத்தை ஐங்குறுநூறும், நெய்தலில் கூறி யிருப்பதைக் கவனிக்க வேண்டும், தில்லை மரம் வேறு எந்தநிலத்திலும் வளராது.

## சடைமுடி

தில்லை மரத்தின் தோற்றத்தைத் தலைமயிர்க் கற்றைச் சடைக்கு ஒப்பிட்டுப் புறநானூறு (252) கூறியுள்ளது. தில்லை மரம் புதர் போன்று வளரும். (grows into a bushy tree) என்றும் கூறுவார். ஆதலின், தில்லையம் பொதும்பர் என்று என்று கூறியது பொருத்தமே.

தில்லையின் அடிமரம் வளைந்து சாய்ந்து காணப் படும் என்றும் அதிலிருந்து செங்குத்தாகக் கிளைசள் காணப்படும் என்றும் கூறுவர். இத்தோற்றத்தேயே தலை மயிர்க் கற்றைச் சடைக்கு ஒப்பிட்டுப் புறநானூறு கூறியுள்ளது.

சடா பாரத்தை அணிந்துள்ள சிவபெருமானே காற் றைச் சடை போன்ற தோற்றத்தையுடைய தில்லை மரக் காட்டில் தெய்வமாக வீற்றிருந்தது பொருத்தமே யாகும். தில்லை மரத்தை நெய்தல் நிலமக்கள் ஊருக்கு வேலியாக வளர்த்தனர் என்பதை ஐங்குறுநூறு (131) கூறியுள்ளது. தில்லையின் எல்லையில் காளி இருப்பதன் பொருத்தமும் விளங்குகின்றது. தில்லை மரத்தை வேலியாகவுடைய ஊரர்கத் தில்லை பண்டைக் காலத்தில் திகழ்ந் திருக்கலாம்.

## தில்லை மரப் பால்

தில்லை மரத்தின் பால் கொடிய நச்சுத் தன்மை யுடையதாகும். உடலில் பட்டால் புண் உண்டாகும். கண்ணில் பால் பட்டால் பார்வை போய்விடும். இதன் காரணமாக எல்லையில் நட்டு வளர்ந்து வேலியாக்கி

யிருக்கலாம். தில்லை மரத்தை நான் நேரில் பிச்சாவரம் காடுகளிலும், காரைக்கால் அரசலாற்றங் கழிக்கரையிலும் கண்டுள்ளேன். இம் மரத்தின் இலையை ஆடு மாடுகள் தின்னாமையால் மரம் நன்கு வளரும்.

## கண்டல்

திணைமாலையில், தில்லை மரமானது கண்டலுடனும் தாழையுனும் கலந்து கழிக் கானலில் காணப்படுவது கூறப்பட்டுள்ளது. பிற்கால உரையாசிரியர் சிலர் கண்டலைத் 'தாழை' என்று கூறினர். கண்டல் வேறு, தாழை வேறு. கண்டல் கழிக்கானலில் வாழும் தனிப்பட்ட மரக் குடும்பமாகும். வெண் கண்டல், கருங்கண்டல், காய்க் கண்டல் முதலியன கண்டல் மரத்தின் வகைகளாகும்.

தாழை பல்வகைக் குடும்பத்தைச் சார்ந்ததாகும்.

## சுற்றுலாத் துறையின் சிந்தனைக்கு

சங்க நூலில் கூறப்பட்டுள்ள நெய்தல் நிலச் செடி கொடி மரங்களைக் காணவேண்டுமானால் பிச்சாவரம் காட்டிற்குச் செல்ல வேண்டும். அங்குதான் பெரும்பாலான நெய்தல் திணைக்குரிய செடி கொடி மரங்களைக் காணலாம். பிச்சாவரம் காட்டைப் பயணிகளின் பொழுதுபோக்கு இடமாக மாற்றத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. விடுதி ஒன்றும் கட்டப்படுகின்றது.

> பிச்சாவரம் காடுகளில் உள்ள கண்டல், தில்லை, தாழை, ஞாழல் போன்ற மரங்களைப் பெயர்ப் பலகையுடன் காட்டி, அத்துடன் நெய்தல் திணையைப் பற்றி ஒரு கையேடும் பயணிகளுக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் தந்தால் சிறப்பாக இருக்கும்.

**பிச்சாவரம் கழிகளையே சங்க நூல்களில் கூறியநெய்தல் திணைக்கு இயற்கைக் காட்சியகமாகக் காட்டினால் மிகச்சிறப்பாக இருக்கும். இவ்வாறு ஒவ்வொரு திணைக்கும் குறிப்பிட்ட இடங்களைத் தேர்ந்தெடுத்து இயற்கைக்**

காட்சி யகங்களை அமைக்கலாம். கோடைக் கானலில் குறிஞ்சித்திணையைப் பற்றிய இயற்கைக் காட்சியகத்தை அமைக்கலாம்.

## கபிலர் ஏன் பாடினார்?

குறிஞ்சிப் பாட்டில், 'தில்லை, பாலை, கல்லிவர் முல்லை, குல்லை' ஆகியவை ஒரே வரியில் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

தில்லை உப்புமிக்க உவர் மண்ணில் கடற் கானலில் வளர்வதாகும்.

பாலை வெப்பமிக்க நிலத்தில் வளர்வதாகும்.

இயற்கையின் முல்லை இலையுதிர் காடுகளில் வளர்வதாகும்.

குல்லை குறிஞ்சி நிலத்திலும் வெற்று நிலத்திலும் காணப்படுவதாகும்.

ஆதலின் குறிஞ்சிப் பாட்டு இவ்வாறு கூறியது இயற்கையைப் பற்றிய விளக்கமன்று பாட்டு நயத்திற்காகக் கூறப்பட்டது என்பதைப் புலவர் பலர் தெளிந்தாரில்லை, ஆரிய மன்னனுக்குச் சங்க இலக்கியத்தில் வழங்கிய செடி கொடி மரப் பெயர்களைத் தெரிந்து கொள்ளவும், பண்டைத் தமிழர் வாழ்க்கை நெறி முறையான களவு நெறியைக் கண்டறியவும், குறிஞ்சிப் பாட்டைக் கபிலர் பாடினார் என்பதை நாம் உணர வேண்டும்.

## குல்லை

குல்லை என்றொரு செடியைப் பற்றிச் சங்க நூல்களிலே செய்திகள் பயில்கின்றன. பிற்கால நூல்களில் குல்லையைப் பற்றிய குறிப்புகள் இல்லை.

''குல்லை குளவி கூதளங் குவளை
இல்லமொடு மிடைந்த ஈர்ந்தண் கண்ணியன்',

—நற்றிணை .376

''குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்''
— குறுந்தொகை 11

''எல்லை தருநன் பல்கதிர் பரப்பிக்
குல்லை கரியவுங் கோடெரி நைப்பவும்''
— பொருநராற்றுப்படை 233-234

''குல்லையம் புறவிற் குவிமுகை யவிழ்ந்த''
— சிறுபாணாற்றுப்படை 29

''இணைத்த கோதை யணைத்த கூந்தன்
முடித்த குல்லை யிலையுடை நறும்பூ''
— திருமுருகாற்றுப்படை 200-201

''புல்லிலை வெட்சியும் பிடவுந் தளவுங்
குல்லையுங் குருந்துங் கோடலும் பாங்கருங்
கல்லவுங் கடத்தவுங் கமழ்கண்ணி மலைந்தனர்''
— கலித்தொகை 103

''மல்லிகை மௌவன் மணங்கமழ் சண்பகம்
அல்லி கழுநீ ரரவிந்த மாம்பல்
குல்லை வகுளங் குருக்கத்தி பாதிரி
நல்லிணர் நாக நறவஞ் சுரபுன்னை
எல்லாங் கமழு மிருசார் கரை கலிழ''
— பரிபாடல் 12 : 77-81

## துளசி அன்று

உ. வே. சாமிநாதய்யர் பரிபாடலுக்கு எழுதிய அரும்பதவுரையில் குல்லையை வெட்சி, துளசி என்று கூறியுள்ளார். அந்த அரும்பதப் பொருள் முற்றிலும் தவறானதாகும். வெட்சியும் துளசியும் குல்லையின் முற்றிலும் வேறான செடிகளாகும்.

## கஞ்சாச் செடியே

திவாகரம் 'கஞ்சங் குல்லை கஞ்சாவாகும்' என்று கூறிற்று. திவாகர நிகண்டு தெரிந்து தெளிந்து கூறியுள்ளது கஞ்சாச் செடியே சங்க காலத்துக் குல்லையாகும். கலித்தொகையில் வெட்சியும் குல்லையும் ஒரே பாட்டில் தனியே கூறப்பட்டிருப்பதையும் கவனிக்க வேண்டும். ஆதலின் வெட்சி குல்லையாக இருக்க முடியாது.

கலித்தொகைக்குக் குறிப்புரை எழுதிய அனந்தராமய்யர் குல்லை, கஞ்சங் குல்லை, கஞ்சா என்று எழுதி, இச் சொல் கஞ்சம், குல்லையென இரண்டாகவுங் கொள்ளப் படும் என்று எழுதினார். இரண்டாகவும் கொள்ளப் படும் என்றது தவறு.

கஞ்சா என்ற சொல் வடமொழியிலிருந்து வந்தது கஞ்சாச் செடியிலிருந்து கஞ்சா என்ற போதைப் பொருளைப் பயன்படுத்தினர். குல்லையென்பதைப் பிற்காலத்தில் நன்கு தெரிந்து கொள்ளாததால் அதை விளக்க வடமொழிச் சொல்லுடன் கூடிய கூட்டுப் பெயரான 'கஞ்சங் குல்லை' என்ற பெயரைப் பயன்படுத்தினர்.

திருமுருகாற்றுப்படை யுரையில் நச்சினார்க்கினியர், 'இலையைத் தலையிலே யணிந்த கஞ்சங் குல்லையினையும்' என்று கூறிய உரை பொருத்தமாகவுள்ளது. நச்சினார்க்கினியர் காலத்தில் கஞ்சா என்ற போதைப் பொருள் பழகின தொன்றாகும். ஆயினும் திருமுருகாற்றுப்படையில் கஞ்சாச் செடியின் போதைப் பொருள் குறிப்பிடப் படவில்லை என்பதைத் தெளிவாக்குவதற்காகவே 'இலையைத் தலையிலே அணிந்த' என்று கூறினார்.

## நறுமணச் செடி

திருமுருகாற்றுப்படை இயற்றப் பெற்ற காலத்தில் குல்லைச் செடி நறுமணச் செடியாகக் கருதப் பட்டதன்றிப் போதைப் பொருள் தரும் செடியாகக் கருதப்பட வில்லை. கஞ்சாச் செடியின் இலையும் பூவும் நல்ல நறு

மணமுடையவை. கஞ்சாச் செடியின் இலையும் பூந் தண்டும் போதைப் பொருளைத் தருகின்றன. 'முடித்த குல்லை இலையுடை நறும்பூ' என்று கூறினதால் திருமுருகாற்றுப்படையில் குல்லையின் இலையும் பூவும் நறுமண மிக்கவை என்பது கூறப்பட்டுள்ளது.

நற்றிணையில் தலைவன் அணியும் கண்ணியில் நறுமண மிக்க பூக்களான குல்லை, குளவி, கூதளம், குவளை, இல்லம் ஆகியவை கூறப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும். நற்றிணை உரையாசிரியரான பின்னத்தூரர் 'குல்லை கஞ்சா துழாயுமாம்' என்று எழுதினார். இதை வைத்துத்தான் உ. வே. சாமிநாதய்யர் பரிபாடல் அரும் பத உரையில் துழாய் என்று குல்லைக்குப் பொருள் கூறினார் போலும்.

குறுந்தொகையில் குல்லைப் பூவை வடுகர் கண்ணியில் அணிந்ததாகக் கூறப்பட்டுள்ளது. 'பல்வேற் கட்டியின் நாட்டுக்கு அப்பால் இருந்த வடுகர்' என்று கூறியிருப்பதால் இன்றைய கருநாடக நாட்டைச் சேர்ந்த வடுகர் கூறப்பட்டுள்ளனர் என்பது தெரிகின்றது.

குல்லை இலையுதிர் காட்டுப் பகுதிகளிலும், பயிரிடப் பயன்படாத நிலங்களிலும் வளரும். இக்காலத்தில் அரசுக்குத் தெரியாமல் பழங்குடி மக்கள் கஞ்சாச் செடியைப் பயிரிட்டு விற்கின்றனர். குல்லை எனும் கஞ்சாச் செடியைப் பயிரிடக் கூடாது என்று இந்திய அரசு தடை விதித்துள்ளது. இக்காலத்தில் தடை செய்யப்பட்ட செடி, சங்க காலத்தில் நறுமணந் தரும் செடியாக இருந்ததை ஆராய்ந்து அறியும்போது வியப்புறாமல் இருக்க முடியாது.

தில்லை மரத்தை ஆங்கிலத்தில் 'Blinding tree' என்று கூறுவர் கண்ணைக் குருடாக்கும் மரம் என்பது ஆங்கிலப் பெயரின் பொருளாகும்; அறிவியலில் Excoelaria Agallocha என்றழைக்கப்படும்.

குல்லையை ஆங்கிலத்தில் Ganija அல்லது Bhang என்றழைப்பர். அறிவியலில் Cannalis Jativus என்றழைப்பர்.

○

5

# தடவும் பிடவும்

## அறிவியல் நோக்கில்

சங்க இயக்கியத்தில் தடவு, பிடவு என்ற இருமரங்கள் கூறப்பட்டுள்ளன. இவ்விரு மரங்கள் அறிவியற்படி எவை என்பதை ஆராயலாம்.

''தடவி னோங்குசினைக் கட்சியிற் பிரிந்தேன்''
— குறுந்தொகை 160

''தடவும் பிடவும் தாழச் சாய்ந்தது''
— பெருங்கதை 1: 51: 43

தடவு என்ற மரத்தைப்பற்றிச் சங்க நூல்களில் குறுந் தொகையில் மட்டுமே சிறு குறிப்பு வந்துள்ளது. பெருங் கதை தடவு என்ற பெயரை மட்டுமே குறிப்பிட்டுள்ளது.

## தடா மரம்

இருப்பினும், இந்த மரத்தின் பெயர் தெலுங்குப் பேச்சு மொழியில் வழங்குவதிலிருந்து இந்த மரம் அறி வியற்படி எந்த மரம் என்று கண்டு கொண்டேன். தமிழி லும் பேச்சு வழக்கில் வட ஆற்காடு, கோயமுத்தூர் மாவட்டங்களில் தடா என்ற பெயர் சில ஆண்டுகளுக்கு முன் வழங்கியதாகத் தெரிகின்றது.

தமிழில் பிற இடங்களில் இந்த மரத்தைப் 'பொலவு' என்றழைக்கின்றனர். தடாமரம் காடுகளில் தாணப்படு வது. தடா என்ற மரம் இருந்த காடுகள் இருந்த ஊரைத் 'தடா' என்று இன்றும் ஆந்திர நாட்டில் அழைப்பதைக் காணலாம்.

உ. வே. சாமிநாதய்யர் தடாவின் இலைகள் உணவுக் கலமாகத் திருக்காளத்தி முதலிய இடங்களில் பயன்படுவ தாக எழுதினார்.

## மந்தாரை இலை

தடாவின் உலர்ந்த இலை இன்றும் உணவுக் கலமாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதன் இலை மந்தார இலை போன்று நடுவில் பிரிந்து காணப்படும். ஆனால் இலை மிகவும் அகலமானது.

இப்போது உணவகங்களில் பயன்படுத்தப்படும் காய்ந்த இலைகளைப் பெரிய மந்தாரை என்றழைப்பர். இது பீகார் முதலிய வடநாட்டு மாநிலக் காடுகளில் இருந்து வருவதாகும். இதுவும் ஒருவகைத் தடா மரமாகும்.

## நான்கு வகைகள்

தடா மரத்தில் நான்கு வகைகள் உண்டு. தெலுங்கு மொழியில் வழங்கும் தடா மரமே குறுந்தொகையில்

கூறப்பட்டதாகும். இதைச் செடி நூலார் Pteros Permum Hyneanum (wall) என்றழைப்பர். செங்கற்பட்டு மாவட்டத்தில் இம்மரம் ஒரு காலத்தில் காணப்பட்டது. இது இப்போது அழிந்துவிட்டது. இதைத் தமிழில் 'போலவு' என்றும் அழைத்தனர். இதன் பிற வகைகளை வட்டப் பொலவு சிற்றிலைப் பொலவு என்றும் தமிழகத்தில் சில மாவட்டங்களில் அழைத்தனர்.

தெலுங்கு மொழியில் சில இடங்களில் 'லொலகு' என்றழைத்தவர். பொலவு என்ற தமிழ்ப் பெயர் போன்று இப் பெயர் உள்ளது.

கம்பராமாயணத்தில் 'சிற்றிலை' என்ற பெயரில் ஒரு மரம் கூறப்பட்டுள்ளது. இது ஒருவேளை சிற்றிலைப் பொலவு என்று அழைக்கப்படும் மரமாக இருக்கலாம். சிற்றிலைப் பொலவைச் செடிநூலார் Pterospermum Diversifollum என்றழைப்பர்.

தடா மரத்தின் இன்னொரு வகையை வட்டப் பொலவு என்றழைத்தனர். இதன் கிளைகள் கிடைமட்டமாகக் காணப்படுவதால் 'வட்டப் பொலவு' என்றழைத்தனர், பம்பரம் போன்று கீழே இருந்து மேலே இந்த மரம் தோன்றியதால் பம்பரம் என்ற பெயரில் தெலுங்கில் அழைத்தனர்.

## செம்பூப் புழகு

குறிஞ்சிப்பாட்டில் கூறப்பட்ட நூறு மரஞ் செடி கொடிகளில் கடைசியாகக் குறிப்பிடப்பட்டது 'செம்பூப் புழகாகும்.' இதை மலையெருக்கம்பூ என்று நச்சினார்க்கினியர் உரை கூறினார். மலையில் வாழும் தனித்த எருக்கஞ் செடி இல்லை. வெள்ளை நிறமும், ஊதா நிறமும் உடைய எருக்கஞ் செடிகளே இயற்கையில் உள்ளன. ஆதலின் நச்சர் கூறிய பொருள் பொருத்தமாகத் தெரியவில்லை. புழகு என்ற பெயர் தமிழில் பொலவு என்றழைக்

கப்பட்ட வட்டப் பொலவாகவோ, சிற்றிலைப் பொல வாகவோ இருக்கலாம். புழகு என்ற பெயர் மக்கள் வாயில் பொலவு என்று மாறியிருக்கலாம். புழகுப் பூனையை இக் காலத்தில் புனுகுப்பூனை என்று அழைப்பதைக் காணலாம்.

பேச்சு வழக்குப் பெயர்கள் கட்டளைத் தமிழாக அல்லது நாளிதழ்களின் வாயிலாக, சென்னைத் தமிழாக மாறுமுன் அவற்றைச் சேர்த்து ஆராய்வது (Dialectical names) மிகவும் தேவையானதாகும்.

## பெயரும் உருவமும்

'தடா' என்ற பெயர் வந்ததன் தோற்றத்தையும் ஆராய வேண்டும். 'தடவு' என்ற சொல் வளைவு என்ற பொருளை உடையதாகும். தொல்காப்பியத்தில் உரிச் சொல்லிலக்கணத்தில் 'தடா' என்ற சொல் வளைவு என்ற பொருளைத் தரும் என்று கூறப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும். அவற்றுள், 'தட என்கிளவி கோட்டமும் செய் யும்' (சொல்லதிகாரம் 315) என்று தொல்காப்பியம் கூறி யுள்ளது.

இம் மரம் ஓரளவு வளைவு உடையதுதான். யாப்பருங் கல விருத்தியுரையில் காட்டப்பட்ட மேற்கோள் பாடலில் 'இடவ குடவ தடவ ஞாழலும்' என்ற வரி வருகின்றது. இடவ என்பது இடது பக்கமாகவும், குடவ என்பது குழிந் தும், தடவ என்பது வளைந்தும் காணப்பட்டது என்று கூறிய சொற்பொருள் நயம் மிகவும் பாராட்டத்தக்க தாகும்.

நான் சிதம்பரத்தின் அருகில் உள்ள பிச்சாவரம் கடற் கழிக் காடுகளில் உள்ள மரங்களை ஆராய்ந்தபோது ஞாழல் மரத்தையும், கண்டல் மர வகைகளையும், தில்லை மரத்தையும் பார்த்தேன். இம் மரங்கள் யாவும் ஓரளவு பொதுவாக 'இடவ குடவ தடவ' என்ற விளக்கத்திற்குப் பொருத்தமாகக் காணப்பட்டன.

## குடுவை - கொடுவாய்

நான் படகில் கழிகளில் சென்றபோது, படகோட்டி சில இடங்களில் நீர்குத்தி ஆழமாக இருக்கும் இடங்களைக் குடுவை' என்றான். புதுவையில் சுண்ணாம்பு ஆற்றின் பாலத்தில் பண்டைக் காலத்துத் தூண்கள் உள்ளன. வெள்ளம் வரும் காலத்தில் தூண்களுக்கு அருகில் நீர்குத்தி இரண்டாள், மூன்றாள் ஆழம் உடைய நீர்ப் பரப்பைக் 'குடுவை' என்று மீனவர் அழைக்கின்றனர்.

இக் குடுவையில் 'கொடுவா' என்ற கடல் மீன் நன்னீரில் வாழ்ந்து பெரிதாக வளர்கின்றது. இதன் வாய் பெரியதாகவும் அகலமாகவும் காணப்படுவதாலும், இந்த மீன் கொடுவாய் என்ற விலங்குகளைத் தின்னும் புலியைப் போலப் பிற மீன்களைத் தின்னுவதாலும் 'கொடுவா' என்றழைக்கப்படுகின்றது.

அண்மையில் மலையாள மொழியில் 'கொடுவாயைப் பிடித்த கிடுவா' என்ற பெயரில் ஒரு நிழற்படம் வந்தது. புலியைப் பிடித்த சிறுவன் என்ற பொருளில் அது வந்தது.

ஆட்கொல்லிப் புலியின் வாய் கொடுவாய். அதனால் தான் நாட்டார் மக்கள், தமிழில் புலியைக் 'கடுவா' என்று புலியை அழைக்கின்றன.

# இரம் என்ற மரம்

## இரம்

இரம் என்ற ஒரு மரம் சங்க நூல்களில் இரண்டு பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''நறுவிரை துறந்த நரைவெண் கூந்தல்
இரங்கா ழன்ன திரங்குகண் வறுமுலை''
— புறம். 276

''இரங்கா ழன்ன வரும்புமுதி ரீங்கை''
— அகம். 125

''இரவு மிண்டுங் குரவுங் கோங்கும்''
— பெருங்கதை 1 : 52 : 40

'இரம் என்றொரு மரமுண்டு. அது இரா, இரவு, இரவ மென நூல்களில் வழங்கும்' என்று டாக்டர் உ. வே. சா. கூறியுள்ளார். புறநானூறும், அகநானூறும் 'இரங்காழ்' என்று இதன் விதையைக் குறிப்பிட்டுள்ளதைக் காண

லாம். இரங்காழ் போல ஈங்கையின் அரும்பு முதிர்வ தாகச் சொல்லப்படுவதிலிருந்து, இர மரத்தின் காழ் எப்படியிருக்கும் என்று தெரிந்து கொள்ளலாம்.

ஈங்கை என்பது இப்போது சீங்கை என்று அழைக்கப் படும் ஒரு முள் நிறைந்த கொடியாகும். புதராக வளரும் இந்த ஈங்கையின் காய், சீயக்காய் போல இருக்கும்; அது போன்றே இர மரத்தின் காய், கிழவியின் திரங்கிப்போன வற்றிய—முலை போல இருக்கும் என்று புறநானூறு கூறியுள்ளது. இரங்காழ் என்பது அதன் காயையே குறித்த தென்று கொள்ளலாம்.

இரம் என்பது பெருங் கதையில் இரவு என்று அழைக் கப்பட்டுள்ளது. இருள் என்று ஒரு மரத்தினை இன்றும் பேச்சு வழக்கில் அழைக்கின்றனர். ஒருவகைக் காட்டு மரத்தையே இருள் மரம் என்றழைப்பர்.

மலையாளத்திலும், 'இருள்' என்றும், 'இருள் முள்ளு' என்றும் இம் மரம் அழைக்கப்படுகின்றது.

இரவு, இரா என்ற பழைய பெயர்களே இருள் என்று இக்காலத்தில் வழங்குவதாகக் கருதலாம் இந்த மரத்தின் அடிமரம் உள்ளே கரியதாக, உறுதியாக இருந்ததால், (Dark Heartwood) கரிய மரத்தைக் குறிக்கும் பெயராக இரா, இரவு, இருள் என்ற பெயர்கள் தோன்றின என்று கொள்ளலாம். இரவு, இரா என்ற சொற்கள் இருளைக் குறிக்கும்.

## இரவம்

புறநானூற்றில் இரவம் என்றொரு மரம் கூறப்பட் டுள்ளது.

"தீங்கனி யிரவமொடு வேம்பு மனைச் செரீஇ"

— புறம். 27

இரவமும் இரம் என்று சொல்லப்படும் மரம் என்று கொண்டனர். அது தவறென்று கருத வேண்டும். இரங்காழ் என்று புறநானூறும் அகநானூறும் அதன் காயைப் பற்றிக் கூறியுள்ளபோது இந்தப் புறப்பாட்டில் 'தீங்கனி' இரவ மரத்திற்கு இருப்பதாகக் கூறியிருப்பதைக் காணலாம். தீங்கனியுடைய இந்த இரமரம், மரத்தின் வேறான தாக இருக்கும்.

## இரத்தி

இரத்தி என்ற பெயர் சங்க நூல்களில் இலந்தை மரத்தைக் குறித்து வழங்குகின்றது. இலந்தை மரத்தில் ஒரு வகைக் கொட்டை இலந்தை என்றழைக்கப்படும். இவற்றுக்குத் 'தீங்கனி' உண்டு. அவற்றை மக்களும் உண்பர். தீங்கனியிருப்பதாகப் புறநானூறு கூறிய 'இரவம்' இலந்தையில் ஒரு வகையாக இருக்கலாம். இலந்தையாகவும் இருக்கலாம். இரமரத்தைச் செடி நூலார் xylia xylocarpa) என்று அழைப்பர். டாக்டர் பர்ரோ எழுதிய திராவிட ஒப்பியல் அகராதியில் ஈட்டி மரத்தையே 'இரவு' என்று கூறியுள்ளார். ஆனால், இன்றும் தமிழில் 'இருள்' என்று வழங்கும் மரமே 'இரவு' மரம் என்று கொள்ளவேண்டும்.

இலந்தை மரத்தின் இலையையும் வேம்பு மரத்தின் இலையையும் பழங்குடி மக்கள் தங்களுடைய மதச்சடங்குகளில் பயன்படுத்துகின்றனர். இவ் இரு மரங்களின் இலைகளை மனையில் செருகினால் பேய், பூதம் வராது என்ற நம்பிக்கை உண்டு. புறநானூற்றுப் பாடலிலிருந்து சங்க காலத்திலும் இந்த நம்பிக்கை இருந்ததை அறிகிறோம்.

## தெறுழ்

தெறுழ் என்றொரு செடி பற்றிச் சங்க நூல்களில் இரண்டே பாடல்கள் கூறுகின்றன.

''கார்ப்பெய றலைஇய காண்பின் காலைக்
களிற்றுமுக வரிபில் தெறுழ்வீ பூப்பச்''

—புறம். 119

''வருமழைக் கெதிரிய மணிநிற விரும்புதல்
நரைநிறம் படுத்த நல்லிணர்த் தெறுழ்வீ
தாஅந் தேரலர் கொல்லோ சேய்நாட்டுக்''

—நற்றிணை 302

''.................................அரும்பவிழ்ந்
திர்ந்தண் புறவில் எறுழ்வி மலர்ந்தன''

—கார் நாற்பது 25

'தெறுழென்றது, காட்டகத்தொரு கொடி; புளிமா வென்றுரைப்பாரும் உளர்' என்று புறநானூற்று உரையில்கூறப்பட்டுள்ளது. கார்மழை பெய்தபின் யானையின் முகத்தில் காணப்படும் சிவந்த புள்ளிகள் போலத் தெறுழ் பூத்ததாகப் புறநானூறு கூறியுள்ளது.

தெறுழ் என்பதே தெருளன் கொடி என்று அழைக்கப் படுகிறது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். தெறுழ் என்ற சங்கப் பெயரின் மரூஉப் பெயரே தெருளன் என்பதாகும். இது பெரிய கொடியாகும். யாவர்க்கும் தெரியும் வண்ணம் எளிதாகக் காட்டில் காணப்படும் கொடியாகும்.

இந்தக் கொடி மழைக் காலத்தில் கொத்துக் கொத் தாகப் பூக்கும். செங்கல் நிறம் போன்று சிவப்பாகக் கொத்துக் கொத்தாக இக் கொடி பூப்பதைத் தொலைவில் இருந்து கூடக் கண்டு கொள்ளலாம். சங்க நூல்களில் கார் காலத்தில் பூப்பதும் யானையின் நெற்றியில் காணப் பட்ட தெருளங் கொடி என்று அழைக்கப்படும் கொடியே என்பது தெளிவாகின்றது. இந்தக் கொடியைச் செடி நூலார் calycopteris Floribunda என்றழைப்பர்.

## தெற்றி

சங்க நூல்களில் ஒரு பாட்டில் தெற்றி என்ற செடி, வீட்டில் வளரும் வயலைக் கொடியோடு கூறப்படுகின்றது. இந்தத் தெற்றி என்ற கொடி, தெறுழின் வேறானது. வீட்டில் வளர்க்கப்பட்ட மரங்களில் தேற்றா என்பது சங்க நூல்களில் இல்லம் என்றும், மனைமரம் என்றும் அழைக்கப்படுகின்றது. தெற்றி என்பது அதனினும் வேறானது என்று தெரிகின்றது.

தெற்றி என்பதற்குத் திண்ணை என்று பொருள் உண்டு. திண்ணையில் வளர்க்கப்பட்ட கொடியாக இஃது இருக்கலாம்.

தெற்றி என்பதே 'தெற்றுக் கொடி' என்று அப்பர் தேவாரத்தில் வழங்கியுள்ளது. இந்தத் தெற்றுக் கொடி எதுவென்று தெரியப் போதிய செய்திகள் நூல்களில் இல்லை.

## பெருவாய்

சங்க நூல்களில் 'பெருவாய்' என்றொரு செடிப் பெயர் பதிற்றுப்பத்தில் மட்டும் வருகின்றது.

> ''கொல்லிப் பெருவாய் மலரொடு பசும்பிற
> மகிழ்ந்து''
>
> — பதிற்றுப்பத்து 1 : 81 : 25

பெருவாய் மலர் என்பதற்கு இருவாட்சி என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இஃது ஒரு வகை மல்லிகைப் பூ என்பதில் ஐயமில்லை. குறிஞ்சிப் பாட்டில், 'நள்ளிருள் நாறி' என்பதற்கு இருவாட்சிப் பூ என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இருள்வாசி என்பதே இருவாட்சி என்று வழங்குகின்றது என்றும் விளக்கத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், இருவாய்ச்சி என்பதே இருவாட்சி என்று மாறியதாகக் கருத வேண்டும்.

பதிற்றுப்பத்தில் பெரிய மல்லிகைப் பூவின் பெயராகப் பெருவாய் என்ற பெயர் வருவதால், அதே மரபில் இரு வாய் என்ற பெயர் பெரு மல்லிகையின் பெயராகத் தோன்றியிருக்க வேண்டும். இருவாய் என்பதே இரு வாய்ச்சி, இருவாட்சி என மாறிப் பெரிய மல்லிகை மலரைக் குறித்து வழங்கிற்று. பெருவாய் என்பது சங்க கால வழக்கு. இருவாய், இருவாய்ச்சி (இருவாட்சி) என்ற பெயர்கள் அதே பொருளில் பின்னால் தோன்றி யனவாகும்.

இரும்புலி, இருங்களிறு என்ற சங்க கால வழக்குகளில் 'இரு' என்ற சொல், பெரிய என்ற பொருளில் வழங்கிய தைக் காணலாம். தொல்காப்பியம் சேனாவரையருரை யில் 'சிறு வெள்வாய்' என்ற பெயர் வழக்குக் காட்டப் பட்டுள்ளது. இது சிறிய மல்லிகை மலரைக் குறித்து வந்தது. பெருவாய் என்பதற்கு எதிராகச் சிறுவாய் என்ற பெயரும் வழங்கியது இதிலிருந்து தெளிவாகின்றது. பெருவாய், சிறுவாய் என்ற பெயர்கள் மல்லிகையின் வகைகளைக் குறித்து வழங்கின என்று தெரிகின்றது.

## வெள்வீ மலர்

மல்லிகை மலர் 'வெள்வீ' என்றும் புறநானூற்றில் அழைக்கப்பட்டுள்ளது.

**''வெள்வீ வேலிக் கோடைப் பொருந''**

— புறம். 205

வெள்வீ என்பது கோடைக்கானல் மலையில் வேலியில் படர்ந்த காட்டு மல்லிகைப் பூவைக் குறித்துச் சொல்லிய தாகத் தெரிகின்றது. 'சிறு வெள்வாய்' என்று சேனா வரையர் கூறிய வழக்குப் பெயரில் 'வெள்' என்ற அடை வந்திருப்பதைக் காணலாம்.

சங்க காலத்திலேயே மல்லிகைச் செடியில் பல வகைகளைச் சங்கப் புலவர்கள் அறிந்திருந்தனர். முல்லை, மௌவல், குளவி, பித்திகம், பெருவாய் என்ற பெயர்கள் சங்க காலத்திலேயே மல்லிகைச் செடியின் சில வகைகளைக் குறித்து வழங்கியுள்ளதைக் கவனிக்க வேண்டும். பிற் காலத்தில் இருவாட்சி என்ற பெயரின் பொருளைப் புரியாது, விசயநகர அரசாட்சி ஏற்பட்ட பின்னர், இருவாட்சி என்ற பெயரை 'விருபாட்சி' என்று மாற்றினர்; அப் பெயரை மல்லிகையின் பெயராக அழைத்தனர். இருவாட்சி என்ற பெயர் விருபாட்சி என்று மாறியது பாமர மக்களின் வாயில் வழங்கியதன் காரணமாகும்.

## ஏழில் எது?

''கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே
எம்மி லயல தேழி லும்பர்
மயிலடி யிலைய மாக்குரல் நொச்சி
அணிமிகு மென்கொம் பூழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே''

— குறுந்தொகை 138

வீட்டின் அயலதாகிய ஏழிற் குன்றத்தின் மேலுள்ள நொச்சியின் பூ விழும் ஓசையைத் தலைவியும் தோழியும் இரவில் கேட்டதாக இப் பாட்டில் சொல்லப்பட்டுள்ளது. நொச்சிமரம் வீட்டுக்கருகில் வளர்ந்ததாகவே பல சங்கப் பாடல்கள் கூறுகின்றன. ஏழில் மலையின் மேல் வளர்ந்த நொச்சியின் பூ விழும் ஓசையைக் கேட்டதாகக் கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை. ஆதலின் ஏழிலைப்பாலை மரத்தின் அப்பால் வளர்ந்த நொச்சி என்றே பொருள் கொள்ள வேண்டும்.

ஏழிலைப்பாலை மரம் இன்றும் ஏழில் மலையில் வளர்வதைக் காணலாம். ஏழில் மலைக்குச் சென்று நேரில் நான் ஆராய்ந்தபோது ஏழில் மலையில் ஏழிலைப் பாலை மரங்கள் காணப்பட்டதால் அப்பெயர் பெற்றதென்பதைத் தெரிந்து கொண்டேன்.

காஞ்சி, வஞ்சி முதலிய பழைய நகரங்கள் மரத்தினால் பெயர் பெற்றன. அதேபோல் ஏழில் மலையும் 'ஏழில்' என்ற ஏழிலைப் பாலை மரத்தால் பெயர் பெற்றதென்றே கொள்ள வேண்டும்.

## யாழ் வடிவம் ஆகுமோ?

ஏழில் என்பதற்கு ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் 'யாழ்' என்று பொருள் கொண்டு, யாழ் வடிவாக மலையிருந்ததால் ஏழில் என்று பெயர் பெற்றதாகக் கூறினார். ஏழில் மலையை நேரில் சென்று பார்த்தபோது அது யாழ் வடிவமுடையதாகத் தெரியவில்லை. ஏழிலை என்பதே 'ஏழில்' என்று குறுகி, ஏழிலைப் பாலை மரத்தைக் குறித்தது. ஏழிலை மரத்தை வடமொழியில் 'சப்தபர்ணீ' என்று மொழி பெயர்த்து வழங்கினார்கள்.

ஏழிலைப் பாலை மரம் இன்றும் மலையாள மக்களின் வாழ்க்கையில் முக்கியமானதாகும் பாலை இன மரங்களில் ஏழிலைப் பாலை மரம் முக்கியமானதால் அதை வல்லிய பாலை என்றழைக்கின்றனர் காளி கோவிலின் துவக்க விழாவினை ஏழிலைப் பாலை மரத்தினடியில் நடத்துகின்றனர். இந்த மரத்தையே முதலில் வலம் வருகின்றனர். ஏழிலைப் பாலை மரத்தின் இலைகளையும் சடங்கில் பயன்டுத்துகின்றனர்.

## 'சைத்தான்' - பேய்

ஏழிலைப் பாலை மரத்தை, மராத்தி மொழியில் 'சைத்தான்' என்று அழைப்பதைக் காணலாம். இந்த

மரத்தில் பேய்கள் வாழ்வதாகவும் நம்பிக்கை உண்டு. காளிக்கு உகந்த மரமாதலால் இத்தகைய நம்பிக்கை தோன்றியிருக்கும்.

## அறியாமையின் விளைவு

ஏழிலைப் பாலை வளரும் ஏழில் மலையைப் பெயர்க் காரணம் தெரியாமல், இடைக் காலத்தில் ஏழுமலை என்றழைத்தனர். ஏழு மலைகள் இங்கே காணப்பட வில்லை. மிகப்பிற்காலத்தில் பாமரமக்கள் ஏழில் மலையை எலிமலை என்று பேச்சு வழக்கில் கூறினர். அதையே வட மொழியில் மொழி பெயர்த்து 'மூஷிக சைலம்' என்றழைத் தனர். இங்கு வாழ்ந்த அரசர்களின் பரம்பரையைப் பற்றி மலையாளத்தில் 'மூஷிக வம்சம்' என்று ஒரு நூலும் தோன்றியது.

பழ மலையைக் கிழ மலை (விருத்தாசலம்) யென்று வட மொழியாளர் அழைத்தது போல, ஏழில் மலையை எலி மலையாக்கினர். இந்த ஏழில் மரத்தைப் பற்றிய பரிபாடலும் கூறியுள்ளது.

> "அமர்ந்ததை புரையோர் நாவிற் புகழ்
> நலமுற்றி
> நிரையே அடுக்கிய நீளிலைப் பாலை"
>
> —பரிபாடல் 21 : வரி 13—14

நிரையாக ஏழு இலை அடுக்கிய நீண்ட இலைப் பாலை என்று ஏழிலைப் பாலை மரத்தைப் பரிபாடல் விளக்கி யுள்ளது. ஏழு இலைகள் ஒரே வட்டமாக இருப்பதையே இது குறித்துள்ளது. செடி நூலாரும் இதைப் பற்றிக் கூறியுள்ளார்.

ஏழிலைப் பாலையின் பூ யானையின் மத நாற்றம் போல் வீசுவதால் திருப்பரங்குன்றத்தை யானைக்கு ஒப்பிட்டுப் பரி பாடல் கூறியுள்ளது. அதனால் திருப்பரங் குன்ற மலையில் அக்காலத்தில் ஏழிலைப் பாலை மரங்கள் நிறைய இருந்தன என்பது தெரிகின்றது.

ஏழிலைப் பாலை மரம் உயர்ந்தோர் நாவில் புகழ் பெற்றது என்று பரிபாடல் கூறியிருப்பதால், இம் மரம் அக்காலத்திலேயே சிறப்புப் பெற்றது தெளிவாகின்றது. இன்றும் அச் சிறப்பு மலையாள நாட்டில் இருப் பதால்தான் இம் மரத்தை வல்லிய பாலை என்றும் மங்கலப் பாலை என்றும் மலையாளத்தில் அழைக்கின்றனர்.

மங்கலாதேவியான கண்ணகியின் வணக்கத்திற்கு உரிய மரமாயிருந்ததால் மங்கலப் பாலை என்று அழைக்கப்பட் டிருக்கலாம்.

எழில் என்ற சொல், சங்க காலத்தில ஏழிலைப்பாலை மரத்தைக் குறித்து வழங்கியிருக்க வேண்டும் என்று கருதலாம். இப் பெயரே நன்னன் ஆண்ட ஏழில் மலையை யும் குறித்து வழங்கிற்று.

7

# பெரு மரம்

## உரையாசிரியர்கள் குறை

சங்க இலக்கியத்தில் பெருமரம்* என்றொரு பெயர் சில பாட்டுகளில் காணப்படுகின்றது பெருமரம் என்ற சொற் பெயர்க்குப் பொருளெழுதிய உரையாசிரியர்கள் பெருமரத்தை வெறும் மரமாகக் கொண்டே பொருளெழுதினர்.

சங்கப் புலவர்கள் கூறிய பெருமரம் ஒரு குறிப்பிட்ட மரத்தின் தனிப்பெயரென்று தெரிந்து கொள்ளாது உரையாசிரியர்கள் எழுதினர்.

சங்க காலத்திற்குப் பிற்காலத்து மரஞ்செடி கொடிகளைப் பற்றிய அறிவு குறைந்ததால் பெருமரத்தைப் பெருத்த மரம் என்று பொதுப் பெயராகக் கொண்டனர்.

## அவ்வையார் பாட்டு

பெருமரம் என்ற சங்க கால வழக்கு சிறப்புப் பெயராகவே வழங்கியது என்பதை உணர வேண்டும். அகநானூற்றில் அவ்வையார் மிக அழகாக ஓர் உவமை வாயிலாகப் பெருமரத்தை விளக்குகின்றார்.

"முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுளை
அசைவுடை நெஞ்சத்து உயவுத்திரள் நீடி
ஊரோர் எடுத்த அம்பல் அஞ்சினை
ஆராக் காதல் அவிர் தளிர் பரப்பிப்
புலவர் புகழ்ந்த நாளில் பெருமரம்
நிலைவரை யெல்லாம் நிழற்றி
அலரரும்பு ஊழ்ப்பவும் வாரா தோரே"

— அகம்.273

'ஊரார் கூறும் பழியான பெருமரமானது சிறிய விதையிலிருந்து இளமுளையாகத் தோன்றிக் கொழுந்துவிட்டுப் பல கிளைகளாகப் பிரிந்து தளிர் பரப்பி, நிலவரை யெல்லாம் நிழல் தரும்படி பெரிதாக வளர்ந்து 'அலரரும்பு' தோற்றியும் தலைவன் வரவில்லை' என்று தலைவி சொல்வதாக மேற்காட்டிய பாடலின் பொருள் அமைந்துள்ளது. பெருமரம் மலர்வதும் ஊரார் பழிச் சொல் அலராவதும் ஒப்புமையாகக் காட்டப்பட்டுள்ளது.

பெருமரம் இப் பாடலில் உருவகமாக வந்துள்ளது. இவ் அழகிய உருவகம், ஒப்புமை எப்படிப் பொருந்தும் என்று பார்க்கலாம். இப்பாட்டில் பெருமரத்தை வெறும் மரமாகக் கொண்டால் ஒப்புமை சிறப்படையவில்லை. பெருமரத்தை இன்றும் நாட்டு மக்களிடையே பேச்சு வழக்கில் வழங்கும் ஒருவகைப் 'பெருமர' மாகக் கொண்டால் உவமை முற்றிலும் பொருந்தும்; சிறப்படையும். நாட்டு மக்களிடையே ஒரு குறிப்பிட்ட மரத்தின் பெயராகப் பெருமரம் என்ற சொற்பெயர் வழக்கு இன்றும் வழங்குகின்றது.

## 'பாப்பாரப் புளியன்'

மிக உயரமாக, பெரிதாக வளர்வதால் இம்மரத்தைப் பெரு மரம் என்றனர். இம் மரத்தைப் 'பெரு' என்றும், 'பெருக்கு' என்றும் வழங்குகின்றனர். அடிமரம் மிகவும்

பெருத்துக் காணப்படும் 'பாப்பாரப்புளியன்' (Boabab) என்ற மரத்தைப் பெருக்கான், பெருக்கு என்றழைக்கின்றனர். இதைக் 'கோரக்கர் புளி' என்றும் அழைப்பர். இது பிற்காலத்தில் வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டு இன்று இந்தியாவில் வளர்கின்றது.

பெருவயிறுடை இம்மரத்தைப் பெரு வயிறுடையோர் பார்ப்பனர் என்ற எண்ணத்தில் நாட்டு மக்கள் பார்ப்பாரப் புளியன் என்று நகைச்சுவையோடு அழைத்தனர்.

பெரிய எலியை பெருச்சாளி, பெருக்கான் என்பது போலப் பெரிய மரத்தைப் பெருமரம் என்று சங்க காலத்திலும், வழங்கினர்.

## பல மொழிகளில்

மலையாளத்திலும் இப்பெருமரத்திற்குப் 'பெரு' என்ற பெயர் தனியாக வழங்குகின்றது தெலுங்கில் 'பெத்த மானு' என்று-பெருமரம் என்ற பொருளில் வழங்குகிறது. கன்னடத்திலும், பெருமரத்தைத் தனியாக "ஹெம்", 'ஹெம்பேவு' என்று இன்றும் வழங்குகின்றனர். இப்பெயர்கள், 'வெம்', 'பெரும் வேம்பு' என்ற பெயர்கள் கன்னடமொழி மரபுக்கேற்ப மாறின உருவங்களேயாகும்.

இப் பெருமரத்தின் இலைகள் வேப்பமரத்தின் இலைகள் போலிருப்பதால் பெரியவேப்பமரம் என்ற பொருளில் கன்னடப் பெயரும் மற்றும் மராத்திப் பெயரும் ஏற்பட்டது. பெருமான் பெம்மான் ஆலதுபோலப் பெரும் என்ற சொல் கன்னட மொழியில் 'பெம்' என்று நின்று பெருமரத்தைக் குறித்தது இப் பெயர்களுக்கெல்லாம் அடிச் சொல், வேர்ச்சொல் 'பெரு' என்பதே. தமிழ் மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் ஒரே பெயராகச் சிறிது ஒலி மாறினும் வழங்கும் ஒரே மரம், Ailanthes excelsa என்று செடி நூலார் குறிப்பிடும் பெருமரமேயாகும்.

இதை இந்தியில் 'மகாருக்' என்றும், மராத்தியில் 'மகாநிப்பு' என்றும் கன்னடத்தில் 'தொட்டாமரா' என்றும் 'பெரு' என்ற அடைமொழிப் பொருள் கொடுத்து வழங்குகின்றனர்.

## இடமும் தன்மையும்

இந்த மரம் தென்னிந்தியாவில் நன்கு வளரும். மேற்கு தொடர்ச்சி மலைகளில் காணப்படும் இம்மரங்கள் மிக உயரமாகவும், பெரிதாகவும் வளர்ந்துள்ளன. உருண்டு திரண்டு இதன் அடிமரம் மிகவும் நீண்டு உயரமாகக் காணப்படுகின்றன. இம்மரத்தின் உயரத்தையும் உருவையும் கண்டே இதைப் பெருமரம் என்று கண்டு கொள்ளலாம்.

இம்மரத்தின் மற்றொரு முக்கிய தன்மை இதன் பூவில் உள்ளது அதையும் அவ்வையார் குறிப்பாகக் கூறியுள்ளார். இம்மரம் பூக்கும்போது பெரிய கொத்துகளாகப் பூக்கள் தோன்றும். பூங்கொத்துக்கள் மூக்கில் நுகர முடியாத கெடு நாற்றத்தை வீசும். இப் பூவிலிருந்தும் இதன் கெடு நாற்றத்திலிருந்தும் இம்மரத்தைக் கண்டுகொள்ளலாம்.

(Ailanthes excelsa grows into an enormous tree with clear cylinbrical Pole, Its large panicle of flowers give off a foetid odour. Its wood is soft and is useless for structural work.)

இதன் காரணமாக இந்த மரத்தைப் 'பீநாறி' என்று அழைக்கின்றனர். தெலுங்கு மொழியில் 'பீவேப்புச் செப்பு' என்றும் வழங்குகின்றனர். இம்முறையாகக் கெடு நாற்றம் வீசும் வேறு மரங்களும் உள்ளன. ஆனால் மிகவுயரமாக வளர்ந்து நீண்ட மலர்சகொத்துகளாகப் பூத்துக் கெடுநாற்றம் வீசும் மரம் பெருமரமே (Ailanthes exclsa)

ஆகும். இதையே குறிப்பாக அவ்வையாக பெருமரம் நில வரை யெல்லாம் நீண்டு வளர்ந்து அலரரும்பு தோற்றிற்று என்றுகூறினார்.

## நாணில் பெருமரம்

இதன் பூக்கள் மிகவுயரத்தில் கண்டுகொள்ள முடியாத சிறிய பூக்களாகையால் எளிதில் காண முடியாது. ஆனால் இதன் நாற்றத்தால் பூத்திருப்பதை உணர்ந்து கொள்ள லாம். பழியெனும் நாணில்லாத பெருமரம் முளை யெடுத்துக் கிளைவிட்டுத் தளிர் பரப்பி அலரரும்பு தோற்றி ஊரார்க்குக் காட்டிக் கொடுத்தது என்று அவ்வையார் கூறினார்.

பழி தூற்றும் இந்த அலர் மரம் புலவர்கள் புகழ்ந்து பாடும் நாணில்லாத பெருமரம். 'நாணில் பெருமரம்' என்ற வரி 'நாரில் பெருமரம்' என்று பாடமாற்றம் கொண்டுள்ளது. 'நாரில் பெருமரம்' என்ற பாடம் பொருத்தமின்று.

பெருமரம் கெட்டியான மரமன்று. மிகவுயரமாக வளர்ந்தாலும் உள்மரம் கெட்டியற்றது. இதுவும் சங்கப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. நார், பால், உடைய மரங்கள் அலிமரமென்றும், அகக் காழ் உடைய மரங்கள் ஆண் மரங்கள் என்றும் திவாகரம் கூறுகின்றது.

நாரில் பெருமரம் என்று கொண்டால் கெட்டியான மரம் என்பதாகிவிடும். கெட்டியற்ற மரமானதால் அது தவறு. உருவகத்திற்கு 'நாணில் பெருமரம்' என்று கொள் வதே பொருத்தம்.

''கொல்லைக் கோவலர் எல்லி மாட்டிய
பெருமர வேரடிப் போல
அருளிலேன் அம்ம அளியேன் யானே''

— நற்றிணை 289

''வாழை யோங்கிய தாழ்க ளசும்பிற்
படுகடுங் களிற்றின் வருத்தஞ் சொலிய
பிடிபடி முறுக்கிய பெருமரப் பூசல்''

— அகம். 8

''பெருமரத்திலையி னெடுங்கோடு வற்றல்
பற்றவும்''

— புறம் 41

மேற்காட்டிய பாடல்களில் பெருமரத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

## வெறும் மரமன்று

நற்றிணை 289 ஆம் பாடலில் பெருமரத்தின் கொள்ளி நின்று எரியாது மிக விரைவில் எரிந்து கரியாவதுபோல கருணையின்றி இருப்பதாகத் தலைவி சொல்வதாகக் கூறுவதைக் காணலாம் பெருமரம் மெதுத்தன்மையுடைய உள் மரத்தையுடையதால் நின்று எரியாது, விரைவில் எரிந்து தீரும்.

அகநானூற்றுப் பாடலொன்றும் பெண் யானை பெருமரத்தைப் பிடித்து ஆட்டிய பூசலைப்பற்றிக் கூறியுள்ளது. கெட்டியற்ற மரமாயிருப்பதால் (soft wood), பெரிய மரமாயினும் யானை பெருமரத்தை முறுக்கியதாகக் கூறியது பொருத்தமே. நற்றிணைப் பாடலொன்றும் பெருமரத்தை சுற்றியேறிய வள்ளியைப் பற்றிக் கூறியுள்ளது. பெருமரத்தைப்பற்றிச் சங்கப் பாடல்கள் கூறியுள்ள செய்திகள் செடி நூலார் கூறும் செய்திகளோடு ஒத்து வருவதால் பெருமரம் வெறும் மரமன்று. அது குறிப்பிட்டதொரு மரமென்று அறிய வேண்டும்.

பெருமரம் என்ற பெயரைப் பொதுப் பெயராகக் கொள்ளாமல் சிறப்புப் பெயராகக் கொள்ள வேண்டும். இத்தகைய சிறப்புப் பெயர்கள் 'பெரு' என்ற சொல்லடை

யோடு குறிப்பிட்டதொரு பொருளைக் குறித்துச் சங்க காலத்திலேயே வழங்கியதைக் காணலாம்.

பெருநாரை
பெருங்குருகு
பெரும்பயறு
பெருந்தேன்
பெரும்பாம்பு
பெரும்புலி

ஆகிய பெயர்கள் தமிழிலக்கியத்தில் சிறப்புப் பெயர்களாகவே வழங்குகின்றன.

## சிறுமரம்

பெருமரம் செடி நூலார் கூறும் Ailanthes excelsa என்பதில் சிறிதும் ஐயமில்லை. இலத்தீனிலும் 'excelsa' என்ற சொல் பெரிது என்று குறித்தே வழங்குவதை இது சார்பாக எண்ணிப் பார்த்தால், 'பெருமரம்' என்று சங்க காலத்தில் பெயர் வழங்கியதின் பொருத்தத்தை அறியலாம். மற்றும் ஆங்கிலத்திலும் இதன் பெரிது என்பதைக் குறித்தே 'Tree of heaven' என்று பெயரிட்டனர்.

மலையாள மொழியில் பெருமரம் ஒரு தனிமரத்தைக் குறித்து வழங்குவதைப் போலச் சிறுமரம் என்ற சொல்லும் ஒரு குறிப்பிட்ட மரத்தைக் குறித்து வழங்குகின்றது. வெள்ளிலோத்திரம் என்று ஐங்குறுநூறு குறிப்பிடும் மரமே சிறுமரமென்று அழைக்கப்படுகின்றது. 'லோத்ரா' என்ற மருந்து குழந்தைகளுக்காக இம் மரத்திலிருந்து செய்யப்படுகின்றது. இது குட்டையான மரமாதலால் 'சிறுமரம்' என்ற பெயர் சிறப்புப் பெயராக பெருமரத்திற்கு எதிராக மலையாளத்தில் வழங்குகின்றது.

அலர்

சங்க இலக்கியத்தில் 'அலர்' என்ற சொல் தலைவிக்கு ஏற்படும் பழிச்சொல்லைக் குறித்துப் பல பாடல்களில் பயில்கின்றது. அம்பலென்பது பெரும்போதாய்ச் சிறிது நிற்க அலருமென நிற்பது. அலரென்பது, 'அப் பெரும் போது, தாதும் அல்லியும் வெளிப்பட மலர்ந்தாற் போல நிற்கும் நிலைமை' என்று உரையெழுதியுள்ளனர்.

அலர் என்பது நறுநாற்றமுடைய மலரைக் குறித்து வழங்கியதென்று கொண்டால் பழிச்சொல்லுக்கு உருவக மாக வருவது பொருத்தமாகத் தோன்றவில்லை. ஆதலின் அலர் என்பது கெடுநாற்றமுடைய மலரைக் குறித்தே வழங்கியிருக்க வேண்டும். அதுவும் பெருமரமான 'நாணில் பெருமரத்'தின் மலரைக் குறித்தே முதலில் வழங்கி வந்து, பின்னர் அதன் தொடர்பை மறந்துவிட்டனரென்று கொள்ள வேண்டும்

சங்க இலக்கியத்தில் பழிச் சொல்லைக் குறிப்பிடும் 'அலர்' என்ற சொல், நாணில் பெருமரத்தின் கெடுநாற்ற முடைய அரும்புக்கும் அலருக்கும் வழங்கியதை அவ்வை யார் பாடலிலிருந்து நுண்ணிதின் உணர்ந்துகொள்ளலாம்.

பழிச்சொல் என்ற பொருளில் 'அலர்' என்ற சொல் 'அலார்' என்ற பேச்சுவழக்கமாகப் புதுவைப் பகுதியில் இன்றும் வழங்குகின்றது வீண் பழி பரப்புவதை 'அலார் ஆக' இருக்கின்றது என்பர்.

திருவள்ளுவர் காதல் நோய்க்கு, மாலை மலரும் மலரை ஒப்பிட்டுக் கூறினார். 'மலரினும் மெல்லிது காமம்' என்றார். இவ்விடங்களில் நறுமலர் என்று கொள்ள வேண்டும். ஆனால் அதே ஒப்புமையைப் பழிசொல்லுக்கும் கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை. தாதும் அல்லி யும் வெளிப்பட நிற்பதை விடக் கெடுநாற்றமடிக்கும்படி மலர்வதே அலர் தூற்றுவதற்குப் பொருத்தமாகும்.

# 8

# எழில்மிகு பூக்கள் எட்டு

குறிஞ்சி, மருதம், காந்தள், கொன்றை, கோங்கு, இலவம், முருக்கு, கவிர் என்னும் மலர்கள் சங்க நூல்களில் இடம் பெற்றுள்ள வகையைக் காண்போம்.

## குறிஞ்சி

"கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே"

— குறுந்தொகை 3

"கருங்காற் குறிஞ்சி மதனில வான்பூ
ஓவுக்கண் டன்ன இல்வரை இழைத்த
நாறுகொள் பிரசம் ஊறுநா டற்கு"

— நற்றிணை 268

"இலங்குவெள் ளருவியோடு சிலம்பகத் திரட்டக்
கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பணிந்து"

— மதுரைக் காஞ்சி 299 - 300

"கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்
சீர்மிகு நெடுவேட் பேணித்
தழூஉப்பிணையூஉ"
— மதுரைக் காஞ்சி 613 - 614

"கருங்கோற் குறிஞ்சி யடுக்கம் பாட"
— புறம். 370

குறிஞ்சி ஒரு மலைச் செடியாகும். மலையில் 1,854 மீட்டருக்கு மேல் இயற்கையில் காணப்படுவதாகும்; மலைச் சாரலில் வளர்வதாகும். குறிஞ்சி மலரையும், குறிஞ்சி பூக்கும் மலை அடுக்கத்தையும் புறநானூறு கூறியுள்ளது.

குறிஞ்சிச் செடியின் பூ, வெளிர் நீலமாக இருக்கும். அரும்பாக உள்ளபோது சிறிது வெண்மையாக இருக்கும். குறிஞ்சிச் செடியின் காம்புகளின் கணுக்கள் கருமையாக இருக்கும்; ஆதலின் 'கருங்கால்' என்று சங்க நூல்கள் கூறுகின்றன.

குறிஞ்சிச் செடியினங்கள் ஒன்பது ஆண்டுகளிலிருந்து பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு தடவை மலைச் சாரலில் கூட்டம் கூட்டமாகப் பூக்கின்றன. குறிஞ்சிப் பூவில் இயற்கையாகத் தேன் கூடுதலாக உள்ளது என்று செடி நூலார் கூறுவர். குறிஞ்சிச் செடிகள் ஒரே பருவத்தில் கூட்டம் கூட்டமாகப் பூக்கும்போது மலைத் தேனீக்கள் குறிஞ்சித் தேனை உறிஞ்சி, பெரிய தேன் கூடுகளைக் கட்டுகின்றன. குறிஞ்சி மலரும் காலத்தில், தேன்கூடுகளில்குறிஞ்சி மலரின் நறுமணத்தோடு கூடிய தேனே கலப்பில்லாமல் காணப்படும். அதனால் இந்தத் தனிப் பூந்தேனை (Uniflormal Honey)குறிஞ்சி நாடனுடைய உயர்ந்த நட்பிற்கு ஒப்புமையாகக் கூறியுள்ளனர்.

குறிஞ்சிச்செடி பூக்குங் காலத்தில் நடு இந்தியாவிலும், அந்தமானிலும் உள்ள பழங்குடிகள் தேன் விழாவே (Honey Festival) கொண்டாடுகின்றனர். பைகர்கள் என்போர் குறிஞ்சிச் செடிகளை இடையில் அணிந்து ஆடு கின்றனர். குறிஞ்சிச் செடியை 'Strobilanther Kunthianus' என்று அறிவியலில் அழைப்பர்.

**மருதம்**

> ''முடக்காஞ்சிச் செம்மருதின்
> மடக்கண்ண மயிலால''
>
> —பொருநராற்றுப்படை 189 - 190

> ''ஐயவி யன்ன சிறுவீ ஞாழல்
> செவ்வி மருதின் செம்மலொடு தாஅய்''
>
> —குறுந்தொகை 50

> ''பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்டு
> உளை மருதி னொள்ளிண ரட்டி''
>
> —திருமுருகாற்றுப்படை 27 - 28

> ''உளைப்பூ மருதத்துக் கிளைக்குரு கிருக்கும்''
>
> —ஐங்குறுநூறு 7

> ''வாங்குசினை மருதத் தூங்குணர் உதிரும்''
>
> —நற்றிணை 350

மருத மரத்தின் பூ சிவப்பாக இருக்கும் என்று கூறப் பட்டுள்ளது. மருதத்தின் பூவை, 'உளைப்பூ' என்றழைத்த னர். இதன் பூவிதழ் ஓரத்தில் நெளிந்து காணப்படுவதால் 'உளைப்பூ' என்றனர்.

பூவிதழ் உதிர்ந்து தரையடியில் அழகாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளதும் உண்மைதான். மருதப் பூவின் புல்லிதழ் கருந்தகடுபோலக் காணப்படும் என்று கூறுவதும் பொருத்தமான செய்தியாகும். புல்லிதழ் கரும்பச்சையாக இருக்கும்.

சங்க காலத்தில் மருத மரம் காவிரிக் கரையிலும் வைகைக் கரையிலும் நிறைய இருந்து துறைகளை அணி செய்வதாகக் கூறப்பட்டுள்ளது. சங்க காலத்து மருத மரத்தை இக்காலத்தில் காண்பது அரிதாக உள்ளது. இப்போது கூறப்படும் பிள்ளை மருது, கரு மருது ஆகியவை சங்க கால மருதன்று. சங்க கால மருதமரத்தை மணி மருது, பூ மருது என்று இக் காலத்தில் அரிதாக அழைக்கின்றனர்.

மருத மரத்தின் அறிவியல் பெயரில் 'அரசிக்குரிய பூ' என்று கூறப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும் அறிவியலில் 'Lagerstroemia Flos – Regina' என்றழைப்பர். ஆங்கிலத்தில் 'Queen's Flower' என்றழைப்பர்.

## காந்தள்

காந்தள் ஒரு கொடியாகும். கார் காலத்தில் திடீரென்று பூக்கும். பெரும்பாலும் வேலிகளில் தவழும் கொடியாகும். இதைக் கார்த்திகைப் பூ, கலப்பைக் கிழங்கு என்றும் அழைப்பர். கார்த்திகைத் திங்களில் இதன் பூ அகல் விளக்குப் போலப் பூப்பதால் கார்த்திகை விளக்குக்கு ஒப்பிட்டுக் கார்த்திகைப் பூ என்றழைக்கின்றனர்.

காந்தள் பூ மிக அழகிய பூவாகும். காந்தள் பூவின் மொக்கு மலரும்போது நுனி மட்டும் சிவந்து அடிப்பகுதி பச்சையாகக் காணப்படும்.

நன்கு மலர்ந்தபோது இதழ்கள் சிவந்து காணப்படும். காந்தள் மலர்ந்து இதழ்கள் மேலே தூக்கியிருப்பதை மகளிரின் கை விரல்களுக்கு ஒப்பிட்டுக் கூறுவது சங்க கால வழக்காகும்.

''காந்தள் முகை விரல்'' என்று புறநானூறு 144ஆம் பாடல் கூறியுள்ளது.

''கொடிச்சியர் கூப்பி வரைதொழு கைபோல்
எடுத்த நறவின் குலையலங் காந்தள்''
—கலித்தொகை 40

காந்தள் பூவிற்கு அகல் விளக்கை ஒப்பிட்டுக் கூறுவதைக் காணலாம்.

''குருதிப் பூவின் குலைக்காந் தட்டே''
—குறுந் தொகை 1

''தோடார் தோன்றி குருதி பூப்ப''
—முல்லைப்பாட்டு 96

என்று சங்கப் பாடல்களில் காந்தள் நிறத்தை இரத்தச் சிவப்புடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளனர். இந்தப் பல ஒப்புமைகளைக் கண்டுதான் சீனர்களின் பலநிற ஒளிவிளக்கு (Chinese Lantern) என்று காந்தள் பூவை மலேயாவில் அழைக்கின்றனர்.

காந்தள் மலர் முதிரும்போது மேல்நோக்கிய இதழ் கீழ்நோக்கிச் சோர்ந்துவிடும். இதையும் சங்கப் புலவர்கள் கூறியுள்ளனர். அவ்வாறு சோர்ந்து கீழே செல்லும் இதழ்களை மகளிர் கையில் சோர்ந்து செல்லும்வளையல்களுக்கு ஒப்பிட்டுப் பாடியுள்ளனர் சங்க நூல்களில் கூறப்பட்ட அழகிய பூக்களில் காந்தளைச் சிறப்பானதாகக் கூறலாம். இதனை ஆங்கிலத்தில் 'The Glory Lily' என்றும், அறிவியலில் 'Gloriosa Superba' என்றும் அழைப்பர்

## கொன்றை

கொன்றைப்பூ மஞ்சள் நிறமாக இருக்கும். இதன் பூக்கள் மாலை போலத் தொகுத்துக் காணப்படும். இதன்

பூக்களைச் சங்க காலத்தில் வழங்கிய உருண்டையான பொற்காசுகளுக்கு ஒப்பிட்டுச் சங்கப் பாடல் கூறும்.

"வண்டுபடத் ததைந்த கொடியிணை ரிடையிடுபு
பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றை"
—குறுந்தொகை 21

"ஆடுகளப் பறையின் வரிநுணல் கறங்க
ஆய்பொன் அவிரிழை தூக்கி யன்ன
நீடிணர்க் கொன்றை கவின்பெற"
—அகம். 364

"அடர்பொன் னென்னச் சுடரிதழ் பகரும்"
ஐங்குறுநூறு. 430

"தவளை வாஅய பொலஞ்செய் கிண்கிணிக்
காசின் அன்ன போதீன் கொன்றை"
—குறுந்தொகை 148

பொன்னால் செய்த கிண்கிணிபோல உருண்டையான தெனக் கொன்றைப் பூவைக் கூறியதும் பொருத்தமே. பொன்னிழை போன்றும் பொற்காசு மாலை போன்றும் பூத்ததாகக் கூறியதும் பொருத்தமே.

கொடியிணர், நீடிணர் என்னும் சொற்கள் நீண்ட கொத்தாக, தொடராகக் கொன்றைப் பூக்கள் இருப்பதைக் கூறுகின்றன. 'கொன்றைக் கோதை நிலை' என்று ஐங்குறுநூறு (462) கூறியுள்ளது கொன்றையை **'Indian Laburnam'** என்று அழைப்பர். அறிவியலில் **'Cassia Fistula'** என்றழைப்பர்.

## கோங்கு

கோங்கு மரம் பளபளப்பான மஞ்சள் நிறப்பூக்களை உடையது. அதனால் பொன் போன்றுகோங்கு பூத்ததாகச் சங்க நூல்கள் கூறும்.

''பொரியரைக் கோங்கின்
பொன்மருள் பசுவீ
விரியிணர் வேங்கையொடு
வேறுபட மிலைச்சி''

—ஐங்குறுநூறு 367

''புதுமலர்க் கோங்கம்
பொன்னெனத் தாதூழ்ப்ப''

—கலித்தொகை 33

நன்கு பூத்த பூ, சுரிதகம் என்றழைப்படும் அணிகலன் போன்று இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

''கைவல் வினைவன் தையுபு சொரிந்த
சுரிதக வுருவின வாகிப் பெரிய
கோங்கம் குவிமுகை யவிழ''

—நற்றிணை 86

கோங்கம் பூ,பொன் தராசுத்தட்டுபோல இருந்ததாகக் 'கோங்கலர் பொன்செய் கன்னம் பொலிய' என்று அக நானூற்றுப் பாடல் (317) கூறியுள்ளது. கோங்கு, பூக்கும் பருவத்தில் கிளைகளில் இலைகளை உதிர்த்து விடும்.

''அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்
செஞ்சுடர் நெடுங்கொடி போலப்
பல்பூங் கோங்கம் அணிந்த காடே''

—நற்றிணை 202

''புல்லிதழ்க் கோங்கின் மெல்லிதழ்க் குடைப்பூ
வைகுறு மீனின் நினையத் தோன்றி''
—நற்றிணை 48

கோங்கு வரிசையாகப் பூப்பதைக் கார்த்திகை விளக்குப் போலப் பூக்கும் என்றும், விடியற்காலையில் ஒளிவீசும் விண்மீனினம் போலத் தோன்றும் என்றும் கூறப்பட்டுள்ளது. இதன் பூவைத் தலை கீழாகப் பார்க்கும்போது கோயில் குடை போலத் தெரியும். அதனால் 'குடைப்பூ' என்றுமழைத் தனர். சங்க நூல்களில் கூறப்பட்ட அழகிய பூக்களில் கோங்கமும் ஒன்றாகும். ஆனால், இலையுதிர் காடுகளில் தாம் கோங்கத்தைக் காண முடியும். இதனை 'Yellow silk cotton tree' என்றும், அறிவியலில் 'cochlospermum Gossypium' என்றும் அழைப்பர்.

## இலவம்

சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள இலவம், தற்காலத்தில் பஞ்சுக்காக வளர்க்கப்படும் பெண் பூவுடைய இலவம் அன்று. இலையுதிர் காடுகளில் செக்கச் செவேலென்று பூக்கும் முள்ளிலவமாகும். இதன் பூவிதழ் தடித்தும், பூ பெரீ தாகவும் காணப்படும்.

''வானம் ஊர்ந்த வயங்கொளி மண்டிலம்
நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் அங்காட்டு
இலையில் மலர்ந்த முகையில் இலவம்''
—அகம். 11

''நிழற்படக் கவின்ற நீளரை இலவத்து
அழலகைத் தன்ன அலங்குசினை யொண்பூ''
—அகம். 245

'இலையில் மலர்ந்த வோங்குநிலை இலவம்
மலையுறு தீயிற் சுரமுதற் றோன்றும்''
—ஐங்குறுநூறு 338

இலையை யுதிர்த்த இலவ மரத்தில் எங்கும் நெருப்புப் போன்று சிவந்த பூக்கள் காணப்படுவதைச் சங்கப் புலவர்கள் நன்குகண்டு கூறியுள்ளனர். குன்றுச் சரிவில் பல இலவ மலர்கள் ஒருங்கே பூத்திருந்ததை மலையே தீப்பற்றி எரிந்தது போலத் தோன்றிற்று என்று ஐங்குறுநூறு கூறியுள்ளது.

''பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்
இலையில் மலர்ந்த இலவமொடு
நிலையுயர் பிறங்கல் மலைஇறந் தோரே''
—அகம். 185

''இலையில் மலர்ந்த முகையில் இலவம்
கலிகொள் ஆயம் மலிபுதொகு பெடுத்த
அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பதத் தோன்றி''
—அகம். 11

கார்த்திகைப் பெருவிழா விளக்குப் போல இலவம் மலர்ந்திருந்ததாகவும் கூறியுள்ளனர். இலவ மரத்தை 'Red SilK Cotton Tree' என்றழைப்பர். அறிவியலில் Bomdase Malabaricum' என்றழைப்சர்.

## முருக்கு

அழகிய சிவந்த பூக்களில் முருக்கும் ஒன்றாகும். இந்த மரம் ஊர்களில் எளிதாகக் காணப்படும். வீட்டிற்கு வேலியாகவும் வளர்ப்பதுண்டு. பல அழகிய உவமைகளால் இந்தப் பூவைச் சங்கப் புலவர்கள் விளக்கியுள்ளனர்.

''பைங்கண் வல்லியங் கல்லளைச் செறிய
முருக்கரும் பன்ன வல்லுகிர் வயப்பிணவு''
—அகம். 362

''உதிர துவரிய வேங்கை யுகிர்போல்
எதிரி முருக்கரும்ப வீர்ந்தண்கார் நீங்க
எதிருநர்''
—ஐந்திணையைம்பது 31

உதிரம் தோய்ந்த புலியின் வளைந்த நகத்திற்கு முருக்கின் அரும்புகளை ஒப்பிட்டுள்ளது அழகிய உவமையாகும்.

''குவிமுகை முருக்கின் கூர்நுனை வையெயிற்று
நகைமுக மகளி ரூட்டுகிர் கடுக்கும்''
அகம். 317

''அழகைந் தன்ன காமர் துதைமயிர்
மனையுறை கோழி மறனுடைச் சேவற்
போர்புரி யெருத்தம் போலக் கஞலிய
பொங்கழல் முருக்கி னொண்குரல் மாந்தி '
அகம். 277

மகளிரின் சிவப்புச் சாயம் பூசிய நகத்திற்கும், சேவற் கோழியின் சிவந்த கொண்டைக்கும், பொங்கும் நெருப் பிற்கும் முருக்க மரத்தின் மலர் ஒப்பிடப்பட்டிருக் கின்றது.

முருக்க மரம் காடுகளில் கூட்டமாகப் பூக்கும் பூக்கு போது காடு எரிவது போன்று தொலைவில் தெரியும். அதனால், ஆங்கிலத்தில் 'Flame of the Forest' என்று இம் மரத்தை அலைப்பர்.

முருக்கின் பூந்தாதைக் கருங்குயில் கொழுதி அருந்தும் என்று அகநானூறு (229) கூறியுள்ளது.

முருக்க மரத்தில் மகரந்தச் சேர்க்கை பறவைகளால் ஏற்படுகிறது என்னும் அறிவியற் செய்தியையும் இயற்கைச் செய்தியாக அகநானூறு கூறுவதைக் கவனிக்க வேண்டும். அறிவியலில் முருக்க மரத்தை 'Butea Frondasa' என்றழைப்பர்.

**கவிர்**

முருக்க மரத்தோடே மிகவும் ஒத்துள்ள கலியாண முருங்கையைச் சங்க நூல்கள் 'கவிர்' என்றழைக்கும். கவிர் மரத்தின் பூ கருஞ்சிவப்பாக இருக்கும். இதனைப் பற்றிய பழம் பாடல் வரிகளையும் காண்போம் :

'' தளிர்புரை கொடிற்றிற் செறிமயி லெருத்திற்
கதிர்த்த சென்னிக் கவிர்ப்பூ வன்ன
நெற்றிச் சேவ லற்றம் பார்க்கும்''

— அகம். 367

'' பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்துக்
கவிர்ப்பூ நெற்றிச் சேவலிற் றணியும்''

— புறம். 329

'' கவிரித ழன்ன காண்பின் செவ்வாய்
அந்தீங் கிளவி ஆயிழை மடந்தை''

— அகம். 245

கவிரின் மலர், சேவற்கோழியின் சிவந்த கொண்டைக்கும் மகளிரின் செவ்வாய்க்கும் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ள அருமையை எண்ணியெண்ணி மகிழலாம். 'கவிரை'யை ஆங்கிலத்தில் 'Indian Coral Tree' என்று அழைப்பர். அறிவியலில் 'Erythrihina Indica' என்றழைப்பர்.

# 9

# செடி நோய்கள்

## செம்பை ஒருவகைப் பிணி

நீலகேசிக்கு சிறந்த உரையெழுதிய சமயதிவாகரர் சில அரிய அறிவியற் செய்திகளைக் கூறியுள்ளார். செடிகளின் நோய்களையும் குறிப்பிட்டுள்ளார்.

நெல்லுக்கு வரும் பிணியாகச் செம்பை, உகுநை, தாட்புழு என்பவைகளைக் குறிப்பிட்டுள்ளார். செம்மை என்பது பூஞ்சாணத்தால் (Fungus) வரும் நோயாகும். இந்நோய் கண்ட நெல்லின் தாளில் நீளவாட்டத்தில் நீளமாகச் சிவந்த புள்ளிகள் தோன்றும். இதை Cercospora (leaf spot fungus) என்று அழைப்பர்.

இது போன்றே கரும் பழுப்பு நிறமாக நெல்லின் தாளில் வட்டமாகப் புள்ளிகள் விழுவதுண்டு. இதை Helminthosporium (leaf spot) என்றழைப்பர்.

இவ் இரண்டு பூஞ்சாணத்தால் வரும் நோய்களையே செம்பை என்று குறிப்பிட்டனர் செம்பு நிறத்தில் நெல்லின் தாளில் புள்ளிகள் விழுவதால் செம்பை என்று பொருத்தமாக இந்த நோய் அழைக்கப்பட்டது.

நெற் பயிரை அழிக்கும் முக்கியமான நோய்களில் இஃது ஒன்றாகும்.

உகுநை என்பது நெற்பயிரில் சிலவகைக் கதிரில் இருந்து நெல்லை உகுத்துவிடும் தன்மையைக் குறித்து வழங்கியதாகும். இதை grain shedding என்பர். இதை நோய் என்று கருதுவதில்லை.

நெல் அறுவடையாவதற்கு முன்னரே நெல்மணிகள் தரையில் உதிர்ந்து விடுவதால் இழப்பு ஏற்படும். இக்குணமுடைய நெற் பயிர்களைக் கலப்பினமாக்கி நெல்லை உதிர்க்காத பயிர் வகையைக் கண்டு பிடித்துள்ளனர்.

## தாட்புழு நோய்

தாட்புழு என்பது நெல்லின் நடுத்தாளில் ஒருவகைப் புழு புகுந்து நெற்பயிரின் சத்தை உறிஞ்சி இளம்பயிரின் நடுத்தாளையே அழித்துவிடும் நோயாகும். இது நெற்பயிர் பூக்குங் காலத்தில் பதராக்கிவிடும். இதை Stem borer என்ற புழு என்பர். (Stem borer caterpillars bore in to the stem near the node and feed on central shoot resulting in dead heart in young plants and white chaffy leaves in flowring plants).

இவ் வகையாக நெல்லை அழிக்கும் புழுவையே (Tryporyza incer tulas) தாட்புழு என்று சமயதிவாகரர் கூறியுள்ளார். இந்த மூன்று நோய்களை 13ஆம் நூற்றாண்டிலேயே சமயதிவாகரர் கூறியது போற்றத்தக்கதாகும். அண்மைக் காலத்திலேதான் இந்த நோய்களை இனங் கண்டு தடுப்பு முறைகளைக் கண்டு பிடித்துள்ளர்.

## வெற்றிலைக்கும் நோய்

வெற்றிலைக்கு வரும் பிணியாக நாவேறு, சுருட்டை என்பன கூறப்பட்டுள்ளன. இதில் சுருட்டை என்பது Leaf Roller என்ற புழுவால் வரும் நோயாகும். இலையை இது சுருட்ட வைக்கும் நோயாகும்.

நாவேறு என்பது வெற்றிலையில் விழும் பழுப்பு, கருப்பு புள்ளிகளைக் குறித்து வழங்கிய பெயராகும். இலை முழுவதும் பழுப்பாகவோ, கருப்பாகவோ மாறுவதுண்டு. வெற்றிலை இலை, நாக்குப் போல இருப்பதால் நாவில் ஏறிய நோய் என்ற பொருளில், நாவேறு என்று அழைத்தனர். சமயதிவாகரர் நெல்லிற்கும் வெற்றிலைக்கும் வந்த நோய்களை அக்காலத்திலேயே கூறியுள்ளது கவனிக்கத் தக்கதாகும்.

## தேரை உண்ட தெங்கு

தென்னைக்கு வரும் ஒரு நோயைப் பற்றியும் தமிழிலக்கியம் கூறியுள்ளது.

> **"தேரையார் தெங்கிள நீருண்ணார் பழிசுமப்பார்"**
>
> —பழமொழி நானூறு.

> **"தெங்குண்ட தேரை படுவழிப் பட்டேன் யான்"**
>
> —முத்தொள்ளாயிரம்

'தேரை போயிற்று என்றாற்பொல்வதொரு காய்' என்று நச்சினார்க்கினியர் சீவ சிந்தாமணி உரையில் கூறியுள்ளார். தேரை மோந்த காய் என்று அழைக்கும் வழக்கும் உண்டு. தேரையை 'மண்டூக மகரிஷி' என்று அழைத்தனர். தேங்காய் உள்ளீடு இல்லாமல் போவதுண்டு. இத்தகைய காய்களை ஒல்லிக்காய், ஒல்லி மேய்ந்த காய், என்று அழைப்பர். இந்தத் தேங்காயையே 'தேரை உண்ட தெங்கு' என்று கூறினர்.

தேரை தேங்காயைத் தின்பதில்லை. ஆனால், 'தேரைமேல் பழியைப் போடுவதால் பழி சுமக்கின்றது' என்று பழமொழி கூறியுள்ளது இவ் வகைத் தேங்காய் தோன்றக் காரணம் பொட்டாசு என்ற சத்து மண்ணில் போதுமானதாக இல்லாததேயாகும் என்று கண்டு பிடித்துள்ளனர் சத்துக் குறைந்தால் தேங்காய்க்கு வரும் நோயாக இதனைக் கருத வேண்டும்.

'வேழம் உண்ட விளாங்கனி' என்ற வழக்கும் இலக்கியத்தில் வழங்குகின்றது விளாங்கனி உள்ளீடற்றுப் போவதைக் குறித்து யானையுண்ட விளாங்கனி என்று கூறுவர். யானை உண்பதால் விளாங்கனி உள்ளீடற்றுப் போவதில்லை. விளாங்கனி உள்ளீடற்றுப் போதலும் ஒரு வகை நோயினாலாகும். இந் நோய் எது வென்று தெரியவில்லை.

தமிழிலக்கியத்தில் செடி நோய்களைப் பற்றியும் செய்திகள் காணப்படுவதால் அக்காலத்திலேயே இவ்வகை ஆராய்ச்சியில் பழந்தமிழர் ஈடுபட்டிருந்தனர் என்பது தெளிவாகின்றது

இலக்கியத்தில்
அறிவியல்

இரண்டு

# உயிரியல்

# 1

# கவரிமா மான மாவா?

## உரையாசிரியர் உரை

''மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்''

என்று வருங் குறள்பாட்டு யாவரும் அறிந்ததொன்று. இக்குறளுக்கு உரையாசிரியர்கள் அனைவரும் ஏறக்குறைய ஒரே பொருள் படும்படி உரை கூறிச் சென்றனர்.

'தன் மயிர்த்திரளின் ஒரே மயிர் நீங்கினும் உயிர் வாழாக் கவரிமாவை ஒப்பார் மானம் எய்துங்கால் உயிர் நீங்குபவர்' என்று பரிமேலழகர் பொருள் கூறினார். ஒரு மயிர் நீங்கின் கவரிமாவைப் போன்ற மானமுடையார் மானம் அழியவரின் உயிர் விடுவர்' என்று மணக்குடவர் பொருள் கூறினார். பரிப் பெருமாளும் மணக்குடவர் கூறிய முறையில் உரைத்தார்.

பரிதியார் இன்னும் விளக்கமாகக் கூறுவதுபோல், ''ஒரு மயிர் சிக்கினால் பிராணனைவிடும் கவரிமான் போல மானம் வந்தால் பிராணனை விடுவர் நல்லோர்''

என்றார். காளிங்கரோ அதைவிட ஒருபடி தாண்டித் தன் கற்பனையை உலவவிட்டு, ''தனக்கு அலங்காரம் ஆகிய மயிர்க்கற்றையின் ஒரு மயிர் போகின், மானித்துப் பின் உயிர் வாழாது அம்மயிர் துவக்குண்ட இடத்து நின்று வற்றி விடூஉம் கவரிமா அன்ன கடப்பாடுடையார்'' என்று கூறினார். இந்த உரைகளிலிருந்து தெரிவது என்ன? உரையாசிரியர்கள் கவரிமாவைப்பற்றித் தெளிவாக அறிந்தவர்கள் அல்லர் என்பது தெரிகின்றது.

## உள்ளதும் புனைதலும்

தமிழிலக்கியத்தில் குறிப்பாக சங்கப் பாடல்களில் இயற்கையை உள்ளது உள்ளபடியே கூறும் உணர்வு மிகுந்து காணப்படுவதை யாவரும் அறிவர்.

ஆனால் பிற்காலப் பாடல்களில், இல்லாததை உள்ளது போல விதந்து கூறும் போக்கைக் காண்கிறோம்.

சங்கப் புலவர் கவரிமாமைப் பற்றித் தெரிந்து இருந்தனர் என்பதைச் சங்க நூலில் இரு இடங்களில் வரும் குறிப்புகளிலிருந்து அறிகின்றோம். அவர்கள் கவரிமா வாழும் இடத்தை, சூழ்நிலையை நன்றாக அறிந்திருந்தனர் என்று தெரிகின்றது.

இது செவி வழிச் செய்தியாகவோ, கண்டாரிடம் கேட்டதாகவோ, நூல்வழி அறிந்ததாகவோ இருக்கலாம்.

**''நரத்தை நறும்புன் மேய்ந்த கவரி**
**குவளைப் பைஞ்சுனை பருகி யயல**
**தகரத் தண்ணுழற் பிணையொடு வதியும்**
**வடதிசை யதுவே வான்றோ யிமயம்''**

என்று வரும் புறநானூற்றுப் பாடலில் (132) நரந்தைப் புல்லை மேய்ந்த கவரி, குவளைப்பூ நிறைந்த சுனையில் நீர் பருகி, அருகில் இருந்த தகர மரநிழலில் தன் துணையொடு

வாழும் வடதிசையில் வானை அளாவும் இமயம் இருப்பதாகக் கூறப்பட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

''கவிர்ததை சிலப்பிற் றுஞ்சுங்கவரி
பரந்திலங் கருவியொடு நரந்தங் கனவும்
ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்''

எனவரும் பதிற்றுப்பத்துப் பாடல் வரிகளில், கவரி வாழுமிடம் இமயம் என்றே கூறப்பட்டிருக்கின்றது.

## இமயத்தில் வாழும் மாடு

கவரி இமயத்தில் மிக உயரத்தில் வாழும் விலங்கு ஆரியர் வாழுமிடத்தில் இருக்கும் விலங்கு என்பதைச் சங்க புலவர்கள் தெரிந்து வைத்திருந்தனர் என்பது தெளிவு.

இமய மலையில் மயிர்த் திரளோடு வாழும் அத்தகைய விலங்கு யாது என ஆராய்ந்து பார்க்க வேண்டும். இமய மலையில் வாழும் விலங்குகளில் மனிதரோடு பழகி வாழும் விலங்கு 'யாக்' (Yak) எனப்படும் விலங்கேயாகும். இதையே கவரிமா என்று சங்கப் பாடல்கள் கூறுகின்றன. கவரியை ஈந்த விலங்கு கவரிமா எனப்பட்டது.

பனிக்கரடி இமயமலையில் வாழ்ந்தாலும் மனிதரால் நெருங்க முடியாத கொடிய விலங்கு.

திபெத்திய மொழியில் 'யாக்' என்று அழைக்கப்படும் கவரிமா, எருது போன்றதொரு பொதி விலங்காகும். உயர்ந்த மட்டத்திலுள்ள பனிப் பாறைகளிலும், அடிவாரத்திலும் வாழ்வது. உலகத்திலேயே குளிர்ந்த பகுதியான உயர்ந்த மலைகளில் வாழும் விலங்குகளில் இது சிறப்பானது. 'இது காட்டிலும் வாழும்; வீட்டிலும் வளர்க்கப்படுவதுண்டு. உயர்ந்த இடத்தில் குளிர்ந்த சூழ்நிலையில் வாழ்வதால் இதற்குக் கடுங்குளிரைத் தாங்கத் தடித்த மயிர்க்கற்றைகள் உடற் போர்வையாக இருக்கின்றது.

## பயன்படும் தோலாடை

இதன் மயிர் நிறைந்த தோலையே சிறந்த ஆடையாக வும் மயிரினால் நெய்த ஆடையைப் பாயாகவும் திபெத் தியர் பயன் படுத்துகின்றனர். எவெரெஸ்ட் முதலிய மலையுச்சிகளில் ஏறுபவர்களும் இவ்விலங்கின் மயிர்க்கற் றையை ஆடைகளில் பயன்படுத்துகின்றனர். திபெத்தில் வாழும் மக்கள் இவ்விலங்கிலிருந்து பெறும் மயிராடை யைப் பெரும்பாலும் உடுத்துகின்றனர் இத்தகைய தடித்த ஆடைகள் இல்லையெனில் மனிதர் இங்கு உயிர் வாழ்வது இயலாது.

## வள்ளுவர் அறிந்த உண்மை

வள்ளுவர் இவ் விலங்கைப்பற்றி உண்மையான, இயற்கைக்குப் பொருத்தமான செய்தியை உவமையாகப் பயன்படுத்தியிருக்கிறார். உண்மையறிவு குறைந்த பிற் காலத்தில் உரையாசிரியர்கள் கற்பனையும் உண்மைக்குப் புறம்பானது ஒரு கதையைக் கவரிமாவின்மேல் பொதி யேற்றி உலவவிட்டனர் என்று கருத வேண்டியிருக்கிறது. நேரிய பொருள் வேறொன்றிருக்கக் காண்கிறோம்.

'மயிர்க் கற்றையை இழந்தால், தான் வாழுமிடத்தில் உயிர்வாழ முடியாத கவரிமானைப்போல, மானத்தை இழக்கும் சூழ்நிலையில் மானமுடையோர் உயிரோடு வாழ மாட்டார்''

என்பதுதான் இக் குறளுக்கு நேரிய பொருள். சங்கப் புலவர்கள் கவரி மாவைப்பற்றி உண்மையான செய்தியை அறிந்திருந்தபோது, வள்ளுவர் கவரிமாவைப்பற்றி நன் றாகத் தெரியாதிருந்தார் என்று கருதுவதற்குக் காரணம் யாதுமில்லை. கவரிமாவைப்பற்றித் தாம் நன்கு தெளிந்த செய்தியையே வள்ளுவர் அழகிய உவமையாகக் கையாண் டிருக்கிறார் என்பதை உணரவேண்டும்.

## பிற்காலக் கற்பனை

இயற்கையில் உண்மையாகக் கண்ட செய்தியை உணராத பிற்காலத்துப் புலவர்களும் ஆசிரியர்களும் உயர்வு நவிற்சியின் காரணமாகக் கற்பனையில் மூழ்கி, நுண்மாண் நுழைபுலத்தைக் காரணமாகக் காட்டினர். ஒருமயிர் நீங்கின் வாழாத கவரிமா இன்றும் அன்றும், இயற்கையில் காணக்கூடாததொன்று. விலங்கிற்கு அத்தகைய மான உணர்ச்சி உண்டு என்பதை அறிவியலார் எவரும் ஒப்பார். விலங்கிற்கு அத்தகைய நுண்ணிய உணர்வு இருப்பதாக விலங்கு நூலாரும் கூறவில்லை.

மானம் எனும் உணர்ச்சி பகுத்தறியும் அறிவிலிருந்து பிறப்பது. தமிழில் உயர்திணையில் விலங்குகள் சேர்க்கப் படவில்லை. ஆதலால் இந்தக் கற்பனைக் கதை எப்படி எழுந்ததென்று தெரியவில்லை. இதன் அடிப்படையாக பல கற்பனைகள் பரவலாயின. பரிதியார், 'மயிர் சிக்கினால் பிராணனை விடும் கவரி.' என்று கூறினார். ஒரு மயிரையிழந்து உயிரை விடுவதாகக் கூறுவதைவிட மயிர் சிக்கி உயிரை விடுவதாகக் கூறுவது பொருத்தம் என்று எண்ணினார் போலும்

காளிங்கர் கற்பனையின்மேல் ஒரு கற்பனையை ஏற்றினார்; தனக்கு அலங்காரம் ஆகிய மயிர்க் கற்றையில் ஒரு மயிர் போகின் மானித்து உயிர் வாழாது என்று அலங்காரமாகக் கூறிச் சென்றார். கவரிமாவை நேரிலோ அல்லது படத்திலோ பார்த்தவர்கள் அப்படியொன்றும் அலங்காரமான 'கூந்தல் மாவாக' கவரிமாவைக் கருதார். மகளிரின் கூந்தலை அலங்கரிக்கக் கவரி மாவின் மயிர்க்கற்றை உதவியதே தவிர கவரிமாவுக்கு அத்தகைய அலங்காரம் அதன் மயிரிலிருந்து கிடைப்பதாகத் தெரிய வில்லை.

## மாதர் கூந்தலுக்கு

சங்க காலத்திலேயே கவரியின் மயிரைக் கூந்தலழகுக்கு மகளிர் பயன்படுத்தியதாகத் தெரிகின்றது.

''கவரி முச்சிக் கார்விரி கூந்தல்
ஊசன் மேவற் சேயிழை மகளிர்''

என்று வரும் பதிற்றுப்பத்துப் பாடல் வரிகள், சேயிழை மகளிரின் கூந்தலுக்கு கவரி தந்த உதவியைக் கூறுகின்றது. அக்காலத்திலேயே, தமிழ்மகளிர் கூழைக்கற்றையை நெடிதாக்கவோ இழந்த மயிரை நிரப்பவோ கவரி மயிரை நம்பினர். மயிரைஇழந்த மகளிரே உயிரை இழக்கவில்லையெனும் போது, கவரி, மயிரையிழந்து உயிரை விட்டதாகக் கூறுவது கற்பனையே தவிர வேறன்று.

கவரிமாவின் மயிர், மகளிர் கூந்தலுக்கு உதவியது போல, கூந்தல் மாவிற்கு உதவியிருப்பதை, ''ஆய்மயிர் கவரிப் பாய்மா'' என்று வரும் பதிற்றுப்பத்துப் பாடல்வரி தெரிவிக்கின்றது. குதிரையின் தலையாட்டத்திற்கு, நிறமூட்டிய கவரி மயிர் உதவிவருவது இன்றும் காணப்படும் செய்தியாகும். இவ்வகையில் அன்று மகளிரின் தலையலங்காரத்திற்கும் குதிரையின் தலையலங்காரத்திற்கும் ஓர் ஒப்புமை இருந்தது. ஆனால் இன்று மகளிரின் தலையலங்காரத்திற்கும் குதிரையின் வாலுக்கும் (Pony Tail) ஒப்புமை காண்பது நகைப்புக் கிடமாகின்றது.

## கவரி சவரியானது

கவரியில் இருந்துதான் சவரிமயிர் தோன்றியது என்பது பலருக்கும் தெரியாது. கவரி என்ற சொல்லே சவரி ஆயிற்று. கவரி மயிரினால் செய்த சாமரம் கவரி என்றே அழைக்கப்பட்டது. கவரி என்ற சொல் முதலில் அழகிய மயிர்க்கற்றையைக் குறித்துப் பின்னர் அந்த மயிர்க் கற்றையைத் தரும் விலங்கிற்குப் பெயராயிற்று.

கவரிமாவின் மேல் வள்ளுவர் கொள்ளாக் கற்பனைக் கதையை உரையாசிரியர்கள் ஏற்றிய பிறகு, நிகண்டாசிரியர்கள் அதன் அடிப்படையில் கவரிமாவை 'மான மா' என்றழைக்கலாயினர். கவரிமா மானத்திற்கு இலக்கணம் வகுத்த விலங்காயுமாயிற்று.

கவரிமா என்று அழைக்கப்பட்ட விலங்கை பிற்காலத்தில் 'கவரிமான்' என்று அழைக்கலாயினர். ஆனினத்தை (Bovine) சேர்ந்த கவரிமாவை மானினத்தில் சேர்த்து மருளலாயினர் மாவென்றால் விலங்கென்றே பொருள். மான் என்று மானினத்தில் சேர்த்தது பொருத்தமன்று. மேற் கூறியவற்றிலிருந்து கவரிமா மான மா அன்று என்பது தெளிவு பெறும். வள்ளுவரும் அதை மான மாவாகக்கையாளவில்லை என்பதும் விளங்கும்.

# 2

# குடாவடி உளியம்

## காட்சிக் காதையில் கரடி

சிலப்பதிகாரத்தில் காட்சிக் காதையில் 'குடாவடி உளியம்' என்ற பெயர் கரடியின் பெயராகப் பயில் கின்றது. மலைவாழ் குறவர் செங்குட்டுவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்த பல பொருள்களுள் சில விலங்குகளும் பறவைகளும் கூறப்பட்டுள்ளன.

*''ஆளியி னணங்கு மறியின் குருளையும்*
*வாள்வரிப் பறழும் மதகரிக் களபமும்*
*குரங்கின் குட்டியுங் குடாவடி யுளியமும்*
*காசறைக் கருவு மாசறு நகுலமும்*
*பீலி மஞ்ஞையு நாவியின் பிள்ளையும்*
*கானக் கோழியுந் தேன்மொழிக் கிள்ளையும்''*

சிலம்பு— காட்சிக்காதை 48 - 54

## கற்பனை விலங்குகள்

காட்சிக் காதையில் கூறப்பட்டுள்ள விலங்குகளில் ஆளியின் அணங்கு கற்பனை விலங்காகத் தெரிகின்றது. சிங்கம் தென்னாட்டில் என்றுமே இயற்கையில் வாழாத விலங்காதலால், அரியின் குருளை என்று காட்சிக் காதையில் கூறப்பட்ட விலங்கும் கற்பனைச் செய்தியே யென்று கொள்ளலாம்.

அரியின் குருளைக்குப் பின்னர்க் குறிப்பிடப்பட்ட வேங்கைப் புலிக் குட்டியும், யானைக் கன்றும், குரங்கின் குட்டியும், கரடிக் குட்டியும், வரையாடு வருடையும், மட மான் மறியும் இயற்கையில் தமிழ் நாட்டு மலைக்காடு களில் கிடைப்பனவாகும். ஆனால் இவற்றுக்குப் பின்னர் கூறப்பட்ட காசறைக்கரு என்ற கத்தூரி மான் குட்டியைத் தமிழ் நாட்டில் இயற்கையில் காண முடியாது. கத்தூரி மான் இந்தியாவில் காஷ்மீரத்து மலைக் காடுகளில் மட்டுமே இயற்கையில் காணப்படுவதால் இந்த விலங்கைக் காட்சிக் காதையில் கூறிய செய்தி கற்பனையானதே நகுலமெனும் கீரியும் மஞ்ஞையும் நாவியின் பிள்ளையான புனுகுப்பூனைக் குட்டியும் காட்டுக் கோழியும் கிள்ளையும் தென்னாட்டு மலைகளில் காணப்படுவன.

காட்சிக் காதையில் கூறப்பட்ட விலங்குகளில் கரடியைக் 'குடாவடி உளியம்' என்று இளங்கோவடிகள் அழைக்கின்றார். உளியம், எண்கு என்பன கரடியின் பெயர்களாகச் சங்க நூல்களில் பயில்கின்றன. அரும்பத உரையாசிரியர் குடாவடி உளியம் என்ற சொல்லைத் திசைச்சொல் என்று குறிப்பிட்டு, பிள்ளைக் கரடி, கரடிக் குட்டி என்று பொருள் கூறியுள்ளார். அரும்பத உரை யாசிரியருக்குப் பின்னர் வந்த நச்சினார்க்கினியர் குடாவடி என்ற சொற்கு வேறு பொருளைக் கூறியுள்ளார்.

குடாவடி என்ற சொல் பத்துப்பாட்டில் மலைபடுகடாத்திலும் திருமுருகாற்றுப் படையிலும் வருகின்றது. மலைபடுகடாத்தில் சொல்லப்பட்டுள்ள விலங்குகள், பறவைகள் எல்லாம் தமிழ்நாட்டு மலைகளிலும் காடுகளிலும் இயற்கையில் காணப்படுவனவாகும்.

ஆமான், கயமுனிக்குழவி, ஊமை எண்கின் குடாவடி உளியம். வரைவாழ்வருடை வன்றலை மாத்தகர். அராவுக் குறும்பெறிந்த சிறுகண் தீர்வை, அளைச்செறி உழுவை, மரையான் பெருஞ்செவிக்குழவி, உடும்பின் கொடுந்தாள் ஏற்றை, யடக்கண் மஞ்ஞை, கானக்கோழியின் கவர்குரல் சேவல் ஆகியவை தமிழ்நாட்டில் வாழ்வனவாகும்,

## கரடியின் குட்டி

மலைபடுகடாத்தில் கரடியின் குட்டியானது 'ஊமையெண்கின் குடாவடிக்குருளை' என்று அழைக்கப்பட்டுள்ளது. கரடியை ஊமை எண்கு என்றழைத்தது பொருத்தமே. கரடி பொதுவாக வாய்விட்டு ஓசை செய்வதில்லை என்று கூறுவர். கரடியைத் தாக்கினாலோ ஊறு செய்தாலோ ஓசையுடன் கத்தும் என்பர். குடாவடிக் குருளை என்பது குட்டியைக் குறிக்கும். ஆனால் அரும்பத உரையாசிரியர் குடாவடி உளியம் என்ற பெயரில் குடாவடி என்ற சொல் குட்டியைக் குறிக்கும் என்றும் அச்சொல் திசைச்சொல் என்றும் கொண்டுள்ளார்.

நச்சினார்க்கினியர் எண்கின் குடாவடி ஊமைக் குருளை என்று கொண்டு கரடியின் வளைந்த அடியினையுடைய வாய்திறவாக் குட்டி என்று உரைஎழுதியுள்ளார். நச்சினார்க்கினியக் கூறின பொருள் இயற்கைக்குப் பொருத்தமானதாகத் தெரிகின்றது. ஆனால் கரடியின் குட்டிக்குத்தான் வளைந்த அடி இருப்பதா நச்சினார்க்கினியர் கூறியது சரியானதாகத் தெரியவில்லை.

திருமுருகாற்றுப்படையில் குடாவடி உளியம் என்ற சிலப்பதிகாரப் பெயர் வருகின்றது.

''இரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉ மயி ரியாக்கை குடாவடி யுளியம்
பெருங்கல் விடாரளைச் செறியக் கருங்கோட்(டு)''
—திருமுருகாற்றுப்படை 312 - 314

திருமுருகாற்றுப்படையின் உரையிலும் நச்சினார்க்கினியர் குடாவடி உளியம் என்ற பெயருக்கு வளைந்தஅடியுடைய கரடி என்று உரை கூறினார். ஆனால் திருமுருகாற்றுப்படையில் வேறுரையில் குடமுழவு போன்ற அடி என்று உரை கூறப்பட்டுள்ளது. இதை உ.வே. சாமிநாதய்யர் அடிக்குறிப்பில் காட்டியுள்ளார். குடம் என்று சொன்று குடமுழவு போன்ற அடி என்று கூறியது முற்றிலும் பொருத்தமற்றதாகும். கரடியின் காலடி குடமுழவு போன்று பருத்துக் காணப்படுவதில்லை.

குடாவடி

குடாவடி என்பதற்குப் பொருத்தமான இயற்கையான பொருள் என்ன வென்று ஆராய்ந்தால் இச் சொல்லின் பொருட் சிறப்பு விளங்குகின்றது. சங்க நூல்களில் விலங்கு, பறவை, செடிகொடிகள் ஆகியவற்றிற்குக் கூறப்பட்ட அடைமொழிகள் அவற்றின் சிறப்பு இயல்புகளைச் சுட்டிக்காட்டுவனவாகவே அமைந்துள்ளன. குடா, குடம் என்ற சொற்கள் வளைவுப் பொருளைக் குறிக்கும். அப்பொருளின் வளர்ச்சியாக உள்ளே வளைந்த, உள்ளே குவிந்த என்ற பொருளையும் இச்சொல் குறிக்கும்.

''அடங்கா வேட்கையின் அறிவனர் எய்திக,
குடங்கையின் நொண்டு கொள்ளவும் கூடும்''
(10-85-86)

என்று வரும் சிலப்பதிகார வரியில் குடங்கை என்ற சொல் உள்ளங்கை என்ற பொருளில் வந்திருப்பதை அறியலாம்.

குடங்கையாவது ஐந்து புரலுங் கூட்டி உட்குழிப்பது என்று அடியார்க்கு நல்லார் உரை கூறியுள்ளார். உள்ளங் கையால் மொண்டு என்பதே பொருளாகும். பேச்சுவழக்கில் உள்ளங்கை, உள்ளங்கால் என்று சொல்கிறோம் ஆதலின் குடாவடி உளியம் என்ற சொற்குப் பொருள் உட்குவிந்த உள்ளடியுடைய கரடி என்பதே யாகும். குட+அடி என்பதே குடாவடி ஆயிற்று. வளந்து குவிந்த உள்ளங்கால்களையுடைய கரடி என்று பொருள் கொள்ள வேண்டும்.

## மனிதனும் குரங்கும்

முதுகெலும்புடைய விலங்குகளின் வளர்ச்சி வரிசையின் உச்சியில் குரங்கு இனமும் மனித இனமும் உள்ளன. மனிதனும் குரங்குமே நடக்கும்போது தரையில் பாதத்தை ஊன்றி, உள்ளடியை ஊன்றி நடப்பார்கள் என்று விலங்கு நூலார் கூறுவர். மற்ற விலங்குகள் பெரும்பாலும் விரல்களை ஊன்றியே நடக்கின்றன. அதற்கேற்ப விலங்குகளின் விரல்கள் அமைந்துள்ளன.

விலங்குகளில் கரடி உள்ளங்கால்களைப் பதித்து நடக்கும் தன்மையுடையதென்பர். மனிதனின் கால்சுவடும் கரடியின் கால்சுவடும் ஏறக்குறைய ஓரளவினவாகவும் உருவினவாகவும் உள்ளன என்று கூறுவர்.

## பனிமலையில் மனிதன்?

இமயமலைப் பனிக்கட்டியில் 'யேட்டி' (yeti) என்ற பழங்கால மனிதன் வாழ்வதாக ஒரு செய்தி அடிக்கடி நாளிதழ்களில் அடிபடுகின்றது. பனிமலையில் நடக்கும் கரடிகளின் அச்சுவடே இவ்வாறு மயங்கவைத்ததாக அறிவியல் அறிஞர் கூறுகின்றனர்.

## கரடியின் காலடிகள்

கரடிக்கு மரத்தில் ஏறுவதற்கு ஏற்றதாக அதன் காலடிகள் உட்பக்கமாகக் குவிந்து இருக்குமென்று கூறுவர் நாயும் பூனையும் நடக்கும்போது விரல்களால் நடப்பதாக (digitigrade) விலங்கு நூலார் கூறுவர். இவற்றில் உள்ளங் காலோ பாதமோ தரையில் படிவதில்லை. ஓடுவதற்காக வும் பாய்வதற்காகவும் பூனைக் குடும்பத்திலும் நாய்க் குடும்பத்திலும் உள்ள விலங்குகளுக்குக் காலடி அமைந் துள்ளது.

கரடிகளுக்குக் கால்கள், தோண்டுவதற்கும் மரத்தில் ஏறுவதற்கும் ஏற்றதாக அமைந்துள்ளன. கரடி பருத்த உடலுடைய விலங்காதலால் மரத்தில் ஏறுவதற்குப் பொருந்த, உட்குவிந்து பற்றி ஏறுவதற்குத் தகுந்தவாறு காலடி அமைந்துள்ளது.

## குஞ்சித பாதம்

கரடி புலிபோல ஓடுவதோ பாய்வதோ இல்லை. கரடி தரையில் நன்றாக விரல்களையும் உள்ளடியையும் ஊன்றி நடக்கும். கரடிக்கு உள்ளங்கால் உட்பக்கமாக வளைந்து மரங்களில் பற்றி ஏறுவதற்கு ஏற்ப அமைந்திருப்பதால் குடாவடி, என்று கரடியின் உள்ளங்காலைக் குறிப்பிட்டு அழைத்தனர். இப்பொருளின் நுட்பத்தை உணராது பிற் காலத்தில் உரையாசிரியர் மயங்கிப் பொருள் கூறினர்.

சிலப்பதிகாரத்தில் புறஞ்சேரியிறுத்த காதையில் 'படிந்தில சீறடி பரல்வெங்கானத்து' என்ற வரிக்கு உரை யெழுதி அடியார்க்கு நல்லார் 'பருக்கையுடையடை பாலை நெறியில் சிற்றடி படிந்தில, உள்ளடி கொப்புளித்தலிற் குஞ்சித்து நடந்தமை கூறினான்' என்று உரை கூறியிருப் பதைக் கவனிக்க வேண்டும். சிவபெருமான் ஆடும்போது

காலடியை உள்பக்கமாக வளைத்து ஆடுதலாலே 'குஞ்சித பாதம்' என்று கூறும் வழக்கு உண்டாயிற்று. குடங்கைக்கு ஏற்பக் குடாவடி என்று சிலப்பதிகாரத்திலேயே கூறப் பட்டுள்ளது

## காலடிகள் - பெயர்கள்

விலங்குகளின் காலடியைக் குறிப்பாகக் கொண்டு சங்க நூல்களில் வருணித்துள்ளதைக் காணலாம். மிகப் பிற்காலத்து இலக்கண நூலாகிய நம்பியகப் பொருளில் குறிஞ்சிக்குரிய கருப்பொருள் கூறினவிடத்து, 'மறப்புலி' குடாவடி, கரையடி, சீயம்' என்று கூறியிருப்பதைக் காணலாம்.

குறிஞ்சிக்குரிய விலங்குகளில் குடாவடி, கரையடி என்ற பெயர்கள் கரடியையும் யானையையும் குறித்து வருவதைக் காணலாம். சங்கப் பாடல்களில் சிலப்பதி காரத்திலும் திருமுருகாற்றுப் படையிலும் 'குடாவடி உளியம்' என்று வரும் கரடிப் பெயரில் 'குடாவடி' அடை மொழியாகவே வந்துள்ளது.

விலங்குகளின் காலடிகளைச் சங்கப் புலவர்கள் நன்கு அறிந்தே கூறியுள்ளனர். யானையின் காலடியைப் பொங் கடி, கறையடி, பறையடி, குவவடி, பாவடி என்றெல்லாம் பொருத்தமாகச் சங்கப் பாடல்களில் கூறியுள்ளனர். யானை காலை வைத்தால் சுற்றிலும் கறைபோலச் சதை வெளியே தெரியும். ஆதலின் கறையடி என்றனர். பாறை போன்று வட்டமாகக் காணப்படுவதால் பறையடி என் றனர். யானைக் குட்டியின் காலைத் துடியடி என்றனர்.

காட்டுப் பூனையின் மெத்தென்ற காலடியை 'வெருக் கடியன்ன குவிமுகிழ் இருப்பை' என்று அகநானூறு (267)

கூறுகின்றது. குளம்பால் ஆன அடியைக் 'குளப்படி என்று பிற்காலத்து நூல் ஒன்று கூறுகின்றது.

## கள்ளனுக்குக் கரடியின் பெயர்

உளி போன்ற நகம் கரடிக்கு இருப்பதால் உளியன் என்ற பெயரும் சங்க நூல்களில் கரடிக்கு வழங்கியுள்ளது. உளிபோன்ற நகத்தைக் கொண்டு கரடி, கறையான் புற்று களைத் தோண்டும். உளியன் என்ற பெயர் சிலப்பதிகாரத் தில் நிலத்தை அகழும் கள்ளன் பெயராக வருகின்றது. 'நிலனகழ் உளியன்'என்று கொலைக்களக்காதையில் கூறப் பட்டுள்ளது. உளி என்பது நிலத்தைத் தோண்டும் கன்னக் கோல் என்று தெரிகின்றது. மதுரைக் காஞ்சியிலும் 'நிலனகழ் உளியர்' என்று கூறப்பட்டுள்ளது.

நீலத்தானையனாகி, நிலத்தை அகழ்வதானாலும் நிலத்தை அகழ்ந்து பொருள்களைத் தேடுவதாலும் கர டியைப் போன்றவனாதலால் உளியன் என்ற பெயர் கன்னம் வைக்கும் கள்ளனுக்கு வழங்கியதாகத் தெரி கின்றது.

## பாட்டுடைத் தலைவர்கள்

கரடி கரிய உடலை உடையது. நிலத்தை அகழ்வது. அகழ்ந்து உள்ளே உணவுப் பொருளைக் கவர்வது. இந்த ஒப்புமைகள் பொருந்துவதால் உளியன் என்ற பெயர் வந் திருக்கலாம். யாப்பருங்கல விருத்தியில் ஒரு மேற்கோள் பாடலில் ''ஊகத்தி னான்மல்கு சோலை யுளிய னுயர்வரை வாய்'' என்று வரும் வரியில் உளியன் என்ற பாட்டுடைத் தலைவன் பெயர் காணப்படுகின்றது. ஆதலின் கடுவன் மந்தி, ஓரி என்ற விலங்குப் பெயர்களால் சங்க காலத்தில் புலவர்களும் தலைவர்களும் அழைக்கப்பட்டது போலக் கரடிப் பெயரையும் பிற்காலத்தில் தரித்திருந்தனரென்று தெரிகின்றது.

★

# 3

# மகண் மா

## சிந்தாமணியில் மகண் மா

'மகண் மா' என்றோர் உயிரைப்பற்றித் தமிழ் நூல்களில் சிலசெய்திகள் காணப்படுகின்றன. மா என்பதால் இஃது விலங்குவகையைச் சேர்ந்தது என்பது தெரிகின்றது. இந்த விலங்கு எது என்பதைப் பிற்கால உரையாசியர்களும் விளக்க வில்லை. (மகண்—Srenden Lonis)

இவ் விலங்கைப் பற்றித் தமிழிலக்கியத்தில் முதலில் சிந்தாமணியில் செய்தி வருகின்றது.

''மைந்தரைப் பார்ப்பன மாமகன் மாக்குழாம்
சந்தன மேய்வன தவழ்மதக் களிற்றினம்
அந்தழைக் காடெலாந் திளைப்பவா மானினம்
சிந்தவால் வெடிப்பன சிங்கமெங் கும்முள''

—சீவக சிந்தாமணி 1902

மகண் மாக் கூட்டம் மைந்தரைப் பார்ப்பதைக் குறிப்பாகக் கூறியிருப்பதைக் காணலாம்.

நீலகேசிக்கு சமயதிவாகரர் எழுதிய உரையில் இந்த மகண் மாவைப் பற்றி ஒரு செய்தி காணப்படுகின்றது. 776ஆம் பாடலுக்கு உரையெழுதுங்கால் 'நிறமும் தன் வயப்படுத்தலும் வற்கெனவு முதலாகிய கூட்டுத் தன்மையினால் நிலையுதற் றன்மையும், இங்ஙனமே மானிட விலங்கு, மகண் மா, கோழிப்பாம்பு முதலியனவும் சொல்லிக் கொள்க' என்று கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

மகண் மா களிறு வாழும் காடுகளில் கூட்டமாகக் காணப்படும் என்று சிந்தாமணி கூறியுள்ளது. இதன் பார்வையில் ஒரு தனித்தன்மையிருந்தால் ''மைந்தரைப் பார்ப்பன மகண் மாக் குழாம்'' என்று சீவக சிந்தாமணி கூறிற்று.

## தணிகைப் புராணத்தில்

தணிகைப் புராணம் பிற்காலத்திய நூலாயினும் பழைய இலக்கிய மரபை ஒட்டி மரங்கள் விலங்குகள் பற்றிய பல உண்மைச் செய்திகளைக் கூறியுள்ளது.

**''ஆணடி நிழலோம்பி யமர்துயின் மகண்மாவை**
**ஏணமர் வரைச்சிறுவ ரெயிற்றிய ரெனவண்மிக்**
**காணுநழ கானான்இற் கன்னிய ரெனவியவாப்**
**பூணுறு பாசத்தாற் பூட்டினர் போதருவார்''**

—தணிகைப் 68

ஆணென்னும் மரத்தின் நிழலால் பாதுகாக்கப்பெற்று உறங்குகின்ற மகண் மாவை மலையில் வாழும் வேட்டுவச் சிறார்கள் நான்கு கால்களையுடைய வேடப் பெண்ணெனக் கருதி வியந்து கயிற்றினாற் கட்டிக் கொண்டு போயினர் என்று தணிகைப் புராணம் கூறியுள்ளது.

மகண் மா பெண்முகம்போல அமைந்த ஒரு வகை விலங்கு என்று வினக்கம் கூறப்பட்டுள்ளது.

## காஞ்சிப் புராணத்தில்

பிற்கால நூலாகிய காஞ்சிப் புராணமும் ''மகண்மா மாக்கள் அம்பொனாலாயத் தூணினான் பாவையை யாடவரென......... நோக்கி'' (நகரேற்று - 86) என்று கூறியுள்ளது.

தமிழ் நூல்களில் மகண் மாவைப் பற்றிக் கூறிய செய்திகளிலிருந்து மகண்மா வென்பது இயற்கையில் வாழும் எந்த விலங்கு என்று கண்டறிய முடியும்? விலங்கு நூலறிவோடு இச் செய்திகளை ஆராய்ந்தால் மகண்மா வென்பது தமிழ்நாட்டுக் காடுகளில் வாழும் ஒருவகை விலங்கே என்பது தெளிவாகும்.

நீலகேசி உரையில் மகண் மாவிற்கு நிறமும் தன் வயப்படுத்தலும் வற்கெனவு முதலாகிய கூட்டுத் தன்மையிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

ஆதலின் மகண் மா நல்ல நிறமுடையது, தன் வயப் படுத்தும் சக்தியுடையது. அழகுடையது என்று நீலகேசி உரையாசிரியர் கருதினார் என்பது விளங்குகின்றது.

## தேவாங்கு

இச் செய்திகளிலிருந்து மகண் மா எதுவென்பதை விலங்கு நூலறிவோடு ஆராய்ந்தால், இந்த மகண் மா தற்காலம் தேவாங்கு என்று வழங்கும் சிறு விலங்கே என்பதில் ஐயமில்லை.

தேவாங்கு காட்டில் வாழும் விலங்காகும். மரக் கிளைகளில் கூட்டமாகக் காணப்படும். பகற் காலத்தில்

மரக் கிளைகளின் நிழலில் உறங்கும் ஞாயிற்றின் ஒளியை, பகல் வெளிச்சத்தை இதறு கண்கள் தாங்கா. ஆனால், இரவில் நன்கு விழித்துப் பார்க்கக்கூடியது. இரவிலே புழு, பூச்சிகளை வேட்டையாடும். இரவில் தேவாங்கு உற்றுப் பார்ப்பதையே சீவக சிந்தாமணி "பார்ப்பன மாமகண் மாக்குழாம்" என்று குறிப்பாக சுட்டியுள்ளது இந்தச் செய்தி தேவாங்குக்கு நன்கு பொருந்தும்.

## இரவில் பார்த்தல்

இரவில் காடுகளில் மரக் கிளையிலிருந்து நன்கு பார்க்கக் கூடிய உயிர்கள் இரண்டேயுள்ளன என்று காட்டியல் அறிஞர்கள் உரைப்பர். அவை ஆந்தையும் தேவாங்குமாகும்.

மகண் மா விலங்கு வகையைச் சேர்ந்தது என்பது தெரிவதால் சிந்தாமணி குறிப்பிட்டது தேவாங்கேயாகும். இரவுக் காலத்தில் காடுகளில் விழித்த கண்களை மூடாது நெடுநேரம் உற்றுப்பார்க்கக் கூடிய விலங்கு தேவாங்கே என்று பாதுசா என்ற அறிஞர் உரைத்ததைக் கவனிக்க வேண்டும்.

## வயப்படுத்தும் தன்மை

இதிலிருந்து 'பார்ப்பன' என்று சிந்தாமணி சுட்டியதன் நுட்பமும் திட்பமும் நன்கு விளங்கும். தற்கால அறிஞர்கள் மகண் மாவின் கண்களுக்குத் தன் வயப்படுத்தும் பார்வை இருப்பதாகச் சொல்வர். சமய திவாகரர் மகண் மாவிற்குத் 'தன் வயப்படுத்தும் தன்மை' (hyponotic) உண்டு என்று கூறியிருப்பது போற்றத்தக்கதாகும். சமயதிவாகரர் நீலகேசி உரையில் பல அறிவியற் செய்திகளைக் கூறியுள்ளார். ஆங்கிலத்தில் Hyponotic என்ற சொற்கு நேர் மொழி பெயர்ப்புப் போன்று தன் வயப்படுத்தும் தன்மை என்ற சொற்றொடர் இருப்பதைக் கவனிக்க வேண்டும்.

தேவாங்கின் கண்களில் இருக்கும் தன் வயப்படுத்தும் தன்மையைக் கண்ட பாமர மக்கள், இந்த விலங்கிற்கு மந்திர சக்தியிருப்பதாகக் கருதினர். சிலர் தேவாங்கைக் கூட்டில் வளர்த்து அதன்மேல் கயிற்றைச் சாத்தி அக் கயிற்றை நோயுற்ற குழந்தைகளுக்கு அணியச் சொல்லி விற்று வருகின்றனர்.

## பெண் முகம்

பெண்ணுடைய முகம்போல இதன் முகம் இருப்பதாகத் தணிகைப்புராணம் கருதி நான்கு காலுடைய பெண் ணாக உவமித்தது. தேவாங்கின் முகம் மிகவும் மென்மை யாகவும் கண்கள் பெரியவையாகவும் இருப்பதால் பெண் ணின் முகத்தோடு ஒப்பிட்டனர்.

## பெண் விலங்கு

இதன் காரணமாகவே தேவாங்கைப் பெண்ணாகக் கருதிப் 'பெண் விலங்கு, என்ற பொருளில் மகண்மா என்று பெயரிட்டனர். இதன் பெண் தன்மையைச் சுட்டிக் காட்டு வதற்காகவே மானிட விலங்குடன் சேர்த்துச் சமயதிவா கரர் நீலகேசி உரையில் குறித்துள்ளார். ஆண் மரத்தின் நிழலில் பெண் விலங்கான மகண் மா தூங்குவதாகத் தணிகைப் புராணம் முரண்பாடு நயம் தோன்றக் கூறியது. பெண் விலங்கானதால் மகண் மா மைந்தரைப் பார்ப்ப தாகச் சிந்தாமணி கூறியது. உயிருடைய மகண் மா தூணில் செதுக்கிய உயிரற்ற ஆண்பாவையை ஆடவரென நோக்கின என்று காஞ்சிப் புராணமும் இந்த முரண்பாடு தோன்றக் கூறியது.

## காட்டுப் பாப்பா

தேவாங்கைத் தமிழ் நாட்டில் சில காடுவாழ் மக்கள் 'காட்டுப் பாப்பா' என்றழைக்கின்றனர். தேவாங்கின் முகம், குழந்தையின் முகம் போலிருப்பதால் அவ்வாறு அழைக்கின்றனர். கன்னடத்திலும் இப் பெயர் வழங்குகின்றது. ஆப்பிரிக்காவில் ஒருவகைத் தேவாங்கை 'புதர்ப் பாப்பா' (Bush baby) என்றழைக்கின்றதை இது சார்பாக எண்ணிப் பார்க்கலாம்.

கன்னட மொழியில் காட்டு மனுஷ்யன், அடவீ மனுஷ்யன், மலை மனுஷ்யன் என்று அழைக்கின்றனர். சிங்கள மொழியில் சிங்கக் கூளி என்றழைக்கின்றனர். இதை ஒருவகைக் கூளிப்பேய் என்று கருதுகின்றனர்.

மலையாளக் காடுகளில் குறவர்கள் தேவாங்கை 'அரண்மனைக் குட்டி' யென்று அழைப்பதைக் கேட்டிருக்கின்றேன்.

காஞ்சிப் புராணத்தில் பொன்னாலான தூணின் சூழ்நிலையில் மகண் மா கூறப்பட்டிருக்கிறது. அரண்மனையில் வளர்த்ததால் அரண்மனைக் குட்டி என்று பெயர் வந்தது.

## திசை காட்டும் இயல்பு

நான் தேவாங்கைப் பற்றி வியப்பானதும் அரியதுமான ஒரு செய்தியை வடக்கு மலையாளத்தில் கேள்விப்பட்டேன். மலையாளத்தில் தேவாங்கை 'வடக்கு நோக்கி' 'குட்டி சிராங்கு' என்ற பெயர்களால் அழைக்கின்றனர். இதன் காரணத்தை ஆராய்ந்தபோது வியப்புக்குரிய விளக்கம் கிடைத்தது.

அரேபிய மாலுமிகள் தேவாங்கைக் கப்பலில் திசை காட்டும் விலங்காகப் பயன்படுத்தினரென்று தெரிகின்றது. நடுக்கடலில் மழைக் காலத்திலும் ஞாயிறு தெரியாத நாட்களிலும் தேவாங்கு நோக்கும் திசையைக் கண்டு திசையை அறிந்தனர். கூட்டில் வளர்ந்த தேவாங்கு ஞாயிறு இருக்கும் திசைக்கு எதிராக முகத்தை வைத்துக் கொள்ளுமாம். அதிலிருந்து ஞாயிறு எத்திசையில் உள்ளது என்று கண்டு கொள்வர்.

## குட்டி சிராங்கு

திசையைத் தெரிந்து கொள்வதற்குப் பிற்காலத்தில் மாலுமிகள் திசை காட்டிப் பொறியைப் (Mariners' Compas) பயன்படுத்தினர். இதை மலையாளத்தில் 'வடக்கு நோக்கி' என்றழைத்தனர். திசை காட்டிப்பொறியில் காந்த ஊசி வடக்குத் திசையையே காட்டுமாதலால் இதை 'வடக்கு நோக்கி' என்றழைத்தனர். அந்தத் திசை காட்டிப் பொறி போன்றே திசை காட்ட உதவியதால் தேவாங்கையும் வடக்கு நோக்கி என்றழைத்தனரென்று தெரிகின்றது. 'சிராங்கு' என்ற பெயர் அரேபிய மொழியில் மாலுமி என்று பொருள் தரும். இப்பெயர் தமிழிலும் மலையாளத்திலும் மாலுமியை குறித்து வழங்கியதுண்டு. திசையை காட்டியதால் தேவாங்கையும் 'குட்டி சிராங்கு' என்று மலையாளத்தில் அழைத்தனர்.

கேரளத்தின் தெற்குக் காடுகளில் தேவாங்கை 'நீற்றின் கூட்டுத் தேவாங்கு' என்று கூப்பிடுவதைக் கேட்டிருக்கின்றேன்.

## சிவப்பு எறும்புகள்

காடுகளில் பெரிய இலைகளைத் தைத்துக் கூடு செய்து அதனுள் வாழும் சிவப்பு எறும்புகள் கேரளக் காடுகளில் நிறைய உண்டு. இச் சிவப்பு எறும்புகள் கடித்தால் மிகவும்

கடுக்கும். கடித்தவிடம் தடித்து வீங்கி விடும்; நெருப்புப் போலச் சுரீர் என்று கடுக்கும்.

எறும்புகளின் முட்டைகளையே விரும்பி உண்பதால் 'நீற்றின் கூட்டுத் தேவாங்கு' என்று அழைப்பதாக விளக்கம் கூறினர். தேவாங்கு, எறும்புகளையும் எறும்பு முட்டைகளையும் விரும்பித் தின்னும். காட்டில் பந்து போல இலைகளைத் தைத்துக் கூடு கட்டும். எறும்புகளின் முட்டைகள் தேவாங்குக்கு நிறையக் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. இந்த எறும்பு, பலா மரத்தின் இலைகளைச் சேர்த்து வைத்துக் கூடு கட்டுவதைக் கேரளத்தில் கண்டிருக்கின்றேன். இந்த எறும்புக் கூட்டை ஒரு நற்றிணைப் பாடல் கூறியுள்ளது வியப்பிற்கிடமானது.

''பழனப் பாகல் முயிறுமூசு குடம்பை
கழனி நாரை உரைத்தலிற் செந்நெல்
விரரு வெள்ளரிசியில் தாஅம் ஊரன்''

—நற்றிணை 180

''பழனப் பாகன் முயிறுமூசு குடம்பை''

—ஐங்குறுநூறு 99

கழனியில் இருந்த பலா மரத்தில் முயிறு என்ற வகை எறும்புகள் கட்டிய கூட்டில் நாரை உட்கார்ந்து தள்ளுவதால் வெள்ளையான அரிசி போன்ற எறும்பு முட்டைகள் சிந்திப் பரவின என்று நற்றிணை கூறியுள்ளது. பலா மரத்தில் இருந்த எறும்புகள் கூடு கட்டுவதை இன்றும் மலையாள நாட்டில் காணலாம். முயிறு என்பது ஒருவகை எறும்பு என்று கூறியுள்ளனர். இந்த எறும்பே எறும்பு வகைகளில் இலைக்கூடு கட்ட வல்லது.

## ஊர்ப் பெயர்

இந்த எறும்புக் கூடுகள் நிறைய இருந்ததால் 'கொடுங் களூர்' என்று அழைக்கப்படும் முசிறி 'முயிறிக்கோடு' என்று தெரேசாப்பள்ளிச் செப்பேட்டில் அழைக்கப்பட்டது. முயிறு, முசுறு என்ற சொற்கள் இந்தச் சிவப்பு எறும்பையே குறிக்கும். முயிறு நிறைந்த ஊர் முயிறி என்றும் அழைக்கப்பட்டது.

தேவாங்கு, முயிறி இன எறும்பின் முட்டைகளை விரும்பி உண்பதுபோல் பறவைகளின் முட்டைகளையும் தின்னும். தேவாங்கைக் கூட்டில் வளர்ப்பவர் கோழி முட்டையைத் தருவர்.

## வசிய மருந்து

தேவாங்கின் கண்ணைத் தோண்டியெடுத்து பில்லி சூனியத்தில் பயன்படுத்துவர். தெலுங்கு மொழியில் 'தேவாங்க பில்லி' என்று இதை அழைக்கின்றதைக் காணலாம். இதன் உருண்ட கண்கள் பெண்களை வசியம் செய்ய உதவும் என்று, இக் கண்களிலிருந்து மருந்து செய்கின்றனர்.

## வரலாற்று வழி

தேவாங்கு என்ற பெயர் தெலுங்கு மொழியிலிருந்து தமிழில் வந்திருக்கலாம். தேவாங்கு ஆப்பிரிக்காவிலும் இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சிக் காடுகளிலும் காணப்படுவதால் மறைந்து போன தென் கண்டம் (Lost Continent) லெமூரியாக் கண்டம் என்றழைக்கப்பட்ட தேவாங்கை இலத்தீன் மொழியில் 'லெமூர்' என்றழைப்பர். தமிழ் நாட்டில் காணப்படும் தேவாங்கை 'Slendeı Loris' என்று ஆங்கிலத்தில் அழைப்பர், இதுவே மகண் மா என்று தமிழிலக்கியத்தில் கூறப்பட்டது.

## கற்பனைச் செய்திகள்

சமய திவாகரர் கூறிய மானிட விலங்கு, சிங்கத்தின் முகமும் மனிதனின் உடலும் உடையதென்று கூறப்படுவ தால் அஃது இயற்கையில் இல்லாத விலங்காகும். வட மொழியில் 'புருஷ மிருகம்' என்றழைப்பர். இது நரசிங்கம் போன்று கற்பனை விலங்காகும் கோழிப் பாம்பு என்று சமயதிவாகரர் குறிப்பிடுவதும் கற்பனைப் பாம்பாகும். இந்தப் பாம்பு குறையக் குறையக் கோழி ஆகும் என்பர். குக்குட சர்ப்பம் என்றும் அழைப்பர். கேரளத்தில் அடர்ந்த காடுகளில் கோழிப் பாம்பு இருப்பதாகக் காடு வாழ் மக்கள் கூறினும், இஃது இயற்கையில் வாழும் உண் மையான உயிர் அன்று.

ஆகவே, சமயதிவாகரர் கூறிய மூன்று உயிர்களில் மகண்மாவே இயற்கையில் உள்ள விலங்காகும். அந்த மகண் மாவே தேவாங்கு ஆகும்.

# 4

# கரிக் குருவி

## கோயில் கல்வெட்டில்

தமிழ்நாட்டுக் கோயில் கல்வெட்டுகளில் ஒன்று (S. I. I. 81-44) 'இவன்தானும்...........இவன் அடை குடி ஆனைச்சாத்தனும்' என்று கூறுவதைக் கண்டு நான் சிந்தித்தேன். அடைகுடி ஆனைச்சாத்தன் என்ற பெயர் ஒருவனின் பெயராகக் கூறப்பட்டுள்ளது. சாத்தன் என்ற பெயரைப் பிற்கால உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டாகப் பயின்றுள்ளனர். சாத்தன் என்ற தெய்வம் முதலில் சமணர், பௌத்தர்களால் வழிபடப்பட்டுப் பின்னர் இந்து மதத்திலும் புகுந்தது. சங்க காலத்திலேயே சாத்தன், சாத்தி என்ற பெயர்களுடைய புலவர்கள் இருந்தனர். சோழர் காலத்தில் இராசராசன், இராசேந்திரன் கல்வெட்டுகளில் சாத்தன் என்ற பெயர் பல முறை வருகின்றது. இன்று சபரிமலை சாஸ்தாவின் வழிபாடு விளம்பரத்தால் நன்கு பரவியுள்ளது.

## சரணாலயம்

'அடைகுடி ஆனைச்சாத்தன்' என்ற பெயர் ஆழ்ந்த பொருளுள்ள அரிய பெயராகும். இவ்வளவு நீளமான பெயர் ஒருத்தனுக்குச் சூட்டப்பட்டிருந்ததும் அரிதாகத் தெரிகின்றது. சென்னைப் பல்கலைக் கழக அகராதி 'அடைவு' என்ற சொல்லிற்குப் புகலிடம் என்று பொருள் கூறியுள்ளது; பறவைகள் தங்குமிடம் என்று பொருள் கூறப்பட்டுள்ளது புகலிடம் என்பது அடைக்கலம் தரும் இடம் என்று பொருள் தரும். பறவைகளைக் குறித்து வழங்கினால் பறவைகளின் சரணாலயத்தைக் குறிக்கும். அடைகுடி ஆனைச்சாத்தன் என்ற பெயர் முதலில் ஒரு பறவையின் பெயராகத் தோன்றிப் பின்னர் மாந்தர்க்குப் பெயராக மாறியுள்ளது.

## ஆனைச்சாத்தான்

ஆனைச்சாத்தான் என்ற பறவையைத் திருப்பாவையில் ஆண்டாள் பாடியிருக்கிறாள்.

**''கீசுகீசென்று ஆனைச்சாத்தன் கலந்து**
**பேசின பேச்சரவம் கேட்டி லையோ**
**பேய்ப்பிள்ளாய்..................''**

ஆனைச்சாத்தன் என்ற பறவை கருங்குருவி இனத்தில் ஒரு வகையான வலியன் என்பதாகும். மலையாளத்தில் இந்தப் பறவையை 'ஆனை ராஞ்சி' என்று அழைக்கின்றனர். யானையை இறாய்ஞ்சிச் செல்லும் அளவு வலிமை

உடையதாக கருதி இவ்வாறு அழைத்தனர். தமிழிலும் இந்தப் பறவையை 'வலியன்' என்று அழைப்பதும் இதே கருத்தினால்தான் என்பது புலப்படுகின்றது. மயிலைநாதர் உரையில், இப்பறவை வலியன் என்று அழைக்கப் பட்டுள்ளது. வயவன் என்ற பெயர் வலிமையுடையவன் என்று பொருள் தரும்.

## கருங் குருவி

இந்தப் பறவையினத்தில் ஒருவகையைக் கருங்குருவி என்று நாலாயிர திவ்விய பிரபந்தம் அழைக்கிறது. இப் பறவையை வட மலையாளத்தில் 'கரிங்நாத்தி' என்று அழைக்கின்றனர். தென்னார்க்காடு மாவட்டத்தில் 'கருவாட்டுவாலி' என்று அதன் வாலிபன் உருவத்தைக் குறித்துப் பெயரிட்டு அழைக்கின்றனர்.

## வலியன் 'பேச்சு'

ஆண்டாள், இதே ஆனைச்சாத்தன் பறவை விடியற் காலையில் 'கீசுகீசு' என்று கலந்து பேசுவதாகக் கூறியுள் ளாள். பறவை நூற்படி இந்தச் செய்தி முற்றிலும் உண் மையான, இயற்கைச் செய்தியேயாகும். நானே விடியற் காலையில் வலியன் நான்கு மணிக்குப் பின்னர் இரண்டு, மூன்று வலியன், ஒன்றை ஒன்று விளித்து உசாவி பேசுவது போன்று குரலிடுவதைக் கேட்டிருக்கிறேன். இதேபோன்று விடியற்காலத்தில் வலியன் குருவி கத்துவதைக் கிராமச் சூழ்நிலையில் நாவலாசிரியர் தி. ஜானகிராமன் ஒரு புதி னத்தில் குறிப்பிட்டுள்ளார். வலியன் குருவியின் பழக்க வழக்கத்தை நன்கு தமிழன் தெரிந்திருந்ததையும், அதைத் தற்காலத்தில் பறவை நூலார் கண்டுரைத்ததையும் காண

லாம். சிறந்த பறவை நூாலறிஞரான டாக்டர் சலீம் அலி என்பார் விடியற்காலையில் இப்பறவைகள் கத்துவதைப் பற்றி ஆண்டாள் சொல்லியது போலவே விளக்கியுள்ளார்.

## பெயர் வந்த கதை

வலியன் குருவிக்கு வலியன் என்றும், ஆனைச்சாத்தன் என்றும் ஆனைராஞ்சி என்றும் எப்படி பெயர்கள் வந்தன என்பதை அறிவியற்படி ஆராய்ந்தால் 'அடைகுடி ஆனை சாத்தன்' என்ற பெயர் எப்படி வந்தது என்பதைக் கண்டு கொள்ளலாம்.

'அடைகுடி ஆனைச்சாத்தன்' என்ற பெயர் முதலில் 'ஆனைச்சாத்தன்' என்றழைக்கப்பட்டது. திருப்பாவையில் ஆனைச்சாத்தான் என்றழைக்கப்பட்ட பெயர், வலியன் குருவியையே குறித்து வழங்கியது. பின்னர் மாந்தர்க்குப் பெயராக வழங்கிற்று,

சாத்தன், சாத்தி என்ற பெயர்கள் இலக்கண உரையாசிரியர்கள் காலத்தில் மாந்தர்க்குப் பெயராகவும் வழங்கியிருப்பதையும் கவனிக்க வேண்டும்.

## வலியன் வாழ்வு

வலியன் குருவி, சிறிய குருவி ஆயினும் மனவலிமை மிக்கது; வீரதீரமும் தைரியமும் மிக்கது. வலியன் குருவி கூடு கட்டின இடத்தில், மரத்தில் கழுகு, காக்கை போன்ற பறவைகள் அருகில் வந்தாலும் கடுங்குரலிட்டு வலியப் பாய்ந்து விரட்டி அடிக்கும் திறமை வலியன் குருவிக்கு உண்டு. கழுகு, காக்கை போன்ற பறவைகள் உருவில் பெரியவை யாயினும் வலியன் அவைகளை வெல்லும் மனத்திண்மையுடையது.

உண்மையில் வலியனுக்கு உடலில் அவ்வளவு வலிமை இல்லை. ஆனால் வலியன் தன் மனத்திண்மையால் கழுகு, காக்கை போன்ற பெரிய பறவைகளையும், பறவைகளைக் கொன்று தின்னும் பறவைகளையும் விரட்டி விரட்டி அடிக்கும் செயலாற்றல் மிக்கதாகும். வலியன் குருவியின் இந்த வீரதீரத்தை உணர்ந்தே வலிமையற்ற பறவைகள் கழுகு காக்கைகளிடமிருந்து தங்கள் முட்டைகளையும் தங்களையும் பாதுகாத்துக் கொள்ள மரத்தில் வலியனின் கூட்டுக்கு அருகிலும் அடியிலும் கூடுகட்டும் வழக்க முடையன

இந்தப் பழக்க வழக்கத்தால் வலியன் குருவி கூடு கட்டின இடம், மரம் மற்ற பறவைகளுக்குப் புகலிடமாக சரணாலயமாக மாறிவிடுகின்றது. இத்தகைய புகலிடம் தரும் வலியன் குருவியை 'அடைகுடி ஆனைச்சாத்தன்' என்று அழைத்த அருமையான, பெரிய இயற்கைச் செய்தி, அறிவியற் செய்தி பொதிந்த பெயர் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

கிராமச் சூழ்நிலையில் வாழும் நாட்டார் மக்கள் இந்தச் செய்தியைக் கண்டே வலியன் என்ற பெயரால் இன்றும் இப் பறவையை அழைக்கின்றனர். 'அடைகுடி ஆனைச்சாத்தன்' என்ற கல்வெட்டுப் பெயரின் முழுப் பொருளும் அதிலுள்ள ஆழ்ந்த கருத்தும் வலியன் குருவி யுடன் இணைத்துப் பார்க்கும்போதுதான் புலப்படு கின்றது. வலியன் குருவியின் அஞ்சா நெஞ்சையும் ஆற்றல் மிக்க செயலையும் நாட்டார் மக்களும் பழங்குடி மக்களும் நன்கு உணர்ந்திருந்தனர்.

## சினப் புலி

இமயமலை அருகில் வாழும் 'குக்கி' (Kukee) என்ற மலைக்குடிகளின் அரசன், பழங்காலத்தில் கருங்குருவியின்

இறக்கையை அரசுச் சின்னமாக தலையில் அணிவதுண்டாம். ஆப்பிரிக்காவில் காங்கோ நாட்டு மக்கள் வலியன் பறவையைத் தங்கள் மொழியில் 'சினப் புலி' (Angry Tiger) என்றழைக்கின்றனர். வலியன் குருவி சினத்திற்கும் வீரத்திற்கும் பேர் போனது.

## ஆனை ராஞ்சி

வலியன் குருவி விரைவாகப் பாய்ந்து எதிரியைத் தாக்கி மீளும் தன்மையைக் கண்டே அதை யானையை இறாய்ஞ்சி செல்லும் வலிமையுடையது என்று கற்பித்து 'ஆனைராஞ்சி' என்றழைத்தனர். யானையைத் தூக்கிச் செல்லக் கூடிய ஆற்றல் மிக்கப் பறவை என்ற கற்பனை ஆண்டாள் காலத்திலும் இருந்ததால் ஆண்டாளும் அக்காலத்தில் தமிழில் வழங்கிய ஆனைச் சாத்தன் என்ற பெயரால் வலியனை அழைத்திருக்கிறாள்.

## வயவன்

வயவன் என்ற பெயர் சங்க நூல்களில் புலிக்கு வழங்கியுள்ளது. வயமான் என்பதும் புலியாகும். இதே பெயர் உரையாசிரியர் மயிலைநாதர் காலத்தில் வலியனுக்கும் வழங்கியுள்ளது. இந்த வழக்கு காங்கோ நாட்டு மக்களின் வழக்குடன் ஒத்திருப்பதைக் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

## கோக் கயம்

வலியன் பறவையைத் திருவிளையாடல் புராணத்தில் 'கோக் கயம்' என்றழைத்திருப்பதைக் காணலாம். வலியனைக் 'கயவாய்' என்று நிகண்டுகள் கூறுகின்றன. கயவாய் என்பது பெரிய வாய் என்று பொருள்படும். பெரிய வாயாடி என்று நாட்டு வழக்கில் இப் பொருளைச் காணலாம்.

ஆதலின் பெரிய பேச்சுடையது என்ற பொருளில், கயம் என்னும் தலைமை கொண்டது என்ற பொருளில் கோக்கயம் என்று திருவிளையாடல் புராணம் அழைத்துள்ளது. ஆண்டாள் 'கீசு கீசென்று' கூறி இதன் பெரிய பேச்சை குறிப்பிட்டதைக் கவனிக்க வேண்டும். கயவாயுடைய பறவைகளில் அரசன் என்ற பொருளில் கோக்கயம் என்று திருவிளையாடல் புராணம் கூறியுள்ளது ஒரு புனைக் கதை, புராணக் கதையின் முடிவாக காணப் படுகின்றது.

## சைவர்கள் படைத்த கதை

வலியன் குருவி மிகப் பண்டைக் காலத்தில் எளிமை யுடைய, வலிமையற்ற பறவையாக இருந்ததாகவும், சிவபெருமானின் அருளால் இந்தப் பறவை வலிமையையும் சாகாவரத்தையும் பெற்றதாகவும் ஒரு புராணக் கதை சைவர்களால் படைக்கப்பட்டது.

இது புனை கதை என்பதைப் பகுத்தறிவாளர்கள், அறிவியல் நோக்குடையவர்கள் புரிந்து கொள்வர். இந்தச் சிறிய வலியன் பறவையின் வீரதீரத்தைப் பட்டறிவால் கண்டுணர்ந்த செய்தியைப் பயன்படுத்திச் சோமசுந்தரக் கடவுளைப் பெருமைப் படுத்துவதற்காக இந்தக் கதை தமிழ்நாட்டில் புனையப்பட்டுப் புராணமாக்கப்பட்டது.

நாட்டார் மக்களின் பழஞ்செய்திகள், நம்பிக்கைகள் முதலியன உயர்ந்தோர் இலக்கியத்தில் நுழைக்கப்பட்டு மேம்பாடடைவதுண்டு- அவை புரணங்களிலும் இலக்கியத்திலும் நுழைந்து மேன்மக்களுக்கும் மதத்தின் அடிப் படையில் நம்பிக்கைக்கு உரியதாகவும் ஒப்புக் கொள்ளத் தக்கதாகவும் ஆவதுண்டு.

## சில செய்திகள்

திருவிளையாடல் புராணத்தில் வரும் கருங்குருவிக்கு மந்திர உபதேசம் செய்து கொடுத்த கதை நாட்டார்

பண்பாட்டுச் செய்தியை வைத்துக் கொண்டு புனைந்து படைக்கப்பட்டதாகும்.

இயற்கையிலேயே வீரதீரமுடைய பறவைகளுக்குப் புகலிடமாக இருந்த, 'அடைகுடியாக' இருந்த பறவைகளுக்கு அரசுத் தலைமைச் செலுத்தக் கூடிய இந்த வலியன் பறவையைப் பண்டைக் காலத்தில் வலிமை யற்றதாக இருந்ததென்றும் சிவபெருமானின் அருளால் கோக்கயத் தன்மை, அதாவது பறவைகளுக்குள் அரசுத் தன்மை பெற்றதாகவும் திருவிளையாடல் புராணம் புனைந்து கூறுகிறது.

ஆண்டாள் இயற்கைச் செய்தியை இயல்பாகவே 'கீசு கீசு' என்ற வலியன் குருவி விடியற்காலையில் பேசினதாகக் கூறினாள். இதுவே பறவை நூலார் இயற்கையாகக் கண்டதாகும்; நான் கண்டதும் ஆகும்.

ஆனால் திருவிளையாடற் புராணம் இந்த வலியன் குருவிகளின் கீச்சும் பேச்சும் சாகா வழிக்குதவும் மந்திரமாகக் கொண்டது, வலியன் குருவி இந்த மந்திரத்தைச் செபிப்பதாகவும் கற்பனை பண்ணிக் கூறியிருப்பதைக் காணலாம்.

இந்தக் கதை முதலில் புனையப்பட்டது கல்லாட்டத்திலாகும். மிகப் பின்னர்த் தோன்றிய காஞ்சிப்புராணமும் இதனைக் கூறியுள்ளது. இந்தப் புராணக்கதை தமிழ் நாட்டில் மட்டும் தோன்றியது. இத்தகைய கதைகளைப் புத்த ஜாதகக் கதைகள் போலத் தமிழ்நாட்டில் சைவர்கள் புனைந்துள்ளனர் என்பதில் ஐயமில்லை.

திருவிளையாடற் புராணம் கதைகளுக்கு வடநாட்டுப் புராணத் தொடர்பு பெரிதுமில்லை. ஆனால் இந்தக் கதையை வேத வழக்குடன் ஒப்புக் கொள்ள வேண்டுமென்பதற்காக வடமொழியில் 'மிருதுஞ்சய மந்திரத்தை'

அதாவது சாக வழிக்குதவும் மந்திரத்தைக் கரிக்குருவிகள், வலியன் குருவிகள் செபிப்பதாகத் திருவிளையாடற் புராணம் கூறிற்று. ஆனால் திருவிளையாடற்புராணம் புனைந்து கூறிய இக்கதையின் கரு (Source) நாட்டார் கண்டறிந்த கரிக்குருவியின் இயற்கை அறிவியல் செய்தியே யாகும். இச் செய்தியே மாற்றப்பட்டு திரிக்கப்பட்டு புராணத்தை ஆக்கியது என்பதில் யாதொரு ஐயமும் இல்லை.

## தம்புரான் தம்புராட்டி

இன்றைய மலையாள மொழியில் பல பண்டைய தமிழ் வழக்குகளும் மரபுகளும் காப்பாற்றப்பட்டுள்ளன. கேரள நாடு மலைத் தொடர்களால் பிரிக்கப்பட்டதால் (Isolation) தூய தமிழ் வழக்குகள் சில துறைகளில் காப் பாற்றப்பட்டன

ஆனால் வெளியில் இருந்து வந்த நம்பூதிரிகளின் மேம் பட்ட செல்வாக்கால் திரிக்கப்பட்டு மலையாளமாகியது. ஆயினும் கேரள நாட்டில் நாட்டார் பண்பாட்டியலில் பல அரிய பெரிய தமிழ்ப் பண்பாட்டு மரபுகள், செய்திகள் காணப்படுகின்றன.

வலியன் பறவை இனத்தில் உள்ள மூன்று, நான்கு வகைகள் பேச்சு வழக்கில் காக்கத்தம்புரான், காக்கத்தம்பு ராட்டி என்று அழைக்கப்படுகின்றன இந்த மலையாளப் பெயர்கள் எல்லாம் வலியன் குருவியைத் தம்புரான், தம்பு ராட்டி என்ற அரசனின் பெயரையும் அரசியின் பெயரை யும் இணைத்து வழங்குவது கவனிக்கத்தக்கது.

இந்தக் கருங்குருவிகளில் நான்கு சாதி உண்டு. ஒரு வகை தம்புரானாகவும் இன்னொரு வகை தம்புராட்டி யாகவும் குறிப்பிட்டது கவனிக்கத் தக்கதாகும். ஆயினும் தம்புரான், தம்புராட்டி என்ற பெயர்கள் இந்தப்

பறவைக்கு வழங்கப்பட்டிருப்பதால், மலையாள மொழியிலும் மக்களிடத்தே இந்தப் பறவையின் ஆற்றலையும் அதிகாரத்தையும் உணர்ந்ததால்தான் இப் பெயரிட்டழைத்தார்கள் என்பது தெளிவாகின்றது.

தம்புராட்டி என்ற மலையாளப் பெயர் தாய்வழி முறையை (Mother right) ஒட்டி வழங்கியதாகும். வலியன் குருவிகளில் தம்புராட்டி என்றழைக்கப்படும் குருவி வகை தம்புரான் என்றழைக்கப்படும் குருவி வகையை விட மிக்க வலிமையுடையது என்ற மலையாள நாட்டு மக்கள் நம்பிக்கையும் நன்கு கவனிக்கத் தக்கதாகும்.

## கரிக்குருவியின் பெருமை

மலையாளத்தில் தம்புராட்டி தம்புரான் என்று வழங்கும் பெயர்களுடன் திருவிளையாடற் புராணத்தில் வழங்கும் கோக்கயம் என்ற அரசுப் பெயரையும், குக்கிகள் என்ற பழங்குடிகளில் அரசன், வலியன் குருவியின் இறகை தலையில் தரித்ததையும் இணைத்து ஆராய்ந்தால் அடிப்படை உண்மை விளங்குகின்றது. மொழியால், இடைவெளியால் மிக வேறுபட்ட இனத்தினரும், இடத்தினரும், இந்தப் பறவையின் பழக்க வழக்கத்தை நன்கு உணர்ந்து. இப் பறவையின் அஞ்சா நெஞ்சமுடைய வீரதீரத்தை உணர்ந்து, தங்களுக்கும் இப் பறவையின் அரசுத் தன்மையை உணர்ந்து, தங்களுக்கும் இப் பறவையின் அரசுத் தன்மையை ஏற்றனர் என்பது தெளிவாகின்றது.

●

# 5

# கருந்தகைய குருகு

## கோட்டியூர் நல்லந்தையார்

நற்றிணையில் கருங்கால் குருகு என்றொரு நீர்ப் பறவை குறிக்கப்பட்டுள்ளது.

''கொடுங்கழி மருங்கின் இரைவேட் டெழுந்த
கருங்கால் குருகின் கோளுய்ந்து போகிய
முடங்குபுற இறவின் மோவாய் ஏற்றை
எறிதிரை தொகுத்த எக்கர் நெடுங்கோட்டுத்
துறுகடல் தலைய தோடுபொதி தாழை
வண்டுபடு வான்போது வெரூஉந்
துறைகெழு கொண்கன் துறந்தனன் எனவே''

—நற்றிணை 211

வளைந்த கழியிடத்தில் கரிய காலையுடைய குருகின் குத்துக்குத் தப்பிப் பிழைத்தோடிய இறவு, தாழையின்

வெளிய பூவை நோக்கி 'இதுவுமொரு குருகுபோலும் என்று அஞ்சும்' என்று கோட்டியூர் நல்லந்தையார் என்ற புலவர் பாடியுள்ளார்.

இப்பாட்டில் குருகு என்பதற்கு உரையெழுதிய பின்னத்தூர் நாராயணசாமி அய்யர், 'குருகு நாரையின் பகுதியாகிய 'நெடலை, வக்கா முதலியன. இவையே தாழம்பூ, மோத்தை; போலிருப்பன' என்று எழுதினார். நெடலை, வக்கா என்ற பெயர்கள் இன்றும் வழக்கி லுள்ளன. மோத்தை என்ற பெயர் வழக்கு காண்பதற் கில்லை.

கல்லாடத்தில் கூகையை 'மொத்தை' என்று குறித் திருப்பதைக் காணலாம்.

''பெருப்பகலிடயே பொதும்பரிற் பிரிந்த
வளைகட் கூருகிர்க் கூக்குரன் மொத்தையைக்
கருங்கட் கொடியினங் கண்ணறச் சூழ்ந்து
புகையுடல் புடைத்த விடவினை போல''

—கல்லாடம் 71 : 17 - 19

பொதும்பை விட்டு வந்த வளை கண்ணும், கூர் உகிரும் கூக்குரலும் உள்ள மொத்தையைக் கருங்கண்ணையுடைய காக்கையினம் கண்ணறச் சூழ்ந்து, அதனுடைய புகை நிறத்தினையுடைய உடலைக் குத்தியதாம் செயலைக் கல்லாடம் உரைத்துள்ளது. இங்கு மொத்தை யென்றது கூகையையே.

மொத்தை என்ற பெயர் உடல் பருத்துக் காணப்படு வதால் வந்ததென்று தெரிகிறது. உடல் பருத்த வெட்டுக் கிளியை 'மொத்தை என்ற அடை கொடுத்துள்ளதை நானும் கேட்டிருக்கிறேன். மொத்தையும் மோத்தையும்

ஒரே பொருள் தரும் சொற்களா என்பது மேலும் ஆராய் தற்குரியது, சங்க நூல்களினது மரபை ஒட்டித் தாழை யினது பூவைக் குருகிற்கு ஒப்பிட்டுப் பிற்கால நூல்கள் பேசியுள்ளன.

## குருகு

குருகு என்ற பெயர், சங்க நூல்களில் கொய்யடி நாரை வெள்ளைக் கொக்கு முதலிய பறவைகளுக்கு வழங்கி வந்துள்ளது. வெள்ளைக் கொக்கு சங்க நூல்களில் வெள்ளாங்குருகு, வெண்குருகு என்றழைக்கப்பட்டுள்ளது.

இப் பறவைகளுக்கு இனமான ஒருவகை நாரைகளைப் பறவை நூலார் Bitterns என்றழைப்பர். இந்த வகை நாரைகளை எளிதில் காணமுடியும்.

இந்த நாரைகள் கால்வாய்களிலும் கழிகளிலும் உள்ள தாழைப் புதரில் பெரும்பாலும் இயற்கையாகக் காணப் படும். பிற்கால நூல்களில் சில வகைக் குருகுகள் தாழைப்புதரில் வாழ்வதாகக் காணலாம். 'தாழை வெண்பூக் குருகென மலரும்' என்று குறுந்தொகை (226) குறிப்பிட்டுள்ளது.

''முருகுவாய் முட்டாழை நீண்முகை
பார்ப்பென்றே
குருகுவாய்ப் பெய்திரை கொள்ளா - துருகிமிக
இன்னாவெயில்சிற கான்மறைக்குஞ் சேர்ப்ப நீ
மன்னா வரவு மற''
—திணைமாலை நூற்றைம்பது 36

''கருங்கழி கொடுக்கும் வெள்ளிற வருந்தக்
கைபார்த்திருக்கு மடப் பெடைக் குருகே
பெடைக்குரு கணங்கின் விடுத்தவெண்
சினையோடு
காவலடை கிடக்கும் கைதையம் பொழிலே''
— கல்லாடம் 23 : 6 - 9

"சேவன்மண் டலித்துச் சினையடை கிடக்குங்
கைதைவெண் குருகெழு மொய்திரை யுகளு
முளைகடற் சேர்ப்ப னளிவிடந் தணிப்ப
— கல்லாடம் 22 : 12 - 18

"மீனுண வுள்ளி யிருந்தவெண் குருகெனச்
சோறுநறை சான்ற கைதைய மலரும்"
— கல்லாடம் 21 : 17 - 18

"பிணர்மடத் தாழை விரிமலர் குருகென
நெடுங்கழி குறுங்கய னெய்தலுண் மறைந்தும்"
— கல்லாடம் 72 : 17 - 18

"வெள்ளிற வுண்ண விழைந்துபுகு குருகினங்
கருங்கழி நெய்தலைக் காவல்செய் கண்ணென
அரவெயிற் றணி முட் கைதையு ளடங்கியும்"
— கல்லாடம் 72 : 26 - 28

## அப்பரும் சம்பந்தரும்

"நெய்தற் குருகு தன் பிள்ளையென்றெண்ணி நெருங்கிச் சென்று கைதை மடல் புல்கு கழிப்பாலை" (106-1) என்று அப்பர் பாடுகின்றார்.

வெண்குருகு தன்பெடையென்று கருதித் தாழை வெண்மடலைப் புல்குவதாகச் சம்பந்தர் பாடியுள்ளார்.

தாழையின் நீண்ட முகையைத் தன்னுடைய குஞ் சென்று குருகு கருதுவதாகத் திணைமாலை அறிவிக்கிறது.

இந்த உவமைகளைப் புலவர் பலரும் பயன்படுத்து வதற்குக் காரணம் ஓரினக் குருகுகள் தாழைமரச் சூழலில் பெரும்பாலும் காணப்பட்டதாலேயாகும். பறவை நூலறிஞர்களும் ஓரினத்தைச் சேர்ந்த சிலவகைக் குருகுகள் (Yellow bittern, Black bittern) chestnut bittenn) தாழைப்புதரில் கூடு கட்டுவதையும் பதுங்கியிருப்பதையும்

கூறியுள்ளார்கள். இக்குருகுகள் Bittern இனத்தைச் சேர்ந்தவையாகும். தாழையின் சூழ்நிலையிலேயே அடிக்கடி இக்குருகுகள் காணப்பட்டதால், தாழை மடல் போலவும் தாழையின் பூமடல் பொதிந்த பூப்போலவும் இருந்தனவாக உவமிக்கப்பட்டன.

கல்லாடத்தில் சோறு போல மகரந்தம் உள்ள தாழம்பூ (ஆண் பூ) வெண்குருகு போல மலர்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது. மற்றும் குருகுகள் கைதையுள் அடங்கும் என்றும் கூறப்பட்டுள்ளது, கருங்கழி ஓரம் கைதையம் பொழிலில் பெடைக்குருகு வெள்ளை முட்டையிட்டுக் காவல் காக்கும் என்றும் கல்லாடம் குறிப்பிட்டதைக் ஊன்றி கவனிக்க வேண்டும்.

## கம்பர் விளக்கம்

இந்தக் கல்லாடப் பாடல்களில் காணும் செய்திகளை ஒத்துக் கம்பர் ஓர் அரிய இயற்கைச் செய்தியை அறிவித்துள்ளார்.

> ''கருந்தகைய தண்சினைய கைதைமடல் காதல்
> தருந்தகைய போதுகிளை யிற்புடை தயங்கப்
> பெருந்தகைய பொற்சிறை யொடுக்கி யுடல்
> பேராது
> இருந்தகுரு கின்பெடை பிரிந்தவர்க ளென்ன''

கார்காலப் படலத்தில் கம்பர் இந்தப் பாடலைப்பாடியுள்ளார். நீர் நிரம்பிய காலத்தில் கைதை மடலில் சிறையொடுக்கி உடல் பேராது குருகின்பெடை இருந்ததாகக் கம்பர் குறித்துள்ள செய்தி மிக அரிய இயற்கைச் செய்தியாகும். கருங்குருகு கைதை மடலில் இருப்பதைக் கம்பர் குறித்துள்ளார் இந்த குருகு கரிய நிறமாயிருப்பதைக் 'கருந்தகைய' என்று தெளிவாக இதன் நிறத்தை குறிப்பிட்டுள்ளார். குளிர்ச்சியான முட்டைகளை விட்டிருந்ததைத் 'தண்சினைய' என்றுரைத்தார்.

கல்லாடத்தில் 'விடுத்த வெண் சினையோடு' என்று குறித்திருப்பதைக் கவனிக்கவேண்டும். 'காதல் தருந்தகைய போது கிளையிற் புடைதயங்க' என்று வரும் இப்பாட்டின் மூன்றாவது வரிக்கு, ஆசையூட்டு மலரின் புறவிதழ்களின் பக்கங்களோடு சூழ்ந்து விளங்க என்று பொருள் தரல் வேண்டும் ஆனால் 'கிளையிற் புடை தயங்க' என்பதற்கு நாரைக்குச் சுற்றம் விளங்க என்று பொருள் கொண்டு ஆசிரியர் பலர் உரை எழுதியிருப்பதைக் காணலாம்.

'கிளையிதழ் பறியா' என்று குறிஞ்சிப் பாட்டில் வருகின்ற இடத்தில் புறவிதழ் பறித்து என்று நச்சினார்க்கினியர் நுட்பமாகப்பொருள் எழுதியிருப்பதை காணலாம் தாழை மலரின் 'புறவிதழ்' நன்றாக முழுவதும் திறக்காது சிறிது திறந்து பக்கங்களில் சூழ்ந்து இருந்த நிலையையே அழகிய சிறகுகளையொடுக்கி உடல் பேராது இருந்த குருகின் பெடைபோல இருந்ததாகக் கம்பர் பாடினார். இந்த இடத்தில்தான் கம்பர் காட்டும் உவமைநயம் சிறப்பாக உள்ளது.

ஒருவகை நாரை எப்போதும் நீர் நிறைந்த கழிகள், கால்வாய்கள் ஓரங்களில் உள்ள செடிப்புதர்களில் வாழும். முக்கியமாகத் தாழைப்புதர்களில் வாழும் பகலில் பதுங்கியிருந்து மாலை வேளையில் உணவு தேட வெளிவரும் இந்த நாரைகளை 'பிட்டெர்ன்' (Bittern) என்று பறவை நூலில் அழைப்பர்.

## கம்பர் கூறிய நாரை எது?

இவற்றில் மூன்று வகை உண்டு. அவற்றை மஞ்சள் நாரை, தவிட்டு நாரை, கருப்பு நாரை என்று பாமர மக்கள் அழைப்பர் இந்த மூன்று வகைகளில் கருப்பு நாரையையே கம்பர்குறித்துள்ளார். இந்தக்கருப்புநாரை பெரும்பாலும் கைதையம் பொழிலிலும் தாழைப் புதரிலும் காணப்படுவதால் மலையாளத்தில் 'கைதைக்கொக்கு' என்றழைத்தனர் அசாமி மொழியிலும் தாழைக்கொக்கு

என்ற பொருளில் இதன் பெயர் வழங்குகின்றது. இந்த நாரை கருப்பு நிறமானது. கம்பரும் 'கருந்தகைய' என்று தெளிவாக இதன் நிறத்தைக் குறித்துள்ளார்; கைதை மடலில் இருந்ததையும் கைதையில் முட்டையிட்டதையும் கூறியுள்ளார்.

## பிட்டர்ன் - நீர்ப் பறவை

இந்தக் கருத்த நாரைக்கும் இதன் இனமான 'பிட்டர்ன்' (Bittern) நீர்ப் பறவைகளுக்கும் ஓர் அரிய குணம் உண்டு என்று பறவை நூலார் கூறியுள்ளனர். ஆபத்துக் காலத்தில் அவை பறந்து ஓடுவதில்லை. அப்படியே ஆடாது அசையாது தங்களைச் சுற்றியுள்ள செடிகளின் இலைபோல, கிளைபோல, மடல்போல மாறி விடும். மடல்போல உடலை நீட்டி வைத்து, அலகை மேல் நோக்கி நீட்டிக்கொண்டு சூழ்நிலையில் உள்ள செடி, மரம், செத்தைபோல மாறிவிடும். இந்தக் காரணத்தால் இந்தப் பறவையைச் சூழ்நிலையினின்று பிரித்துக் கண்டு பிடிப்பது எளிதன்று.

இந்த நாரைகள் சூழ்நிலையைப் போலிருப்பதுடன் தம்முடைய உடலின் எந்தப் பக்கத்தைத் திருப்பிக் காட்டிச் சூழலில் உள்ள செடிபோல இருந்து மறைத்துக் கொள்ள லாம் என்பதை உணர்ந்து அந்தப் பக்கத்தையே காட்டும் திறமும் உடையன. மற்றும் ஆடாது அசையாது இருந்து காற்றில் கிளை ஆடும்போது தானும் கிளை போலவே அசைந்து கொடுக்கும் என்று டாக்டர் சலீம் அலி கூர்ந்து கவனித்து எழுதியுள்ளார்.

இச் செய்தியை அக் காலத்தில் தெரிந்தே 'சிறை யொடுக்கி உடல் பேராது இருந்த குருகின் பெடை' என்று கம்பர் கூறியிருப்பதைக் காணும்போது போற்றாமல் இருக்க முடியாது. குறுந்தொகையி(228)லேயே தாழை

படல்போலக் குருகின் சிறகு இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. சங்க நூல்களிலும் தேவாரத்திலும் கல்லாடத்திலும் தாழையில் குருகு தங்குவதைக் கூறியுள்ளனர். இந்தக் குருகுகள் மற்ற நாரையினங்கள் போலக் கூட்டமாக இரா.

## 'மழைக் கொச்சா'

இவற்றிலும் கருப்பு நாரை ஆணும் பெண்ணுமாகவே இருக்கும் என்பர். ஆணும் பெண்ணுமாக இருப்பதைக் கம்பர் கூறியுள்ளதையும் காணலாம். இந்தக் கருப்பு நாரையை மழைக்காலத்தில்தான் பார்க்கமுடியும் என்றும் மழைக் காலத்தில்தான் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் என்றும் பறவை நூலார் உரைத்துள்ளனர். இதனால் இந்த நாரையை 'மழைக் கொச்சா' என்றும் மலையாளத்தில் அழைப்பர்.

கம்பரும் கார்காலப் படத்தில்தான் இந்த நாரையைப் பற்றிக் கூறியுள்ளார். கருப்பு நாரை கடற்கரைக் கழியில் காணப்படாது உள்நாட்டில் காணப்படும் என்றுரைப்பர். கம்பன் கருப்பு நாரையைப் பற்றிச் சொன்ன செய்திகளும் அதன் இயற்கைச் செய்திகளுடன் முற்றிலும் ஒத்தே காணப்படுகின்றன. தாழைப் புதரில் வாழ்வதால் இந்தக் கருப்பு நாரையைக் கைதைக் கொக்கு என்று மலையாளத்தில் மிகவும் பொருத்தமாக அழைப்பர். கம்பரும் தெளிவாகக் 'கருந்தகைய கைதை மடல்' குருகாகக் குறித்துள்ளதைக் கவனித்து நினைத்து இன்புறலாம்.

கம்பர் காட்டிய கருந்தகைய குருகு, பறவை நூலில் Black Britten என்றழைக்கப்படும்.

6

# கடுந்தேறு என்னும் குளவி

## கடுங்குளவி - கடுந்தேறு

சங்க நூல்களில் ஒருவகைக் கடுங்குளவிக்குக் கடுந்தேறு (Polistes Rebraeus) என்ற பெயர் வழங்கியுள்ளது. இக் குளவி கூடுகட்டி, கூட்டு இன வாழ்க்கையைப் பின் பற்றுவதாகும்.

''செறுவினை மகளிர் மலிந்த வெக்கைப்
பரூஉப்பக டுதிர்த்த மென்செந் நெல்லின்
அம்பண வளவை யுறைகுவித் தாங்குக்
கடுந்தே றுறுகிளை மொசிந்த துஞ்சும்
செழுங்கூடு கிளைத்த விளைந்துணை மகாரின்
அலந்தனர் பெருமநின் னுடற்றி யோரே''

— பதிற்றுப்பத்து 8 : 71. 3 - 8

"செந்நெல்லை மரக்காலால் அளத்தற்கு உறையாகக் குவித்தாற்போல மொசிருந்த குளவியினம் இருந்த கூட்டைக் கலைத்த இளஞ்சிறாற்போல உன்னோடு மாறுபட்ட பகைவர் துன்பமுற்றனர்" என்று பதிற்றுப்பத்தில் எட்டாம்பத்து குறித்துள்ளது.

'குளவிக் கூட்டைக் கலைத்தாற் போல' என்ற பழமொழி தமிழில் வழங்குகின்றது. இதே பழமொழி மலையாளத்தில் 'கடந்நல் கூடின்ன கல்லெடுத் தெறிக' என்று வழங்குகின்றது. ஆங்கிலத்திலும் 'To arouse a nest of hornets' என்று இதே முறையான பழமொழி பகைவரைத் தூண்டி விடுவதைக் குறித்து வருகின்றது. 'கடுந்தேறுறு கிளை' என்ற பெயருக்குக் கடிதாகத் தெறுதலையுடைய மிக்க குளவியினம் என்ற பழையவுரை கூறியுள்ளது.

குளவிக்குக் கடுந்தேறு என்ற பெயர் சங்க காலத்தில் வழங்கியது தெரிகின்றது. ஆனால் இப் பெயர் பிற்கால இலக்கியங்களில் வழங்கவில்லை.

## பெரும்பாணாற்றுப் படையில் 'சாதி'

சிறந்த உரையாசிரியரான நச்சினார்க்கினியர் இந்தப் பெயரைப் பத்துப்பாட்டில் ஓரிடத்தில் மறந்து உரை எழுதியிருப்பதைக் காணலாம். "கடுப்புடைப் பறவைச் சாதியன்ன பைதற விளைந்த பெருஞ் செந்நெல்லின்" என்று பெரும்பாணாற்றிப் படையும் இந்த உவமையைக் கையாண்டுள்ளது. 'கடுப்புடைப் பறவைச் சாதி' என்ற நீண்ட பெயர் குளவியைப் பற்றிய நீண்ட விளக்கப் பெயராகும். தெறுதல் என்ற சொல் அச்சந்தருதல் என்ற பொருளில் எழுதப்பட்டுள்ளது. சாதி என்ற சொல் தமிழிலக்கியத்தில் முதன் முதலில் பெரும்பாணாற்றுப் படையில் வழங்கப்பட்டுள்ளதையும் கவனிக்க வேண்டும்.

## குளவிக் கூடு

''அருந்தெறன் மரபிற் கடவுள் காப்ப'' என்று வரும் அகநானூற்று வரியில் (372) தண்டிக்கும் கடவுளைப்பற்றி குறிப்பிட்டுள்ளது குளவிக் கூட்டைக்கலைக்கும் சிறுவர், குளவிகளால் ஊறுபட்டுத் தண்டிக்கப் படுவராதலால் 'கடுந்தேறு ஊறுகிளை' என்றழைத்தனர்.

திண்டிவனத்தில் கல்லறைத் தோட்டத்தில் இருந்த குளவிக் கூட்டைக் கலைத்த நானும் என் நண்பர்களும் துரத்திய குளவிகளிடமிருந்து ஓடித் தப்பித்ததை இன்றும் நினைவு கொள்கின்றேன்.

இந்தக் குளவிகள் பெரும்பாலும் ஆட்கள் போக்கு வரவு இல்லாத இடங்களில் தான் கூடு கட்டும். ஆனால், யாராவது ஓர் ஆள் கூட்டை நெருங்கினாலோ, கலைத்தாலோ குளவிகள் எல்லாம் கலைந்து வெளிப்பட்டு ஆளை கொட்டிவிடும். அவ்வாறு குளவிகள் ஒரு பெண்ணைத் துரத்தி, தலையில் கூட்டமாகச் சேர்ந்து கொட்டியதால் அந்தப் பெண் உயிரை இழந்ததை நான் கண் எதிரே கண்டேன்; ஆதலின் கூட்டுக் குளவிகள் மிகவும் கொடியனவாகும். மனிதருடைய உயிருக்கே ஊறு விளைவிப்பனவாகும். குளவி கொட்டினால் கடுப்பு மிகுந்து இருக்குமாதலால் 'கடுப்புடைய பறவைச் சாதி' என்று அழைக்கப் பட்டுள்ளது

## நண்டுத் தெறுக்கால்

கடுந்தேறு என்ற குளவிப் பெயர், மிகுந்த கடுப்பைத்தருவது; அதாவது மிக்க வலியைத் தருவது என்று பொருள் படும். அவ்வாறு கடுப்பைத் தரும் நஞ்சுடைய ஒருவகைப் பெரிய தேளை 'நண்டுத் தெறுக்கால்' என்று தென்னார்க்காடு மாவட்டத்தில் அழைப்பதைக் காணலாம்.

கொட்டித் தெறும் காலை உடைய பெரிய தேள் என்ற பொருளில் தெறுக்கால் என்றழைத்தனர். வல்லூறு என்ற பெயர் வலிய ஊறு என்று பொருள் தருவது போல 'கடுந்தேறு ஊறு', கடுந்தேறூறு என்று பதிற்றுப்பத்தில் வழங்கிற்று.

## நச்சினார்க்கினியர் உரை

கடுந்தேறு என்ற பெயரை மறந்து நச்சினார்க்கினியர் பொருநராற்றுப் படையில் உரை கூறியுள்ளார்.

> *''குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை*
> *கடுந்தெற்று மூடையி னிடங்கெடக் கிடக்கும்*
> *சாலி நெல்லின் சிறைகொள் வேலி''*
>
> 243—245

நெல்லை அறுத்து நெல்மணியைக் குவித்து வைத்திருந்தது 'கடுந்தெற்று மூடை' போலிருந்ததாகப் பொருநராற்றுப் படையில் கூறப்பட்டுள்ளது. இங்கு கடுந்தெற்று மூடை என்பதற்கு நெருங்க தெற்றின குதிர் என்று நச்சினார்க் கினியர் பொருள் கூறியுள்ளார்.

மூடு என்ற உரிச் சொல்லுக்கு 'நெருங்க' என்ற பொருள் வேறெந்த நூல்களிலும் நிகண்டுகளிலும் காணப்படவில்லை. இங்கே கூறிய பொருள் பொருத்தமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நெல்லின் குவியலுக்குக் கடுந்தேறு என்ற குளவியின் கூட்டத்தை ஒப்பிட்டு பொருநராற்றுப்படை கூறியது பதிற்றுப்பத்தில் கூறப் பட்ட மரபு உவமையைப் பின் பற்றியதாகும்.

> *''கடுந்தெற்று மூடையின் ....................*
> *வாடிய மாலை மலிந்த சென்னியன்''*
>
> —புறம். 285

புறநானூற்றிலும் பொருநராற்றுப் படையிலும் காணப்

பட்ட 'கடுந்தெற்று மூடை' என்ற சொற்றொடர் வருகின்றது. இதற்கு உ. வே. சாமிநாதய்யர் நச்சினார்க்கினியரைப் பின்பற்றி அடிக் குறிப்புரை எழுதினார்.

பொருநராற்றுப்படை வரிக்கு நேரிய உரை, நெல்லின் குப்பை, குளவியின் மூடைபோல் இடத்தை அடைத்து இருந்ததாகக் கூற வேண்டும். பதிற்றுப்பத்தில் நெல் குவியலுக்கு குளவியின் செழுங்கூட்டை நிறத்தினாலும், உருவத்தினாலும் ஒப்பிட்டிருப்பதைக் காணலாம். ஆதலின் கடுந்தெற்று என்பதற்கு நெருங்கிப் பின்னின என்ற பொருளில் உரை எதிழுயது பொருத்தமாகத்தெரியவில்லை.

## ஊர்ப் பெயர்கள்

கடுந்தெற்று என்பதற்குக் கடுந்தெறுதலையுடையது என்று பொருள் கொள்ள வேண்டும். கடுந்தெற்று மூடை என்ற சொற்றொடர் கடுந்தெறுதலையுடைய குளவி மூடை என்று பொருள் தரும். மூடு என்று முடியும் ஊர்ப்பெயர்கள் நாஞ்சில் நாட்டில் உள்ளன. மக்கள் கூட்டமாக வாழும் தன்மையைக் குறித்தே மூடு என்ற பெயர் ஊர்ப்பெயர்களின் இறுதியில் வருகின்றது.

கூட்டில் குவிந்துள்ள குளவிகளின் கூட்டத்தையே கடுந்தெற்று மூடை என்று குறித்ததாகத் தெரிகின்றது. இவ்வாறு நெல்களஞ்சியக் கூட்டில், பத்தாயத்தில் கூட்டுக் குளவிகள் கூடு கட்டுவது உண்மையேயாகும். மொய்த்தல் என்ற சொல் மூடுதல் என்றும் பொருள் தரும். குளவிகள் கூட்டமாகச் சேர்ந்து மூடியிருப்பதைக் கடுந்தெற்று மூடை என்றனர். கடுந்தெறுதலையுடைய குளவி மூடை போல சாலி நெல் குவிந்திருந்தது என்று நேராகப் பொருள் கூறவேண்டிய இடத்தில் நச்சினார்க்கினியர் வேறாக வலிந்து பொருள் எழுதியுள்ளார்.

பதிற்றுப் பத்தில் நெல்லைக் குவித்தற் போன்ற 'கடுந் தேறு உறு கிளை' என்று சொல்லியிருப்பதைப் போன்றே கடுந்தெற்று மூடை போல சாலி நெல் கிடந்த தாகப் பொருநராற்றுப் படை கூறிற்று.

## பிற மொழிகளில்

ஆதலில் சங்க காலத்தில் குளவிக்கு வழங்கிய பெயர் கடுந்தேறு என்பதாகும். இந்தப் பெயர் சில பழந்திராவிட மொழிகளிலும் வழங்குவது கவனிக்கத் தக்கது.

தமிழ்நாட்டில் சில இடங்களில் குளவியைக் கடம்பை என்று அழைப்பினும் இந்த மிகவும் அரிதாகத் தமிழில் காணப்படுகின்றது. மலையாளத்தில் இந்தக் கூட்டுக் குளவியின் பெயர் 'கடந்நல்' என்று வழங்குகின்றது. 'கடந்தை' என்று தமிழில் வழங்குவது போல, கன்னட மொழியில் 'கடந்தூறு', 'கடந்துறுத்தெ'. 'கடஜ', 'கனஜ' என்ற பெயர்கள் வழங்குகின்றன. கன்னடப் பெயரில் பதிற்றுப்பத்தில் வரும் 'கடு என்ற சொல்லும், 'ஊறு' என்ற சொல்லும் ஒத்திருப்பதைக் காணலாம்.

கடுந்தெறு என்று சங்க காலத்தில் வழங்கிய பெயர், தற்காலத் தமிழில் கடந்தை என்று பழக்கத்தில் அரிதாக வழங்குகின்றது. இப்பெயரில் ஊறு என்ற சொல் தமிழில் மறைந்து விட்டது. ஆனால் கன்னடத்தில் 'ஊறு', 'உறுத்தெ' என்று வருவதைக் காணலாம். வல்லூறு, புள்ளூறு என்ற தமிழ்ப் பெயர்களில் ஊறு என்ற சொல் இதே பொருளில் வழங்குவதைக் காணலாம்.

குடகு மொழியில் கூட்டுக் குளவி 'கடந்தி' என்றும் துளு மொழியில் 'கனஜடபுரி' என்றும், கோல் மொழியில் 'காண்டில் பொட்டே' என்றும், கோண்டி மொழியில் 'கண்டேவி', 'கண்டேவி' என்றும், கூறி மொழியில்

'கிராண்டி' என்றும் அழைக்கப்படுகின்றது. கடு என்ற சொல் 'கண்டு' என்று கண்டாம்பூனை என்ற தமிழ்ப் பெயரில் மாறியுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

டாக்டர் எமனோவின் சொற்பிறப்பு அகராதியில் (Dravidian Etymological Dictionary) இந்தப் பழந்திராவிட மொழிப் பெயர்கள் எல்லாம் காணப்பட்டாலும் 'கடுந்தேறு' என்ற சங்க நூற் பெயர் காணப்படவில்லை.

கடு என்ற மூலச் சொல்லை அடிப்படையாகக் கொண்டே தமிழில் கடுந்தெறு என்ற சங்ககாலப் பெயரும் கடம்பை என்ற தமிழ்நாட்டுப் பெயரும் வழங்கியுள்ளன. 'கடந்நல்' என்ற மலையாளப் பெயரும், மற்ற திராவிட மொழிப் பெயர்களும் வந்துள்ளன. கடு என்பது கண்டு என்றும் 'கண' என்றும் மாறி, திராவிட மொழிப் பெயர் ளில் வந்துள்ளது.

இந்தக் குளவியின் பெயர் வடமொழியிலும் மராத்தி மொழியிலும் சென்றிருப்பதையும் கவனிக்க வேண்டும். வடமொழியில் 'கனபா' 'கண்டாளி', 'கண்டோளி' என்றும், பிராகிருதத்தில் 'கண்டெல்லி' என்றும், மராத்தி மொழியில் 'கடில்' (Khedil), 'கடில்மாசி' என்றும் வருகின்றது.

தெலுங்கு மொழியில் 'கடுதூறு', 'கனூதுரு', 'கடஜு', 'கனஜு' என்ற பெயர்கள் வழங்குகின்றன.

## தனிப்பாடலிலும் கருங்குளவி

குளவிகளில் ஓரினம் தேனினம் போல கூட்டமாக வாழ்கின்றன. சங்க இலக்கியத்தில் செந்நெல் குவியலைப் போன்ற கருந்தேறு என்று உவமித்திருப்பதால் அவ்வாறு கூடுகட்டி வாழும் இனமான குளவி (Polistes Rebraeus) என்பதே யாகும்.

இந்தக் குளவிகள் செந்நெல் போன்ற நிறத்திலும் உருவத்திலும் தோற்றமளிக்கும். இந்தக் குளவிகள் முக்கால் மீட்டர் அளவுள்ள கூட்டைக் கட்டுகின்றன. 'சுற்றுக் கருங்குளவிச் சூரைத்தூறு' என்று பிற்காலத்திய தனிப்பாடலில் கூறப்பட்டுள்ள கருங்குளவியும் இதுவே யாகும்.

# 7

# வேலன் - ஒரு விலங்கு

## பயன்தரும் ஆய்வு

நாட்டுப் பாடல்களைத் தொகுத்து வெளியிடுவது போல் நாட்டு மக்களிடையே வழங்கும் பறவைகள், விலங்குகள் முதலிய உயிர்கள் பற்றிய கதைகள், நம்பிக்கைகள், கற்பனைகளைச் சேர்த்து ஆராய்வது நல்ல பயனைத் தரும். தமிழ்நாட்டின் மிகப் பழைய வரலாற்றை அறியவும் அவை துணை செய்யும்.

இத் துறையில் மேல்நாட்டு மொழிகளில் நல்ல ஆராய்ச்சி நடந்துள்ளது. இத்தகையதொரு ஆராய்ச்சி, பழங்காலத் தமிழின மக்கள், பிற இன மக்களொடு கொண்ட தொடர்பு, தமிழினத்தின் தோற்றம் முதலிய சிக்கலான புதிர்களை விடுவிக்க ஓரளவு உதவும்.

கடலில் உலவும் ஒரு விலங்கு பற்றிய கதை, தமிழ் நாட்டு மீனவரிடையே வழங்குகிறது. அதே போன்ற

தொரு கதை பசிபிக்கடலில் வாழும் பழங் காலக் குடிகளிடை வழங்குவதைக் காணுங்கால் மிகுந்த வியப்புண்டாகிறது.

## ஆண் பெயர்

வேலன் என்ற சொற்கு நேர் பொருள், வேல் தாங்கிய ஆள் என்பதே. வேலன் என்றாலே பலருக்கு, வேல் பிடித்த 'பெரும் பெயர் முருக'னின் திருவுருவம்தான் கண்முன் தோன்றும்.

## வெறியாடும் வேலன்

வேலனை அழைத்துத் தெய்வமேறி ஆடும் ஆளை 'வேலன்' என்று சங்கநூல்கள் பேசும். இன்றும் இந்த வெறியாடும் வேலன் மலையாளத்தில் வேலன் என்ற அதே பெயரில் பேயோட்டியாக இருந்து வருகின்றான். வேலன் தெய்வங்களையும் இறந்த தென்புலத்தாரையும் அகவி அழைப்பான், இந்தியாவில் உள்ள பழங்குடி மக்களிடையே இத்தகைய 'தெய்வமேறிகள்' (Shamans) இன்றும் உள்ளனர்.

தமிழ்ப் பாக்களில் முதற் பாவான அகவற்பாட்டும் தெய்வங்களையும் இறந்தவர்களையும் அகவிப்பாடும் வேலனிடமே பிறந்த பாட்டு என்றும் கருதலாம். இதற்குச் சான்றாக,

**'அகவன் மகளே யகவன் மகளே**
**மனவுக் கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்**
**அகவன் மளே பாடுக பாட்டே**
**இன்னும் பாடுக பாட்டே, அவர்**
**நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே'**

என்ற குறுந்தொகைப் பாடடும் உள்ளது. தெய்வங்களையும் இறந்தோரையும் அகவி அழைக்க முதுபெண்டும் இருந்தனள். பின்னர் இவளே 'கட்டு விச்சி' ஆயினள் போலும்.

வேலனின் ஊர்தியான மயில் கூவினால் அதை 'அகவு தல்' என்று உரைக்கின்றனர். 'கோழி கேவுது' என்று பேச்சு வழக்கில் சொல்வர். அகவுவது என்பதே கேவுது என மாறியது.

தமிழ் வரலாற்றில் வேலனே இயற்கையாகத் தோன்றிய முதற் கவி என்றுகூடக் கருதுவர்.

## நீர் வாழ் விலங்கு

வேலன் என்ற சொல், கடலில் வாழும் ஒரு விலங்கைக் குறித்துப் பரதவரிடையே வழங்குவது, பலருக்கும் தெரியாது. சிலவிடங்களில் வேடன் என்றும் சொல்வர்.

இந்த விலங்கைக் குறித்துப் பரதவரிடை ஒரு நம்பிக்கை நிலவுகிறது. இதைத் தெய்வத்தன்மை பொருந்திய விலங்காகக் கருதுகின்றனர்.

இதை மீன் என்று அவர்கள் அழைத்தாலும், இது மீனல்ல கடலில் வாழும் விலங்கு. இவ் விலங்கு, வலையில் வீழ்ந்து விட்டால் வலையைக் கிழித்து உடனே வெளியில் விட்டு விடுவர். வலையில் வீழ்ந்து கொல்லப்பட்டால் பெருங்கேடு விளையுமென்று மீனவர் நம்புகின்றனர். ஆனால் அகப்பட்டவுடன் விட்டுவிட்டால் நன்மை தரும் என்று நினைக்கின்றனர்.

## முன்னோரர் என்பர்

இறந்த முன்னோர்களே வேலன் என்ற மறு உருவில் கடலில் உலவுவதாக மீனவர் நம்புகின்றனர் வேலனுக்கு ஊறு செய்வது முன்னோர்க்குச் செய்வதாகுமென்று கருதியே வேலனை வலையிலிருந்து விடுவிக்கின்றனர். ஒரு வேளை இவ் வேலனையே 'மீன் வலைப்பட்ட மாபோல' என்று குறுந்தொகைப் பாடல் உரைக்கின்றதோ!

முன்னோர்களை அகவி அவர்களின் ஆவி ஏறப் பெற்றுத் தெய்வத் தன்மை பெற்றவளின் வேலன் என்ற தால், அது போன்றே முன்னோர்களின் ஆவியுருவான விலங்கையும் வேலன் என்றழைத்தனரோ என்று உய்த் தறியலாம்.

## ஆப்பாய் தீவிலும்

இவ் வேலனைப் பற்றித் தமிழ்நாட்டு மீனவர்க ளிடையே வழங்கும் அதே நம்பிக்கையே நெடுந் தொலை விலிருக்கும் பசிபிக் கடலில் உள்ள சிறு ஆப்பாய் (Hapai) தீவு மக்களிடையேயும் வழங்குகின்றது. இதை இத் தீவில் வாழும் பழங்குடி மக்களின் தலைவன் ஒரு ஆங்கிலக் கப்பல் மாலுமிக்குத் தெரிவித்தான். ஆனால் இந் நம்பிக் கையுடன் ஓர் அழகிய கற்பனைக் கதையும் இவர்க ளிடையே வழங்குகிறது.

'ஆப்பாய்' மக்களுக்கும் அருகிலிருந்த 'தொங்கா தாபு' (Thonga tabu) மக்களுக்கும் நெடுநாளைய பகை. ஒரு தடவை 'தொங்கா தாபு' வீரர்கள் போர்க் கப்பல்கள் கட்டத் தெரிந்த வேற்றினத்தாருடன் சேர்ந்து கொண்டு திடீரென்று கப்பல்களில் கடலைக் கடந்து 'ஆப்பாய்த் தீவைத்' தாக்கினர்; ஆப்பாய் மக்களில் பெரும்பான்மை யோரைக் கொன்றனர். சிலர் குகைகளில் ஒளிந்து கொண் டனர். மறைந்திருந்த மகளிர் ஏழாம் நாள் பசி தாளாமல் உணவு தேட வெளியே வந்தனர்.

பெண்களைக் கண்ட எதிரிகள் கூச்சலிட்டு அவர் களைப் பிடிக்க வந்தனர். ஆனால் மானமே பெரிதென் றெண்ணிய ஆப்பாய்த் தீவுப் பெண்கள் கடலில் நீட்டி யிருந்த கல்லின் மீதேறிக் கடலுள் வீழ்ந்து மாய்ந்தனர். எதிரிகள் ஓடிவந்து கல்லின் மீதேறிக் கடலுள் கவனித் தனர். இறந்த பெண்களின் உடல்களைக் காணவில்லை.

ஆனால் கூட்டம் கூட்டமாக என்றுமே, யாருமே பார்த்தறியாத புதிய அழகிய விலங்குகள் விளையாடிக்

கொண்டிருப்பதைக் கண்டனர்! இக் காட்சியைக் கண்ட எதிரிகள் அஞ்சி நடுங்கி ஓடினார்கள். கடலில் மாய்ந்த பெண்களெல்லாம் வேலன் என்றும் கடல் தெய்வத்தால் அவ்வாறு மாற்றப்பட்டன ரென்றும் ஆப்பாய் மக்கள் நம்புகின்றனர். ஆதலால் வேலனைத் தின்பதோ கொல்லு வதோ பெருங் கேடு தரும் என்று கருதுகின்றனர்.

இப் பழங் கதையில் வரும் கடற்கன்னிகள் போலவே மேல்நாட்டிலும் 'கடற்பசு' என்ற விலங்கைக் கடல் கன்னி களெனக் (Mermaids) கருதுகின்றனர்.

வேலன்* பற்றிய பசிபிக் கடலில் வழங்கிய பழைய நம்பிக்கை இந்தியக் கடலில் தமிழ்நாட்டுப்பரதவரிடையே யும் வழங்குவது மிகவும் வியப்பைத் தரும் செய்தியாகும். ஆங்கிலத்தில் வேலன் 'டால்பின்' (Dolphin) என்றழைக் கப்படும்.

## கிரேக்கப் புராணத்திலும்

மத்திய தரைக் கடலருகில் வாழ்ந்த கிரேக்கர் களிடையேயும் வேலன் தெய்வத் தன்மை பொருந்திய விலங்கென்ற நம்பிக்கை இருந்தது. கிறித்துவுக்கு முன் கிரேக்கர்களிடையே வேலனைப் பற்றிச் (Dolphin) சில செய்திகள் வழங்கி வந்தன. கடற் செலவு செய்யும் கலங் களுக்கு வழி காட்டி யெனவும் பாதுகாப்பெனவும் வேலனை நம்பினர். கிரீட்டிலிருந்து (Crete) டெல் போசுக்குப் (Delphos) போன கப்பலுக்குப் வேலன் உருத் தாங்கிய அப்போல்லோ (Apollo) கடவுள் வழிகாட்டிச் சென்றதாகக் கிரேக்கப் புராணம் உரைக்கும்.

கிரீட் நாட்டில் வழங்கிய கதை கிரேக்கப் புராணத்தில் புகுந்ததாகச் சொல்வர். கடல் வணிகருக்கும், வெளிநாடு களில் குடியேறுபவர்களுக்கும் உறுதுணை செய்யும் கடவுளாக வேலன் மதிக்கப்பட்டது. வேலன் உருத் தாங்கிய அப்போல்லோ கடவுள், கையில் வேல்தாங்கிய உருவுடையவ ரென்பர்.

---

*A sack of shaking—Frank Ballen-Collins & Co

மனித இனத்தின் மூதாதையெனக் கருதப்படும் மனு வின் கப்பலை இழுத்த கொம்பன் சுறாவோடு (வேளா மீன்) இவ் வேலன் பற்றிய கதையும் தொடர்புடையதென ஈராஸ் அடிகள் கருதுவர்.

## சுறவின் கொம்பு

இச் சுறவின் கொம்பைத் தெய்வத்தன்மை வாய்ந்த தாகக் கருதினர். தமிழிலக்கியத்திலும் 'சுறவுக் கோடு' தொழப்பட்டது தெரிகிறது.

கோடுடைய சுறவைத் தற்காலத்தில் மீனவர் 'வேளா' என்றழைக்கின்றனர். 'வேலன்' என்ற சொல்லும் 'வேளா' என்ற சொல்லும் நெருங்கிய தொடர்புடையன. இரண்டும் தெய்வத் தன்மை பொருந்தியதாகக் கருதப்பட்ட கடலில் வாழும் உயிர்கள்தாம். வேல்தாங்கியவன் வேலன் எனப் பட்டது போல வேல் போன்ற கோடு தாங்கிய மீனையும் 'வேளா' என வழங்கியிருக்கலாம். சுறவுக்கோட்டை வாளோடு உவமித்துச் சங்கநூல் பேசும்.

## கற்பனையன்று, உண்மையே!

வேட்டை நாயை முயல் விரட்டியது. யானையைக் கோழி வென்றது என்ற கதைகளைப் படிக்கும்போது இவற்றை இலக்கியக் கற்பனை என்று பலரும்எண்ணுவர். ஆனால் இத்தகைய கதைகளை வரலாறு, அறிவியல், இயற்கை நூலறிவு ஆகியவை துணைகொண்டு ஆராயுங் கால், இவை உண்மைச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டெழுந்தவை யெனத் தெரிகின்றது.

காட்டு விலங்குகளின் வாழ்க்கையைக் கூர்ந்து ஆராய்ந்து பார்த்த இயற்கை நூல் வல்லுநர் (Natuıalist) இது போன்ற இயற்கைக்கு மீறிய செய்திகளைக் கண்டு எழுதியுள்ளனர். Western Sportsman என்ற இதழின் ஆசிரியர் ஒரு வேட்டையாளர். நரியை விரட்டிய கோழியைப் பற்றி அவர் கண்டதை எழுதியுள்ளார்.

## நீர்க்கோழியும் நரியும்

சதுப்பு நிலத்தில் கூடுகட்டி வாழ்ந்தன இரு நீர்க் கோழிகள். குஞ்சுகளைக் காத்துக் கொண்டிருந்த பெட்டையைப் பிடித்து இழுத்து சென்றது ஒரு நரி. பெட்டையின் அலறலைக் கேட்ட சேவற்கோழி இயற்கையால் நரியின் தலையை மோதிற்று. கால் நகங்களால் கீறிற்று வீறிட்டது. கோழியிடமிருந்து எதிர்பாராத இந்தத் தாக்குதலால் நரி தடுமாறியது. அதற்குள் பெட்டைக் கோழி தப்பிவிட்டது. நாயோ பயந்தோடி விட்டது.

உண்மையில் நரி தனது உடல் வன்மையால் இரண்டு கோழிகளையும் கொன்றிருக்கலாம். ஆனால் எதிர்பாராத தாக்குதல், உள்ள உரத்தை அழித்து விட்டது. இது போன்று சிறிய,வலிமையற்ற உயிர்கள், பெரிய உயிரிகளை இடுக்கண் மிகுந்த சமயங்களில் எதிர்த்துத் தாக்கி வெற்றியடையும் அருமையான செய்திகளை விலங்கு நூலறிஞர் வெளியிட்டிருக்கின்றனர்.

## முயல் நாயை விரட்டியது

முயல் மிகவும் பயந்த விலங்கு ஆலன் டெவோ (Alan Devoe) என்ற இயற்கை நூலறிஞர் (Naturalist) முயல் நாயை விரட்டியதைக் கண்ணால் கண்டார். முயல்,குட்டி போட்டிருந்த இடத்திற்கு நாயொன்று தவறிச் சென்றது. ஆனால் அங்கிருந்த தாய்முயலோ பின் கால்களைப் பின்னோக்கி உதறித் தாக்கிற்று. நாய் குலைத்துக் கொண்டே ஓடியது. இம்முறையாகக் குட்டிகளைக் காப்பாற்றுவதற்கு மான்கள் கூட ஓநாய்களை எதிர்த்து வெல்வதை வேட்டையாளர் கண்டிருக்கின்றனர்.

## தற்காப்பு-தன் இடம்

எளிய விலங்குகள் வலிய விலங்குகளை அருமையாகச் சில சமயங்களில் எதிர்த்துத் தாக்குவதற்கு இரண்டு

காரணங்கள் உள. கடைசி நிலையில் தன்னைத் தான் காக்கவும் தன் குட்டிகளைக் காக்கவும் திடீரென்று ஒரு வன்மை சில உயிர்களுக்கு உண்டாகின்றது. தனக்குரியது, தான் இருக்குமிடம் பாதுகாப்பானது, வன்மை பொருந்தியது என்று கருதும் உணர்வு சில விலங்குகளிடை உண்டாகின்றது.

சிறிய நாய்கூடத் தான் வாழும் தெருவில் தன்னைவிட வலிமை வாய்ந்த நாயை எதிர்த்துத் தாக்குவதைப் பலரும் கண்டிருக்கலாம். இத்தகைய உணர்வு சில மீன்களுக்குக் கூட (Stickle lacks) உண்டாகும்.

## கோட்டைகளும் கதைகளும்

கட்டபொம்மன் கட்டிய கோட்டை தோன்றியதற்குக் காரணமாகக் கதையொன்று சொல்வர். ஒரு வேட்டை நாய் முயலைத் தாக்கி விரட்டிச் சென்றது ஓட்டமெடுத்த அந்த முயல் காளையார் கோவிலில் கட்டபொம்மன் கட்டின கோட்டை இருக்கும் இடத்தை அடைந்ததும் விரட்டிய நாயைத் திரும்பித் தாக்கியது முயலுக்கு, உள்ள உரம் தந்த இடமாதலால், மண்ணாதலால் அவ்விடத்திலே, மண்ணிலே கோட்டை கட்டப்பட்டதெனக் கூறுவர். இதுபோன்று வேறு சில கோட்டைகள் கட்டப்பட்டதற்கும் கதையுரைப்பர்.

வேலூர்க் கோட்டைக்கும் இதுபோன்ற கதை கூறப்படும். நாயொன்று சில முயல்களை ஓடஓட விரட்டிச் சென்றது. அவற்றில் ஒன்று நாயை எதிர்த்து நிற்கின்றது. நாய் பயந்து ஓடிற்று. இந்த ஓட்டம் வேலூர்க் கோயிலைச் சுற்றி நிகழ்ந்தது. ஆதலால் ஒரு சிற்பி கோயிலைச் சுற்றிக் கோட்டையைக் கட்டினான் என்று செவி வழிச் செய்தி பேசுகிறது.

புலிகடிமால் எனப்படும் சள அரசள சஃகிய மலைத் தொடரில் வேட்டையாடுங்கால், முயல் புலியொடு பொருவதைப் பார்த்தான்; வியப்புட ன் நின்றான். அங்கே தவம் புரிந்த முனிவரொருவர் ஹொய்சள என்று சொல்ல வேந்தன் புலியைக் கொன்றான் இக் கதையை மைசூர் நாட்டு பேலவாடிக் கல்வெட்டு விளக்குகின்றது. இக் கதை மிகப் பழைய காலத்தில் தோன்றியதெனத் தெரிகின்றது.

## கழுகும் பாம்பும்

அமெரிக்காவில் வாழ்ந்த அசெடெக் (Azetec) இனத்தவர், தலைநகர் ஏற்படுத்தப் பொருத்தமான இடத்தைத் தேடி அலைந்து கொண்டிருக்கும்போது, கழுகு ஒன்று உயிருடைய பாம்பைத் தூக்கிச் செல்வதைக் கண்டனர். இவ் வியப்பான நிகழ்ச்சியையே நல்ல அறிகுறியாகக் கொண்டு தலைநகரை அங்கேயே கட்டினர். இக் காலத்திலும் மெக்சிக்கோ நாட்டு நாணயங்களிலும் முத்திரைகளிலும் இக் காட்சி பொறிக்கப்பட்டிருக்கின்றது.

## கோழியும் யானையும்

உறையூர் தோன்றிய வரலாற்றைப் பழந்தமிழிலக்கியத்தில் காண்கின்றோம்.

உறையூருக்கு மற்றொரு பெயர் கோழி யென்பதாகும். கோழி என்று பெயர் பெறக் காரணம் உறையூர் தோன்றிய வரலாற்றில் இருக்கின்றது.

> 'முறஞ்செவி வாரணம் முன்சமம் முருக்கிய
> புறஞ்சிறை வாரணம்'

என்று சிலப்பதிகாரம் பாடும். யானையைக் கோழி எதிர்த்தலால் கோழி என்று பெயராயிற்று. யானையைச் சயித்த கோழி தோன்றின இடம் வலியுடைத்தென்று கருதி, அவ்விடத்து அதன் பெயராலே சோழன் ஊர் காண்கின்ற பொழுது, சிறையும் கழுத்துமாக ஆக்கியதனால், புறம்பே சிறையையுடைய கோழி என்றாயிற்று என்பார் அரும்பதவுரையாசிரியர்.

பண்டைச் சோழ மன்னனொருவன் யானைமீது சென்று கொண்டிருந்தபோது, வழியில் ஓரிடத்தில் கோழியொன்று அந்த யானையைத் தாக்கி அதனைப் பின்னிட்டு

ஓடும்படி செய்யவே, அதற்கு அந்த இடத்தின் சிறப்பே காரணமென்றறிந்து 'கோழி' என்று பெயர் சூட்டினான் என்பர் கதையாளர்.

'நாடா நல்லிசை நற்றேர்ச் சப்பியன்
ஓடாப் பூடகை உறந்தை'

என்று சிறுபாணாற்றுப்படை பேசும். 'ஓடாப் பூட்கை' என்பதற்குத் தன்னிடமிருந்தோர் ஓடாமைக்குக் காரண மாகிய மேற்கோளினையுடைய உறையூர் என்று பொருள் உரைப்பர். அந்த மேற்கோளே கோழி விரட்டிய யானை யின் கதையாகும்.

தமிழிலக்கியத்திலும் வரலாற்றிலும் இத்தகைய கதைகள் வழங்குவது வியப்பைத் தருகின்றது. இக் கதைகள் மிகப் பழங்காலத்து வழங்கிய செவிவழிச் செய்தி களாகுமெனக் கருதலாம். யானையைக் கோழி எதிர்த்த செய்தி உறையூர்க் கோயில் கல்லில் பொறிக்கப்பட்டிருக் கின்றது.

### ஈராஸ் அடிகள் கருத்து

பேராசிரியர் ஈராஸ் அடிகள் கோழிக் கொடியுடைய இனத்தார், யானைக் கொடியுடைய இனத்தாரை வென்ற தையே இது குறிக்கும் என்று கூறுவர் மொகஞ்சாதாரோ முத்திரைகளில் இந்த வரலாறு பொறிக்கப்பட்டிருப்பதாக உரைப்பார்.

உறையூர் என்ற பெயரே ஓடாப் பூட்கை மேற் கொண்டு உறைவதற்கு ஏற்ற ஊராக அமைந்த காரணத் தால் எழுந்திருக்கலாம்.

### சில நம்பிக்கைகள்

இயற்கை நிகழ்ச்சிகள் பற்றித் தமிழரிடையே காணப் படும் சில செய்திகள் வெகு தொலைவிலுள்ள பிற இனத்

தாரிடை வழங்குவதைக் காண்கிறோம். இத்தகைய நம்பிக்கைகள் பழங் காலத்தில் தோன்றியதாயிருக்கலாம். வீட்டில் குளவி கூடுகட்டினால் குழந்தை பிறக்கும் என்பது தமிழரிடையே உள்ள நம்பிக்கை. இதே போன்ற நம்பிக்கை இமயமலைக்கருகில் வாழும் (Luzai) மக்களிடையே வழங்குகிறது. இறந்தவர்களுடைய ஆவி குளவியாகத் தோன்றுகின்றது என்பது இந்தப் பழங்குடி மக்களுடைய நம்பிக்கை.

பிறந்த குழந்தை சில திங்களில் இறந்தால் வீட்டுத் தோட்டத்திலேயே புதைப்பது தமிழருடை வழக்கம். பிச்னோர் (Bichnor)என்ற பழங்குடி மக்கள் சிறு குழந்தை இறந்தால் வீட்டு முற்றத்திலேயே புதைப்பர். அப்படிப் புதைத்தால் தாயின் வயிற்றிலேயே குழந்தை திரும்பப் பிறக்குமென்று நம்புகின்றனர்.

கடும் நோயால் வருந்தும்போது வீட்டு நாய் ஊளை யிட்டால் சாவு நேரிடுமென்று தமிழ்நாட்டில் பயப்படுவர் இதே நம்பிக்கை மேல்நாட்டிலும் உண்டு என்பதை 'மேடம் பொவாரி' (Madam Bovary) என்ற நாவலைப் படித்தவர்கள் அறிவார்கள் நாய்கள், சில சமயங்களில் ஒரு முறையாக ஊளையிடுகின்றனவென்கின்றார் குஸ்தாவ் பிளாபோட் (Gustave Flabert) என்பவர்.

நேர் எதிர்மாறான நம்பிக்கைகள் கூட இருப்பதைக் காண்கிறோம். வீட்டில் தேன்கூடு கட்டினால் கேட்டது என்று தமிழர் கருதுவர். ஆனால் பர்மாவில் வாழும் மகம்மதியர் அது நல்ல அறிகுறி என்று கருதுகின்றனர்.

காகங் கரைவதை நல்லதெனத் தமிழர் கருதினர். காதலன் வரவை உணர்த்திக் கரைந்த காக்கைக்கு ஏழு கலத்தே அடிசில் கொடுத்தாலும் போதாது என்று நச்செள்ளையார் பாடினார். ஆனால் காகங் கரைந்தால்

சாவு நேரிடும் என்று அமெரிக்காவில் கருதினதை எட்கார் ஆலன்போவின் கவிதைகளைப் படித்தவர் அறிவர்.

இயற்கை நிகழ்ச்சிகள், செய்திகள் பற்றிய நம்பிக்கைகள், கதைகள் தமிழ் நாட்டில் நிறைய வழங்குகின்றன. அவற்றைத் தொகுத்துப், பிற இனத்தாரிடை வழங்குவனவோடு ஒப்பிட்டு ஆராய்வது நல்ல பலனைத் தரும். இலக்கிய, மனித சமுதாய வளர்ச்சியை அறிய அத்தகைய ஆராய்ச்சி மிகவும் உதவும்.

# 8

# முதலைகள்

## முதலை இனங்கள்

இந்தியாவில் மூன்று முதலை இனங்கள் இருக்கின்றன. அவற்றில் இரண்டுவகை முதலைகள் தமிழ்நாட்டிலும் தென்னாட்டிலும் காணப்படுகின்றன. ஒருவகை முதலை வடநாட்டில் மட்டும் காணப்படுகின்றது.

## சங்க நூல்களில் முதலை

இந்த மூன்று வகை முதலைகளைப் பற்றியும் சங்க நூல்களில் செய்திகள் காணப்படுவது கவனிக்கத் தக்கதாகும்.

இந்த மூன்று வகைகளையும் முதலை, இடங்கர், கராம் என்று சங்க நூல்களில் அழைத்தனர்.

'ஒடுங்கிருங் குட்டத் தருஞ்சுழி வழங்குங்
கொடுந்தாள் முதலையு மிடங்கரும் கராமும்'

— குறிஞ்சிப்பாட்டு 256 - 257

'கராஅங் கலித்த குண்டுகண் ணகழி
இடங்கருங் குட்டத் துடன்றொக் கோடி
யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉம்
கடுமுரண் முதலைய நெடுநீர் இலஞ்சிச்
செம்புறழ் புரிசைச் செம்மன் மூதூர்'

—புறம். 37

குறிஞ்சிப் பாட்டிலும் புறநானூற்றுப் பாடலிலும் முதலையும் இடங்கரும் கராமும் கூறப்பட்டுள்ளன. பேராசிரியர் தொல்காப்பிய மரபியலில் முதலையும் இடங் கரும்கராமும் தம்மின் வேறெனப்படும் என்பதற்கு இந்தப் புறனூற்றுப் பாடல் வரிகளையே காட்டியுள்ளார். ஆத லின், முதலையும். இடங்சரும், கராமும் வேற்றுமைப் படுத்தப்பட்டு, சங்க காலத்திலேயே உணரப்பட்டன என்பது தெளிவாகின்றது.

சங்க காலத்தில் இந்த மூன்று வகைமுதலைகளையும் கோட்டை அகழிகளில் பாதுகாப்புக்காக வளர்த்தனர் என்று தெரிகின்றது.

முதலையை Crocodilus porosus (estuarine crocodile) என்றும்,

இடங்கரை Crocodllue Palustris (Marsh crocodile) என்றும்,

கராத்தை Gavialis gangetics என்றும் அழைப்பர்.

இம் மூன்று முதலை இனங்களும் அறிவியற்படி எவை என்று தெரிந்து கொள்ளலாம்.

## முதலை

முதலையைப் பற்றியே சங்க நூல்களில் கூடுதலான செய்திகள் வருகின்றன.

'.................. கொடுங்கழிப்
பாசடை நெய்தல் பனிநீர்ச் சேர்ப்பன்
நாம முதலை நடுங்குபகைஅஞ்சான்
நற்றிணை 287

'இரைதேர்ந் திவருங் கொடுந்தாள் முதலையொடு
திரைபடக் குழிந்த கல்லகழ் கிடங்கின் '
—மலைபடுகடாம் 90-91

'கோள்வல் முதலைய குண்டுகண் ணகழி'
—பதிற்றுப்பத்து 53- 8

'கொடுந்தாள் முதலையொடு கோட்டுமீன் வழங்கும்
இருங்கழி யிட்டுச்சுரம் நீந்தி யிரவின்'
—அகம் 80

'முதலைப் போத்து முழுமீ னாரும்
தண்டுறை யூரன் றேஎம்'
—ஐங்குறுநூறு 5

## கொடிய முதலை

முதலை, இடங்கர், கராம் ஆகிய வகைகளில் முதலையே கொடியது. அது வாழும் துறைகளில் ஆடுமாடு களையும் ஆட்களையும் இழுத்துச் சென்று கொன்று தின்றுவிடும். ஆதலின், 'நாம் முதலை' என்றும், 'சுட்டுநர் பனிக்கும் சூருடை முதலை' என்றும் சங்க நூல்களில் இதன் கொடுமைத் தன்மையைக் கூறினர். சுட்டிக்காட்டு பவர்கள் கூட நடுங்கிக் கொண்டே காட்டும் கொடிய தன்மையுடைய முதலை என்று உரைக்கப்பட்டுள்ளது. 'கடுமுரண் முதலை' என்று குறிக்கப்பட்டுள்ளது.

சங்க காலத்தில் இயற்கைச் சூழ்நிலை இன்று போல அழிக்கப்படவில்லையாதலால் ஆறுகள் கலக்கும் கடற் கரைச் சூழலிலும் ஆறுகளிலும் முதலைகள் நிறைய

இருந்திருக்க வேண்டும். ஆதலின் முதலைகளுக்கு மிகவும் அஞ்சினர்.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர்க் கேரளக் கடற்கரையில் முதலைகள் நிறைய இருந்தன. முதலைகளைத் தோலுக்காக வேட்டையாடி அழித்து விட்டனர்.

கழிகளிலும், கடற்கரைச் சூழலிலும், ஆற்றுத் துறைகளிலும் முதலை வாழ்வதாகச் சங்கநூல்களிலும் கூறப் பட்டுள்ளது. முதலை முழு மீனைத் தின்பதாகச் சொல்லப் பட்டுள்ளது. முதலையின் முக்கிய உணவு மீனே. பிற விலங்குகளையும் முதலை கொன்று உண்ணும்; ஆட் கொல்லியாகவும் மாறும். முதலைக்கு வளைந்த கால்கள் இருப்பதாகச் சங்க நூல்கள் சாற்றும்.

> ''நீர்வாழ் முதலை யாவித் தன்ன
> ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடத்து''
>
> —அகம். 301

## முதலைக்குக் குருவியின் உதவி

முதலைகள் கரையில் வந்து வாயைத் திறந்து கொண்டு வெளியில் காய்வது வழக்கமாகும். நீர்வாழ் முதலை ஆவித்துக் கிடப்பது சிலர் உரை கூறியது போல் கொட்டாவி விடுவதற்கன்று. எகிப்தில் உள்ள நைல்நதி முதலைகள் வாயைத் திறந்து கிடக்கும்போது ஒருவகைச் சிறு குருவிகள் அங்காந்த வாயுள் புகுந்து பற்களின் இடையே சிக்கியிருக்கும் புழுப்பூச்சிகளைக் கொத்தித் தின்னுமாம். முதலைகளும் அக் குருவிகளுக்குக் கேடு செய்வதில்லை. ஊறு செய்யும் ஆட்கள் நெருங்கினால் இக்குருவி ஒலி செய்து முதலைகளை எச்சரிக்கை செய் கின்றனவாம். இம்முறையாக ஒன்றிற்கொன்று உதவி செய்கின்றன என்பர் அறிஞர்.

ஆவித்து என்ற சொல் வாயை அங்காத்தலைக் குறித்ததைக் காணலாம். இச் சொல் இன்றும் பேச்சு வழக்கில் உள்ளது. குழந்தைகளுடன் பேசும் மொழியில் 'ஆக்காட்டு', 'ஆப்போட்டு' என்ற வழக்குகள் இருப்பது சங்க நூல் மரபாகத் தெரிகின்றது.

## முதலையின் தோல்

முதலையின் மேல்தோல் மேடும் பள்ளமுமாக இருக்கும். குண்டுகள் துளைக்க முடியாதபடி அவ்வளவு உறுதியானது. முதலைகளைக் கொன்று தோலைப் பதனிட்டு அழகான பெட்டிகளும் பைகளும் செய்வர்.

முதலையின் தோலை அழகான உவமையால் அகநானூறு விளக்கியுள்ளது.

> **'இருங்கழி முதலை மேஎந் தோலன்ன**
> **கருங்கா லோமைக் காண்பின் பெருஞ்சினை'**
> **—அகம் 3**

முதலையின் மேல் தோல் ஓமை மரத்தின் கரிய அடி மரத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது காடுகளின் பாதுகாவலராகப் பணி புரிவோர் காட்டில் உள்ள மரங்களின் அடி மரத்தைப் பார்த்ததும் இன்ன மரமென்று தெரிந்து கொள்வர். முதலையின் மேல் தோல் போன்ற அடிமரம் உடைய மூன்றுவகை மரங்கள் காட்டில் இருப்பதாகக் கண்டுள்ளனர். அகநானூறு உரைப்பது அத்தகையதொரு மரத்தையே யாகும்.

## ஓமை மரம்

ஓமை மரத்தைப் பற்றிப் பல பாடல்கள் சங்க நூல்களில் உள்ளன. அந்தப் பாடல்களில் ஓமை மரம் Ougenia

delbregoides என்ற மரமே என்று தெளிவாகின்றது. இந்த மரம் நீரற்ற வறட்சியான இடங்களில் வளர்வதாகவும், இம்மரத்திற்கு முடமான அடிமரம் இருப்பதாகவும் சங்க நூல்கள் தெரிவிக்கின்றன.

யானைகள் இந்த ஓமை மரத்தை உதைப்பதாலும் குத்துவதாலும் இதன் அடிமரம் புண்படுவதாகவும், அது யானையின் புண்பட்டக் கால்போலத் தோன்றுவதாகவும் சொல்லப்பட்டுள்ளது. செடி நூலாரும் இதுபோன்ற செய்தியைக் கூறியுள்ளனர். இந்த அடிமரத்தில் மேலாக வெட்டுப் போட்டால் சிவப்பாகப் பிசின் வரும். இப் பிசின் இரத்தம் போலவே இருக்கும் வெண்மையாகக் காணப் படும் உள்மரத்தின் மேல் இச் சிவப்புப் பிசின் வழிவது புண்போலவே இருக்கும் என்று அறிஞர் உரைத்துள்ளனர். சங்க நூல்களில் புண்தாள், போழ்புண் என்று கூறியிருப் பதைக் காணலாம்.

## நீருள் முதலை

முதலை நீரிலிருக்கும்போது பிடித்த விலங்கையோ ஆளையோ விடாது பற்றி இழுத்துச் செல்லும். 'கோள்வல் முதலைய குண்டுகண் ணகழி' என்று பதிற்றுப் பத்து (53-5) கூறுகின்றது. கொண்டதை வலிமையாகப் பற்றும் முதலை என்று கூறியுள்ளதையே இன்று 'முதலை யும் மூர்க்கனும் கொண்டது விடா' என்ற பழமொழி விளக்குகின்றது.

> **'நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலின்**
> **நீங்கின் அதனைப் பிற'**

—குறள் 495

நீருக்குள் முதலைக்கு வலிமை மிகுதி என்று திருவள்ளு வர் கூறியுள்ளார். முதலையின் நீண்ட வாய்க்கு நீரில் ஈர்ப்புச் சக்தி மிகுதி என்று கண்டுள்ளனர். அண்மையில்

செய்த ஆராய்ச்சியில் ஒரு டன் எடையுள்ள முதலைக்கு 13 டன் ஈர்ப்புச் சக்தி இருப்பதாகக் கண்டுள்ளனர்.

இந்தியாவில் வாழும் மூன்றுவகை முதலை இனங்களில், ஆற்றிலும் ஆற்றுத் துறைகளிலும் வாழும் முதலையே ஆட்களைக் கொன்று தின்னும் கொடிய தன்மையுடையது என்று கண்டுள்ளனர். மற்ற இருவகை முதலை இனங்களும் ஆட்களைக் கொல்லா என்பது ஆராய்ந்ததில் தெளிவாகியுள்ளது.

## 'வழி வழக்கறுக்க' முதலைகள்

கொண்டதை வலிதாகப் பற்றும் ஆண் முதலை, துறையின் வழியில் யாரும் செல்லாதபடி ஆள் வழங்கு தலை அறுக்கும் என்று குறுந்தொகையில் உள்ளதைக் காணலாம். உண்மையான செய்தியாகும்.

> 'கொடுங்கான் முதலைக் கோள்வல் ஏற்றை
> வழிவழக் கறுக்குங் கானலம் பெருந்துறை'
>
> குறுந்தொகை 324

மேற்குக் கடற்கரையில் கட்ச் முதலிய தீவுப் பகுதிகளில் இன்று அரபு நாடுகளிலிருந்து வெளிநாட்டுப் பொருள்களின் கடத்தல் நடக்கின்றது. இதைத் தடுக்க அரசு விரைவுப் படகுகளைப் பயன்படுத்தியும் முடியவில்லை. சேறும் சக்தியுமாக இருந்த இந்தக் கரைகளில் பண்டைக் காலத்தில் முதலைகள் நிறைய வாழ்ந்தன. அவற்றைக் கொன்று ஒழித்தனர். ஆதலின் இன்று யாரும் அச்சமின்றி இக்கரைகளைக் கடக்க அணுக முடிகின்றது. இக் கரைகளில் வெளி நாடுகளிலிருந்து வரும் பொருள்களின் 'வழி வழக்கறுக்க' முதலைகளை வளர்க்கலாம் என்று ஓர் அறிஞர் கருத்து அறிவித்துள்ளார்.

மனிதர் முதலைக்கு மிகவும் பயப்படுவர். சங்ககாலத்தில் நகரங்களைப் பாதுகாக்க வைத்திருந்த அகழிகளில் முதலைகளை இட்டு வளர்த்தனர். கோட்டைச் சுவர்களில் ஏறுவதற்கு முன் அகழிகளைக் கடக்க வேண்டும். முதலைகளின் வாயில் தப்பியவர்களே கோட்டைச் சுவர்களில் ஏற முடியும்.

## பிள்ளை விழுங்கி

ஐங்குறுநூற்றில் முதலையைப்பற்றி ஒரு செய்தி கூறப்பட்டுள்ளது. முதலை தன்னுடைய பிள்ளையையே தின்னுமென்பதே இச் செய்தியாகும். சங்கநூல் கூறிய இச்செய்தி உண்மையானது என்று அறியும்போது வியப்படைகிறோம்.

ஜெய்ப்பூரில் உள்ள உயிர்க் காட்சிச்சாலையில் முதல் தடவையாக முட்டைகளிலிருந்து முதலைக் குட்டிகள் பிறந்தன. உடனே முதலையின் குட்டிகளைத் தாயினிடமிருந்து அப்புறப்படுத்தினர். ஏனென்றால் தாயே தன்னுடைய பிள்ளைகளைத் தின்றுவிடும் என்று கண்டறிந்த அனுபவத்தால் தாயோடு குட்டிகளை விடவில்லை.

முதலையே முதலைகளை உண்பதை அறிஞர்கள் கண்டுள்ளனர். உலகத்திலேயே இந்தக் காட்சிச் சாலையிலேதான் முதலைகள் இயற்கையில் முட்டையிட்டுக் குட்டிகள் பொறித்தன என்பதைக் கவனிக்க வேண்டும்.

**'தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலையொடு**
**வெண்பூம்பொய்கைத் தவனூ ரென்ப அதனால்'**

**—ஐங்குறுநூறு41**

'தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு
பிள்ளை தின்னு முதலைத் தவனூர்'
—ஐங்குறுநூறு 24

ஐங்குறுநூற்றில் சொல்லப்பட்ட இச் செய்தி இயற்கையில் உண்மையாகக் கண்ட அறிவியற் செய்தியென்று காணும் போது வியப்படையாமல் இருக்க முடியாது.

முதலை ஆறுகளிலும், கடற்கரையில் ஆறுகள் கூடு மிடங்களில் கடலிலும் கழிகளிலும் காணப்படுகின்றன. கடலில் நீண்ட தொலைவு செல்லக்கூடிய முதலை இனம் இதுவேயாகும். மற்ற முதலையினங்கள் நன்னீரில் வாழ் வனவாகும்.

## இடங்கர்

முதலையினத்தில் இடங்கரும் கராமும் எவையென்று அறிய வேண்டும்.

இடங்கர் என்றொரு முதலையினமும் சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளது. இடங்கர் என்ற முதலை வகை கானாற் றில் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. முதலையும் இடங் கரும் கராமும் அகழிகளில் இருந்தன என்றும் புறநானூறு தெரிவிக்கிறது.

'உரவுக்களிறு கரக்கு மிடங்க ரொடுங்கி'
—மலைபடுகடாம் 211

'கன்றிய கராமு மிடங்கரு மீன்களும்'
—மலைமேகலை 28— 18

'நீர் நிறங் கரப்ப வூழுறு புதிர்ந்து
பூமலர் கமுலிய கடுவரற் கான்யாற்றுக்

கரா அந் துஞ்சுங் கல்லுயர் மறிசுழி
மாரஅ யானை மதந்தப வொற்றி
உராஅ வீர்க்கு முட்குவரு நீத்தங்'

—அகம். 18

'கருங்கற் கான்யாற்று அருஞ்சுழி வழங்குங்
கராஅம் பேணாய் இரவரின'

—நற்றிணை 292

'தாட்படு சின்னீர்க் களிறட்டு வீழ்க்கு
மீர்ப்புடைக் கராஅத் தன்ன வென்னை'

—புறம். 1 4

'கராஅங் கலித்த கண்ணகன் பொய்கை'

—பட்டினப்பாலை 242

இடங்கர் என்பது முதலையினும் சிறிய முதலை வகையாகும். இது தென்னாட்டிலும் வட நாட்டிலும் காணப்படுகின்றது; பெரும்பாலும் சிறிய ஆறுகளிலும் குளங்களிலும் சதுப்பு நிலங்களிலும் காணப்படும். இது மீன்களையும் சிறிய பறவைகளையும் விலங்குகளையும் தின்று வாழும். இடங்கர் 12 அடி வளரும்: கழிமுகத்தில் வாழும் கொடிய முதலை 30 அடி வரை வளரும். இடங்கர் என்ற முதலை கொடுமை வாய்ந்ததன்று. இதனை மலையாளத்தில் மண்ணான் என்றழைக்கின்றனர்.

## கராம் - கங்கை முதலை

கராம் என்பது வடநாட்டில் கங்கை ஆற்றில் காணப்படும் ஒருவகை முதலையென்று தெரிகின்றது. இந்த முதலையைக் 'கரியால்' (Gharial) என்று வடநாட்டில் அழைக்கின்றனர்.

இதனுடைய ஆணிற்கு உள்ள நீண்ட கூர்ந்த வாயின் மேல் பூண் போன்ற பாகம் உள்ளது இதைக் 'கரா' என்று அழைப்பர் இதனால் இது கரியால் என்று பெயர் பெற்றது. தமிழில் வரும் கராம் என்ற பெயரும் வட நாட்டுப் பெயரிலிருந்து வந்ததாகத் தெரிகின்றது. இந்த முதலை வகையைத் தமிழ்நாட்டில் இயற்கையில் காண முடியாது.

சங்க காலத்தில் இந்த வகை முதலையை வட நாட்டி லிருந்து கொண்டுவந்து அகழிகளில் விட்டு வளர்த்திருக்க லாம். பின்னர் சங்க காலத்திலேயே ஆறுகளிலும் பரவியி ருக்கலாம். இந்த முதலைக் கண்டு வடநாட்டிலும் மக்கள் பெரிதும் அஞ்சுவர். இந்தக் கராம் என்ற முதலை மீன் களையே தின்னுமென்றும், மற்ற விலங்குகளையும் மனி தரையும் அணுகாது என்றும் ஆராய்ச்சியாளர் கண்டு தெரிவித்துள்ளனர்.

இடங்கர், கராம் ஆகியவை பற்றி ஒரு செய்தி சங்க நூல்களில் வருகின்றது. யானையைப் பிடித்து முதலை இழுப்பதாகக் கூறிய செய்தி ஆராய்தற்குரியது.

இடங்கர், களிறை இழுத்து, மறைக்கும் என்றும், களிறைக் கொன்று வீழ்த்தி ஈர்த்துச் செல்லும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இச் செய்தி கற்பனையானது என்று கருதவேண்டும்.

ஆண் யானையை இழுத்துச் சென்று கொல்லும் சக்தி முதலைக்கில்லை. இச்செய்தி கராத்திற்குப் புறநா னூற்றிலும் அகநானூற்றிலும் கூறப்பட்டிருப்பதால் இது வடநாட்டிலிருந்து வந்த புராணச் செய்தியாக இருக் லாம்.

இந்தக் கற்பனைச் செய்தியையே பிற்காலத்தில் முதலை இழுத்த யானை, '**ஆதிமூலம்**', என்று கதறித் தப்பித்த புராணக் கதையாக மாறியிருக்கலாம்.

மலைப்பாம்பு யானையை விழுங்கினதாகச் சங்க நூல்களில் வரும் கற்பனைச் செய்தியைப் போன்றதே இதுவும்.

கராமும், இடங்கரும் மனிதரைக் கொல்லும் சக்தி உடையன அல்ல; முதலையொன்றே மனிதரைக் கொல்லும். ஆனால் இந்த முதலையும் யானையைக் கொல்லக் கூடியதன்று.

அகழியில் இருந்த முதலை இரவில் விளக்கு வெளிச்சத்தில் கண்ட மனிதரின் நிழலையும் கவ்வப் பார்க்கும் என்று புறநானூற்றுப் பாடல் கூறுவதைக் காணலாம்.

9

# கவையன்

## பனையேறிக் கெண்டை

'பனையேறிக் கெண்டை' என்ற மீனை இலங்கையில் கவையன் (Anabas Scandens) என்று தமிழில் வழக்கு மொழியில் அழைக்கின்றனர். தமிழ்நாட்டில் இந்த வழக்கு சொல் பழக்கத்தில் இல்லாமலிருப்பது வியப்பாக உள்ளது.

இம் மீனுக்கு முற்காலத்தில் தமிழில் வழங்கிய பெயர் 'கவையனாகவே' இருக்க வேண்டும். 'பனையேறிக் கெண்டை' என்ற இதன் பெயர் பிற்காலத்தில் தோன்றிய பெயராகத் தெரிகின்றது சிங்களமொழியிலும் 'கவையன்' என்ற பெயர் வழங்குகின்றது.

இந்த பெயர் தமிழிலிருந்து சென்றதாகும். குடியேற்ற நாட்டில் பழைய பெயர்களையும் பழக்க வழக்கங்களையும் காப்பாற்றுவது இயல்பே. ஆரிய மொழிகளில்

'கவையி', 'கவிகா', 'கொய்', 'கையி', 'கை' என்றும் ஆரிய மொழிகளில் இதன் பெயர் வழங்குகின்றது இந்தப் பெயர்களெல்லாம் பண்டைத் திராவிட மொழிப் பெயரின் திரிபேயாகும். பனைமரத்தில் ஏறுவதாகக் கருதினால் 'பனையேறிக் கெண்டை' என்றழைத்தனர். இந்த மீன், நிலத்தில் நன்கு பெயர்ந்து ஊர்ந்து செல்லும். நீர் வற்றிய காலத்தில் அவ்வாறு இடம் பெயர்ந்து செல்வது வழக்கமாகும். அண்மையில் வந்த Science Reporter என்ற இதழில் இந்த மீன் குறும்பனை மரத்தில் ஏறியிருந்ததைக் கண்டதாக ஒருவர் எழுதியிருந்தார்.

இந்த மீனுக்கு அவ்வாறு பெயர்ந்து செல்வதற்குப் பக்க வாட்டில் செதில்கள் உள்ளன. அந்தச் செதில்களால் நகருகின்றது பனைமரம் சுரசுரப்பாக உள்ளதால் செதில்களால் ஏறக்கூடிய வாய்ப்பு உண்டு.

## கவையன் பெயர்க் காரணம்

கவையன் என்ற பெயர் எப்படி வந்தது என்பதை ஆராயலாம் தன் செதில்களால் கவ்விச் செல்வதால் கவையன் என்ற பெயர் வந்ததாகத் தெரிகின்றது. அறிஞர் டர்னர் (Turner) எழுதிய இந்திய—ஆரிய மொழிகளின் அகராதியில் கவை, கவி என்ற வேர்ச்சொல்லின் அடிப்படையாக ஆரிய மொழிகளில் காணப்படும் பெயர்களான 'கவச' (2957) 'கவடி' (2958), 'கவலெ' (29610, 2961) முதலிய பெயர்கள் திராவிட மொழிகளிலிருந்து பெற்றவை என்று எழுதியுள்ளார்.

தமிழில் உள்ள கவசம்,கவடிகவளம் என்ற பெயர்களே ஆரிய மொழிகளில் புகுந்துள்ளன.

இருக்கு வேதத்தில் காணப்படும் 'கபி' என்ற பெயரே கவித்துக் கவித்துச் செல்லும் குரங்கின் திராவிட மொழிப்

பெயரின் அடிப்படையாகத் தோன்றியதாகும். ஆனால் அந்தத் திராவிடச் சொல் திராவிட மொழிகளில் வழங்க வில்லை. அதனால் திராவிட மொழிச் சொல் இல்லை யென்று கூறமுடியாது. பனையேறிக் கொண்டை என்பது பிற்காலத்திய பெயர் கவையன் என்பதுதான் திராவிட மொழிகளிலே இந்த மீனுக்கு வழங்கிய முற்காலத்திய பெயராகும்.

## மானசல்லோசா

Flora and pauna in Sanskrit Literature என்ற நூல் சனவரி 1980ல் வெளியிடப்பட்டது இதில் கவயி, கவிகா என்ற மீனின் பெயர்கள் காணலாம். வடமொழியில் மிகப் பிற்காலத்திய நூல்களில் இப் பெயர்கள் காணப்படுவன வாகக் கூறப்பட்டுள்ளது. கி. பி. 1129 ஆம் ஆண்டு சோமேஸ்வரன் என்ற சாளுக்கிய அரசன் எழுதிய மானசல்லோசா (manasallosa of Someswara) என்ற நூலின் 'மத்ஸ்யவினோதா' என்ற பகுதியில், 'கவயி' என்ல சொல் ஒரு மீனின் பெயராகக் கூறப்பட்டுள்ளது.

## இராஜ நிகண்டு

வடமொழியில் இயற்றப்பெற்ற இராஜ நிகண்டு என்ற பிற்கால நிகண்டு நூலில், 'கவிகா' என்ற பெயர் காணப்படுகின்றது. நூலாசிரியர் பானர்ஜி (Banerjee) இந்த மீன் பெயர்களைக் கூறினாரே அன்றி, அறிவியற்படி இந்த மீன் எதுவென்று ஆராய்ந்து கூறவில்லை. ஆனால் சொல்லாக்கத்தை விளக்கும் போது கு+வை சேர்ந்த 'போ' (to go) பொருளில், 'கவிகா' என்ற பெயர் வந்த தாக உரைத்துள்ளார். கு என்ற சொற்குப் பொருளாக நீர், நிலம் ஆகியவற்றைக் குறித்துள்ளார். இந்தச் சொற் பிறப்பு ஆராய்ச்சி, பொருத்தமற்றது.

## வழக்குகள் விழுமுன் ஆராயலாம்

வடமொழி ஆராய்ச்சி அறிஞர்கள் வேற்றுமொழிச் சொற்களுக்கும் வடமொழியிலிருந்து எப்படியாவது வலிந்து விளக்கம் கூறுவது வழக்கமாகும். ஆனால் வடமொழியை முதலில் பயின்று புலமை பெற்றுப் பின்னர் திராவிட மொழிகளை ஆராய்ந்த மேலைநாட்டு அறிஞர்களான டாக்டர் மேனோ, டாக்டர் பர்ரோ ஆகியவர்கள் இந்த வகை ஆராய்ச்சிகளைத் தகர்ந்தெறிந்தனர்.

இந்த மீன் எதுவென்று தெரிந்து கொள்ளாமல், சொற்பிறப்பு வரலாறு கூறுவது தவறாகும். இந்திய-ஆரிய (Indo-Aryan) பேச்சு வழக்குகளில் வரும் இந்த மீனின் பெயருக்கு உண்மையான விளக்கம் இலங்கைத் தமிழ்ப் பேச்சு வழக்கில் காணலாம். மிகவும் வியக்கத் தக்கதாகும். தமிழிலும் திராவிட மொழிகளிலும் வீழ்ந்து பட்ட ஒரு வியப்பான மீனின் பெயர், இலங்கைத் தமிழில் காணப்படுவதைக் கவனிக்க வேண்டும். இதுபோன்ற பல தூய, பொருள் பொதிந்த தமிழ் வழக்குகள் இலங்கை யிலும் தமிழகத்திலும் நாடார் பொது மக்கள் வழக்கில் காணப்படுகின்றன. அவ் வழக்குகள் வீழுமுன் ஆராய வேண்டியது நம் கடமையாகும்.

## பனைமீன் - பெருமீன்

மதுரைக் காஞ்சியில், 'பனைமீன்' ஆழ்கடலில் துஞ்சு வதாக உள்ளது. 'பனைமீன் வழங்கும் வளைமேல் பரப் பின்' (395) என்ற வரியில், பனைமீன் என்பதற்குப் பனை யேறிக் கெண்டை என்று உ.வே. சாமிநாதய்யர் உரை யெழுதினார். ஆனால், பனையேறிக் கெண்டை, நன்னீ ரில் வாழும் மீனாகும். இதைக் கடலடியில் காண

முடியாது. ஆனால் நச்சினார்க்கினியர் மரபுச் செய்தியை ஒட்டிச் சரியான உரை கூறியிருப்பது போற்றத்தக்கது இதைக் கடலில் வாழும் பெரிய மீனாகக் கொண்டது பொருத்தம். உண்மையில் மதுரைக் காஞ்சி கூறிய பனைமீன் ஒருவகைத் திமிங்கிலமாகும்.

## பேராசிரியரின் மறுப்பு

சங்க நூல்களில் சில பாடல்களில் திமிங்கிலத்தைப் பெருமீன் என்று அழைத்துள்ளனர். பெருமீனின் உண்மைச் செய்திகயையும் சங்கப் பாடலில் காணலாம் இதன் விளக்கத்தைச் 'சங்க நூல்களில் விலங்குகள்' என்ற எனது நூலில் காணலாம். நேரில் கண்டறிந்து நான் கூறிய விளக்கத்தை 'நெய்தற்றிணை' என்ற நூலில் தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் மறுத்து எழுதியுள்ளார்.

சங்க நூல்களில் சொல்லப்பட்ட உயிரினச் செய்தி களை விளங்கிக் கொள்ள அறிவியலறிவும் பட்டறிவும் இன்றியமையாதவை. தமிழறிவு மட்டும் கொண்டு உண்மை விளக்கத்தைத் தர முடியாது. இந்த ஆசிரியரும் உ. வே. சாமிநாதய்யரைப் பின்பற்றிப் பனைமீன் என்பது பனையேறிக் கெண்டை என்றும் இந்தியக் கடல்களில் திமிங்கிலமே கிடையாது என்றும் சாதித்துள்ளார்.

பனைமீன் மதுரைக் காஞ்சியில் கடல் மீனாகக் கூறப் பட்டதை இவர் சரியாகப் படிக்கவில்லை என்று தோன்று கிறது. மற்றும் H. S. Prater எழுதிய விலங்கின நூலாகிய Animals of India என்ற அடிப்படை நூலைப் படித்திருப் பாராயின் இந்தியாவைச் சுற்றிய கடல்களில் ஐந்தாறு திமிங்கில வகைகள் உள்ளன என்பதைத் தெரிந்திருக்க லாம். இப் பேராசிரியர் பிற்சேர்க்கையாக, 'அரபிக் கட லில் திமிங்கிலம் இருப்பதாகத் தெரிகின்றது. அதைக் கடலானை என்று மலையாளத்தில் அழைக்கின்றனர்'

என்றும் எழுதியுள்ளார். அங்குகூட அவர் என்னை மறுத்துச் சொன்ன பிழையை ஒப்புக் கொள்ளவில்லை.

இத் தமிழ்ப் பேராசிரியர், டாக்டர் குண்டர்ட் எழுதிய மலையாள - ஆங்கில அகராதியைப் படித்திருந் தால், அதில் 'கடலானா' என்ற மலையாளச் சொல், திமிங்கிலத்தைக் குறித்து வழங்குவதைக் கண்டிருக்கலாம். மற்றும் பிங்கலந்தை நிகண்டு பெருமீன் என்பதற்குப் பொருளாக யானைமீன், பனைமீன், திமிலம் என்று கூறி யிருப்பதிலிருந்து பனைமீன் திமிங்கிலம் என்று கருத வேண்டும்.

## பெருமீன் - சுறாமீனா?

அப் பேராசிரியர் பெருமீன் என்பது பெரிய சுறா மீனாக இருக்கும் என்று எழுதினார். ஆனால் சுறாவினத் தில் மூன்றே வகைகளைத் தெளிவாகச் சங்கப் புலவர்கள் இனந்தெரிந்து விளக்கியுள்ளனர். அதைப் பற்றிச் 'சங்க நூல்களில் மீன்கள்' என்ற எனது நூலைப் படித்தால் தெளிவு பெறலாம்.

மலையாளத்தில் திமிங்கிலத்தை **'ஆனை மீன்'** என்றும், சுறாவை 'மகர மச்சம் என்றும் பிரித்துக் கூறி யுள்ளனர். ஆதலின், பெருமீன், சுறாவாக இருக்க முடி யாது. இந்தியாவிலே உள்ள உயிரினங்களைப் பற்றிச் சிறந்த அறிவுள்ளவரும், சென்னையிலே பாம்புப் பண் ணையைத் துவக்கியவருமான Romulus whilates என்பவ ருடன் நான் கருத்து பரிமாறிக் கொண்ட போது, 'இந் தியக் கடல்களில் ஐந்து வகைகளுக்கு மேற்பட்ட திமிங் கிலங்கள் வாழும்போது, திமிங்கிலங்கள் இல்லையென்று யார் அறிவியலறிவோடு கூறினார்' என்று எழுதி யிருந்தார்.

## பனை உளுவை

'பனை மீன்' என்ற சங்ககாலப் பெயரின் மரபு இன்றும் மீனவர்களிடையே மறக்கப்படவில்லை. இன்றும் கடற்கரையில் ஒதுக்கப்படும் சிறு திமிங்கிலங்கள்(Beached Whales) 'பனை உளுவை' என்று அழைக்கப்படுகின்றன.

## திமிங்கிலங்கள் பற்றி

5—2—81 ஆம் நாளன்று வெளிவந்த 'இந்து' நாளிதழில் 33 அடி நீளமும் 17 அடி அகலமும் உடைய திமிங்கிலத்தைக் கோடிக்கரையில் மீனவர்கள் பிடித்ததைப் பற்றிய செய்தி வந்துள்ளது. இச் செய்தியிலிருந்து வங்காளக் குடாக் கடலிலும் திமிங்கிலங்கள் வாழ்கின்றன என்பது தெளிவாகின்றது.

புதுச்சேரிக் கடற்கரையில் 1962 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 13 ஆம் நாளன்று 45 அடி நீளமும் 22 அடி சுற்றளவுமுள்ள திமிங்கிலம் கடற்கரைக்கு 20 மைல் தொலைவில் கிடைத்தது. மீனின் வாய் மட்டும் 10 அடி நீளம் இருக்கும். வாயைப் பிளந்தபோது 7 அடி உயரம் இருந்தது. இதன் பெயரைப்பற்றி நான் உசாவிய போது, பனை உளுவை, 'பானைவாளை' இனத்தைச் சேர்ந்த தென்றும், 'உறவி' என்றும் கூறினர். இந்த மீனை விசைப்படகில் வலையில் பிடித்தனர்.

குமரி முனையில் 1970 ஆம் ஆண்டு விசைப் படகிலிருந்து போட்ட வலையில் 22 அடி நீளமும் 12 அடி சுற்றளவுமுள்ள திமிங்கிலம் கிடைத்தது, 'அம்மணி உளுவை' என்று மீனவர்கள் அழைத்தனர். மற்றும் சிறு திமிங்கிலங்கள் அரிதாகத் தாமாகவே கடற்கரைல்ஒதுங்குவதுண்டு.

நற்றிணையில்(239), பரதவர் தாம் வருந்தாது பெற்ற பெருமீனைப்பற்றிக் காணலாம். இந்தப் பெருமீன்கள், தாமாகவே ஒதுங்கும் சிறு திமிங்கிலங்களே.

ஐந்தாண்டுகளுக்கு முன்னர் மண்டபம அருகே, கூட்ட மாகப் பல சிறு திமிங்கிலங்கள் (Pilot whales) கடற்கரையில் ஒதுங்கி இறந்ததைப்பற்றி டாக்டர் மில்லர் எனக்கு எழுதியுள்ளார். அவ்வாறு சுறாமீன் எளிதில் கிடைக்காது கடற்கரையிலும் ஒதுங்காது

## கம்பரும் கூறினார்

மதுரைக் காஞ்சியின் பனைமீன் என்று வழங்கியிருப்பதும், அதே சொல் இன்றும் மீனவர் வாயில் வழங்குவதும் வியப்பாகும். தினை என்ற சொல் சிறியதையும் பனை என்ற சொல் பெரியதையும் குறித்து வழங்கியதைத் தெளிவாகத் திருக்குறளிலிருந்து புரிந்து கொள்ளலாம். ஆதலின் பனைமீன் என்று மதுரைக் காஞ்சி கூறியது, கடலில் வாழும் பெரிய மீன்; திமிங்கிலம் என்பது நன்கு தெளிவாகின்றது.

கம்பர் இந்த மரபைப் புரிந்தே 'தாலமீன்' என்று வடமொழி கலந்த பெயரில் இராமாயணத்தில் கூறினார். கற்பனையாகத் தோன்றினும் அது உண்மைச் செய்திகளின் அடிப்படையாகச் சொல்லப்பட்டது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் அதையும் நாம் இக் காலத்தில் புரிந்து கொள்ளாதிருப்பது வருந்துதற்குரியது.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து 'கவையன்' என்ற பெயரே, பனையேறிக் கெண்டை என்ற சிறிய மீனின் பண்டைத் திராவிட மொழித் தமிழ்ப் பெயர் என்பதும், அதுவே சிங்கள மொழியிலும் இந்திய-ஆரிய மொழிகளிலும் புகுந்தது என்பதும் தெளிவாயிற்று. மதுரைக் காஞ்சியில் உறப்பட்ட பனைமீனுக்கும் பனையேறிக் கெண்டைக்கும் யாதொரு தொடர்புமில்லை என்பதும் தெளிவாகின்றது. பனைமீன் கடலில் வாழும் திமிங்கிலமாகும். இந்தியக் கடல்களில் இருந்த திமிங்கிலத்தையே பெருமீன், பனைமீன் என்று சங்க நூல்கள் வழங்கின என்பதும் தெரிவாகின்றது.

கவையன் என்ற மீனை அறிவியலில் Anabas Scandens என்றும் ஆங்கிலத்தில் 'Climbing perch' என்றும் அழைப்பர்.

# இலக்கியத்தில் அறிவியல்

## மூன்று

## பொதுவியல்

# 1

# புகைக் கொடி

## தூமகேது

அண்மையில் தூமகேது ஒன்று (Comet Bennet) வானத்தில் காணப்பட்டதைப் பலரும் கேட்டிருப்பர். ஆங்கில இலக்கியத்தில் ஷேக்ஸ்பியர் தூமகேதுவைப் பற்றிப் பாடியுள்ளார்.

தமிழிலக்கியத்தில் சங்க காலத்திலேயே தூமகேதுவைப் பற்றிக் கூறியுள்ளனர். இதனை வானத்தில் மறைந்திருந்து தோன்றும் கோளாகக் கொண்டனர்; திங்கள். செவ்வாய் முதலிய கோள்களுடன் (Planets) தூமகேதுவையும் ஒரு கோளாகக் கொண்டனர்.

## துன்பம் தருவது

மனிதருக்கு வரும் கேடுகள், துன்பங்கள். கோள்களினாலேயே தோன்றுவன என்ற நம்பிக்கை தொன்று தொட்டு நிலவி வருகின்றது. கோளாறு, கிரகசாரம் என்ற சொல் வழக்குகள் இந்த நம்பிக்கையா தோன்றின.

தூமகேது வானத்தில் தோன்றுவது உலகிற்கும் மக்களுக்கும் பெருங்கேடு தரும் என்ற நம்பிக்கை சங்க காலத்திலேயே தமிழ் நாட்டில் இருந்தது. தூமகேதுவைப் 'புகைக் கொடி' என்று அழைத்தனர்.

'மைமீன் புகையினும் தூமந் தோன்றினும்
தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்'
—புறம் 117

'கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்'
—சிலம்பு. 10: 102 -103

சனி புகைந்தாலும், தூமகேது தோன்றினாலும் உலகிற்குப் பெருந் தீங்கு வரும் என்ற நம்பிக்கையைப் புறநானூறும் சிலப்பதிகாரமும் சொல்வதைக் கவனிக்க வேண்டும். கம்பரும் 'தூமகேது புவிக்குத் தோன்றிய' என்று மந்தரையின் தோற்றத்தைக் குறித்துப் பாடுகிறார்.

தூமகேது தோன்றினால் அரசர் இறப்பர், பஞ்சம் தலைவிரித்தாடும்; புயல் முதலிய பெருங்கேடுகள் தோன்றும் என்று பல நாடுகளிலும் நம்பிவந்தனர். ஷேக்ஸ்பியர் கூட இந்த நம்பிக்கையைப் பற்றித் தமது ஜூலியஸ் சீசர் நாடகத்தில் உரைத்துள்ளார்.

## கோள்கள் நான்கு

பழந்தமிழர் தூமகேதுவைக் கரந்துறைக் கோளாகக் கருதினர்; வானத்தில் மறைந்து உறைவதாகவும் இடையில் தோன்றி உலகிற்குக் கேடு விளைவிப்பதாகவும் கருதினர். இந்தக் கரந்துறைக் கோள்கள் நான்கெனக்

கருதினர். வட்டம், சிலை, நுட்பம், தூமம் என்ற நான்கு கோள்கள். தூமகேதுவில் உள்ளன என்றனர். தூமகேது கதிரவனை மையமாகக் கொண்டு சுற்றிச் செல்லும் போது வட்டவடிவமாகவும் அரை வட்டமாகவும் (Ellipses paraloals, Hyperdolas) செல்லுமென்பர்.

## பெயரும் விளக்கமும்

தூமகேதுகளை ஆராய்ந்த அறிஞர்கள், சில உண்மைகளைக் கண்டுள்ளனர். வட்டப் பாதையில் செல்லும் தூமகேதுக்கள் பல ஆண்டுகள் கழித்துத் திரும்பவும் வானத்தில் தோன்றுகின்றன. ஆனால் வில் வடிவமான பாதையில் செல்லும் தூமகேதுகள் திரும்பவும் வானத்தில் தோன்றுவதில்லை.

தூமகேதுகள் செல்லும் பாதைகளை நோக்கியும், தன்மையைக் கருதியும் அவற்றுக்குப் பழந்தமிழர் பெயரிட்டனர் என்று தெரிகின்றது. வட்டப் பாதையில் செல்வதை வட்டம் என்றும், வில் வடிவமான பாதையில் செல்வதை வில் என்றும் அழைத்தனர். வானத்தில் நுண்ணியதாகத் தோன்றிய தூமகேதுவை 'நுட்பம்' என்றும், வெண்மையான புகைபோலத் தோன்றியதைத் 'தூமம்' என்றும் அழைத்ததாகத் தெரிகின்றது.

தூமகேதுவை தற்காலத்தில் வால் நட்சத்திரம் என்று அழைப்பர்.

## 'துடைப்பக்கட்டை நட்சத்திரம்'

தூமகேதுவுக்கு நீண்டவால் போன்ற பகுதி இருக்கின்றது. இந்த வால் பகுதியிலிருந்து இருபது லட்சம் மைல்கள் நீளமாய் இருக்கும் என்பர். இந்த வாலின் ஒரு நுனி அடர்த்தியாகச் சிறுத்தும் மறு நுனி அடர்த்தியின்றி விரிந்தும் காணப்படும்; இந்த வடிவம் பெருக்கும் துடைப்பம் போல் இருப்பதால் 'துடைப்பக்கட்டை நட்சத்திரம்' என்று நாட்டு மக்கள் அழைக்கின்றது.

## தோன்றும் காலம்

1910 ஆம் ஆண்டு தோன்றிய தூமகேது (Halley's Comet) துடைப்பம் போல உருவுடன் ஒளி யீசிற்று. இதே வால் நட்சத்திரத்தை 1986 ஆம் ஆண்டு திரும்பவும் வானில் காணலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இது கி. மு. 240 இல் காணப்பட்டதாகக் கூறுகின்றனர்.

## எரி நட்சத்திரம்

இவை போலவே சங்க இலக்கியத்தில், வானிலிருந்து திடீரென விழும் உடுக்களையும் தெரிந்திருந்தனர் என்பது விளங்குகிறது. அவற்றை விண் வீழ் கொள்ளி என்பர். சிலர் எரி நட்சத்திரம் தூமகேதுவே என்பர். தூமகேதுவும் நிலத்திற்கருகில் வரும்போது விண்வீழ் கொள்ளிகள் போல விழுந்து அழிவைத் தந்துள்ளது. விண்வீழ் கொள்ளிகளில் எரி. குளமீன் தாள் என்று மூன்று வகைகளை (Meteorcites) புறநானூறு சொல்கிறது.

'அகன்ஞாலம் பெரிதுவெம்பினும்
குளமீனொடுந் தாட்புகையினும்'

—புறம். 395

## எரிகொள்ளி வீழ்தல்

இந்த விண்வீழ் கொள்ளிகளை நட்சத்திரங்களாகக் கருதினர். எரி குளமீன், தாள் என்ற வான்மீன் விசேடங்கள் தோன்றினும் புகையினும் உலகத்தில் வறுமை உண்டாகும் என்று எண்ணினர். தூமகேதுகள் நிலத்தின் அருகில் செல்லும் போது விண்வீழ் கொள்ளிகள் பல நிலத்தில் வீழ்ந்து மிக்க அழிவைத் தந்துள்ளதைக் கண்டுள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் அத்தகைய நிகழ்ச்சி ஏற்பட்டது.

விண் வீழ் கொள்ளியைச் சங்க காலத்தில் 'உற்கம்' என்றழைத்தனர் 'திசையிரு நான்கு முற்க முற்கவும்' என்று வரும் புறநானூறு 41 ஆம் பாட்டு வரியில், 'உற்க மென்றது வீழ்தலை' என்று உரை வரையப்பட்டுள்ளது.

எட்டுத் திசையும் எரிகொள்ளி வீழ்வதைக் கனவில் காணுதல் உற்பாதமாய் நிகழ்ந்ததெனச் சொல்லப்பட்டுள்ளது. எட்டுத் திசையும் எரிகொள்ளி வீழ்ந்த நிகழ்ச்சி உலகில் சில இடங்களில் 1872, 1902ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்தது. எரிகொள்ளிகள் வானத்தில் எரியும் பந்துபோல் காணப்பட்டு விரைவாகச் சென்றதைப் பலரும் கண்டனர் புறநானூறு 229 ஆம் பாட்டில், ஒரு எரிகொள்ளி வீழ்ந்ததாகக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். இது தூமகேதுவாகவும் இருக்கலாம்.

> 'அளக்கர்த் திணை விளக்காகக்
> கனையெரி பரப்பக் காலதிர்பு பொங்கி
> ஒருமீன் விழுந்தன்றால் விசும்பி னானே'
>
> —புறம். 229

## வீழ்ந்ததன் விளைவு

பூமிக்கு விளக்குப் போல ஒளிவிட்டுப் பெரும் ஓசையுடன் தீப் பரக்கக் காற்றால் பிதிர்ந்து கிளர்ந்து விழுந்ததாகவும், அதனால் ஏழாம் நாள் சேர அரசன் யானைக் கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை இறந்ததாகவும் கூறியதைப் பார்க்குங்கால், இது வெறும் எரிகொள்ளியல்ல தூமகேதுவே என்று தோன்றுகின்றது.

1008ஆம் ஆண்டு துங்குஸ்கா (Tunguska) என்ற ருசிய நாட்டு ஊரில் ஒரு தூமகேது வீழ்ந்ததைக் கண்டனர் அப்போது பூமி அதிர்ந்தது. காற்று கடுமையாக வீசிய

தால். மரங்கள் வேரோடு சாய்ந்தன. வானில் பந்துருவில் எரிகொள்ளி வெகு விரைவில் செல்வதைக் கண்டனர். தெற்குத் திசையில் விழுந்தது. இரவு வெகு நேரம் வரை வானம் வெளிச்சமாக இருளின்றி இருந்த, இதே போன்ற தொரு நிகழ்ச்சியைத்தான் புறநானூறு கூறுவதாகத் தெரிகின்றது, அந்த எரிகொள்ளி வடகிழக்கேவீழ்ந்ததாக வும் குறித்ததைக் கவனிக்கலாம். அது விழும்போது வானில், நட்சத்திர நிலை எப்படி அமைந்திருந்தது என்று உரைக்கின்றது.

தூமகேது வீழ்ததலை ஆராய்ந்த வானிலை ஆராய்ச்சி யாளர்கள், இந் நிகழ்ச்சியை ஆராய்ந்து பார்த்தால், மாந்தரஞ்சேரல் இரும்பொறை இறந்த காலத்தைக் கண்டு பிடிக்கலாம். பங்குனி மாதத்தில் நட்சத்திரம் வீழின் 'இராச பீடை' என்று சோதிட நூல் உரைக்கும்.

## 'மூதேவி நட்சத்திரம்'

தூமகேதுவை நாட்டு மக்கள் மூதேவி நட்சத்திரம் என்று அழைப்பர். மனிதருக்குக் கேடு தருவதால் மூதேவி என்றனர். புதுவைப் பகுதியில் வசை மொழியாக்த் 'தூமை' என்ற சொல் நாட்டு மக்களிடை வழங்குகிறது. இது, கேடு தருபவன் என்ற பொருளில் தூமகேதுவுக்கு ஒப்பிட்டுரைத்தல் வழக்காகும்.

தூமம் என்ற புறநானூற்று வழக்கே தூமை என்று வழங்குகின்றது. சிறு குழந்தைகளைத் திட்டும்போது 'வால் நட்சத்திரம்' என்று அழைப்பதும் இதே போன்ற வழக்கேயாகும்.

2

# கவைமகன்

## அரியவை

பழந்தமிழிலக்கியத்தில் அரிதாகக் காணப்படும்செய்திகள் பல. அவற்றில் குறுந்தொகையில் வரும் கவைமகன் பற்றிய செய்தி மிக அரிய செய்தியாகும்.

உரையாசிரியர்களும் பிற்காலப் புலவர்களும் இச் செய்தியைப் பற்றித் தெளிவான, பொருத்தமானவிளக்கம் தரவில்லை

## எண்பேரெச்சம்

''அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல்அரிது'' என்று சொல்வர். ஆனால் அந்த அரிய மானிடப் பிறப்பிலும் குறை தோன்றி விடுவதுண்டு. அத்தகைய குறைகளை எண்பேரெச்சமென்று பழந் தமிழர் வகைப்படுத்தினர். 'சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்ட முங் கூனுங் குறளும் ஊமும் செவிடும் யாவும் எருளும்' என்பவையே எண்பே ரெச்சம் என்று புறநானூறு கூறும்.

இந்த எண்வகைப் பிறப்புகளில் எளிதாகக் காணப்படுவன செவிடும் ஊமும் கூனுங் குறளுமாகும் சிறப்பில் சிதடு என்பது அறிவு குறைந்து மூளை சிறியதாய்ப் பிறக்கும் பிறப்பு. சிதட்டுக் காய்போல் தலையில் உள்ளீடு இல்லாத பிறப்பு, துஞ்சிய புலி இடறிய சிதடன் சங்கநூலில் வருபவன். இத்தகைய பிறப்பை ஆங்கிலத்தில் Cretin என்பர்.

கண், மூக்கு முதலிய உறுப்புகள் இல்லாமல் பிறக்கும் மணைக் கட்டைப் பிறவியை உறுப்பில் பிண்டம் என்றனர்.

'குழவி இறப்பினும் ஊன்றடி பிறப்பினும்' என்னும் புறத்தில் 'ஊன்தடி' என்று இஃது அழைக்கப்படுகின்றது. Paper thin mummy' என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இவற்றைவிட மிகவும் அரிதான பிறவிகள் 'மாவும் மருளும்' 'கையில் ஊமனும்', 'கூனுங் குறளும்' குறுந்தொகையிலும் கலித் தொகையிலும் வருகின்றார்கள்.

மானிடப் பிறப்பில் எத்தனை குறையுண்டோ அத்தனையும் பழந்தமிழர் அறிந்திருந்தவையே என்று தெரிகின்றது.

பழந்தமிழர் குறைப்பிறப்புகளை மட்டுமன்றி.மிகமிக அரிதாக நிகழ்ந்த வியப்புக்குரிய பிறப்புச் செய்திகளையும் அறிந்திருந்தனர் என்பது 'கவைமகன்' செய்தியிலிருந்து உணருகிறோம்.

## இரட்டைப் பிறவிகள்

இரட்டைப் பிறவியைப் பற்றியும் தமிழர் சில கருத்துகளைக் கொண்டிருந்தனர். தொல்காப்பியத்தில், இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா என்ற சூத்திரத்தை விளக்க வந்த சேனாவரையர்,

'எண்டிரட்டைக் கிளவியென்றது மக்களிரட்டை போல, வேற்றுமையுடையனவற்றை யன்றி, இலை யிரட்டையும் பூவிரட்டையும்போல ஒற்றுமையும் வேற்றுமையும் உடையனவற்றை யென்றுணர்க' என்று கூறுகிறார்.

மக்களிரட்டையில் வேற்றுமையுண்டு; அதுபோல் விலங்கிரட்டையும். இதனால் இரட்டைப் பிறவியாய்ப் பிறக்கும் மக்கள் வேற்றுமையுடனிருப்பர் என்பது சேனா வரையர் கருத்து.

இயற்கையில் பெரும்பாலும் இரட்டைப் பிறவிகள் வேற்றுமையாகவே இருப்பர். ஒரே பிறப்பில் பிறக்கும் இரு குழந்தைகள் ஆணாகவும் பெண்ணாகவும், அல்லது அடையாளங்கள் மாறுபட்ட இரு ஆண்களாகவோ பிறப்பதுண்டு. இவ்விரட்டையை 'உடன் பிறப்பிரட்டைகள்' (**Fraternal twins**) என்று கூறுவர். ஒரு தாய்க்குப் பல முறை பிறந்த பிள்ளைகள் போலவே இவ் விரட்டையரும் வேற்றுமையோடிருப்பர்.

## இரட்டை இலைகள்

இலைபிரட்டை என்பது தனித்தனியாகக் காணப் படும் இரண்டு இலைகளைக் குறிக்காது. ஆனால், தென்னை, புளியன், வேம்பு முதலிய மரங்களின் கூட்டிலை களில் காணப்படும் இரட்டை இலைகளையே (Bipinnate) குறிக்குமென்று கருதுகிறேன்.

இவ்விலைகள் தாம் ஒற்றுமையுடையனவாகவும், எதி ரெதிராக இருப்பதால் வேற்றுமையுடையனவாகவும் உள்ளன. இத்தகைய கூட்டிலைகளைச் செடிநூற்படி ஓரிலையாகவே கருதுவர். ஓரிலையே பிரிந்து இரண்டாகிய தென்று கருதலாம். இவ் விலைகளை இரண்டு வேறு வேறு இலைகளாகக் கருதுவதில்லை. ஓர் இலையிற் பிறந்த இரட்டை இலையாகவே கருதுவர். இதைக் கண்டு பிடிக்கச் செடிநூற்படி சில காரணங்கள் கூறுவர்.

ஆதலின், இரட்டைக் கிளவிக்கு இலையிரட்டையை உவமித்துக் கூறியது மிகவும் பொருத்தம்; நுட்பமான திட்பமான உவமானம்.

## மக்களிரட்டை

கூட்டிலை போலவே கூட்டுப்பூவும் உண்டு.

நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரையிலும் 'மக்களிரட்டையாய் மாறினம் பிறந்தியாம்' என்று வரும் மேற்கோள் செய்யுள் வரி, மக்களிரட்டை மாறியிருக்குமென்று பழந்தமிழர் கருதியதைக் காட்டுகின்றது. இது பெரும்பாலும் நிகழும் செய்தியை அடிப்படையாகக் கொண்டெழுந்த கருத்து.

இக் கருத்துக்கு எதிர்மாறாக மக்களிரட்டை ஒற்றுமையாகப் பிறப்பதுமுண்டு. இவைகளை ஒற்றுமையிரட்டைகளென்று (Identical twins) கூறுவர்.

தாயின் கருப்பையிலிருக்கும் ஒரு முட்டை கருவுற்று இரு பகுதியாகப் பிரிந்து வளர்ந்து, உருவும் அதன் நிழலும்போல் ஒற்றுமையாக இருக்கும்.

வேற்றுமையுடைய உடன் பிறப்பிரட்டைகள் தாயின் கருப்பையிலிருந்து ஒரே சமயத்தில் இரு முட்டைகள் கருவுற்று வளர்வதால் பிறப்பவை. இவை இரு முட்டைகளிலிருந்து தோன்றுவதால் வேற்றுமையுடையன.

ஒற்றுமையிரட்டைகள் ஒரே அடையாளங்களுடன் இருப்பதுமன்றி, ஒரே உணர்ச்சியுடையனவாக இருக்கும். ஆனால் பழந்தமிழர் பெரும்பாலும் வேற்றுமை யிரட்டைகளையேகண்டதால் இரட்டைக் கிளவிக்கு மக்களிரட்டையை உவமையாகக் கூறாமல் இலையிரட்டையை உவமையாகக் கூறினர்.

## இரட்டைக் கிளவி

இலையிரட்டை உருவும், கண்ணாடியில் காணும் எதிர் உருவும் (Image) போல் ஒற்றுமை மிகுந்து இருக்-

கிறது. அதுபோன்றே இரட்டைக் கிளவியும் சொல்லுக்குச் சொல் யாதொரு வேற்றுமையுமின்றி இருக்கிறது.

உருவின்றேல் எதிர் உரு இல்லை. இரட்டைக் கிளவியில் ஒரு சொல்லைப் பிரித்து எடுத்துவிட்டால் இரண்டாவது சொல்லுக்குப் பொருளில்லை. ஒலியின்றேல் எதிர் ஒலி ஏது?

ஆனால் அடுக்குச் சொல், இரட்டைக் கிளவி போலன்றிப் பிரிந்திசைக்கும்; மற்றும், சொல்லடுத்து வரும்போது மிகுதியை யுணர்த்தும். இரட்டைக் கிளவியோ உருவும் அதன் அடியிற் காணும் (அதன்) நிழலும் போல் யாதொரு மாற்றமுமின்றிப் பொருளில் ஆக்கமும் கேடுமின்றி, இரட்டையாக வரும்போது மட்டும் பொருள் தந்து, உரு பிரிந்தால் நிழல் அழிவதுபோல், பிரிக்கும் போது பொருளிழந்து விடுகின்றது.

## பிறப்புக் கணக்கு

இரட்டைப் பிள்ளைப் பேறு* எண்பத்தாறு தடவைகளுக்கு ஒரு முறையாக மக்களினத்தில் நிகழ்வதாக அறிவியற்படி கணக்கிட்டிருக்கின்றார்கள். அதிலும் ஒற்றுமை ஒ ற் று மை ம யி ர ட் டை மிக அரிதாகவே பிறக்கின்றன.

ஆனால் மிக மிக அரிதாக, தாயின் கருவில் வளரும் ஒரு முட்டையின் பிரிந்த இரு பகுதிகள் முற்றிலும் பிரியாமல் ஒட்டிக் கொண்டே பிறப்பதுண்டு. இத்தகைய ஒட்டிய ஒற்றுமையிரட்டை ஏறக்குறையப் பத்து இலக்கத்திற்கு ஒரு தடவை நிகழ்வதாகக் கூறுகின்றனர்.

---

*மாந்தரினத்தில் எண்பத்தாறு வெவ்வேறு பிள்ளைப் பேற்றுக் கொருமுறை இரட்டைப் பிள்ளையும், முப்பிள்ளைகள் 7396க்கு ஒரு முறையும், நான்கு பிள்ளைகள் 635956க்கு ஒரு முறையும், ஒட்டிய விரட்டைப் பிள்ளை, பத்திலக்கத்திற்கு ஒரு முறையுமாகப் பிறக்கும்.

இந்த இரட்டைப் பிள்ளைகள் மார்புப் பகுதியிலோ முதுகிலோ ஒட்டிக்கொண்டு பிறப்பதுண்டு. இந்த இரட்டைப் பிறவியைச் சீயத்து (Siamese twins) என்றழைப்பர்.

## குறுந்தொகையில் கவைமகன்

குறுந்தொகையில் வரும் கவை மகன் என்பது இத்தகைய ஒட்டிப்பிறக்கும் இரட்டைப் பிறவியே என்பதை நுண்ணறிதி னாய்ந்தால் தெளிந்து கொள்ளலாம்.

'கொடுங்கால் முதலைக்கோள்வள் ஏற்றை
வழிவழக்கு அறுக்கும் கானலம் பெருந்துறை
இனமீன் இருங்கழி, நீநின்
நயனுடை மையின் வருதி இவள்தன்
மடனுடை மையின் உயங்கும் யான்அது
கவைமக நஞ்சுண் டா அங்கு
அஞ்சுவல் பெரும! என் நெஞ்சத்தானே.'

என்ற குறுந்தொகை 324ஆம் பாட்டில் 'கவைமகன் நஞ்சுண்டாங்கு என்ற வரிக்குப் பொருத்தமாக உரை எழுதப்படவில்லை.

## பொருந்தா விளக்கம்

இரட்டைக் குழந்தைகளையுடைய தாய் இரு குழந்தைகளும் நஞ்சுண்டால், எதை முதலில் கவனிப்பது என்ற துயர நிலையை உவமையாக்கியிருப்பதாகக் கழறுவர். ஆனால் 'கவைமகன்' என்ற சொற்கு இவ்வுரை பொருத்தமான விளக்கம் தரவில்லை.

இப் பாட்டில் 'கவைமகன்' என்ற சொல்,மிக இன்றியமையாத சொல். இரு குழந்தைகளும் ஒரே சமயம் நஞ்சுண்பது நம்பக் கூடியதாக இல்லை. மற்றும் உடனுக்குடன் இரு குழந்தைகளுக்கும் மருந்து தருவது எளிதில் செய்யக் கூடியதாகும்.

தனைவனும் தலைவியும் கவைமகவு போன்றவர்கள்; 'இருதலைப் புள்ளின் ஓர் உயிர்' என்று சொல்லும்படி அவ்வளவு அன்புடையவர்கள். தோழி, தாய் போன்றவள். கவைமகவில் ஒன்று நஞ்சுண்டால் உடனே மறுமகவும் நஞ்சின் கொடுமையை உணர்கின்றது கவைமகவில் இரண்டும் ஒட்டிக் கொண்டு பிறப்பதால், உடனே ஒரு மகவுண்ட நஞ்சு மறுமகவையும் வருத்துகிறது அது போலவே, தலைமகளுக்கு வருந்துன்பம் உடனே தலைவியையும், தலைவிக்கு வருந்துன்பம் உடனே தலைவனையும் வருத்துகிறது.

## பொருந்தும் விளக்கம்

மடனுடைமையின் உயங்கும் என்று தலைவனை தடுத்தால், தலைவன் நயனுடைமையின் வந்தாலோ, அலர் எழவே தலைவி வருந்துவாள். தலைவனும் அதனால் வருந்துவான். எப்படிப் பார்க்கினும் இருவரில் ஒருவருக்குத் துன்பமுண்டாகும். அத்துன்பமே உடனே இருவரையும் வருத்தப்படுத்தும். ஆதலால் தோழி கவைமகவு நஞ்சுண்டதனால் வருந்தும் தாய்போல் வருந்துகிறாள்.

வாரேல் என்றால் தலைவனுத்கு அது நஞ்சு. வருக என்றால் அது தலைவிக்கு நஞ்சு. இதுவே பொருத்தமான விளக்கமாகும்.

சங்க நூல்களில் 'கவை' என்ற சொல்லாட்சியினை நன்றாக உணர்ந்தவர்கள், இதற்கு வெறுமனே இரட்டை என்ற பொருள் மட்டும் கொண்டிரார்.

'கவைமுறி யாஅத்து நாஞுரை மருங்கின்.'
(அகம். 257)

'கவையிலை யாரி னங்குழை கறிக்கும்.'
(அகம். 103)

'கவைமுட் கள்ளிப் பொரியரைப் பொருந்தி.'
(புறம். 322)

என்ற சங்கநூற் பாடல் வரிகளில் 'கவை' என்ற சொல் லாட்சி இதை வலியுறுத்தும்.

## கவை மகனார்

ஆத்தியின் இலை ஒன்றாகத் தொடங்கிப் பின்னர் இரண்டாகப் பிரிகிறது பாதி ஒன்றியும் பாதி பிரிந்தும் காணப்படுவதால் 'கவையிலை ஆர்' என்று அழைக்கப் படுகிறது. ஆதலால் 'கவைமகன்' என்ற சொல்லும் ஒன் றிய இரட்டைப் பிறவியையே குறிக்கும்.

இத்தகைய மிக அரிய செய்தியை அழகிய பொருத்த மான உவமையாகக் கையாண்டதால், பாடிய புலவர் கவைமகனார் என்றழைக்கப்பட்டார். 'கவைமகன்' என்ற சொல்லே அவருக்குப் பெயருமாயிற்று.

# 3

# கள்ளரின் வளைதடி

## வேட்டைக் கருவி

முக்குலத்தோரில் கள்ளரும் மறவரும் சிறுவிலங்குகளை வேட்டையாட வளைதடி, வளரி என்ற கருவியைப் பயன்படுத்தினர். ஓரிரு நூற்றாண்டுகளுக்கு முன்னர், இக் கருவியைப் பயன்படுத்துவதை விட்டு விட்டனர் என்று டாக்டர் ஒப்பர்ட் (Dr. Oppert) என்ற வெளிநாட்டு ஆராய்ச்சியாளர் எழுதியுள்ளார்.

இவ் வளைதடியால் முயல், மான் முதலிய சிறு விலங்குகளை எளிதில் வேட்டையாடிக் கொல்ல முடியும். இந்த வளை தடியை வீசி ஆளையும் கொல்லலாம் என்று கூறுவர்.

பாளையக்காரரின் படையிலிருந்த மறவரும் கள்ளரும் வளைதடியைப் படைக் கருவியாகப் பயன்படுத்தினர் என்று வரலாற்று ஆசிரியர்கள் எழுதியுள்ளனர்.

ஒருவன் வளரியால் கொல்லப் பெற்றால், வளரி வீசியவனைப் பிடித்துக் கொல்ல வேண்டும் என்று விரையாச்சிலைக் கல்வெட்டுக் கூறுவதாக சோமலெ எழுதியுள்ளார்.

## தோற்றம்

வளைதடி ஏறக்குறைய பிறைவடிமாக இருக்கும். ஒரு முனை மிகவுங் கனமாக இருக்கும். வளைதடியின் ஓர் ஓரம் கூர்மையாக இருக்கும். வளை தடியின் கனமற்ற நுனியைப் பிடித்துக் கொண்டு வீசி எறிவர். வளை தடிகளை இன்றும் கள்ளர் இனத்தாரிடையே பழைய குடும்பங்களில் காணலாம். சில சடங்குகளில் பூசைக்குரிய பொருளாகவும் கள்ளர் இதைப் பயன்படுத்துகின்றனர்.

வளை தடியை அனுப்பிப் பெண்ணைக் கொண்டு வருவது என்ற வழக்கம் கள்ளரிடையே இருந்தது. திருமணத்திற்கு முன் வளை தடியை இரு வீட்டாரும் மாற்றிக் கொள்வதுண்டு. 'மறவர் கொடுப்பது வளரிப் பிரசாதம்' என்றொரு பழமொழி உண்டு.

## பூமெராங்

இதுபோன்ற வளை தடியைப் பயன்படுத்தும் பண்டைக் குடி உலகத்திலேயே ஆஸ்திரேலியாவில்தான் இருப்பதாக மன்பதை ஆராய்ச்சி அறிஞர்கள் (Anthropologists) கூறுவர். ஆஸ்திரேலியாவில் உள்ள நாகரிகம் அடையாத மிகப் பழங் குடிகள், பூமெராங் (Boomerang) என்ற ஒரு வகை வளை தடியைக் கொண்டு சிறு விலங்குகளை இன்றும் வேட்டையாடுகின்றனர்.

வளை தடியை எவன் வீசுகின்றானோ அவன் கையில் அதே வளைதடி திரும்பவந்து சேரும் என்று கூறுகின்றனர். முற்பகல் கேடு சூழ்வானுக்குப் பிற்பகல் கேடு நேர்வதை

boomerang என்ற பழங்குடி மக்களின் சொல்லால் குறிப்பிடுவது ஆங்கில மொழியில் வழக்காகி விட்டது

## தந்தத்தாலான வளைதடி

மறவர், கள்ளர் பயன்படுத்திய வளை தடியைச் சங்க நூல்கள் குறிப்பிட்டுள்ளன என்றால் வியப்பாக இருக்கும். ஐங்குறுநூற்றில் வளை தடியைப்பற்றி ஒரு குறிப்பு உள்ளது.

'மாலை வெண்காழ் காவலர் வீச
நறும்பூம் புறவி னொடுங்குமுய லிரியும்'
—ஐங்குறுநூறு 421

வளைந்த வெண்காழையுடைய தடியை முயல் நீங்கின தாக ஐங்குறுநூறு கூறியுள்ளது.

மாலை என்ற சொல், 'மாலைபோல வளைந்த' என்று பொருள் தரும். காழ் என்பது உறுதியுடையதைக் குறிக்கும்.

வளை தடியை வைரம் பாய்ந்த மரத்தால் செய்வர் ஆதலின் 'காழ்' என்பது உறுதி வாய்ந்த மரத்தைக் குறிக்கலாம். வளைதடியை யானைத் தந்தத்தாலும் செய்வதுண்டு. ஆதலின் 'வெண்காழ்' என்று சொல்லி யிருப்பதால் இந்த வளைதடி யானைத் தந்தத்தால் செய்யப்பட்டதாகவே இருக்கலாம்.

சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் யானைத் தந்தத்தால் செய்யப்பெற்ற இரண்டு வளைதடி உள்ளன. வளைதடியை இருப்பினாலும் செய்வதுண்டு.

பெரும்பாணாற்றுப் படையில்,

'நோன்காழ் இரும்பு' (90—91) என்றும்
'குறுங்காழ் உலக்கை' (97) என்றும்

சொல்லியிருப்பதிலிருந்து 'காழ்' என்பது இரும்பையும் மர வைரத்தையும் குறிக்கும் என்பதை அறியலாம். ஐங்குறுநூற்றில் சொல்லப்பட்ட மாலை வெண்காழ் என்பது யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட வளைதடி என்றே எண்ண வேண்டும்.

## கள்ளர், மறவர்

மாலை வெண்காழை வீசியவர் காவலர் என்று ஐங்குறுநூறு கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். காவலர் என்பார் ஊர்க் காவலை மேற்கொண்டவராவர். மறவரும் கள்ளரும் ஊர்க் காவலராக இருந்த வழக்கம் ஆங்கிலேயர் இங்கு ஆட்சி செய்ய வருவதற்கு முன்னர் வரை, தெற்குத் தமிழகத்தில் தொன்று தொட்டு இருந்து வந்தது இதை எட்கார் தர்ஸ்டன் என்ற ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டுள்ளார்.

ஐங்குறுநூற்றில் கூறப்பட்ட காவலர் மறவர், கள்ளர் இனத்தாராகவே இருக்கலாம். அண்மைக் காலம் வரை கள்ளரித்தனத்தாரே களவு செய்துவந்ததும் அதோடு ஊதியத்திற்காகப் பிறர் களவு செய்யாதபடி ஊராரைக் காப்பாற்றிக் காவலராக இருந்ததும் கவனிக்கத்தக்கது. ஆதலின் சங்க காலத்தில் மறச் செயலில் ஈடுபட்ட மறவரே ஊர்க்காவலராகவும் இருந்திருப்பர் என்பதில் ஐயமெழுவதற்கில்லை. இக் காவலர் வழி வந்த மறவரும் கள்ளரும் அண்மைக்காலம் வரை வளைதடியால் முயல் முதலிய சிறு விலங்குகளை வேட்டையாடி இருக்கின்றனர் என்பதைக் கவனிக்க வேண்டும்.

## குணில்

ஐங்குறுநூறு 'மாலை வெண்காழ்' என்றழைத்த வளைதடியையே 'குணில்' என்று வேறொரு ஐங்குறு நூற்றுப் பாடலும் சிலப்பதிகாரமும் உரைப்பதாகத் தெரிகின்றது.

'பகன்றைக் கண்ணிப் பல்லான் கோவலர்
கரும்பு குணிலா மாங்கனி யுதிர்க்கும்'
—ஐங்குறுநூறு 87

'கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்'
—சிலம்பு, ஆய்ச்சியர்குரவை

குணில் என்றது வளைதடியே என்று கருத இடமிருக்கின்றது. குணில் என்ற சொற்குப் பொருள் குறுந்தடி என்று கூறப்பட்டுள்ளது. குணில் என்ற சொல்லே வளைவு என்ற பொருளைத் தரும். குணக்கு, குணலைக் கூத்து ஆகிய வழக்குகளில் 'குண' என்ற வேர்ச்சொல் வளைவுப் பொருளைத் தரும். ஆதலின் குணில் வளைவான குறுந்தடியைக் குறிக்கும்.

## குறுந்தடி

'குணிலே குறுந்தடி' என்று சேந்தன் திவாகரம் கூறியுள்ளது. திவாகரத்தில் கடிப்பிற்கும் குணில் என்ற பெயர் கூறப்பட்டுள்ளது. 'குணில் வாய் முரசு' என்று குறுந்தொகையில் இந்தக் கடிப்பு கூறப்பட்டுள்ளது. கரும்பை வளைதடி போலப் பயன்படுத்தி மாங்கனியை உதிர்த்ததை ஐங்குறுநூறும், மேய்கின்ற பசுவின் கன்றையே குறுந்தடியாகக் கொண்டு கனியை உதிர்த்ததைச் சிலப்பதிகாரமும் உரைத்துள்ளன. குறுந்தடியைக் குறுங்கோல் என்று புறநானூறு புகழ்கிறது

'குறுங்கோ லெறிந்த நெடுஞ்செவிக் குறுமுயல்'
—புறம். 336

நெடுஞ்செவிக் குறுமுயலைக் கொல்ல, குறுங்கோலை எறிந்ததாகப் புறநானூறு குறித்ததைக் கவனிக்க வேண்டும். இந்தக் குறுங்கோலும் வளைதடியாகவே இருக்க வேண்டும். வெறுங் குறுகிய கோலை எறிந்து முயலைக் கொல்வது இயற்கையில் முடியாத செயலாகும்.

ஆதலின் இங்குக் கூறப்பட்ட குறுங்கோல் சிறப்புப் பெயராக, வளை தடியையே குறிக்கும் என்பதை உணர வேண்டும். ஐங்குறுநூற்றில் மாலை வெண்காழைக் கொண்டு முயலை எறிந்த செய்தி உள்ளது

குறுங்கோல் என்பதற்குக் குறுந்தடி என்று பொருள். ஆனால் குறுங்கோலும், குணிலும் சிறப்புப் பெயர்களாக இடத்திற்கேற்ப வளை தடியையே குறிக்கும் என்று கருதலாம். சிறுகோல் என்ற சொல் சிறிய கோல் என்று பொதுவாகப் பொருள் தரினும், குதிரையோடு சேர்த்து உரைக்கும் புறநானூறு, நற்றிணை, முதலிய சங்கப் பாடல்களில் சிறப்பாகக் குதிரைச் சாட்டையைக் குறித்து வழங்கினதை இது சார்பாக நினைவு கொள்ள வேண்டும்.

'சிறுகோ லுளையும் புரவி'...... ..

—புறம். 352

'சிறுகோற் சென்னியா ரேற்றன்ன'........

—நற்றிணை 26

பாணர் பாடிய இந்த இரு பாடல்களிலும் சிறுகோல் என்ற சொல் குதிரையை விரையச் செலுத்தும் முட்கோலைக் குறித்தது என்று அறிஞர் பொருள் சொல்வர். 'நாயகரும் மணியகாரரும் குதிரை மேலிருந்து கோல் தா என்றால் மத்திகைக் கோலாம்; கள்ளற் கோலாம்' என்று இளம்பூரணர் கூறிய உரையையும் இது சார்பாக எண்ணிப் பார்க்க வேண்டும். ஆதலின் குறுங்கோல், குணில் என்பன வளை தடியையும் சிறப்பாகக் குறிக்கும் என்பதை உணர வேண்டும்.

இதுவரை கூறிய விளக்கத்திலிருந்து முயலை எறிவதற்குப் பயன்படுத்தப்பட்ட மாலை வெண்காழ், குறுங்கோல், மற்றும் மாங்கனியை வீழ்த்தப் பயன்படுத்தப்பட்ட குணில் ஆகியவை வளை தடி என்றே கருத வேண்டும்.

கள்வர்—கள்ளர்

'வெல்போர்க் கவுரியர் நன்னாட் டுள்ளதை
மண்கொள் புற்றத் தருப்புழை திறப்பின்
ஆகொள் மூதூர்க் கள்வர் பெருமகன்
ஏவல் இளையர் தலைவன் மேவார்
அருங்குறும் பெறிந்த ஆற்ற லொடு பருந்துபடப்
பல்செருக் கடந்த செல்லுறழ் தடக்கைக்
கெடாஅ நல்லிசைத் தென்னன் றொடா'

அகநானூறு 342ஆம் பாட்டில் கள்வர் பெருமகனும் அவனுடைய ஏவலைச் செய்யும் இளையர் தலைவனும் ஆகியவனின் குறும்பை ஒழித்த தென்னவனின் செய்தி உரைக்கப்பட்டிருப்பதால், கள்வர் என்று சங்க காலத்தில் அழைக்கப்பட்ட கள்ளர், அக்காலத்திலேயே தென் தமிழ் நாட்டில் இருந்தனர் என்று கருதலாம். மிகப் பிற்காலத்தில் தஞ்சையிலிருந்து ஆண்ட மராட்டிய அரசைக் கள்ளர் இனத்தார் ஆட்டிப் படைத்ததை இது சார்பாக நினைவு கூரலாம்.

'உருமெனச் சிலைக்கும் ஊக்கமொடு பைங்கால்
..........................................
கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணங்கிய மாமண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம் பெறினும்'
— அகம். 61

கள்வர் கோமான் என்றழைக்கப்பட்ட புல்லி,வேங்கட மலையில் இருந்து ஆண்டான் என்று அகநானூறு 61 ஆம் பாட்டு குறிப்பிட்டுள்ளது. இந்தக் கள்வர்கோமான் மழ நாட்டை வென்றதும் உரைக்கப்பட்டுள்ளது.

## வடபுலத்தவரோ

கள்ளர் என்ற இனத்தார் வடக்கே இருந்து தமிழகத்துக்கு வந்தவரென வரலாற்று ஆசிரியர்கள்கருதுகின்றனர் கள்ளர் வேங்கடத்திலும் தொண்டை நாட்டிலும் இருந்து தெற்கே சென்றவராகக் கருதுவர்.

## வரலாற்றில் நிலைத்தவரே

புதுக்கோட்டை அரசர் கள்ளர் மரபினராயினும் தொண்டைமான் என்று சொல்லிக் கொள்வதைக் காண லாம். தெலுங்கு மொழியில் 'கலௌனு' என்று வழங்கும் சொல், போரையும் பூசலையும் குறிப்பதாகக் காட்டி யுள்ளனர்.

'கடுங்கண் மழவர் களவுழ வெழுந்த' என்று வரும் அகநானூறு 91 ஆம் பாட்டு வரியில் 'களவுழ' என்ற சொல் போர் புரிய என்று பொருள் தருவதைக் காணலாம்.

மழவர் ஒரு போர் வீரர் என்று அகநானூற்றுப் பழைய உரை காட்டுகின்றது.

புல்லி என்ற கள்வர் கோமான் மழநாட்டை வென்ற தாகக் கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். கொங்கு வேளாளரில் ஒரு கிளைக்கு இன்றும் புல்லி என்ற பெயர் இருப்பதையும் கவனிக்க வேண்டும்.

கள்ளர் வகுப்பினர் மழ நாட்டிலும் பாண்டி நாட்டி லும் சங்க காலத்திலேயே குடியேறியிருந்தனர் என்று கருதலாம். இந்தக் கள்ளரே சிறப்பாக வளை தடியைப் பயன் படுத்தியிருக்கின்றனர் என்று தெரி கின்றது.

4

# நரி விருத்தம்

## கதைகளில் குழப்பம்

திருத்தக்க தேவர் பாடியதாக நரி விருத்தம் என்றொரு கதை வெளிவந்திருக்கிறது. திருத்தக்கதேவர் கூறும் கதையும் தேவாரத்தில் அப்பர் குறிப்பிடும் நரிவிருத்தமும் ஒன்றா, வெவ்வேறா என்பது இக் கட்டுரையில் ஆராயப் படும்.

நரிவிருத்தம் என்பதில் வரும் விருத்தம் என்ற சொல்லை விருத்தாந்தம் என்பதாகக் கொண்டு பொருள் கண்டனர் சிலர். விருத்த யாப்பால் ஆனதால் விருத்தம் எனப் பெயர் பெற்றது என்று பலரும் கருதுகின்றனர்.

நீதிக் கதைகளில் விலங்குகள், பறவைகள் பேசுவது போல் வருவது உண்டு. தொல்காப்பியர் காலத்தில் கூட அத்தகைய கதைகள் இருந்தன என்பதையும் உணர்கிறோம். தொல்காப்பியர் உரையில் நச்சினார்க்கினியர் 'சிறு குரீஇ உரை' ஒன்று குறிப்பிடுவது, ஒரு குருவிக் கதையை என்றே அறிகிறோம்.

## சைனர் கதைகள்

சைனப் புலவர்கள் 'கிளி விருத்தம்', 'எலி விருத்தம்' என்ற பெயர் கொண்ட நூல்களை இயற்றியிருந்தனர் என்பதை,

'குண்டலகேசி விருத்தம்', 'கிளி விருத்தம்', 'எலி விருத்தம்', நரிவிருத்தம் முதலானவற்றிற்குக் கலித்துறைகளும் உள்ளவாம்'

என்று வரும் வீரசோழிய உரையின் வழி உணர்கிறோம். ஆனால் இப்பொழுது வெளி வந்துள்ள திருத்தக்கதேவர் பாடியதாகக் கூறப்படும் 'நரிவிருத்த'த்தில் கலித்துறைப் பாடல்கள் இல்லை.

## அறிஞர் கருத்துகள்

திரு மு. இராகவய்யங்கார் கலித்துறைகளுடைய கிளி விருத்தம், எலி விருத்தங்களுடன் நரிவிருத்தமும் தவறாகச் சேர்க்கப்பட்டதெனக் கருதினார். ஆனால் அக்கருத்துக்கு வேறொரு சான்றும் இல்லை. கலித்துறைகளுடன் கூடிய நரி விருத்தம் என்றதொரு வேறு நூல்இருந்திருக்க வேண்டு மென்றே தெரிகின்றது. அந்த நூல்தான் தேவாரத்தில் அப்பர் குறிப்பிடும் நரிவிருத்தமாகும்.

தேவர் கூறும் நரி விருத்தக்கதையையே அப்பர் குறிப் பிடும் நரிவிருத்தக் கதையெனச் சிலர்கருதினர். நரிவிருத்தம் தேவர் கதை போன்றதோ, பஞ்ச தந்திரத்தில் கரடக தமனர் எனவரும் நரிகளின் கதை போன்றதோ விளங்க வில்லை யென்று தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் எழுதி யிருக்கிறார். ஆனால் நாவுக்கரசர் குறிப்பிடும் நரி விருத்த கதை, தேவர் கூறும் கதையுமன்று; பஞ்ச தந்திரத்தில் வரும் கரடகதமனர் என்ற நரியின் கதையுமன்று. நாவுக்கரசரே பிறிதொரு பாடலில் ஒரு நரிக் கதையைக் குறிப்பிடுகிறார்.

## ஒரு நரிக் கதை

தேவர் பாடிய நரிக் கதை பஞ்சதந்திரத்தில் மித்ர லாபப் பகுதியில் வருகின்ற கதையைத் தழுவி வருகின்றது. வேடன் ஒருவன் மானைக் கொன்று, தூக்கி வரும் வழியில் பன்றியைக் கண்டான் அதை அம்பால் எய்தபோது பன்றி தாக்க வேடன் இறந்தான். பன்றியும் இறந்தது. வேடனும், பன்றியும் பாம்பை மிதித்து விடவே, பாம்பும் இறந்தது. அங்கே வந்த நரி, வேடன் ஒரு திங்களுக்கும், மானும், பன்றியும் இரண்டு திங்களுக்கும், பாம்பு ஒரு நாளைக்கும் உதவுவர் என்று எண்ணி, அன்றைய உணவுக்காக விற்குதையைக் கடிக்கவும் வில்லால் மோதுண்டு இறந்தது.

## மற்றொரு கதை

தேவர் கூறும் கதையில் பன்றியில்லை, யானையுண்டு. அம்பு பட்ட யானை புற்றின் மேல் ஏறியிருந்த வேடனைத் தாக்க, யானை முகத்தில் பட்ட அம்பு புற்றில் புகவும் பாம்பு சீறி வேடனைக் கடித்தது. தேவர் கூறும் நரிக்கதை பஞ்சதந்திர கதையைவிட அழகாகவும் பொருத்தமாகவும் இருக்கின்றது.

## நாவுக்கரசரின் நரிக்கதை

நாவுக்கரசர் தேவாரத்தில் குறிப்பிடும் நரிக்கதை புத்த ஜாதகத்தில் வரும் கதை என்பதைப் பலரும் உணரவில்லை. அக் கதை பின்வருமாறு:

வாரணாசியில் பிரம்மதத்தன் ஆண்டபோது போதிசத்துவர் சக்கனாக மறுபிறப்பு எய்தினார். அச்சமயம் அவ்வூரில் வாழ்ந்த பார்ப்பன இளைஞன் ஒருவன் தக்கசிலம் சென்று விற்பயிற்சியில் சிறந்த வீரனாகவே, அவனுடைய குரு தன் மகளையே அவனுக்கு மணமுடித்துக் கொடுத்தார்.

பார்ப்பனன் தன் மனைவியை அழைத்து வாரணா சிக்கு வரும் வழியில், ஐம்பது வழிப் பறி கொள்வோர் அவர்களை வளைத்துக் கொண்டனர். ஆனால் பார்ப்பன இளைஞன் அக் கள்வர்களை அம்பால் கொன்று, கள்வர் தலைவனை மற்போரில் வென்று, அவன் தலையை வெட்ட வாளைத் தருமாறு தன் மனைவியைக் கேட்டான். ஆனால் அவன் மனைவி, கள்வர் தலைவனின் மேல் காமுற்று, வாளால் தன் கணவன் கழுத்தையே வெட்டி விட்டாள்.

பின்னர்க் கள்வர் தலைவனுடன் கூடி அவள் செல்லும் போது ஓர் ஆறு குறுக்கே வந்தது. ஆற்றை நீந்தியே கடக்க வேண்டும். பார்ப்பனன் மனைவியின் ஆடை அணி களையும், அவளையும் தூக்கி ஆற்றைக் கடப்பது முடியா தாகையால் முதலில் ஆடை அணிகளைத் தூக்கிச் சென்று அடுத்த கரையில் சேர்ப்பித்து மீண்டும் வந்து அவளைக் கொண்டு சேர்ப்பிப்பதாக இருவருக்கும் உடன்பாடு ஆகியது.

ஆனால், அந்த கள்வர் தலைவனோ அக்கரை அடைந் ததும் கணவனைக் கொன்றவளை நம்ப முடியாதென்று கருதி, அவளை விட்டு விட்டுச் சென்று விட்டான். பார்ப் பனன் மனைவியோ கணவனையும் காதலனையும் இழந்து அழுது கொண்டிருக்கும் போது, ஒரு நரி ஆற் றோரமாக ஓடுவதைக் கண்டாள்.

நரியின் வாயில் ஓர் இறைச்சித் தசை இருந்தது. ஆற் றோரம் ஓடும்போது நரியானது ஒரு மீன் துள்ளி விழுந் ததைப் பார்த்தது. மீனைக் கண்டதும் நரி தசையைக் கீழே போட்டு விட்டு மீனைக் கவ்வப் பாய்ந்தது. ஆனால் அந்த மீனோ நரி கவ்வுமுன் ஆற்றில் குதித்து ஓடிவிட்டது. அதற்குள் ஒரு பறவை தசையைத் தூக்கிக் கொண்டு ஓடி விட்டது. நரி தசையையும் இழந்தது. மீனையும் இழந்தது.

இக் காட்சியைக் கண்ட பார்ப்பனன் மனைவி, நரியின் ஏமாற்றத்தைக் கண்டு தன் குற்றத்தை உணர்ந்தாள். இக் கதையையே நாவுக்கரசர்,

'நரிவரால் கவ்வச் சென்று நற்றசை இழந்த தொத்த
தெரிவரான் மால்கொள் சிந்தை தீர்ப்பதோர்
சிந்தை செய்வார்'
4-27-5

என்ற தேவார வரிகளில் பாடினார்.

## கதை ஒன்று
## பாடல் முறை வேறு

இதே கதையினையே விருத்தப் பாக்களால் சைனர் பாடிய நூல் ஒன்று நாவுக்கரசர் காலத்தில் இருந்திருக்க வேண்டும். நாவுக்கரசர் சைனராயிருந்தவர்; மற்றும் பௌத்தரோடு வாதிட்டு வென்றவர். ஆதலால் புத்த சாதகக் கதைகள் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். சைனர் எழுதிய கதைகளையும் அவர் அறிந்திருப்பார். அதனால்,

'எரி பெருக்கவ ரவ்வெரி யீசன
துருவ ருக்கம தாவ துணர்கிலார்
அரிய யற்கரியானை யயர்த்துப்போய்
நரிவிருத்தம தாகுவர் நாடரே'

என்ற நாவுக்கரசர் தேவாரப் பாடலில் குறிப்பிடும் நரி விருத்தக் கதை மேற்கூறிய புத்த சாதகக் கதையென்றே தெரிகின்றது.

சிவனை அயர்த்துப் பிற தெய்வங்களை நாடுபவர் நரி விருத்தத்தில் வரும் நரியின் கதியையே அடைவர் என்பதே நாவுக்கரசர் கருத்தாகும். அஃதாவது 'அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டவர்' கதியாவர்.

நரி தசையை இழந்த கதை, இவ்வுண்மையை விளக்கு மாறு போல் தேவர் உரைத்த நரிக்கதை இவ்வுண்மையை விளக்காதாகலின் நாவுக்கரசர் குறிப்பிடும் நரிவிருத்தக் கதை புத்த சாதகக் கதையே என்பது விளங்கும். இக் கதை யையே சைனர் ஒருவர் விருத்தப் பாவால் பாடியிருக்க வேண்டும்.

'கூட்டினார் கிளியின் விருத்த முரைத்ததோ
ரெலியின் றொழிற்
பாட்டு மெய் சொலிப் பக்கமே செலு மெக்கர்
தங்களை'

என்று வரும் பாடலிலிருந்து கிளியின் கதையையும், எலி யின் கதையையும் விருத்தப்பாக்களால் சைனர் பாடினர் என்பது தெரிகின்றது. ஆதலால் நரியின் கதையையும் விருத்தப் பாக்களால் சைனர் பாடியிருப்பர் என்பதில் ஐயமில்லை. அந்த நரி விருத்தமும், நாவுக்கரசர் குறிப் பிடும் 'நரி வரால் கவ்வச் சென்று நற்றசை யிழந்த' கதை யையே என்பது தெளிவாகின்றது.

# 5

# நீர் வழிபாடு

## நீர்ப்பெயற்று - துறைமுகம்

சங்க நூலான பெரும்பாணாற்றுப்படையில் காஞ்சி நகரிலிருந்து ஆண்ட இளந்திரையனைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. காஞ்சிபுரத்துக்கு அருகில் இருந்த நீர்ப்பெயர் என்ற துறைமுகம் இத்தப் பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்ப் பேரறிஞர் உ. வே. சாமிநாதய்யர் பத்துப்பாட்டு நூலைப் பதிப்பித்தபோது மூன்றாம் பதிப்பின் முகவுரையில் நீர்ப் பெயற்று என்னும் ஊரின் பெருமை, பட்டினத்தின் சிறப்பு ஆகியவைகளை உரைத்துள்ளார். பட்டினம் என்பதற்கு விளக்கமாக இதனை மகாபலிபுரமென நினைத்தற்கு இடமுண்டு என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பாணாற்றுப் படைக்கு நச்சினார்க்கினியர் கூறிய உரையின் அடிக்குறிப்பில் மதுராந்தகம் தாலுக்காவில் உள்ள 'நீர்ப்பெயர்' என்ற ஊர் நீரபெ'பயற்று' என்ற ஊராக இருக்கலாம் என்று உ. வே. சாமிநாதய்யர் குறித்தார்.

## உ. வே. சா. முடிவு

பெரும்பாணாற்றுப்படை வரிகளைக் கூர்ந்து கவனித்தால் நீர்ப்பெயற்று என்ற ஊர் காஞ்சி நகருக்கு அருகில் இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. ஆதலின் உ. வே சாமிநாதய்யர் முகவுரையில் அடிக்குறிப்பாக நீர்ப் பெயற்று என்ற ஊர் மகாபலிபுரமாக இருக்கலாம் என்று கருதியதே பொருத்தமானது என்று தெரிகின்றது.

அதற்குச் சான்றாக இன்றும் மகாபலிபுரத்தில் காணப்படும் அர்ஜுனன் தபசு என்ற மாபெரும் புடைப்புச் சிற்பமும் கடற்கரைக் கோயிலும் உள்ளன.

நீர்ப்பெயற்று என்ற ஊர் மாமல்லபுரமாக இருக்கலாம் என்பதை உ. வே. சாமிநாதய்யரைப் பின்பற்றி, மறைந்த தமிழறிஞர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்களும் பத்துப் பாட்டு என்ற ஆராய்ச்சி நூலில் கோடிட்டுக் காட்டியுள்ளார். இக் கருத்து சரியானதே என்பது இங்கே விளக்கப்படும்.

## மாமல்லபுரம்

மதுராந்தகம் தாலுக்காவில் உள்ள நீர்பெயர் காஞ்சிபுரத்திலிருந்து வெகு தொலைவில் உள்ளது ஆதலின், இது பெரும்பாணாற்றுப் படையில் கூறிய நீர்ப்பெயற்று என்ற ஊராக இருக்க முடியாது.

மாமல்லபுரம் பல்லவர் காலத்தில் காஞ்சிபுரத்துக் கருகில் இருந்த பெரிய சிறந்த துறைமுகமாகும். பல்லவர் காலத்தில் வாழ்ந்த திருமங்கையாழ்வார் இந்தத் துறை முகத்தைப் பற்றிப் பாடியுள்ளார். இவர் காலத்தில் இது 'ஜலசயனம்' என்றழைக்கப் பட்டது. திரு. உ வே. சாமிநாதய்யர் எழுதிய முகவுரையில் 'இதனை மகாபலிபுரமென நினைத்தற் கிடமுண்டு' என்று அடிக் குறிப்பில் காட்டித் தக்கயாகப்பரணி 54 ஆம் பாட்டின் உரையைப் பார்க்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தக்கயாகப் பரணியின் பழைய உரையை ஆராய்ந்தால் நீர்ப் பெயற்று என்று பெரும்பாணாற்றுப் படையில் அழைக்கப்பட்ட மகாபலிபுரத்தில் ஜலசயனம் செய்த விஷ்ணுவையே குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

''தன் கோயிலும் படுக்கையுமான சமுத்திர சலத்தை விட்ட வன துர்க்காதேவி'' என்று பழைய உரை கூறியுள்ளது. இந்த உரையை உ. வே. சாமிநாதய்யர் நுட்பமாகக் குறிப்பிட்டதன் காரணம் தன் கோயிலும் படுக்கையும் உடைய விஷ்ணு நீர்ப் பெயற்று என்ற மகாபலிபுரத்தில் இருந்ததால் என்பதைக் காட்டவேயாகும்.

வன துர்க்கையைவிட விஷ்ணுவிற்கே, சமுத்திரஜலம் கோயிலும் படுக்கையுமாகும் என்பதும் விளங்குகின்றது.

## பெயர் கொண்ட ஊர்கள்

பெயர் என்ற சொல் முடிவுடன் வரும் ஊர்ப் பெயர்கள் இக்காலத்தில் வழங்குவது போன்று சங்க காலத்திலும் வழங்கியுள்ளது. மதிற்பெயர், கானப்பேர் (கான பெயர்) என்ற ஊர்கள் சங்க காலத்தில் இருந்துள்ளன. ஏமப்பேர் பெரும்பேர் என்ற ஊர்ப் பெயர்கள் இன்றும் தமிழ் நாட்டில் வழங்குகின்றன.

மரக்காணம் என்ற ஊர் சிறுபாணாற்றுப் படையில் 'எயிற் பட்டினம்' என்றும், 'மதிற்பெயர்' என்றும் அழைக்கப்பட்டது. இந்த ஊரையே யவனர்கள் சங்க காலத்தில் 'சோபட்மா'' என்றழைத்தனர் என்று அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சோ பட்டினம் என்ற பண்டைக்காலப் பெயர் 'சோபட்மா' என்று யவனர் வாயில் மாறி வழங்கினகாக கருதலாம். சோ என்ற சொல் மதிலைக் குறித்து வழங்கியதைச் சிலப்பதிகாரத்தில் காணலாம்.

## மதிற் பெயர் கொண்டன

மதிலொடு பெயரிய பட்டினம் என்ற சங்ககாலப் பட்டினப் பெயர் மதிலை அடிப்படையாகக் கொண்டு சிறுபாணாற்றுப் படையில் வழங்கியது போல 'நீர்ப் பெயற்று' என்ற பெயரும் நீருடன் தொடர்புடையது என்று கருத வேண்டும். மதில் சூழ்ந்த பட்டினமாக இன்றைய மரக்காணம் சங்ககாலத்தில் இருந்ததால் மதிலின் பெயர் தாங்கிய பட்டினம் என்று அழைக்கப்பட்டது.

சோழர் காலக் கல்வெட்டுக்களில் 'மதிரை' என்றே பாண்டிய நாட்டின் தலைநகரான இன்றைய மதுரை அழைக்கப்படுவதால் மதுரையும் மதில் என்ற கோட்டைச் சுவர் சூழ்ந்த நகரானதால் மதிரை என்று அழைப்பட்டுப் பின்னர் 'மதுரை' என்று மாற்றப்பட்டு, அதற்கு ஒரு புராணக் கதையும் படைக்கப்பட்டதாகக் கருத இடமுண்டு.

மதிற்பெயர் என்ற ஊர் சங்க காலத்தில் இருந்ததால் 'நீர்ப் பெயற்று' என்று பெரும்பாணாற்றுப்படையில் வழங்கிய ஊரையும் 'நீர்ப்பெயர்' என்று தவறாகப் பிற் காலத்தில் கூறினர்.

## வரலாற்றில் வழிபாடுகள்

நீர்வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட ஊரானதால் 'நீர்ப்பெயற்று' எனப்பட்டது என்பதைப் புரிந்து கொள்ளாததால் 'நீர்ப்பெயர்' என்று பாமர மக்கள் வாயில் மாறினதாகத் தெரிகின்றது.

நாக வழிபாடு, தாய்த்தெய்வ வழிபாடு ஆகியவை பண்டைக் காலத்திலேயே, வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்திலேயே வழங்கியவை. அதுபோன்றே நீர் வழிபாடு சங்க காலத்தில் மாமல்லபுரத்தில் வழங்கியதால் 'நீர்ப்பெயற்று' என்ற பெயரில் அழைப்பட்டது.

நீர்ப்பேர், நீர்ப்பெயர் என்ற பெயர்கள் சங்க காலத்தில் மாமல்லபுரத்திற்கு வழங்கப்படவில்லை. 'நீர்ப்பெயற்று' என்பதே சரியான பெயராகும். இதைத் தெளிவாக எடுத்துக் காட்டுவதற்குப் பல்லவர் காலத்துக் கற்சிற்பங்கள் சான்று கூறுகின்றன.

## அரண்மனையும் ஆலயமும்

மாமல்லபுரத்தில் ஒரே கருங்கல்லால் ஆன கோயில்கள் உள்ளன. புத்த சைத்தியமும் அக்காலத்தில் தமிழகத்திலிருந்த வீட்டு அமைப்பைப் பின்பற்றி எழுதப்பட்டன என்று அறிஞர்கள் சில உரைப்பர்.

கடவுளுக்கு ஏற்பட்ட கோயில்கள் எல்லாம் அரசனின் வீட்டு அமைப்பைப் பின்பற்றியது என்பது தெளிவாகத் தெரிந்ததாகும். கோ இல் என்ற உரைக்கும்போது அரசனுடைய வீடு என்று பொருள் முதலில் தோன்றியது. பின்னரே கடவுளின் இல்லமாக மாறியது என்பதைக் கவனிக்க வேண்டும்.

மாமல்லபுரத்தில் ஒரு கல்லால் அமைக்கப்பட்ட புடைப்புச் சிற்பம் பல்லவனின் ஆராய்ச்சித் திறனைக் காட்டுகின்றது. புத்த சைத்தியப் பழங்குடி மக்களான தோடர்களின் குடிசை போல இருப்பதாகச் 'சிம்மர்' என்ற அறிஞர் கூறியுள்ளார்.

மாமல்லபுரத்தில் உள்ள திரௌபதி ரதம், வேயப்பட்ட குடிசை போல இருப்பதாகக் கருதினர். பெரும்பாணாற்றுப்படையில் புல்லால் வேயப்பட்ட இத்தகைய குடிசைகள் கூறப்பட்டுள்ளன.

சகாதேவ ரதம் யானையின் முதுகைப் போல இருப்பது தெரிந்ததே.

தொண்டை நாட்டில் பல்லவர்களால் கஜபிருஷ்ட விமான அமைப்பில் கோயில்கள் கட்டப்பட்டன என்பது தெரிந்ததேயாகும்.

குடியானவனின் குடிசை தென்னை ஓலையால் வேயப்பட்ட யானையின் முதுகுபோல கட்டப்பட்டிருந்ததைப் பெரும்பாணாற்றுப்படை கூறியுள்ளது. ஆதலின் கஜபிருஷ்ட விமானம்கூட பண்டைத் தமிழகத்தில் இருந்த வீட்டு அமைப்பைப் பின்பற்றியதாகக் கருதலாம்.

கஜபிருஷ்ட விமானம் தமிழகத்தில்தான் பெரும்பாலும் காணப்படுகிறது. இதுவும் கவனிக்கத் தக்கதாகும்.

## மாமல்லனா, ராஜசிம்மனா

செங்கல்லால் ஆன கோயில்கள் சங்க இலக்கியத்திலும் குறிக்கப்பட்டுள்ளன. மைக்கல் லாக்ஹாட், கிப்ட் கிரோமணி, டெ. தயானந்தம் ஆகிய ஆராய்ச்சியாளர்கள் புதியதாக ஆராய்ந்து பார்த்து மாமல்லன், அனந்தசாயியை முதலில் பூசித்திருப்பான் என்று யூகித்துச் சொல்லினர். அந்த அனந்தசாயிக்கு மேல்கூரையை இராஜசிம்மன் கட்டியதாகவும் அத்துடன் சிவனுக்கும் இரண்டு கோயில்களை இராஜசிம்மன் கட்டியதாகவும் கூறியுள்ளனர்.

ஆந்திர நாட்டில் அண்மையில் கிடைத்த சில செப்பேடுகளை ஆராய்ந்த ரமேஷன், ஐ. ஏ. எஸ். என்ற வரலாற்றறிஞர் கடற்கரைக் கோயிலைக் கட்டினவன் மாமல்லனே என்று கூறியுள்ளார். இராஜசிம்மன் என்ற இரண்டாவது நரசிம்ம வர்மன் இந்தக் கோயிலைக் கட்டியதாக அறிஞர் சிலர் கருதுவது தவறு என்று கூறியுள்ளார். கடற்கரைக் கோயிலில் இப்போது காணப்படும் கல்வெட்டுகளைக் கொண்டு இந்தக் கருத்தைக் கூறியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மறுக்கும் சான்றுகள்

ஆனால், சித்தூரில் கிடைத்த செப்பேடுகளிலிருந்து இத்தக் கருத்து தவறு என்பது தெரிகிறது என்று காட்டியுள்ளனர். இந்தச் செப்பேடுகள் பல்லவர்களின் பிரசஸ்தியை ஐயத்திற்கு இடமின்றிக் கூறியுள்ளன.

மாமல்லனின் கீர்த்தியைப் புகழும்போது சமஸ்கிருதத்தில் உள்ள இந்த பிரசஸ்தி கூறியுள்ளது கவனிக்கத்தக்கது. கல்லினால் அமைக்கப்பட்ட விஷ்ணுவுக்கான இக்கோயில் ஜலத்தை மகா சக்கரமாக உடையது என்று கூறியுள்ளது. ஆதலால், விஷ்ணுவுக்காக அமைக்கப்பட்ட இக்கோயில் நீரால் குழப்பட்டதாகும் என்பது தெளிவாகும்.

மாமல்லன்தான் ஒருகல் ரதங்களை அமைத்தான் என்று அறிஞர்கள் கருதுவர். இந்த ரதங்களே பிற்காலக் கோயில்களுக்கு மாதிரியாக அமைந்தன என்றும் அவர்கள் கருதுவர்.

சித்தூர் செப்பேடு கூறும் செய்திகள் தென்னிந்திய கோயில் அமைப்பு வரலாற்றில் முக்கியமானதென அறிஞர் ரமேஷன் கருதுவது சரியேயாகும்.

பெரும்பாணாற்றுப்படைக்கு உரையெழுதிய மிகப் பிற்கால உரையாசிரியர்கள் அனந்தசாயியின் கோயில் வெஃகாவில் இருந்ததாகக் கருதினர். பெரும்பாணாற்றுப் படையில் திருவெஃகா என்ற பெயர் குறிக்கப்படவில்லை. ஆயினும் பெரும்பாணாற்றுப்படையை ஆராய்ந்தால் பல்லவர்க்கு முன்னரே இளந்திரையன் காலத்தில் அனந்த சாயியை மாமல்லபுரத்தில் தெய்வமாக வழிபட்டதாகத் தெரிகின்றது.

## பெரும்பாணாற்றுப்படை கூற்று

பெரும்பாணாற்றுப்படையில், பாம்பணையில் இருந்த விஷ்ணு என்று கூறப்பட்டிருப்பதால் சங்க காலத்திலேயே

அனந்தசாயியை வழிபட்டது தெரிகின்றது. டண்டின் (தண்டி) என்ற புலவன் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் மகாபலிபுரத்தைப் பார்த்தபோது தான் நேரில் கண்டதை எழுதியுள்ளான்.

மாமல்லபுரத்தில் கடல் அலைகள் அனந்தசாயியின் கால்களைத் தொட்டுக் கழுவினதாகவும், தாமரை மலரைக் கடல் அலைகள் அனந்தசாயியின் கால்களில் சமர்ப்பித்தாகவும் குறித்துள்ளான். புலவன் கற்பனையில் உயர்வு நவிற்சியை நீக்கி ஆராய்ந்தால் அனந்தசாயியின் சிலை கடற்கரை ஓரத்தில் இருந்தது தெரிகின்றது.

லலிதாத்தியன் என்ற சிறந்த சிற்பி மாமல்லபுரத்து அனந்தசாயியின் சிதிலமான பாதத்தைச் சரிப்படுத்தியதாக, தண்டி கூறியுள்ள செய்தியும் மிக முக்கியமானதாகும்.

கடற்கரையோரமாக அனந்தசாயியின் சிலை சங்ககாலத்திலேயே இருந்திருக்கலாம் என்று தோன்றுகின்றது. மாமல்லன் காலத்திற்கு முன்னரே சங்க காலத்தின் இறுதியிலே அதாவது கி.பி. 3,4-ஆம் நூற்றாண்டிலேயே, ஜலசயன அனந்தசாயியை கடற்கரையில் வழிபட்டிருக்கலாம் என்று கருதவேண்டியுள்ளது.

## பொருந்தும் முடிவு

பெரும்பாணாற்றுப்படையில் கூறப்பட்ட விஷ்ணு கோயில் தற்போது மாமல்லையில் இருக்கும் கடற்கரைக் கோயிலாக இருக்கலாம் என்று கருத இடமுண்டு. பல்லவர் காலத்தில் வாழ்ந்த போது விஷ்ணு கோயிலாக இருந்ததையே, இராஜசிம்மன் விஷ்ணு-சிவன் கோயிலாக மாற்றினான் என்று தோன்றுகிறது.

இப்போது இருக்கும் மாமல்லபுரத்துக் கடற்கரை கோயில் பல்லவன் காலத்தில் திரும்பக் கட்டப்பட்டதன் காரணமாக, ஏற்கனவே கிழக்குப்பார்த்து இருந்த அனந்தசாயியைச் சேர்ந்த சிவன் விஷ்ணு பிரம்மா என்ற மும்மூர்த்திகட்கும் உரிய கோயிலாக மாற்றி அமைக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

இது சார்பாக பெர் பிரெளன் என்ற வெளிநாட்டு அறிஞரின் கருத்துக்களைக் கவனிக்க வேண்டும்.

மாமல்லபுரத்தில் கடற்கரைக் கோயில் கிழக்குத் திசை பார்த்து இருந்ததன் காரணம் காலைக் கதிரவனின் ஒளிக் கற்றை கடலில் வரும் கலங்களில் வருவோர்க்கு நன்கு தெரிந்து கொள்ள உதவுவதற்காகும். இரவில் கடலோரத்தில் தூணில் ஏற்றப்பட்ட விளக்கு கடற் பயணிகளுக்கு வழிகாட்டியாகவும் இருந்திருக்கலாம் என்று கூறியுள்ளார். இப்போதுள்ள கலங்கரை விளக்கம் சங்க காலத்துக் கலங்கரை விளக்கம் அழிந்தபின் பல்லவர் காலத்தில் எழுப்பப்பட்டதாகத் தெரிகின்றது.

பெரும்பாணாற்றுப்படையில் மீன் கொத்திக் குருவி தீபத்தூணில் அமர்ந்திருப்பது யவனரின் ஓதிம விளக்குப் போலவும் வானில் வெள்ளி மீன் முளைத்து ஒளிவிட்டது போலவும் இருந்ததாகக் குறித்ததையும் கவனிக்க வேண்டும். மாமல்லபுரத்தில் உள்ள ஓலக்கணேசுவரர் கோயில், முற்காலத்தில் கலங்கரை விளக்கமாகப் பயன் பட்டதாகக் கூறுவர்.

## கலங்கரை விளக்கம்

காவிரிப்பூம்பட்டினத்தில் கலங்கரை விளக்கம் கப்பல்களை அழைத்ததாகப் பட்டினப்பாலை உரைப்பதும் கவனிக் கத்தக்கது. சங்க காலத்திலேயே கிழக்கு நோக்கிய கோயில்கள் இருந்தன என்று தெரிகின்றது.

## சங்க காலத்தில் திருச்செந்தூர்

திருச்செந்தூர் கோயிலில் இருந்த திருமணி விளக்கான கலங்கரை விளக்கும், கடலில் செல்பவர்களுக்கு உறு துணையாக சங்க காலத்திலிருந்து இருந்ததால், தமழிலும்

மலையாளத்திலும் 'செட்டியார் கப்பலுக்குச் செந்தூரானே துணை' என்ற ஒரே முறையான பழமொழி இன்றும் வழங்கி வருகின்றது.

திருச்செந்தூர் சோவில் சங்க காலத்தில் இருந்ததை அகநானூறு (266) கூறியுள்ளது. இந்தக் கோயில் மேல் இருந்த திருமணி விளக்கு கலங்கரை விளக்கம் போல் இருந்ததாகக் கருத வேண்டியுள்ளது. பட்டை தீட்டிய மணிகளுக்கு நடுவில் விளக்கை வைத்து கலங்கரை விளக்கு என்று பிற்காலத்தில் கூறினர். இக்காலத்தில் பட்டடைக் கண்ணாடிக்குள் விளக்கை வைத்து கலங்கரை விளக்கம் இருப்பதைக் காணலாம்.

திருச்செந்தூர் கோயில் சங்க காலத்தில் கடற்கரையை நோக்கிக் கிழக்கு முகமாக நோக்கிய வாயிலுடன் இருந்திருக்க வேண்டும். ஆயினும் இக்காலத்தில் கிழக்கு முகமாக வாயில் இல்லை. கடல் அரிப்பால் சங்க காலக் கோயில் அழிந்து விட்டது. ஆயினும் பண்டை மரபுப்படி கிழக்கு நோக்கி வாயில் இல்லா விட்டாலும் திருச்செந்தூரான் ஆன முருகன் கிழக்குத் திசையை நோக்கியே இன்றும் உள்ளான் என்பது மிகவும் கவனிக்கத்தக்கது.

## நீர் சூழ்ந்த கோயில்

பெர்சி பிரௌன் அவர்கள் கடற்கரைக் கோயிலைப் பற்றி எழுதிய சில கருத்துக்கள், கூர்ந்து கவனிக்கத் தக்கவையாகும். மாமல்லபுரத்தில் இருந்த கடற்கரைக் கோயிலும் மற்றைய கோயில்களிலும் நீர்வழிபாடும் நாக வழிபாடும் இணைந்து நடந்ததாகக் கூறியுள்ளார். கடற்கரையில் இருந்த கோயிலின் அடித்தளத்தில் இருந்த குழிவான தொட்டிகள் சில சமயங்களில் நீரால் நிரப்பப்பட்டு 'நீர்க் கோயிலாக' மாறக்கூடிய நிலைமையில் இருந்திருக்க வேண்டுமென்று அவர் கூறியுள்ளார். கடல் நீர் பொங்கும் காலத்தில் அவ்வாறு மாறக்கூடிய நிலைமை இருந்திருக்கலாம் என்று உறுதியாகக் கருதலாம்.

ஏனெனில், இன்றும் கடற்கரைக் கோயிலில் கடல் நீர் புகுந்து அதை நீர்க்கோயிலாக ஆக்கும் வாய்ப்பு உள்ளதைக் காண்கிறோம். பெர்சி பிரௌன் அவர்கள் கோயில் தூண்களில் நாக வழிபாட்டுக்குரிய சிலைகளும் கூடத்திலும்பிரகாசத்திலும் நீர் வந்து நிரம்பி வழியும்படி இக்கோயில் இருந்ததாக உரைத்துள்ளதையும் கவனிக்க வேண்டும். வேறு சில அறிஞர்களும் மாமல்லபுரக் கோயிலுக்குப் பாலாற்றிலிருந்து வந்த நீர் நிரம்பி வழிந்திருக்கலாம் என்று சொல்வர்.

## நீர் வழிபாடு அர்ச்சுனன் தவமா?

நீரை வழிபடும் வழக்கம் கடற்கரைக் கோயிலிலும் வராக மண்டபத்திலும், அர்ஜுனன் தபசு என்ற மாபெரும்-வியக்கத்தகும் ஒரு கல் சிற்பத்திலும் இருந்தது என்று பெர்சி பிரௌன் உரைத்தது உண்மையாகும்.

நீர் வழிபாட்டைக் காட்டுவதற்குச் செயற்கையாக அமைக்கப்பட்ட சிற்பமே அர்ஜுனன் தபசு என்பதாகும். இச் சிற்பம் இயற்கையில் பாறையில் இருந்த ஒரு பள்ளத்தின் வழியாக வந்த நீர்ப்பெருக்கைப் பயன்படுத்தி ஏற்படுத்தப்பட்ட சிற்பமாகும். இந்தப் பாறையின் மேலே நீரைத் தேக்கி வைக்க ஒரு தொட்டி பண்டைக் காலத்தில் இருந்துள்ளது.

இந்த நீர் வழியும் போது நாகங்கள் மேலே ஏறுவதாக சித்தரிக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தில் இந்தப் பாறையில் இயற்கையாக மழைக்காலத்தில் நீர் வழிந்திருக்க வேண்டும். இந்த இயற்கை அமைப்பைப் பயன்படுத்திப் பல்லவ மன்னன் நீர்வழிபாட்டையும் நாக வழிப்பாட்டையும் இணைந்த ஒரு வியக்கத்தக்க சிற்பத்தைப்படைத்தான் என்று கருத வேண்டும் இந்த அரிய கற்பனையை விசித்திர சித்தனான மாமல்லனே முதலில் கருத்தில் கொண்டு சிற்பத்தைச் செய்திருப்பான் என்று நினைக்க வேண்டியுள்ளது.

நீர்ப்பெயற்று என்று பெரும்பாணாற்றுப்படையில் இந்தப் பட்டினம் அழைக்கப்பட்டதன் காரணத்தை, இந்தச் சிற்பத்தை நல்ல மழைக்காலத்தில் பார்த்தால் புரிந்து கொள்ளலாம்.

இந்தப் பாறையில், நீர் வழிந்து கொண்டிருந்ததால் நீர்-பெயல்- என்று பிரித்துப் பொருள் விளக்கம் கூறக் கூடிய 'நீர்ப்பெயற்று' என்ற பெயரால் இந்தப் பட்டினம் அழைக்கப்பட்டது.

நீர்ப்பெயல் என்ற பெயர் நீர்ப் பெய்தலைக் குறித்து சங்க நூல்களில் வழங்கியுள்ளது மாமல்லபுரத்தின் 'நீர்ப்பெயற்று என்ற சங்ககாலப் பெயரை மக்கள் பிற் காலத்தில் நீர்ப்பெயர், நீர்ப்பேர் என்று அழைத்தனர். எல்லிஸ் என்ற வெள்ளைக்காரன் கட்டின சத்திரத்தை எலிசத்திரம் என அழைத்தனர். நீர்ப்பெயற்று என்பது நீர்ப்பெயர் ஆனதில் வியப்பில்லை.

பல்லவ வம்சமே நாகர்களுடன் இணைந்தது தெரிந்ததே. ஆதலின் நீர் வழிபாட்டுடன் நாக வழிபாடும் கலந்த சிற்பமாகவே அர்ஜுனன் தபசு என்ற சிற்பம் அமைக்கப்பட்டதாகும்.

## மிகப் பழங்காலக் கோயில்

மகாபலிபுரம் சங்க காலத்திலேயே இருந்திருக்க வேண்டும். கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலேயே சிறப் புற்று இருந்திருக்க வேண்டும் தியோடோசியஸ் என்ற உரோம மன்னனின் கி.பி 393 ஆம் ஆண்டு செப்புக்காசு மகாபலிபுரத்தில் கிடைத்துள்ளது.

பெரும்பாணாற்றுப் படையில் 'நீர்பெயற்று' என்று குறிப்பிடப்பட்ட பட்டினம் மாமல்லபுரமே என்பதில் ஐயமில்லை. ஆனால் பிற்காலத்தில் இதையே 'நீர்ப் பெயர்' என்று தவறாகக் கூறினர்.

## உண்மை விளக்கம்!

**அர்ஜுனன் தபசு என்று தவறாக இன்று அழைக்கப் படும். மாபெரும் வியக்கத்தக்க சிற்பத்தின் நுட்பமான விளக்கம் நீர்ப்பெயற்று என்ற சங்ககாலப் பெயரில் நன்கு விளங்குகின்றது.**

# 6

# கல்வெட்டு வழக்குகள்

## மேந் தோன்றி

பிற்காலக் கல்வெட்டுகள் சிலவற்றில் சங்ககால வழக்குகள் காணப்படுவது வியப்பைத் தருகின்றது. சங்க காலத்தையொத்த பழைமையான கல்வெட்டுகள் நமக்கு நிறையக் கிடைத்தில இருப்பினும் பிற்காலக் கல்வெட்டுகளில் சங்க இலக்கிய வழக்குகள், பிற இலக்கிய வழக்குகள் இருந்தால், அவை தொடர்ந்து வந்த மரபால் வந்திருக்க வேண்டுமெனக் கருதவேண்டும்.

பல்லவர்காலக் கல்வெட்டு ஒன்றில் 'தான் ஆராய்ந்த பண்டிதரில் மேந் தோன்றி' என்ற தொடர் காணப்படுகின்றது. இதில் வரும் மேந்தோன்றி என்ற வழக்கு சங்ககாலத்திலிருந்து வருவதாகும்.

'இலமலர் அன்ன அஞ்செந் நாவிற்
புலமீக் கூறும் புரையோர் ஏத்தப்
பலர்மேந் தோன்றிய கவிகை வள்ளல்
நிறையருந் தானை வெல்போர் மாந்தரம்
பொறையன் கடுங்கோப் பாடிச் சென்ற'

—அகம். 142

இவண்விளங்கு சிறப்பி னியறேர்க் குமண
இசைமேந் தோன்றிய வண்மையொடு
பகைமேம் படுகநீ யேந்திய வேலே'

புறம். 158

'நட்டவர் குடியுயர்க்குவை
செற்றவ ரரசுபெயர்க் குவை
பேருலகத்து மேஎந்தோன்றிச்
சீருடைய விழுச்சிறப்பின்

மதுரைக்காஞ்சி 131 - 134

கொடையில் மேம்பட்டு விளங்கும் தலைமையினையும் பெரிய நன் மக்களிடத்து மேலாய்த் தோன்றுகையினால் விளங்கும் தலைமையினையும் குறிக்கச் சங்கப் பாடல்கள் 'மேந்தோன்றி' என்ற சொல் வழக்கைப் பயன்படுத்துவதைக் காணலாம். இதே பொருளிலே பல்லவர்களின் கல்வெட்டிலும், இந்த வழக்குப் பயில்வதைக் காணலாம்.

### காந்தள் மலரே தோன்றி

இந்தச் சொல் மலையாள மொழியில் பேச்சு வழக்கில் காந்தள் பூவைக் குறித்து இன்று வழங்குகின்றது. காந்தள் பூவை மலையாளத்தில் 'மேந்தோன்னி' என்று அழைக்கின்றனர்.

காந்தள் ஒரு கொடியாகும். கார்த்திகை காலத்தில் திடீரெனச் செடிப் புதர்களின் மேல் ஏறித் தோன்றித் தெரியும்படி பூப்பதால் காந்தளை மேல் தோன்றி (மேந் தோன்றி) என்றழைக்கின்றனர். இந்த மலையாளப் பெயரும் சங்ககால மரபைப் பின்பற்றியதாகும்.

சங்க காலத்தில் காந்தளைத் 'தோன்றி' என்றழைத் தனர். மேலே பூத்துத் தோன்றுவதையே 'தோன்றி' என்றழைத்தனர்.

தானாக நிலத்தில் தோன்றியதாகக் கருதப்படும் இலங்கத்தைத் 'தான் தோன்றி' என்று சொல்வர். தோன்றி என்ற சொல்வழக்கு இதிலிருந்து தெளிவு பெறு கின்றது.

## நாடுவாழி, வாழ்தல்

பத்தாம் நூற்றாண்டின் துவக்கத்தில் வாழ்ந்த தாணு ரவி என்ற சேர அரசனின் கல்வெட்டில், 'நாடு வாழ்தல்' என்ற சொல்வழக்கு, அரசன் அல்லது குறுநிலத் தலை வனைக் குறித்து வழங்குகின்றது. இந்த வழக்கிலும் சங்க கால மரபைக் காணலாம்.

பெரியதிருமொழியில் 'குறையலூர் வாழி' என்பதற்கு,

> 'திருக்குறையலூரை அவதார ஸ்தம்பலமாக உடையவரை அதுவோழும்படி அத்தை நோக்கு கிற ராஜா'

என்று பெரியவாச்சான் பிள்ளை, ஈட்டின் விளக்கத்தில் எழுதியுள்ளார். குறுநில மன்னர்களுக்கு 'நாடு வாழ்தல்', 'வாழி' என்ற பெயர்கள் வழங்கின. இன்றும் மலையாளப் பேச்சு வழக்கில் 'நாடு வாழி' என்ற வழக்கு குறுநில மன்னனைக் குறித்து வழங்குவதைக் காணலாம்.

பதிற்றுப் பத்துப் பதிகம் கூறும் அரசர்களில் 'செல்வக் கடுங்கோவாழியாதன்' என்ற பெயருடைய அரசன் உள் ளான். இவன் இயற்பெயரால் செல்வக்கோ என்று 67ஆம் பாட்டில் அழைக்கப்படுகின்றான். பதிகத்தில் வரும்

பெயரில் வாழி என்ற சொல், மன்னன் என்ற பொருளில் வருவது தெரிகின்றது குறித்து, 56ஆம் பத்தில் வரும் வாழ்ச்சி என்ற சொல்லும் மன்னனைக் குறித்து வழங்கிய தாகவே தெரிகின்றது. வாழ்ச்சி என்பதற்கு வாழ்வு என்று உரை கூறியுள்ளார். வாழ்வு வெற்றிச் செல்வம் என்றும் விளக்கம் கூறப்பட்டுள்ளது. வாழ்ச்சி என்ற சொல்லே தாணு ரவியின் கல்வெட்டில் வாழ்தல் என்று தொழிற் பெயராய் அரசனைக் குறித்து வந்தது என்று கொள்வதே பொருத்தமாகும். வாழ்வுடைய மன்னன், வாழும் செல் வத்தையுடைய மன்னன் என்று விளக்கம் கூறலாம்.

நாடு வாழ்தல், நாடு வாழி என்ற வழக்குகளில் வாழி என்ற சொல் மன்னனைக் குறிப்பதால் பதிற்றுப்பத்தில் வரும் வாழ்ச்சி என்ற சொல்லும், பதிகத்தில் வரும் 'வாழி' என்ற சொல்லும் அதே பொருளில் வழங்கின என்று கொள்வதே ஏற்புடைத்தாகும். பெருமன்னனைக் கோவாழி' என்றும் கூறினர் என்று கருதலாம். கோச் செய்தல் என்ற பொருளில் அப்பர் தேவாரத்தில் வரு கின்றன. நாடு வாழ்தல், நாடு வாழி என்ற சொல் வழக்கு களும் தொழிற் பெயராகத் தோன்றி நாட்டை வாழச் செய்யும் தலைவனைக் குறிக்கும் வழக்காக மாறிற்று.

### சிறுபாடு - நீர் வழங்கல்!

திருச் செங்கோட்டிலிருந்து கிடைத்த இராசகேசரி வர்மனுடைய பத்தாம் ஆண்டுச் செப்பேட்டு சாசனத்தில்,

> ''கொல்லி மழவன் பிரதிகண்டனாயின சுந்தரச் சோழன் என்பான் ஈழத்துப் போரில் இறந்த அவனுடைய தந்தையின் தாகத்தைத் தணிக்க, எங்கள் ஆச்சர் ஈழத்துப்பட, அவர் ஸ்ரீ மஹாதாஹத்துக்கு சிறுபாடு''

என்னும் தர்மம் செய்தது குறிக்கப்பட்டுள்ளது. இங்கே சிறுபாடு என்ற வழக்கு, தண்ணீர் பந்தலைக் குறித்தது.

தெளிவாகும். இதே 'சிறுபாடு' என்ற வழக்கு, நற்றிணை 341ஆம் பாட்டில், தாகத்தைத் தணிக்கும் தண்ணீரைக் குறித்து வழங்கியிருப்பதாகத் தெரிகின்றது.

'வங்கவரிப் பாறைச் சிறுபாடு முனையின்
செம்பொறி அரக்கின் வட்டுநா வடிக்கும்
விளையாடு இன்நகை அழுங்காப் பால்மருத்து'
—நற்றிணை 341

வெள்ளை வரிகளையுடைய கற்பாறையில் விழும் அருவி நீரைக் குடித்து வெறுப்படையின் கள்ளின் தெளிவைப் பருகி மகிழும் குறவர்களைப் பற்றி இந்த நற்றிணைப் பாடல் பேசியுள்ளது. சிறுபாடு என்பது தாகத்தைத் தணிக்கும் சிறிது நீரையே குறித்து வழங்கிற்று என்று கருத வேண்டும்.

பாறையில் விழும் தெளிந்த நீரைக் குடித்ததை, வெறுப்பின் அரக்கின் வட்டால் செய்யப்பட்ட நாவின் வழியாக ஊற்றப்படும் பனங்கள்ளைக் குடிக்கும் குறவர்களைப்பற்றி நற்றிணைப் பாடல் பாடியுள்ளது. ஆச்சர் என்ற சொல், ஆசான் என்பதன் மறு உருவமாகும். 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரியவாச்சான் பிள்ளையின் பெயரில் ஆச்சன் என்று இதே பெயர் வழங்குகின்றது.

## எடுத்தனூர் நடுகல் செய்தி

தொல்காப்பியம் வேற்றுமை மயங்கியலில் உரையாசிரியர்கள் 'சாத்தன்றாயைக் காதலன் நாய் தேவனாயிற்று' என்ற தொடர்களை எடுத்துக்காட்டாகச் சொல்லியுள்ளனர். 'நாய் தேவனாயிற்று' என்பதற்குத் தெளிவான பொருள் அண்மையில் சாத்தனூருக்கருகில் எடுத்தனூரில் கண்டுபிடித்த நடுகல்லில் காணப்பட்ட கல்வெட்டிலிருந்து தெளிவாகின்றது

முதலாம் மகேந்திரவர்மனின் 54ஆம் ஆட்சியாண்டில் நிகழ்ந்த ஒரு போரில் கருந்தேவகத்தி என்ற வீரன் ஆநிரை

கவரும் போரில் இறந்தான். இந்த வீரனின் நாயான 'கோவிவன்' கொள்ளை யடித்தவர்களைக் கடித்து மாண்டது.

வீரன் தேவகத்தியின் உருவமும் கோவிவன் என்ற நாயின் உருவமும் நடுகல்லில் பொறிக்கப்பட்டுள்ளன.

நடு கல்லில் பொறிக்கப்பட்ட வீரனைத் தெய்வமாகக் கொண்டாடுவது தொன்றுதொட்ட மரபாகும். நடுகல் லில் பொறிக்கப்பட்ட நாயும் தெய்வமாகத் தொழப் பட்டது. 'நாய் தேவனாயிற்று' என்று உரையாசிரியர்கள் காட்டிய சொற்றொடருக்கு அரிய விளக்கம் கல்வெட்டு வாயிலாகக் கிடைத்தது.

> **'கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத்தான் கலந்து**
> **பேசின பேச்சரவங் கேட்டிலையோ பேய்ப்**
> **பெண்ணே'**

என்று ஆண்டாள், திருப்பாவையில் ஆனைச்சாத்தனைப் பற்றிப் பாடினாள்.

ஆனைச்சாத்தன் என்பது வலியன் என்று அழைக்கப் படும் கரிய குருவியாகும். ஆனைச் சாத்தன் என்ற பெயர் வழக்கு, தமிழிலக்கியத்தில் ஆண்டாளின் திருப்பாவையில் மட்டுமே காணப்படுகின்றது.

சோழப் பேரரசர் இராசராசன் காலத்தில் ஆனைச் சாத்தன் என்ற பெயரை மக்களும் சூடிக் கொண்டனர். வைணவர்களாகிய இடைக் குல மக்கள் ஆண்டாளின் திருப்பாவையில் வழங்கிய பெயரைப் போற்றித் தமக்கும் இட்டுக் கொண்டதாகத் தெரிகின்றது.

> **'நித்தவினோத வளநாட்டு நல்லூர் நாட்டுப் பெருங்கலை இருக்கும் இடையன் ஆனைச்சாத்த னுக்கு அடுத்த பசு நாற்பத்தெட்டினால் திரு விளக்கு ஒன்றினுக்கு'**

என்று தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டு கூறுகின்றது.

இதே கல்வெட்டில் சாத்தன்காரி, காரிசாத்தன் என்ற பெயர்கள் பல இடங்களில் வருகின்றன.

காரிசாத்தன் என்பதும் ஆனைச்சாத்தன் என்பதும் கரிக்குருவியின் பெயர்களேயாகும். இப்பெயர்களை அக் கால மக்கள் விரும்பித் தரித்தனர் என்று தெரிகின்றது. சங்ககால மன்னனான காரியும் இப் பெயரைத் தரித் திருந்தான்.

கல்வெட்டுத் தமிழ், பேச்சுத் தமிழ்போலத் தோன் றினும் கல்வெட்டிலும் இலக்கிய வழக்குகள் பல உண் டென்பதை ஆராய்ந்து பார்த்துத் தெளிவுறலாம்.

# 7

# செப்பேட்டில் காரோடன்

## வணிக உரிமைகள்

பல்லவர்களுடைய செப்பேடுகளில் கோபால தேவனின் ஹாஸ்தியூர் செப்பேடு கன்னட மொழியில் உள்ளது. இச் செப்பேட்டில் சில உரிமைகள் வழங்கியமை குறிக்கப்பட்டுள்ளது. ''இந்த உரிமைகள் தொழில், வணிகத் தொடர்பான உரிமைகள் எனத் தெரிகின்றன. அவை,

கொள குப்பை
ஜெலாஸி
கானஸொப்பு
லாரல்
கர்ஸ பின்டம்
கெம்பை காரோடம்

என்பன வாகும்.

இவ் உரிமைகளின் பெயர்கள் பிற கல்வெட்டுகளில் திராவிட மொழிகளில் காணப்படவில்லை. இவை எவற்றைக் குறிக்கும் என்பது கல்வெட்டறிஞர்களுக்குப்

புரியாததாக உள்ளது. ஆனால் இந்த உரிமைகளில் கடைசியாகக் கூறப்பட்டுள்ள 'கெம்பை காரோடம்' சங்க நூல்களில் சொல்லப்பட்டுள்ளது என்பதைக் காணும்போது வியப்படையாதிருக்க முடியாது.

## சங்க நூல்களில்

காரோடம் என்பது, சங்க நூல்களில் சாணை பிடிக்கும் கல் செய்வோர்க்குக் காரோடன் என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது.

கெம்பை என்பது கன்னட மொழியில் சிவப்பு நிறத்தைக் குறிக்கும். கெம்பு என்பதே கன்னட மொழியில்

> 'அறுகோட் டியானைப் பொதினி யாங்கண்
> சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
> கற்போற் பிரியலம் என்ற சொற்றாம்'
>
> —அகம். 1

> 'தொன்னசை காவாமை நன்னன் பறம்பிற்
> சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
> கற்போல் நாவினேன் ஆகிமற்றது'
>
> —அகம்.356

கெம்பெ என்று வழங்கும். கெம்பே காரோடம் என்பது சிவப்புச் சாணைக்கல் செய்யும் உரிமையைக் குறித்தது என்று தெரிகின்றது.

சங்க நூல்களில் அகநானூற்றில் காரோடனைப் பற்றிய செய்திகள் இரண்டு பாடல்களில் வருகின்றன.

பொதினியிலும், நன்னன் பறம்பிலும், சிறுகாரோடன் என்பவன் பயினொடு சேர்த்திய கல்போல என்று கூறப்பட்டுள்ளது. சிறுகாரோடன் செய்தது அவ்வளவு உறுதியானது, பிரியாதது, உடையாதது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தலைவன் தலைவியொடு கொண்ட உறவு காரோடன் பயினொடு சேர்த்திய கல்போலப் பிரியாதது என்று மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது.

## பெயர்க் காரணம்

காரோடன் என்ற பெயர் எப்படி வந்தது என்பதை இனி ஆராயலாம்.

சாணைக்கல் மிகவும் கடினமானது உறுதியானது மாகும். இந்தக் கல்லை உறுதியாக வைரம் பாய்ந்த மா உருளைகளில் இணைத்துச் சாணை பிடிக்கும் கருவி செய்வார்கள். இத்தகைய மர உருளைகளை எல்லா மரத்திலும் செய்ய இயலாது. அதிர்ச்சியையும் அழுத்தத்தையும் நன்கு தாங்கக்கூடியதும், உள்ளே அடர்த்தி நிறைந்ததுமான மரம்தான் இத்தகைய வேலைக்கு நன்கு பயன்படும். உறுதியான கருங்காலி, செங்காலி மரங்களையே உலக்கை செக்கு முதலியவற்றிற்குப் பயன் படுத்துகின்றனர். ஈட்டி, கத்தி முதலியவற்றிகுப் பிடியாகவும் இது போன்ற மரங்களையே பயன்படுத்துகின்றனர்.

சாணை பிடிக்கும் உருளைக்கும் காடுகளில் வளரும் சில உறுதியான மரங்களையே பயன்படுத்துகின்றனர். இந்த உறுதியான மரங்களில் காரோடை என்று திருவனந்தபுரக் காடுகளில் வழங்கப்படும் மரமும் ஒன்றாகும். இந்த மரத்தை நீரோடை என்றும் அழைப்பர்.

இதன் அடிமரம் சுற்றளவில் சிறிய தாயினும் வைரம் பாய்ந்து சிவப்பாக இருக்கும். இதன் இனத்தைச் சார்ந்ததுதான் கருங்காலி மரமும்.

நற்றிணையிலும் (338), ஐங்குறு நூற்றிலும் (93). மோரோடம் என்றொரு மரம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குச் செங்கருங்காலி மரம் என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இதையே குறிஞ்சிப் பாட்டில் சிறு மாரோடம் என்றுள்ளது. பெருங் கதை உரையாசிரியர் 'மோரோடமென்பது மாரோடமென வழங்கும்' என்று எழுதியுள்ளார்.

## இருவகை

கருங்காலி மரமும் செங்கருங்காலி மரமும் உறுதியான அடி மர முடையவையாகும். இவை இரண்டும் ஒரே மர மென்று மயங்குவதும் உண்டு. ஆனால், இரண்டும் ஒரே இனத்தைச் சேர்ந்த இருவேறு மரங்களாகும்.

இந்த இரு மரங்களின் வைரம் பாய்ந்த அடிமரம் அதிர்ச்சியைத் தாங்கும். உருளைகளுக்குப் பயன்படும். (Compressive strength make it useful for Pressure bearings) கருங்காலி மரத்திலிருந்துதான் வெற்றிலையில் போடும் கத்தைக் காம்பு செய்யப்படுகின்றது.

## ஓடை, குடை, உடைவேலன்

ஓடை என்ற சொல் ஒரு மரத்தைக் குறித்து வழங்கியது.

'ஓடையே ஓடையே ஓடையே ஓடையே
கடற் பழனத்தும் கொல்லி மலைமேலும்
மாறன் மதகளிற்று வன் பூ நுதல்மேலும்
கோடலங் கொல்லைப் புனத்துக் கொடுங்குழாய்
நாடி உணர்வார்ப் பெறின்'

—யாப்பருங்கலவிருத்தி மேற்கோள்

முதலில் வரும் ஓடை என்ற பெயர் குடைவேலன் மரத்தைக் குறித்ததாகும். குடைவேலனைச் சங்க நூல்களில் உடை என்று அழைப்பர். உடை என்பது ஓடை என்று வழங்குவது காலைலாம் ஓடை என்ற குடை வேல னுக்கு இனமான மரங்களைக் காரோடை, சில்லோடை, நீரோடை என்ற பெயர்களால் இன்றும் வழங்குகின்றனர்.

இவற்றில் கரிய அடிமரமுடைய மரத்தைக் காரோடை என்றழைத்தனர். இந்தக் காரோடையே காரோடன் என்று சங்க காலத்தில் அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இந்த மரம் கருங்காலியாகவும் இருக்கும்.

கருங்காலி மரத்திற்கு வேறு பெயர் சங்க நூல்களில் காணப்படவில்லை. செங்கருங்காலியை மோரோடம் என்று அழைத்ததைக் காண்கிறோம்.

கருங்காலி மரம் உறுதியாக இருந்தாலும் அடிமரம் சிறியதாகவே இருக்கும் பெரியதாகக் கிடைப்பது அரிது.

## தொழிற் பெயர்

காரோட மரத்தால் செய்த உருளையைச் சாணைக் கல்லுடன் பயினால் (அரக்கு) இணைத்து வேலை செய்த வனைக் காரோடன் என்றழைத்தனர்.

வெள்வேலன் என்ற மரம் சில்லோடை என்று இன்று வழங்குவது போல, செங்கருங்காலி மரம் சங்க நூல்களில் சிறு மாரோடம் என்று வழங்கியதுபோல் இந்த மரத்திற்குச் சிறு காரோடம் என்ற பெயர் வழங்கியிருக்கலாம். அந்தச் சிறு காரோடம் மரத்தில் வேலை செய்தவனுக்குச் சிறு காரோடன் என்று பெயர் வழங்கிற்று.

சிறு என்ற அடைமொழி காரோடனை குறித்ததாகக் கொள்வது பொருத்தமற்றது.

சங்க காலத்தில் நன்னன் பறம்பில் சாணை பிடிக்கும் கல்லைச் செய்தவர்கள் காரோடன் என்றழைக்கப்பட்டனர். நன்னன் பறம்பில் வேலை செய்த இந்தத் தொழிலாளர் இத் தொழிலில் சிறப்பானவராகத் தமிழகத்தில் கருதப்பட்டனர். ஆதலின் பிற்காலத்தில் இவர்களைப் பறம்பர் என்று அழைத்தனர்.

## தோலுறை செய்வோர்

திவாகர நிகண்டில் காரோடன் என்ற பெயர், உறைகாரருக்கு உரிய பெயராக வழங்கப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் 'தோலின் துன்னர்' என்பதற்கு 'உறைகாரர்', பறம்பர் முதலாயினாருமாம்' என்று உரை எழுதியிருப்பது கவனிக்கத் தக்கது.

சாணைக்கல் செய்த காரோடர் பிற்காலத்தில் தோல் உறைகளைச் செய்யும் தொழிலைக் கொண்டதால் உறைகாரர் எனப்பட்டனர்.

## பயின்—மரப்பிசின்

சங்க காலத்தில் சாணைக்கல்லை இயற்கையில் நிலத்தில் தோண்டி யெடுத்தனர். அந்தக் கல்லை மர உருளையோடு பயினால் சேர்த்து இணைத்தனர். பயின் என்பது ஒரு காட்டு மரம். இந்த மரம் குறிஞ்சிப் பாட்டில் கூறப்பட்டுள்ளது. இதன் பிசின் இன்றும் வார்னிஷ் (Varnish) போன்றவற்றில் பயன்படுத்தப்படும். இதன் பிசின் காட்டில் கிடைக்கும் வணிகப் பொருளாக விற்கப்படுகிறது.

பிசின் என்ற பெயரே பயின் என்ற சொல்லிலிருந்து வந்திருக்கலாம். பயின் மரத்தின் பிசின், உறுதியாக ஒட்டவைப்பதில் சிறந்ததுமாகும்.

## ஒளிக் கற்களிலே ஒன்று

இயற்கையில் கிடைக்கும் சாணைக் கல் வயிரம், மரகதம் போன்ற கற்களின் இனத்தைச் சேர்ந்த கல்லாயினும் மிகத் தாழ்ந்த வகைக் கல்லாகும். இதை ஆங்கிலத்தில் Corundum என்றழைப்பர். இந்த ஆங்கிலப் பெயர் 'குருந்தம்' என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து வந்ததாக ஆங்கில அகராதிகள் கூறும்.

முற்காலத்தில் தமிழ்நாட்டில் இக்கல் தோண்டியெடுக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கலாம். சாணைச்

கல்லும் வணிகப் பொருளாகச் சிறப்புப் பெற்றிருக்கலாம். ஆனால், குருந்தம் என்ற தமிழ்ச் சொல் கோரண்டம் என்று ஆங்கிலத்தில் மாறியதா அல்லது காரோடம் என்ற பெயர் ஆங்கிலத்தில் அப்படி மாறியதா என்பது ஆராய்வதற்குரியது. காரோடம் என்பது ஆங்கிலத்தில் கோரண்டம் என்று மாறியதாகக் கொள்ளலாம்.

## பல்லவர் காலத்தில்

சங்க காலத்தில் சிறப்புற்ற காரோடத் தொழில், பல்லவர்கள் காலத்தில் ஓர் உரிமையாகச் சிலருக்குக் கொடுக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

கள் இறக்குவது ஈழகுலச் சான்றார்க்கு ஓர் உரிமையாகப் பல்லவர்களால் வழங்கப்பட்டதுபோல், காரோடம் செய்வதும் ஓர் உரிமையாகப் பல்லவர்களால் கொடுக்கப் பட்டதையே கோபால தேவனின் கன்னடச் செப்பேடு காட்டுகின்றது.

சங்க காலத்தில் காரோடர் வாழ்ந்த நன்னனுடைய நாடு. இன்று மலையாளம், கன்னடம் பேசுமிடமாக மாறியுள்ளது. பல்லவர் காலத்தில் இந்தக் காரோடர், கன்னட நாட்டிற்கும் சென்று குடியேறி இருக்கலாம். சங்க நூலில் வழங்கிய காரோடன் என்ற பெயர், பல்லவர் காலத்தில் கன்னடத்திலும் காரோடம் என்று வழங்கியிருந்தது தெளிவாகிறது.

# 8

# காவியக் காதல்

## காதல் எத்தனையோ!

எந்தக் காதற் காவியத்தின் முதல் ஏட்டைப் புரட்டி லும், 'அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ (1081) என்ற குறளின் கருத்தையே முதலில் பார்க்கலாம். அதன் கடைசி ஏடு,

'அறிதோ றறியாமை கண்டற்றாற் காமச்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு' —(1110)

என்ற குறளின் கருத்தையே ஏந்தி நிற்கும். இந்த இரண்டு குறள்களின் கருத்தும் முன்னரோ பின்னரோ நடுவிலோ, குறுகியோ அகன்றோ காணப்படாவிடில் அக்காதல், காவியக் காதலாக முடியாது. அக் காதல் மேடைக் காதலாக இருக்கலாம்; படக்காட்சிக் காதலாக இருக்கலாம்; ஏட்டுச் சுரைக்காய்க் காதலாக இருக்கலாம்; அல்லது காதலாவது கத்தரிக் காயாவது என்று கேட்கும் இனத்தாரின் கத்தரிக்காய்க் காதலாகவும் இருக்கலாம்.

இந்தக் காவியக் காதல் (Lyric love) ஒரு சிலருக்கே கை கூடுவது. ஆதலின் வள்ளுவர் இதன் அருமை நோக்கி,

'மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்
செவ்வி தலைப்படு வார்' (1289)

என்று கூறினார்.

## யாழ் போன்றது

காதல் துறையில் கரைகண்ட 'பால்சக்' என்ற பிரெஞ்சு ஆசிரியர், 'காதல் மெல்லிய மலர் போன்றது. தொட்டாலும் நொறுங்கிவிடும்' என்று கூறியுள்ளார். காவியக் காதல் இனிய யாழ்போன்றது. மீட்டத் தெரிந்தவருக்குத்தான் ஒவ்வொரு நரம்பும் வேண்டிய இனிய இசையைத் தரும். கோவலனின் காதலை இழந்த மாதவியின் கைவிரல், பகை நரம்பில் பட்டுத் துன்பத்தைத் தந்தது. அதுபோல் கை வைத்து அவல இசையை உண்டு பண்ணுகிறார்கள்.

## வியப்பே தொடக்கம்

'ஹெர்பர்ட்ஸ் பென்சர்' என்ற ஆங்கில தத்துவ ஞானி காதலை ஆய்வகத்தில் பிரித்துப் பார்த்து ஆராய்வது போல் ஆய்ந்து பார்த்தார். காதலில் முதற் உணர்ச்சி 'வியப்பு' (Admiration) என்று எழுதியுள்ளார். அடுத்து மதிப்பு, அழகு, அன்பு என்று வரிசைப் படுத்தியுள்ளார்.

பண்டைத் தமிழரும் காதலில் முதலுணர்ச்சி வியப்பையே கருதினர் ஆதலின், கவிகளிலும் காவியங்களிலும் வியப்பையே முதலில் பாடியுள்ளனர். வள்ளுவரின் இன்பப் பாலின் முதற் குறளும் வியப்பையே தெரிவிக்கின்றது.

உலகில் அறிஞர் பலர்; ஆசிரியர்கள், கவிகள் இந்த வியப்புணர்ச்சியைக் காதலுக்கு வாயிலாக வைத்துப் பாடியுள்ளனர். வொர்ட்ஸ் வொர்த். பிரௌனிங் ஜே. பி. பிரீஸ்ட்லி ஆகிய ஆங்கில ஆசிரியர்களும் இதே முதல் ஏட்டைத்தான் திருப்பி இருக்கின்றனர்.

பிரீஸ்ட்லி தலைசிறந்த ஒரு நாடகாசிரியர் அவருடைய 'பொதுமக்கள் பாடட்டும்' என்ற கதையில், கண்டதும் காதல் கொண்ட ஓர் இளைஞன் வருகிறான். அவ்விளைஞன் ஓர் எளிய குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் காதலித்த பெண்ணும் அன்றாடம் வேலை செய்து பிழைக்கும் பெண். பொதுக் கூட்டத்தில் கண்ட இருவரும் காதல் கொள்ளுகின்றனர். அப்பொழுது அந்த எளிய பெண் தொழிலாளியைப் பற்றி இளைஞன் என்ன நினைக்கின்றான்?

இவள் எகிப்துப் பேரழகி கிளியோபாத்ராவோ, சீபா தேயத்து இளவரசியோ, ஆல்ப்ஸ் மலைமேலெழும் இளங் கதிரோனின் காட்சியோ, பசிபிக் கடலில் காணும் தண்ணிய நிலவோ' என்றெல்லாம் வியப்பதாக, ப்ரீஸ்ட்லி சொல்கிறார்.

வியப்பு, இளைஞனைக் கவியாக்குகின்றது.

காதல் கொணிடதும் முதலுணர்ச்சி வியப்பு, அந்த வியப்புணர்ச்சிக்குக் காரணம் ஒரு மயக்கம். மயங்கிய மனநிலையுடைய மையல் கொண்டோனின் வியப்பு; 'அணங்கு கொல் ஆய் மயில் கொல்லோ, என்று சொல்லச் செய்கிறது. தமிழ்த் தலைமகன் கூறும் முறை வேறு. காரணம் சூழ்நிலை மாற்றம். ஆனால் வியப்புணர்ச்சியே எல்லாவற்றிற்கும் அடிப்படை. இந்த வியப்புணர்ச்சி பகுத்தறிவுக்கு உட்பட்டதல்ல.

அவள், நமது கண்ணிற்கு அழகற்றவளாகத் தோன்றலாம். ஆனால் காதல் மயக்கம் கொண்டவர்களுக்குத் தான் கண்ட பெண் பேரழகியாக, தெய்வீகப் பெண்ணாகவும் தோன்றலாம். பெர்சியப் பழமொழி, 'லைலாவின் அழகைக் காண மஜ்னூவின் கண்கள் வேண்டும்'' என்று கூறுகிறது. காதலுக்குக் கண்ணில்லை என்பர். ஆனால் காதலருக்கு இருக்கும் காதற் கண்கள், மற்றவர்க்கில்லை என்பதையே அது காட்டுகிறது.

இந்த வியப்புணர்ச்சியை 'She was a Phantom of delight' என்ற கவிதையில் வொர்ட்ஸ் வொர்த் முதல் வரியிலேயே அழகாகக் காட்டியுள்ளார்.

'அவள் ஒரு அருவ ஆனந்தக் காட்சி' என்று சொற்களால் காட்டவராத ஒருருவமாக வொர்ட்ஸ் வொர்த் காண்கிறார்.

'பாரதியாரும், 'பெண்மைதான் தெய்வீகமாங் காட்சியடா' என்று பாடியுள்ளார்.

'தரையில் நடமாடும் தெய்வ மகளோ' என்று அதே வொர்ட்ஸ் வொர்த் கூறுகிறார். வள்ளுவரும் யாவரும் கண்றிடயாத கற்பனைத் தெய்வ மகளோ என்று கூறுகிறார். 'அணங்கு சொல்' என்று வள்ளுவர் கூறிய சொல்லே பல கவிகளில், பாடல்களில் வேறு கோலங் கொண்டு பயின்று வருகிறது.

## கற்பனை பறக்கிறது

'அணங்கு கொல்' என்று காணாத ஒன்றில் தனது வியப்பை ஏற்றி வைத்த தலைமகன், அடுத்து ஒரு படி இறங்குகிறான். தான் கண்டவற்றில் சிறந்ததன் மேல், உயர்ந்ததன் மேல் உணர்வை ஏற்றுகிறான்.

விண்ணில் சிறகடித்துப் பறக்கும் பறவையைக் கண்டால் கவியுள்ளம் படைத்த மனிதனின் கற்பனையும் இறக்கையடித்து மேலேறுகிறது. தனது அழகினால் மனித உணர்ச்சியைக் கனிவாக்கிக் கற்பனையைத் தூண்டிவிடும் உயிர்களில்பறவை முதன்மை இடம்பெற்றுள்ளது. ஆதலின் உலகில் காதல் உணர்ச்சியோடு, பறக்கும் புள்ளினங்களை இணைத்துக் கவிகள் பாடுவதைப் பார்க்கலாம்.

## பறவையினம் படும்பாடு!

'இருதலைப் புள்ளின் ஓருயிரும்' என்று இல்லாத பறவையைக்கூட காதல் உலகில் உண்டு பண்ணுகின்றனர்! நாரையைத் தூதனுப்புகின்றனர்! குயிலையும் பழிக்கின்றனர்! கிள்ளையைக் கையிலேந்திச் 'சொல்ல வல்லாயோ அவன் நல் வரவை' என்று கெஞ்சுகின்றனர்.

காதலுக்கும் பறவைக்குமுள்ள நெருங்கிய தொடர்பையே இது காட்டுகின்றது. வள்ளுவரும் 'ஆய் மயில்கொல்? என்கின்றார். பல காலமாகப் பறவையை உணர்ச்சியின் ஊர்தியாகக் கொண்டதையே அது காட்டுகின்றது. தமிழ் நாட்டுப் பறவைகளில் அழகியது மயில். பிற நாட்டிற்குத் தமிழ்நாடு மயிலை ஏற்றுமதி செய்தது. பிற நாட்டு மொழியில் தோகை என்ற சொல் புகுமளவு அந் நாட்டு மக்களின் கண்களைக் கவர்ந்தது மயில். அத்தகைய மயிலெனவே காதலியை நினைக்கின்றான் வள்ளுவர் தந்த தலைமகன்.

## கவியுள்ளங்களின் ஒற்றுமை

ஆங்கிலக் கவிகளில் காதல் வாழ்க்கை ஏட்டிலும் பாட்டிலுமன்றி வீட்டிலும் கடைபிடித்த ஒரு தனிக் கவி 'ப்ரௌனிங்' என்பவர். ஆதலின் அவர் காதலைப் பற்றிப் பேசுவதை உண்மையில் நம்பலாம்.

'ஓ காவியக் காதலி, நீ பாதி அணங்கு பாதி பறவை' (O! Lyric love, half angel and half bird) என்று அவர்

வியந்து பாடுவது, 'அணங்கு கொல் ஆய்மயில் கொல்' என்ற குறளினுடைய எதிரொலி போலிருப்பது மிகவும் வியப்பிற்குரியது.

காலத்தானும் இடத்தானும் அருகே இருந்தாலும் எட்ட இருந்தாலும் கவியுள்ளம் ஒரே வழியில் உணர்கிறது! என்னுகிறது!

## சரிபாதி - இரு உருவங்கள்

ஆணும் பெண்ணுமாக இயற்கையைக் கண்ட தத்துவ ஞானி, தனது வியப்பில் கடவுளையும் பாதி பாதி ஆணாவும் பாதி பெண்ணாகவும் உருவகப்படுத்தினான். அதுபோல் இக் காதற் கடவுளும் 'பாதி பரதேவதையாகவும் பாதி பறவையாகவும்' வியப்பிலாழ்ந்த கவியுள்ளங்களுக்குத் தோன்றுகிறது. 'கிண்டுரர்கள்' (கந்தருவர்கள்) என்ற வடமொழி இலக்கியத்தில் வரும் காதலர்கள், பாதி மனித உருவமும் பாதி பறவை உருவமும் உடையவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

## அளக்க முடியாத காதல்!

இந்த வியப்பே குறுந்தொகைக் காதலியை,

**'நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று**
**நீரினு மாரளவின்றே சாரற்**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே!'**

என்று பெருமையாகப் பாட வைக்கின்றது. இந்தக் காதலிக்கு அவள் காதலை அளக்க ஒரு அடிக்கோலும் உலகிலேயே கிடைக்கவில்லை. அந்த காதலுக்குப் நீள, அகல, உயரம் இருக்கின்றன. ஆனால் அதன் பரப்பு நிலத்தைவிடப் பெரிது. உயரம் வானையும்விட எட்டியது. ஆழம் கடலினும் கடந்தது. தற்காலம் 3 - D -படக் காட்சியைக் காணலாம். அதுபோலக் காதலிலும் 3- D-க் காதல் உண்டோ!

காதல் கைகூடப் பெற்றோரையும் புறக்கணித்த எலிசபெத், பிரௌனிங் என்ற ஆங்கிலக் கவி தனது காதலை அளக்க முற்படுகிறாள்.

தனது உள்ளம் எவ்வளவு உயரம், எவ்வளவு ஆழம், எவ்வளவு அகலம் செல்லுமோ அவ்வளவு அளவு காதலிப்பதாக, பிரௌனிங் என்ற கவியைக் காதலித்த எலிசபெத் பிரௌனிங் என்ற கவி கூறுகிறாள். பெருமை வியப்பில் காதலின் நீள அகல உயரத்தை அளக்கவும் முற்பட்டு' அளக்க ஏற்ற அளவின்றித் தவிக்கிறார்கள். அவர்கள் வியப்புந்தான் அளவற்றதாக இருக்கின்றதே!

காதலர்கள் எங்கிருப்பினும் ஒரே மொழியில் தான் பேசுவார்கள் போலிருக்கின்றது! இல்லையேல் குறுந்தொகைக் காதலியும் எலிசபெத் - ப்ரௌனிங்கும் தாங்கள் கொண்ட காதலுக்கு நீள அகல உயரம் பார்ப்பார்களா!

## எதிர்பாராத உறவு

தனது காதலைப்பற்றி எண்ணும்போது அது எதிர் பாராத நிகழ்ச்சியாகத் தோன்றுகின்றது. ஏதோ ஒருவருக்கும் தெரியாத ஒரு சக்தி தங்களைச் கூட்டி வைத்ததாக வியக்கின்றார்கள் அதை விதி என்றழைக்கின்றனர். பண்டை நூல்கள் அதைப் 'பால்' என அழைக்கும். அந்த விதியை எண்ணி வியப்புத் தோன்றியக்கால்,

'யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே'!

என்ற அழகான பாட்டு வெளிப்படுகின்றது. எங்கிருந்தோ வந்த நீர், எங்கேயோ உள்ள மண்ணில் கலந்து, நீரும் மண்ணுமாக, மண்ணும் நீருமாக ஒன்றித்துப் பிரிக்க முடியாதபடி, மண்ணின் நிறத்தை நீர் ஏற்க, மண்ணி னுருவை நீர் கொள்ள, ஒருருவாகியது போல இருவ ருடைய ஒட்டும் இரண்டுளமும் விட்டு பிரியாக் கூட்டு ஆகிவிட்டதைக் கண்டு காதலி வியக்கின்றாள்.

ஏனெனில் தனது தாயும் அவனது தாயும் ஒருவரை யொருவர் அறியார். தனது தந்தையும் அவன் தந்தையும் உறவினர் அல்லர். அவளும் அவனை முன்பின் அறியாள். ஆனால் கண்டதும் இரண்டுள்ளமும் கலந்தது. செம்மண் ணும் வான் மழையும் கலந்தது போல!

## ஆராரோ, ஆரிவரோ?

இந்த வியப்பு காதற் கனியான குழந்தை பிறந்ததும் தோன்றலாம். ஆனால் இதைப் புதுமை வியப்பென்று சொல்ல வேண்டும். அவர்கள் கண்டதும் கொண்ட பெருமை, வியப்பு, குழந்தைச் செல்வத்தைத் தோற்று வித்தது. அக் குழந்தை புதுமை வியப்பை உண்டு பண்ணு கிறது. அப் புதுமை வியப்பே ஆயிரம் ஆயிரமாண்டு களாகத் தமிழ்த் தாயை,

'யார் யாரோ, யாரிவரோ' (ஆராரோ ஆரிவரோ)

என்று பாட வைத்தது; பாட வைக்கின்றது! யார் யாரோ என்று பெருமை வியப்புற்றாள் குறுந்தொகைக் காதலி. ஆனால் யார் யாரோ என்ற பெருமை வியப் பொடும், யாரிவரோ என்ற புதுமை வியப்பொடும் பார்க் கின்றாள், முற்காலத் தமிழ்த் தாய், தொட்டியில் தவழும் குழந்தையைப் பார்த்து.

வியப்பு காதலில் முதலுணர்ச்சி. அவ்வுணர்ச்சி வெவ்வேறு கோலங்களில் வெவ்வேறு காலங்களில் தோன்றலாம் அப்படித் தோன்றும்போது அக் காதல், கவியையும் காவியத்தையும் உண்டாக்குகின்றது. அக்காதல் காவியக் காதலாகிறது.

உயர்ந்த காவியமும் சிறந்த காதலியும் பல முறைகளில் ஒத்திருக்கின்றனர். காவியம் பல முறை 'பயில்தொறும் நூல்நயம்' தந்து புத்தின்பந் தருகின்றது. சிறந்த காவியத்தைப் படிக்கப் படிக்கப் புது நயங்கள் தோன்றும்; அறிய அறிய அறியாமையைக் காட்டும். சிறந்த நூல்கள், இல்லையேல் வள்ளுவர், செகப்பிரியர் போன்றோர் நூல்களில் புதுப் புது நலங்கள் தோன்றிக்கொண்டே இருக்காது. படிக்குந் தொறும் புத்தின்பமும் புத்தறிவும் தரும் சிறந்த நூல்களுக்கு என்றும் அழிவே யில்லை. அது போன்றே சிறந்த காதலி பழகுந்தொறும் புதுநலம் தந்து, புத்தின்பம் ஊட்டுவாள். உலகில் எவையெவை வேண்டுகின்றோமோ அவையவையுமாகி, கேட்டதைத் தந்தும் கேட்டதெல்லாம் ஈந்தும் உதவுவாள் காவியக் காதலி, வள்ளுவரும்.

**'கண்டுகேட்டுஉண்டுயிர்த்துஉற்றறியும் ஐம்புலனும்**
**ஒண்டொடி கண்ணே யுள'**
(1101)

**'வேட்ட பொழுதின் அவையவை போலுமே**
**தோட்டார் கதுப்பினாள் தோள்'**
(1105)

என்ற குறட் பாக்களில் இதையே கூறியுள்ளார்.

**'உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்கு**
**அமிழ்தின் இயன்றன தோள்'**
(1106)

என்ற குறளில் தொடுந்தொறும் புத்துயிர் அளித்து, விடுந் தொறும் சாக்காட்டை நாடும்படி செய்பவள் என்று கூறுகின்றார்.

அத்தகைய காவ்யக் காதலி உலகப் பேரழகி கிளியோபத்ரா! மூக்கும் முழியுமாக இருந்த அவளிடத்தில் அழகு கெட்டில் கொழித்தது. 'கிளியோபத்ராவின் மூக்கின் நீளம் அரை விரற்கிடை குறைந்திருக்குமானால் உலக வரலாறே மாறியிருக்கும் என்று ஒருவர் கூறினார். அவள் விரல் வளையத்தில் வைத்திருந்தாள், அண்டோனியோ, சீசர் ஆகிய மன்னர்களை. 'காற்றில் ஏறி அவ்விண்ணை யும் சாடுவோம், கிளியோபாத்ராவின் கடைக் கண் பணியிலே' என்று அண்டோனியோ பாடினான். வீரன் அண்டோனியோ கிளியோபத்ராவை மண்டியிடச் செய்ய ரோமிலிருந்து படையுடன் வந்தான். வெற்றியுடன் எகிப்தில் நுழைந்தான். தனது அரசியல் அடிமை கிளியோ பத்ராவைப் பிடித்து வரும்படி ஆணை யிட்டான். வந்தாள்! கண்டாள்!! வென்றாள்!!!

அஃதாவது கிளியோபத்ராவைக் கண்ட அளவில், அன்டோனியோ அவளுடைய காதலடிமை ஆனான்.

''ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு''

(1088)

என்று அண்டோனியோ சொல்ல வேண்டியதாயிற்று. 'நீரோரன்ன' கிளியோபத்ராவின் சாயல் 'தீயோரன்ன' அவன் உரனை அவித்தது. அண்டோனியோவும் சீசரும் கிளியோபத்ராவை அறிய வந்தார்கள். அடைய வந்தார் கள். ஆனால், அவர்கள் அவளை முழுவதும் அறிய முடிய வேயில்லை. தங்கள் அறியாமையை அறியுந்தொறும் கண்டார்கள். மல்லரிடம் மலைத்தறியா மன்னர்கள், மலரினும் மெல்லியவளிடம் மலைத்தனர். காரணம் கிளியோபத்ரா காவியக் காதலைக் கற்றுத் துறை போகிய வள். அவள் காவியக் காதலி செகப்பிரியர் 'அண்டோனி யோவும் கிளியோபத்ராவும், என்ற காவியத்தில் வெகு அழகாக கிளியோபாத்ராவை' வர்ணித்துள்ளார்.

'வயது அவளை வாட வைக்காது. பழக்கம் அவளது மாறும் புதுமையைப் புளிக்க வைக்காது. பிற பெண்கள் தெகட்டலாம். ஆனால், எப்போது அவளிடத்தில் இன் பத்தின் எல்லையை எய்தினோமென்று உணர்வானோ அக்கணமே அதன் குறையை உணர்த்தி ஆசையைக் கிளறு வாள், என்று அவர் அழகாகக் கூறியுள்ளார்.

தமிழிலக்கியத்தில் காவியக் காதலியாகக் கருதத் தக்கவள் மாதவியே. காதலில் கண்ணகி தோற்றாள். மாதவி வென்றாள். காரணம் மாதவி கோவலனுக்கேற்ற காவியமாகத் திகழ்ந்தாள். கண்ணகிக்கு அது தெரிய வில்லை. கோவலன் அழகுணர்ச்சி நிரம்பியவன். மாறாத கண்ணகி புளித்தாள் ஆனால் மாறி மாறிக் கோலங் காட்டிய மாதவி இனித்தாள் அருங்கலைகளை மாதவி யிடம் கண்டான் கோவலன். வினைச் செல்வம் அவளிட மிருந்தது

'ஆடல் பாடலில் ஈடுபாடுடைய கோவலன் மாதவி யின்பால் விடுதலறியா விருப்பினன்' ஆகியதில் வியப் பொன்றுமில்லை. காதற் காவியத்தைக் கரைத்துக் குடித் தவள் மாதவி. இல்லறமன்றிப் பிறிதொன்றறியாள் கண்ணகி ஊடலும் கூடலும் துனியும் புலவியும் கோவலனுக்குக் காட்டத் தெரிந்தவள் மாதவி. இளங்கோ 'ஆடலும் கோலமும் அணியுங் கடைக்கொள ஊடற் கோலமொடு இருந்தோன் உவப்ப' என்று மாதவியைப் பற்றிக் கூறுகின்றார். கிளியோபத்ரா அண்டோனி யோவைச் சிரித்துச் சிரித்து ஊடலில் ஆழ்த்திக் கூடலில் கூட்டினாள் என்று செகப்பிரியர் சொல்வதை நோக்க வேண்டும்

**'நிலவுப்பயன் கொள்ளு நெடுநிலா முற்றத்துக்**
**கலவியும் புலவியுங் கோவலர்க் கெதிரி**
**கோலங் கொண்ட மாதவி..... ...'**

என்று இளங்கோ மாதவியின் காதல் திறமையைக் காட்டு கின்றார். முப்பத்திரண்டு ஓமாலிகை ஊறின நீரில் குளித்து, அகிற்புகையில் கூந்தலை உலர்த்திக் கத்தூரி ஊட்டி, அணிகலன் பூட்டி, நீலச் சாதரை உடுத்திக் கோவ லனைக் களிப்பூட்டினள் மாதவி. கலவியும் புலவியும்

கோவலற்கு அளித்து, மலைப்பும் திகைப்பும் கொடுத்து, அவன் அறிதொறும் செறிதொறும் அறியாமையைக் காட்டினாள் மாதவி. காலமும் பழக்கமுப் காதலனுக்கு உவர்ப்பூட்டாதபடி உவப்பூட்டத் தெரிந்தவளே காவியக் காதலி. இதையே வள்ளுவர்,

'அறிதோறு அறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு'

என்ற அருமையான குறளில் அழகாகக் கூறியிருக்கின்றார்.

காவியக் காதலி அறியும்படி திறந்த புத்தகமல்ல; பார்த்த அளவில் புரியும்படியான காவியமும் அல்ல. அறியுந்தொறும் அறியாமையை ஊட்டி, படிக்கும்தோறும் புத்தின்பந் தந்து புரியாத புதுநயங்கள் புதைந்துள்ள புத்தகமே காவியக் காதலி, அவள் என்றுமே அருந்தித் தெகுட்டாத விருந்து. பழக்கம் புளிக்க வைக்காப் புதுமை காலம் கருக வைக்கா இளமை, கேட்டதும் வேட்டதும் காட்டும் கவின்பெறு மந்திரப் பொற்பெட்டகம். இறுதியில் அவள் செறியுந்தொறும் அறியாமையை அறிவிக்கும் அணங்கு.

பெண்ணின் அழகில் வியப்புத் தோன்றுகிறது. அவள் ஓர் உணர்வு வடிவமான அணங்கு; அழகு வடிவான மயிலாகின்றாள். அஃதாவது அவள் ஓர் அழகுப் புதுமை. தொடர்பில்லாத அவர்களது அன்புபற்றி ஒரு வியப்புத் தோன்றுகிறது. அப்போது அவள் ஒரு அன்புப் புதுமை இறுதியில் அவள் அறியுந்தொறும் அறிய முடியாப்புதுமையாக இருக்கின்றாள். அஃதாவது அவள் ஒர் அறிவுப் புதுமை ஆக காவியக் காதலி அழகுப் புதுமையாகவும், அன்புப் புதுமையாகவும், அறிவுப் புதுமையாகவும் இருக்க வேண்டும் அவளிடைத் தோன்றும் காதலும்காவியக் காதலாகிறது.

# மரியதாஸ் பிள்ளை

## வரலாற்றாய்வாளர்

கல்வியிற் சிறந்த திரு, மரியதாஸ் பிள்ளை அவர்களைப் புதுவைவாழ் மக்கள்கூடச் சரியாக அறிந்திருக்கவில்லை.

இந்திய வரலாற்று காலக் கணிப்பின் அடிப்படையை உறுதி செய்வதில் அவர் ஆற்றிய அரும்பணியைப் பற்றி, சர்தார் கே. எம். பணிக்கர் அவர்கள் குறிப்பிட்டதன் வயிலாகத்தான் புதுவையில் அறிந்து கொண்டோம்.

பழைய கிரேக்க இலக்கியங்களில் காணப்பெறும் 'சந்திர கோட்டா' என்ற பெயரையும், இந்திய வரலாற்றில் காணப்பெறும் 'சந்திர குப்தன்' என்ற பெயரையும் இணைத்துக் காண்பதன் முலமே இந்திய வரலாற்றுக் கணிப்பு உறுதி செய்யப் பெறுகிறது. இவ்வொப்புமை நோக்குதான் இந்திய வரலாற்றின் காலத்தைக் கணிப்பதற்கு அடிப்டையாக அமைந்தது.

## வரலாற்று மதிப்பீடு

ஈழ நாட்டு அரசனான கயவாகு மன்னனை அந்நாட்டு 'மகா வம்சம்' என்ற நூல் குறிப்பிடுகிறது. அதே

மன்னனைச் சிலப்பதிகாரமும் குறிப்பிடுகிறது. இதை ஒப்புமைப்படுத்தி ஆராய்ந்ததன் வாயிலாக, திராவிட மொழிகளிலேயே தொன்மை வாய்ந்த இலக்கியப் படைப்புகள் மிகுந்த 'சங்க காலத்தின்' கால வரையறை கணிக்கப் பெற்றது பேராசியர் கே.ஏ நீலகண்ட சாஸ்திரியார் இக் காலக் கணிப்பையே தென்னிந்திய வரலாற்றுக்கு ஆதாரமாகக் கொண்டார்.

இதே முறையில் பழைய கிரேக்க இலக்கியங்களில் காணப்பெறும் சந்திரகோட்டா என்ற பெயரையும், இந்திய வரலாற்றில் காணப்பெறும் சந்திரகுப்தன் என்ற பெயரையும், ஒப்பு நோக்கி ஆராய்ந்து கணித்த பெருமை புதுவையில் வாழ்ந்த திரு. மரியதாஸ் பிள்ளை அவர்களையே சாரும்.

புதுவைத் தாகூர் கலைக் கல்லூரியின் தொடக்க விழா புதுவை கல்வே கல்லூரியில் நிகழ்ந்தபோது. சிறப்புச் சொற்பொழிவாளராக வந்திருந்த வரலாற்று அறிஞர் சர்தார் கே. எம். பணிக்கர் அவர்கள் திரு. பிள்ளையவர்களின் அருங் கண்டுபிடிப்பைப் புதுவை வாழ் மக்களுக்குப் புலப்படுத்தினார்கள்.

## வரலாற்றுச் சான்றுகள்

திரு.மரியதாஸ் பிள்ளையவர்கள் பாகவத புராணத்தைப் பிரெஞ்சு மொழிகளில் மொழி பெயர்த்தார். அப் பணியை அவர் மேற்கொண்டபோது, செந்தமிழ் இருந்த பாகவத புராணத்தில் வருகின்ற 'சந்திரக் கூட்டன்' என்ற பெயரும் இந்திய வரலாற்றில் காணப்பெறும் சந்திரகுப்தனையே குறிக்கும் என்ற முடிவுக்கு வந்தார். இம்முடிவு இந்திய வரலாற்றுக் காலக் கணிப்புக்கு அடிப்படையாகத் திகழ்ந்து.

## பன்மொழிப் புலமை

திரு. பிள்ளையவர்கள் பிரெஞ்சு, கிரேக்கம், இலத்தீன் முதலிய மொழிகளைப் புதுவையில் தங்கியிருந்த வெளிநாட்டு கிருஸ்துமறைப் பணியாளர் மூலம் கற்றறிந்தார். அக்காலத்தில் இலத்தீன் மொழி புதுவையிலிருந்த பாரிசு மறைபரப்புப் பணிக்கழத்தின் கிருஸ்துவ மத வழிபாட்டு மொழியாக விளங்கியது. இப்போது தமிழ் மொழி வழிபாட்டு மொழியாக வழங்குவது கவனிக்கத் தக்கதாகும்.

வெளிநாட்டு மறைபணியாளர்களிடம் வெளிநாட்டு மொழிகளைக் கற்றறிந்த பிள்ளையவர்கள், தமிழ் உள்ளிட்ட வென்னிந்திய மொழிகளை தெளிநாட்டு மறைபணியாளர்களுக்குக் கற்பித்தார். பிரெஞ்சு நாட்டு அறிவியல் கழகத்தைச் சேர்ந்த லெழான்தில் (Mr. Legintil) என்ற வானியல் அறிஞருக்கு (Astronomist) இந்திய வானியல் ஆம்வுக்கு இவர் புலமை பெற்றிருந்தார். புதுவையில் சில காலம் பணிபுரியும் வாய்ப்புக் கிட்டிய லெழான்தில் அவர்கள் இந்திய வானியல்பற்றி, பிள்ளையவர்களிடம் அறிந்த செய்திகளைத் தமது ஆய்வுக்குப் பயன்படுத்திக் கொண்டார்.

பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி போன்ற சிறந்த வரலாற்று அறிஞர்கள் பாகவத புராணம் சோழப் பேரரசு நிலவிய காவிரி நிலப் பகுதியிலேயே தோன்றியிருக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். பாகவத புராணம்பற்றி பிள்ளையவர்களோடு கருத்துப் பரிமாற்றம் கொண்டிருந்த பிரெஞ்சு நாட்டு அறிஞர் திரு. தெகுயின்ஸ் (Mr. Delguines) அவர்கள், பிள்ளையவர்களின் கால ஒப்புமை கண்டுபிடிப்பை ஏற்றுக் கொண்டார்.

## வெளிநாட்டார் கருத்து

பிரெஞ்சு அறிஞர் தெகுயின்ஸ் அவர்கள் புராண நிகழ்ச்சிகளை வரலாற்று நோக்கில் அறியும் பொருட்டு, பல்வேறு அரசர் மரபுகளைப் பற்றி ஆராய்ந்தவர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் வரலாற்றுக் கால அரசர்களின் மரபு வழி வரலாறுகளை அறிந்து கொள்ள புராணங்கள் சரியான அடிப்படையாக அமைவதில்லை என்பதை அனைவரும் அறிந்ததே ஆயினும், அப் புராணங்கள் அறிவியல் மற்றும் வரலாற்றுக் கண்ணோட்டத்தோடும் அணுகி ஆராயும் போது, அவற்றில் அரிய பல வரலாற்றுத் தகவல்களும் கிடைக்கின்றன என்று பேராசிரியர் திரு. பர்கித்தேர் (Prof. pargiter) அவர்கள் எழுதியுள்ளார்.

பாகவத புராணத்தில் உள்ள 'சந்திர கூட்டன்' என்ற பெயரையும், கிரேக்க இலக்கியங்களில் காணப்படும் 'சந்திர கோட்டா' என்ற பெயரையும் ஒருங்கிணைத்து ஒப்பு நோக்கிய திரு. பிள்ளையவர்களின் கண்டுபிடிப்பை அடிப்படையாகக் கொண்டு பிரெஞ்சு அறிஞர் தெகுயின்ஸ் அவர்கள், வேதகாலம் என்பது சற்றேறக்குறைய கி. மு. 15 ஆம் நூற்றாண்டு என்று காலக் கணிப்புச் செய்துள்ளார். பேராசிரியர் புர்கித்தேர், டாக்டர் பந்தர்க்கர் ஆகியோர் இதே காலக் கணிப்பை மிகச் சிறிய மாற்றங்களோடு ஒப்புக் கொண்டுள்ளனர்.

புராணங்களில் வரும் அரசர்களின் பெயர்கள் பெரும்பாலும் புதிராகவே உள்ளன. ஆயினும், பாகவத புராணத்தில் வரும் பெயரை அடியொற்றி வெளியிட்ட, மரியதாஸ் பிள்ளையவர்களின் காலக் கணிப்பையும், பிரெஞ்சு அறிஞர் தெகுயின்ஸ் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

## புதுவைக்குப் புகழ்

இது புதுவை வாழ் அறிஞர் ஒருவரின் கண்டுபிடிப்பு என்றும், இந்திய வரலாற்றுக்குச் சிறந்ததொரு அடிப் படை என்றும் காணும்போது நாம் பெருமிதம் கொள்ளலாம்.

புதுவை மாநிலத்தைப் பற்றி, நினைக்குங்கால், இந்தியாவின் வரலாற்றிற்கு அடிப்படைக் காலக்கணிப்பை கண்டு பிடிக்க உதவிய மரியதாஸ் பிள்ளையவர்களை என் னால் மறக்க முடியாது என்று சர்தார் கே.எம். பணிக்கர் புதுவையில் கூறியது மிகவும் கவனிக்கத்தக்கது.

மரியதாஸ் பிள்ளையவர்கள் இத்தகைய ஆராய்ச்சிக் குப் பாகவத புராணத்தின், சம்ஸ்கிருத மூலத்தைப் பயன் படுத்தவில்லை என்பது மிகவும் நினைக்கத் தக்கதாகும். அப் புராணத்தின் செந்தமிழ் மொழிபெயர்ப்பையே தமது ஆய்வுக்கும் பிரெஞ் மொழி பெயர்ப்புக்கும் முதல் நூலாக எடுத்துக் கொண்டார். Le Baghavata என்கிற பெயரோடு அதனைப் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்தார். இப் புரானத்தைத் தமிழ் மொழியிலிருந்து பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்ததாக அவரே குறிப்பிடுகிறார். ஆயினும், அவருக்கு மூலமாக விளங்கிய அக்காலத்துச் செந்தமிழ் பாகவத புராணம் இக்காலத்தில் கிடைக்காமல் இருப்பது வருந்தத்தக்கது.

## பாகவத புராணம்

மரியதாஸ் பிள்ளையவர்கள் தமிழ்மொழியில் இருந்த பாகவத புராணத்தை 1793 - 95 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில்தான் மொழி பெயர்த்துள்ளார்.

ஆதலின் தமிழ்மொழி பாகவத புராணம் மேற்கூறிய ஆண்டுகளுக்கு முன்பே, அதாவது 18 ஆவது நூற்றாண்டிலேயே வெளி வந்த பலப் பல தமிழ் நூல்கள் இக்காலத்திலும் கிடைக்கின்றபொழுது, மரியதாஸ் பிள்ளையவர்கள் காலத்தில் ருந்த செந்தமிழ் மொழி, பாகவத புராணம் மட்டும் இக்காலத்தில் கிடைக்காமற் போனது பேரிழப்பாகும்.

## பிரெஞ்சு மொழி பதிப்பு

1793 - 95 ஆவது ஆண்டுகளுக்கிடையில் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட பாகவத புராணம் பிரெஞ்சுப் பாதிரியார் எச். ஹோஸ்டன் (Fr. H. Hosten) அவர்களால் 1920 - 21 இல் வெளியிடப் பெற்றது. பிரெஞ்சு மொழி பாகவத புராணத்தை உருவாக்க மரியதாஸ் பிள்ளையவர்கள் இரண்டாண்டுக் காலம் முயன்றுள்ளார்.

புதுவைப் பொது நூலகப் பட்டியலில் இப்பிரெஞ்சு மொழி பாகவத புராணத்தின் பெயரும் இடம் பெற்றுள்ளதாயினும், இன்றுள்ள புதுவை ரோமன்ரோலண்டு பொது நூலகத்தில் அந்நூல் இல்லாதது வருந்தற்குரியது. 1823 -ஆம் ஆண்டில் வெளி வந்த பாகவத புராணம் ஒன்றில், பல்வேறு இந்திய நாட்டு அரச மரபினர்களின் பெயர்களைக் காண முடிகிறது. புதுவையில் மரியதாஸ் பிள்ளைக்குப் பிறகு இந்திய மொழிகளிலும் மற்றும் வெளிநாட்டு மொழிகளிலும் ஆழ்ந்த புலமை பெற்ற அறிஞர் யாரும் இல்லை என்பது வருந்துதற்குரியது.

## கல்லறை

திரு. மரியதாஸ் பிள்ளையவர்கள் புதுவையைச் சார்ந்த கத்தோலிக்கச் சோழிய வேளாளர் சாதியைச் சேர்ந்தவர். அவர் தந்தையார் அப்பாவுப்பிள்ளை.

ஒரு சமயம் எனது நண்பர் ஒருவரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளும் பொருட்டு, புதுவை புறநகர்ப் பகுதியைச் சார்ந்த முத்தியால்பேட்டை கல்லறைக்குச் செல்லுகின்றபோது கல்லறையில் இருந்த கற்பலகையில் செய்திகளைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இந்தக் கல்லறையில் இருந்த கற்பலகையின் வாசகத்தைப் படிக்கும்போது, பேராசிரியர் கே. எம் பணிக்கர் அவர்கள் தமது சொற்பொழிவுகளில் குறிப்பிட்ட மரியதாஸ் பிள்ளையவர்களின் நினைவும் வந்தது.

கல்லறையில் பிள்ளையவர்களின் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தையும் அங்குப் பிரெஞ்சு மொழியில் இருந்த கல்வெட்டு ஒன்றையும் கண்டேன். அக் கல்வெட்டின் தமிழ் வாசகம் பின் வருமாறு:

'உயர்நீதி மன்றம் மற்றும் நீதிக்குழுவின் முதன்மை மொழி பெயர்ப்பாளரும், இந்திய நீதி முறை வாரியத்தின் தலைவரும், சிறப்புமிக்க பல அரசு விருதுகளைப் பெற்றவருமான மரியதாஸ் பிள்ளை இங்கே நல்லடக்கம்செய்யப்பட்டுள்ளார். இவர் தம் பணிகளைப் பிரெஞ்சுக் கலைக் கழகம் 1773 ல் பாராட்டியுள்ளது. தமது 75 ஆவதுவயதில் ஏப்ரல் 3-ஆம் நாள் இறந்தார்.'

## பாராட்டும் சிறப்பும்

பண்டைச் சங்க காலத்தில் திகழ்ந்த சங்கத்தோடு ஒப்ப பெருமையும் சிறப்பும்கொண்டது மிகப்பிற்காலத்து பிரெஞ்சு நாட்டுக் கலைக் கழகம். பேரறிஞர்கள் பலர் இக்கழக உறுப்பினராக இருந்தனர். இந்தக் கழகத்தின் உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப்படுவதே மிகச் சிறப்பானதாகும். இத்தகைய சிறப்பு மிக்க பிரெஞ்சுக் கலைக் கழகம் 1773 ஆம் ஆண்டில் திரு. பிள்ளையவர்களின்

பணியைப் பெரிதும் போற்றிப் பாராட்டியுள்ளது. இப் பெருமை புதுவை வாழ் அறிஞர் ஒருவருக்குக் கிடைத்த பெறுதற்கரிய பெருமை என்றே கொள்ள வேண்டும்.

பிள்ளையவர்கள் முற்றிலும் இந்தியராக இருந்தமையால் பிரெஞ்சுக் கலைக் கழகத்தில் இடம் பெற வாய்ப்பில்லாமல் போயிற்று. ஆயினும், இந்திய வரலாற்று 'காலக்கணிப்பைப் பற்றியும், இவருடைய ஆழ்ந்த நுண்மாண் நுழைபுலம் பற்றியும் பிரெஞ்சு அறிஞர் தெகுயின்ஸ் அவர்கள் பிரெஞ்சு நாட்டுக் கலைக் கழகத்தில் நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தியதன் வாயிலாக, அக் கழகம் இவரைப் பெரிதும் பாராட்டியதாகத் தெரிகின்றது. தமிழன் ஒருவனைப் பாராட்டிய வரலாறு மரியதாஸ் பிள்ளைக்குப் பின் நிகழவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரெஞ்சு அரசாங்கம் இவருக்கு 1761-68-70-75 ஆகிய ஆண்டுகளில் நிலக்கொடை வழங்கிச் சிறப்புச் செய்தது. இவை பற்றிய சான்றுகள் யாவும் புதுவை ஆவணக் காப்பகத்தில் இருக்க வேண்டும். ஆனால், அவை இருப்பதாகத் தெரிய வில்லை. இவற்றைப் படித்தறிவதன் வாயிலாக, அரசாங்கம் இவருக்கு நிலக்கொடை வழங்கியதன் அரணங்களையும், நிதித்துறையோடு இவர் கொண்டிருந்த தொடர்புகளையும் ஆராயலாம்.

1767 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 24 ஆம் நாளிட்ட ஆவணப் பதிவேடு ஒன்றில், மரியதாஸ் கையொப்பம் இட்டிருக்கிறார். 1774 ஆம் ஆண்டு மே திங்கள் 27 ஆம் நாளிட்ட ஆவணப் பதிவேடு ஒன்றில் இவரிட்ட கையொப்பம் இறுதியானதாகும்.

## குடும்பம்

**தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் மற்றும் ஐரோப்பிய மொழிகளான பிரெஞ்சு, இலத்தின், கிரேக்கம் போன்ற**

மொழிகளில் ஆழ்ந்த புலமை பெற்றிருந்த காரணத்தால், அக்காலத்தில் இவர் பிரெஞ்சு நாட்டுக்குச் சென்றிருப்பின் பெரும் புகழ் பெற்றிருப்பார் என்றாலும், இவர் புதுவை யிலேயே ஒரு தமிழராகவும் தமிழ்ப் பற்றுள்ள ஒரு கத்தோலிக்கராகவுமே வாழ்ந்து தம் வாழ்க்கையைக் கழித் தார். 1701 ஆம் ஆண்டில் பிறந்த இவர், தமது 75 ஆம் வயதில் 1776 ஆவது ஆண்டு ஏப்ரல் மாதம் 3 ஆம் நாள் காலானார்.

## ஆனந்தரங்கப்பிள்ளை வீதி

புதுவையில் இப்பொழுதுள்ள ரெங்கப் பிள்ளை தெரு வில் இவருடைய இல்லம் இருந்தது. அக்காலத்தில் இத் தெரு 'புகையிலைக் கிடங்குத் தெரு' என்ற பெயரால் குறிக்கப் பெற்று வந்தது. தற்பொழுது ரெங்கப்பிள்ளை தெருவிலுள்ள கத்தொலிக்கர் கன்னியர் விடுதியியே (Convent of Our Lady of Secour) பிள்ளையவர்களின் இல்லமாக இருந்திருக்கலாம் என்று கூறுவர்.

இவருடைய மனைவியரின் பெயர் ஞானமுத்தம்மாள். அக்காலத்து தமிழ்க் கிருஸ்துவர்களின் பெயர்கள் தமிழர்களின் பொதுப் பெயர்களாகவே அமைந் திருந்தன. இவருக்கு ஆண் சந்ததி இல்லை. பெண் சந்ததி யினர் இருந்தனர். புதுவை நகரில் வீடும், வெளியிடங் களில் நிலங்களும் இவருக்குச் சொந்தமாக இருந்தன.

## பெண்களுக்குச் சொத்துரிமை

இவர் இறந்த பிறகு பெண் சந்ததியினருக்கு இவ ருடைய சொத்துக்களில் உரிமை இல்லாமல் போயிற்று. இவ் வழக்கம் இந்துக்களின் சொத்துரிமை வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. இவ் வழக்கத்தை அனுசரித்த சட்டத்தை அன்றைய உயர்ந்த சாதிக் கிருஸ் துவர்களுக்குப் பிரெஞ்சு அரசாங்கம் பின்பற்றியது என்று தெரிகின்றது.

இவர் தமது உறவினர்களில் யாரையும் சுவீகாரம் எடுத்துக் கொள்ள முடியவில்லை. இந்துக்களின் சொத்துரிமைச் சட்டத்தையே அக் காலத்து உயர்ந்த சாதிக் கத்தோலிக்கர்களும் பின்பற்றியதாக ஆனந்த ரங்கப் பிள்ளையின் நாட்குறிப்பிலும் தெரிந்து கொள்ளலாம். இப்பொழுதுங்கூட பல கத்தோலிக்கக் குடும்பங்களில் பெண்களுக்குச் சொத்துரிமை இல்லை. வரதட்சணையைத் தவிர பெண்களுக்குச் சொத்துரிமை அளிக்கப் பெறும் வழக்கமில்லை. இத்தகைய காரணங்களாலேயே அக்காலத்தில் கத்தோலிக்க சமூகத்தினரின் பெண் சந்ததியினருக்கும் சொத்துரிமை இல்லாமல் போயிற்று எனலாம்.

## ஆனந்தரங்கப்பிள்ளை நாட் குறிப்பில்

புதுவை மகாஜன சபை ஆலோசனையின்படியும் டியூப்ளே உள்ளிட்ட அனைத்து கவர்னர்களும், இந்துக்களும், பழக்க வழக்கங்களையும், சட்ட திட்டங்களையும் மதம் மாறிய சாதிக் கத்தோலிக்கர் அனுசரிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்ததைக் ஆனந்தரங்கப் பிள்ளையின் அருமையான நாட்குறிப்பில் காணலாம்.

மரியதாஸ் பிள்ளையவர்களின் கல்லறையில் 'இவர் மலபார் கிருஸ்துவர்' என்று குறிக்கப் பெற்றுள்ளார். மலபார் என்னும் சொல் அக்காலத்தில் உயர் சாதித் தமிழ் கிறிஸ்துவர்களைக் குறிக்கப் போர்த்துக்கீசியர் பயன்படுத்திய சொல்லாகும்.

## கல்லறை இடம் மாற்றம்

அக்காலத்தில் புதுவையில் வாழ்ந்த கத்தோலிக்கர்களின் கல்லறை தற்போதுள்ள கல்வே கல்லூரி அமைந்துள்ள இடத்தில் இருந்தது. நகரின் நடுவிடத்தில் இருந்த

இக் கல்லறையைப் புறநகர்ப் பகுதியான முத்தியால் பேட்டைக்கு மாற்றியபோது, மரியதாஸ் பிள்ளையவர்களின் கல்லறையில் இருந்த கற்பலகையும் இடம் மாறியது. தற்போதுள்ள மிஷென் தெரு, அக் காலத்தில் எந்த ஒரு சாதியினரும் தனி உரிமை கொண்டாட முடியாதவாறு பல சாதியினரும் பயன்படுத்துகின்ற தெருவாக இருந்தமையால், இதனைச் சென்னைத் தெரு (Madras Street) என்று அழைத்தனர்.

மரியதாஸ் பிள்ளையின் வழித் தோன்றல்களில் யாரேனும் தற்பொழுது புதுவையில் உள்ளரா என்பது தெரியவில்லை.

முத்தியால் பேட்டைக் கல்லறையிலுள்ள பிள்ளையவர்களின் சிறப்பைப் புலப்படுத்தும் வரலாற்றுச் சிறப்புப் பெயர்ப் பலகையை புதுவை அரசின் அரும்பொருட் காட்சியகத்தில் வைத்துக் காக்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும்.

குறிப்பு

RAPER PRINT ANBU PRINTERS MS-78